# யூதர்களின் சோக வரலாறு



தேவாலயத்திலே ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் (மத்.24:2).

யூதர்களின் சோக வரலாறு

Tragic History of the Jews (Tamil) by K. Selwyn Thangadurai

Copyright © 2014 Word of Christ Ministries

ISBN: 978-93-84328-13-9

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means-electronic, mechanical, photocopying, recording, or otherwise-without the prior written permission of the publisher. The only exception is brief quotations in printed reviews.

Published by:
**WORD OF CHRIST MINISTRIES**
No. 100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road, Kellys
Chennai 600 010 Tamil Nadu, India
Phone: 044 - 2661 3242 / 4264 0111
E-Mail ID: info@wordofchrist.org
Website: www.wordofchrist.org
Printed at Chennai, India.

Price: Rs 60/-

# உள்ளே....

## பகுதி 1


1. இஸ்ரவேல் சுதந்திர நாடாக மாற வித்திட்ட
   தியோடர் ஹெர்சல், கெய்ம் வெய்ஸ்மேன் 01

2. தேவனால் பரிசுத்தத்திற்குத் தெரிந்து கொள்ளப்பட்ட
   ஜாதி – கி.பி.70ல் எருசலேமின் வீழ்ச்சி 07

3. தேவன் நேசித்த எருசலேம் 15

4. எருசலேமின் தேவாலயம் 21

5. ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள் 29

6. பகைமை உணர்வின் வரலாறு – முதலாம் உலக யுத்தம் 33

7. ஜெர்மனியில் நாஜிக்கட்சியின் தோற்றம்
   ஹிட்லர் அரசியலில் நுழைதல் 39

8. ஜெர்மனியில் யூதர்களுக்கு விரோதமான செயல்களின்
   தீவிரம் – நாஜிக் கட்சியின் வளர்ச்சி 43

9. ஹிட்லர் ஜெர்மனியின் சர்வாதிகாரியானான் –
   வன்கொடுமை முகாம்கள் திறப்பு 49

10. யூத விரோதப் போக்கு அண்டைய நாடுகளுக்கும் பரவுதல் 53

11. ஜெர்மனியின் விரிவாக்கத் தொடக்கம் 61

12. டாக்கோவ் வன்கொடுமை முகாமின் உச்சக்கட்ட
    படுகொலைகள் 65

13. பாரியார் பள்ளத்தாக்கு இனப்படுகொலை 73

14. 2வது மகா உலக யுத்தத்தீவிரம் – அமெரிக்காவின்
    பேர்ல் துறைமுகம் தாக்கப்படுதல் – முசோலியின் வீழ்ச்சி 77

15. பெர்லின் யுத்தக்களம் – ஹிட்லரின் தற்கொலை 85

16. பால்போர் பிரகடனம் 93
17. இஸ்ரவேல் சுதந்திர நாடாகப் பிரகடனம் 103
18. கிறிஸ்துவின் வருகையின் அடையாளம் நிறைவேறுதல் 109

## பகுதி 2

1. ஹிட்லரால் ஏற்பட்ட பேரழிவுக்குத் தப்பிய ரோஸ்பிரைஸின் உருக்கமான அறிக்கை 115
2. ஐ.நா. பொது அவையில் இஸ்ரவேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹோ வரலாற்றுச் சிறப்பு உரை 129
3. நாஜிப் படையினரின் பொற்கஜானா 135
4. உலகிலேயே அதிக நோபல் பரிசுகளைப் பெற்றுக்கொண்ட யூதர்கள் 139
5. இவள் என்னுடைய மகள் 141
6. இயேசுவே மேசியா 145

# 1 இஸ்ரவேல் சுதந்திர நாடாக மாற வித்திட்ட தியோடர் ஹெர்சல், கெய்ம் வெய்ஸ்மேன்


தியோடர் ஹெர்சல் 1860–1904


கெய்ம் வெய்ஸ்மேன் 1874–1952

எருசலேம் தேவாலயம் கி.பி.70ம் ஆண்டு தீத்துராயானால் ஒரு கல்லின் மேல் ஒரு கல் இல்லாத அளவுக்கு அழிக்கப்பட்டது. தொடர்ந்து வந்த ரோம சாம்ராஜ்ஜியத்தின் கொடிய மாமன்னர்களால் யூதர்கள் கி.பி.70 தொடங்கி கி.பி.135ம் ஆண்டுக்குள் முற்றுமாகத் தங்கள் நாட்டைவிட்டு உலகமெங்கும் சிதறடிக்கப் பட்டனர். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் இஸ்ரவேல் மக்களைக் குறித்து **"பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்"** (லூக்.21:24) என்று இயேசு முன்னுரைத்தது துல்லியமாக நிறைவேறியது. "சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்" **(you shall be a peculiar treasure unto me)** (யாத். 19:5) என்றும் நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் (வ.6) என்று வாக்குத்தத்தம் பெற்ற மக்களுக்கு ஏன் இப்படி சம்பவித்தது? பரிசுத்த ஜாதியாய் இருக்கவேண்டிய மக்கள், தேவனுடைய சொந்த சம்பத்தாயிருக்க வேண்டிய மக்கள் தேவனை விட்டு வழிவிலகிச் சென்று விக்ரக ஆராதனைக்கும் அது தொடர்பான அருவருப் பான காரியங்களிலும் இறங்கினர். ஆகவே தேவன் அவர்கள் அந்நிய தேசத்தாரால் சிறைப்பிடிக்கப்படவும் உலக முழுவதும் சிதறடிக்கப்படவும் அனுமதித்தார். ஆனாலும் அன்பின் தேவன் அவர்களை முற்றுமாய்க் கைவிட்டுவிடவில்லை. எசேக்கியேல் தீர்க்கதரிசி மூலமாக சிதறடிக்கப்பட்ட மக்களை மீண்டும் கூட்டிச் சேர்த்து இஸ்ரவேல் தேசத்தை உங்களுக்கு

மீண்டும் கொடுப்பேன் (எசே.11:16,17) என்று முன்னுரைத்தபடியே இஸ்ரவேல் மக்களுக்கு சொந்த நாட்டைக் கொடுக்க சித்தம் கொண்டார்.

எகிப்து தேசத்தில் 400 ஆண்டுகள் அடிமைகளாக இருந்த மக்களை விடுவித்து வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான கானான் தேசத்திற்கு வழி நடத்திச் செல்ல தேவன் மோசேயைத் தெரிந்து கொண்டதுபோல சிதறடிக்கப்பட்ட மக்களை மீண்டும் இஸ்ரவேல் என்ற நாட்டைக் கொடுத்து அவர்களை ஒன்று சேர்க்க தேவன் 19ம் நூற்றாண்டின் இறுதியில் தியோடர் ஹெர்சல் (Theodor Herzl) என்ற ஒரு யூதரைத் தெரிந்து கொண்டார். அவர் ஹங்கேரியிலுள்ள புடாபெஸ்ட் என்ற நகரில் ஒரு செல்வச் செழிப்பான குடும்பத்தில் 1860ம் ஆண்டு பிறந்தவர். இவர் ஓர் கற்றறிந்த மேதை. ஒரு சட்ட நிபுணர் (Doctor of Law) பெரிய அறிவாளி (intellectual). ஜெர்மன், பிரெஞ்ச், ரஷ்யன் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். பிரான்ஸ் இராணுவத்தில் பணியாற்றி குற்றம் சாட்டப்பட்ட ஆல்பிரட் டிரேபஸ் (Alfred dreyfus) என்பவரைக் குறித்துத் தகவல்கள் சேகரிக்க பிரான்ஸ் இராணுவம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 1894ல் பாரிசுக்குச் சென்றார். அது தொடர்பாக தகவல்கள் சேகரிக்க இன்னும் பல நாடுகளுக்குச் செல்லும் சூழ்நிலையும் ஏற்பட்டது. இராணுவம் ஆல்பிரட் டிரேபஸ் மீதான தேச துரோகம் (treason) என்ற குற்றச்சாட்டில் விசாரணை முடித்து அவருக்குத் தண்டனை வழங்கி டெவில்ஸ் தீவில் (devil's island) சிறை வைத்தது. ஆல்பிரட் டிரேபஸ் ஒரு யூதர். அவர் மீதான குற்றச்சாட்டும் தீர்ப்பும் தவறானது என்ற ஒரு பிரச்சனை கிளம்பியது. தியோடர் ஹெர்சல் பல நாடுகள் சென்ற அனுபவத்தில் யூதர்கள் அவர்கள் சிதறடிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் அவர்கள் கடந்து செல்லும் கொடிய பாதைகளை அறிந்திருந்தார். அவர்கள் மீதான பகைமை உணர்வையும் அறிந்து அவருடைய இருதயத்தில் குத்தப்பட்டார். 1896ல் "யூதருக்குத் தனி நாடு" (The Jewish State) என்ற புத்தகத்தை எழுதினார். அதை உலகமெங்குமுள்ள யூத மக்களுக்கு விநியோகம் செய்தார். அதுவே இஸ்ரவேல் தனிநாடாக மாறுவதற்கு ஒரு வித்தாக மாறியது. அப்புத்தகம் சிதறடிக்கப்பட்ட யூதமக்களுக்கு சுதந்திர வேட்கையை அனல்மூட்டி எழுப்பியது. ஆகஸ்ட் 1897 ஸ்விட்சர்லாந்து நாட்டிலுள்ள வாஸ்ஸெல்ஸ் நகரில் யூதர்களுக்கான மாநாட்டைக் கூட்டினார். 1897 ஆகஸ்ட் 24ம் நாள் உலக சீயோனியச் சங்கத்தை (World Zionist Organisation) துவக்கினார். யூதர்களுக்குத் தனியாக இஸ்ரவேல் நாடு அமைய அயராது பாடுபட்டார். 1904ம் ஆண்டு தனது 44வது வயதில் மரித்தார். அவர் எழுப்பிய சுதந்திரதீபம் அணையாது வளர்ந்து. 1948ம்

ஆண்டு அவர் இறந்த 44வது ஆண்டில் இஸ்ரவேல் சுதந்திர நாடாக மாறியது. இன்று வல்லரசு நாடாக உருவாகிக்கொண்டிருக்கிறது.

அதைத் தொடர்ந்து இஸ்ரவேல் தனிநாடாக துளிர் விட்டு எழும்புவதற்கு உறுதுணையாக இருந்தவர் ரஷ்யாவில் பிறந்து வளர்ந்த யூதராகிய கெய்ம் வெய்ஸ்மேன் (**Chaim Weizmann**). அவர் 1904ம் ஆண்டு தன்னுடைய 30வது வயதில் இங்கிலாந்தில் குடியேறினார். உலக சீயோனியர் சங்கத்தில் தீவிரமாக செயல் படலானார். மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் (**University of Manchester**) இரசாயனத்துறையில் (**Chemistry Department**) பேராசிரியராகப் பணியாற்றினார். முதலாம் உலக மகா யுத்தத்தின்போது பிரிட்டன், ஜெர்மன் தேசத்தோடு தோல்வியடைந்துவிடுமோ என்ற நிலவரத்திலிருந்தது. அந்த நெருக்கமான சூழ்நிலையில் கெய்ம் வெய்ஸ்மேன் என்ற இரசாயனப் பேராசிரியர் மக்காச் சோளத்திலிருந்து அசிடோன் (**Acetone**) என்ற எவ்வித நிறமுமற்ற ஒருவகை திரவத்தைத் தயாரித்தார். இந்த அசிடோன் கண்டுபிடிப்பு துப்பாக்கி, பீரங்கி வெடிகுண்டு (**shells**) போன்ற இராணுவ ஆயுதங்கள் தயாரிப்புக்கும் பராமரிப்புக்கும் பயனுள்ளதாக அமைந்தது. சரியான நேரத்தில் கண்டுபிடித்த அந்த கண்டுபிடிப்பே பிரிட்டனின் வெற்றிக்குக் காரணமாக மாறிற்று. அந்த யுத்தத்தின் போது பாலஸ்தீன தேசம் துருக்கியரின் ஆளுகையின் கீழ் இருந்ததை 1917ம் ஆண்டு பிரிட்டன் அதையும் மேற்கொண்டு பாலஸ்தீனத்தைப் பிடித்தது. ஆகவே முதலாம் உலக யுத்தத்தில் கெய்ம் வெய்ஸ்மேனின் கண்டுபிடிப்பே பிரிட்டனின் வெற்றிக்கு வழிவகுத்தது. ஆகவே பிரிட்டீஷ் அரசு அவரைக் கௌரவப்படுத்தும் வகையில் ஒரு வெகுமதியைக் கொடுக்க ஏற்பாடு செய்தபோது அவர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அப்படியானால் அவருடைய விருப்பம்தான் என்ன என்று கேட்டபோது யுத்தத்தில் துருக்கியரிடமிருந்து கையகப்படுத்தப்பட்ட பாலஸ்தீன தேசத்தில் இஸ்ரவேல் மக்கள் குடியேற அனுமதிக்கவேண்டுமென்றும் இஸ்ரவேல் தனி நாடாகத் தங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அது ஏற்றுக்கொள்ளப்பட்டு பால்போர் பிரகடனத்தின்படி (**Balfour declaration**) முதல் கட்டமாக இஸ்ரவேல் மக்கள் குடியேறும் உரிமையும் பின்னர் தனி நாடாக கொடுக்கப்படும் என்ற உத்தரவாதமும் கொடுக்கப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் பால்போர் பிரகடனப்படி 1948ம் ஆண்டு பாலஸ்தீன தேசம் இஸ்ரவேல் தனி நாடாகத் துளிர்த்து எழுந்தது. தேவன் எசேக்கியேல் தீர்க்கதரிசி மூலமாக **“இதோ நான் இஸ்ரவேல் வம்சத்தாரை அவர்கள் போயிருக்கும் ஜாதி**

**களிடமிருந்து அழைத்து, சுற்றிலிமிருந்து அவர்களைச் சேர்த்து அவர்களை அவர்கள் சுயதேசத்திலே வரப்பண்ணுவேன்"** (எசே.37:21) என்று முன்னுரைத்த வாக்குத்தத்தின்படியே அவர்களுக்கு சுய தேசத்தைத் திரும்பக் கொடுத்து அங்கு குடியேறவைத்தார். எத்தனை நூற்றாண்டுகள் கடந்து சென்றாலும் தேவன் அவருடைய வாக்குத்தத்தத்தில் எவ்வளவு உண்மையுள்ளவராயிருக்கிறார் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

தியோடர் ஹெர்சலின் மேன்மையான விசுவாசம் குறிப்பிடத்தக்கதாகும். 1896ல் அவர் எழுதிய "யூதருக்குத் தனி நாடு" என்ற புத்தகம் 52 ஆண்டுகளில் (1948) இஸ்ரவேல் நாடு தனிநாடாக மாறியது என்றால் அது ஆச்சரியமானதே. எனினும் தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற கரிசனையுள்ளவராயிருந்தபடியால் அதை வாய்க்கச் செய்தார். தியோடர் ஹெர்சல் தம்முடைய மரண சாசனத்தில் "இஸ்ரவேல் தனிநாடாக விரைவில் உருவாகும். அப்பொழுது என்னுடைய கல்லறையைத் தோண்டி எலும்புகளை எடுத்து அவைகள் எருசலேமில் புதைக்கப்படவேண்டும்" என்று எழுதியிருந்தார். இஸ்ரவேல் மக்கள் அதைக் கனப்படுத்தி அவருடைய எலும்புகளைத் தோண்டி எடுத்து வந்து 1949 ஆகஸ்ட் 10ம் நாள் எருசலேம் நகரில் ஒரு மலை உச்சியில் மீண்டும் அடக்கம் செய்தனர். அந்த மலைக்கு அவருடைய நினைவாக "ஹெர்சல் மலை" என்று பெயர் சூட்டினர். யோசேப்பு எவ்வாறு தேவன் உங்களை சந்திக்கும்போது "என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டு போவீர்களாக" (ஆதி. 50:25) என்று கேட்டுக் கொண்டானோ அதுபோலவே ஹெர்சலும் விரும்பியுள்ளார்.

தியோடர் ஹெர்சல், கெய்ம் வெய்ஸ்மேன் போன்றோர் சுமார் 19 நூற்றாண்டுகளுக்கு முன் இழந்த சுய தேசத்தை எத்தனை தலைமுறையினர் மாறினாலும் அதை மீண்டும் அடைவதற்கு எவ்வளவு வாஞ்சையுள்ளவர்களாகயிருந்து விடாமுயற்சியோடு பிரயாசப்பட்டு பெற்றுக்கொண்டார்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். எழுத்தின்படியான சுய தேசத்தை அடைவதற்கு இவ்வளவு பிரயாசப்படுவார்களானால், தங்களது எலும்புகள் தங்களுடைய சுயதேசத்தில் புதைக்கப்படவேண்டும் என்ற வைராக்கியம் இருக்குமானால் நம்முடைய ஆவிக்குரிய சுயதேசத்தைக் குறித்த நாட்டம் எவ்வாறு இருக்கிறது என்பதை சிந்தித்துப்பாருங்கள். நம்முடைய சுயதேசம் எது? அப்போஸ்தலனாகிய பவுல் **"நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது**, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" (பிலி.3:20) என்று கூறுகிறார். அப்படியானால் **பரலோகமே நம்முடைய சுயதேசம்.** பரலோகத்

திற்கு இப்பொழுதே நமக்குக் குடியுரிமை (citizenship) கொடுத்துள்ளார். அதுமாத்திரமல்ல கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனும் இரட்சகர் வந்து நம்மை அங்கு அழைத்துச் செல்ல வரயிருக்கிறார் என்று வாசிக்கிறோம். யாருக்கு அவர் குடியுரிமை கொடுப்பார்? உலகம் முழுவதும் சிதறடிக்கப்பட்ட யூதர்கள் எவ்வாறு தங்கள் சொந்த நாட்டிற்கு உரிமையோடு திரும்பி னார்களோ அதேபோல "புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்" (ரோம.2:28,29) என்று சொல்லப் பட்டிருப்பதுபோல ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாகிய நமக்கே பரலோகத்தில் பிரவேசிக்கும் குடியுரிமையைக் கொடுத்திருக்கிறார். "உள்ளத்தில் யூதன்" என்பது யாரைக் குறிக்கிறது? "விசுவாச மார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக" (கலா.3:7) அவர்கள் புறஜாதியாராக இருந்தாலும் விசுவாசத்தினாலே அவர்களை நீதிமானாகக் கருதி விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படு கிறார்கள் (வ.8,9) என்று வாசிக்கிறோம். ஆகவே நாமே ஆபிரகாமின் சந்ததியார். நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர்.

யோசேப்பும், தியோடர் ஹெர்சலும் தங்களுடைய எலும்புகள் எருசலேமுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு புதைக்கப்படவேண்டுமென்று அவர்களுடைய சுயதேசத்தைக் குறித்து அவ்வளவு வைராக்கியமா யிருந்தனர். இஸ்ரவேல் மக்கள் அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொடுத்தனர். ஆனால் நம்முடைய நிலை என்ன? நம்முடைய எலும்புகள் மரித்து உலர்ந்துபோனாலும் ஆவி உட்பிரவேசிக்கும்போது அவைகள் உயிரடைந்து காலூன்றி நிற்கும் என்பதை எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு எலும்புகளின் பள்ளத்தாக்கிற்கு அழைத்துச் சென்று காட்டினார். (எசே. 37:1–14). ஆனால் நமக்கோ "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது **கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்** முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, (கிறிஸ்துவுக்குள்) **உயிரோடிருக்கும் நாமும்** (மறுரூபமடைந்து) கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (1 தெச. 4:16,17) என்று வாசிக்கிறோம். அவர் வந்து நம்மை அழைத்துச் செல்லயிருக்கிறார் என்றால் அது எவ்வளவு பெரிய சிலாக்கியம் என்பதை சிந்தித்துப்பாருங்கள். ஆயத்தப்படுவோம். நம்முடைய சுய தேசத்திற்குச் செல்லும் நாள் மிக சமீபம்.

## எருசலேமிற்காக இயேசு கண்ணீர் விட்டார்

“அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப்பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டழுது, உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. உன்னைச் சந்திக்குங் காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப் போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார்” (லூக்கா 19:41-44).

# 2 தேவனால் பரிசுத்தத்திற்குத் தெரிந்து கொள்ளப்பட்ட ஜாதி – கி.பி.70ல் எருசலேமின் வீழ்ச்சி



*கி.பி.70ல் அழிக்கப்பட்ட ஏரோதின் ஆலயம்*

இஸ்ரவேல் ஒரு சிறிய நாடு. அதனுடைய மொத்த பரப்பளவே 8522.04 சதுர மைல்கள்தான். 290 மைல் நீளமும் குறுக்களவில் 85 மைல்களும் உள்ள நாடு. சுமார் 90 நிமிடங்களில் அதன் குறுக்கே உள்ள தூரத்தைக் கடந்து விடலாம். வடகோடியிலுள்ள மெத்துல்லா (MUTULLA) என்ற இடத்திலிருந்து தெற்குக் கோடியிலுள்ள ஈலாட் (EILAT) என்ற இடத்தைச் சென்றடைய மலைப் பிரதேசங்களும் பாலைவனப் பகுதிகளும் குறுக்கிடுவதால் அதற்கு சுமார் 6 மணி நேரம் ஆகும். அவ்வளவு சிறிய நாடு. வடக்கு எல்லையில் லெபனானும் வடகிழக்கில் சிரியாவும், கிழக்கில் ஜோர்டானும், தென் மேற்கில் எகிப்தும், மேற்கே மத்தியதரைக் கடலும் எல்லையாக அமைந்த நாடு.

கர்த்தர் ஆபிரகாமை ஊர் என்கிற கல்தேயர் தேசத்திலிருந்து "நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா" (அப்.7:3) என்று அழைத்தார். "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" (ஆதி.12:2,3). கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னபடியே சொன்னதை விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிந்து போகுமிடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். ஆபிரகாமும் அவனோடு வந்தவர்களும் கானான் தேசத்தை வந்தடைந்தார்கள். "கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன்" என்றார் (ஆதி.12:7). பின்பும் கர்த்தர் "இந்த தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்"

(ஆதி.15:21). பின்பும் அதை உறுதி செய்யும் வகையில் "நீ பரதேசியாய்த் தங்கி வருகிற கானான் தேச முழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார்" (ஆதி.17:8). ஆகவேதான் இது "வாக்குத்தத்த தேசம்" (PROMISED LAND) என்றழைக்கப்படுகிறது.

ஆறாயிரம் வருட வரலாற்றைக் கொண்ட இஸ்ரவேலின் வரலாறு நாம் படிப்பதற்கு நல்லதொரு பாடமாக அமைகிறது. "இஸ்ரவேல்" என்ற பெயருக்கும் கூட ஒரு வரலாறு உண்டு. ஆபிரகாமின் பேரனாகிய யாக்கோபு பெனியேல் என்ற இடத்தில் தேவனோடு ஆசீர்வாதத்திற்காகப் போராடின போது தேவன் அவனை ஆசீர்வாதத்தோடு அவனுடைய பெயரை இஸ்ரவேல் என்று மாற்றினார். "யாக்கோபு" என்ற பெயருக்கு எத்தன், ஏமாற்றுகிறவன் என்று அர்த்தம். ஆனால் தேவன் அவனுக்கு இஸ்ரவேல் என்று பெயரிட்டார். "இஸ்ரவேல்" என்றால் "தேவனோடு போராடி மேற்கொண்ட பிரபு" (THE PRINCE THAT PREVAILS WITH GOD) என்று அர்த்தம். தேவன் அவனை அங்கே ஆசீர்வதித்தார் (ஆதி.32:29). இஸ்ரவேல் என்ற அந்தப் பெயரே யாக்கோபின் 12 பிள்ளைகள் வழியாக வந்த 12 கோத்திரத்தில் தோன்றிய வர்களுக்கும் இஸ்ரவேல் என்பதே பெயராயிற்று. ஆகவே இஸ்ரவேல் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட விசேஷித்த மக்கள். இஸ்ரவேல் என்ற அவர்களுடைய நாடும் விசேஷமானது.

இஸ்ரவேலின் எல்லைகளை தேவன்தாமே வகையறுத்துள்ளார். அவர் "எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும், கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன்" (ஆதி.15:18–21) என்று ஆபிரகாமுக்கு கானான் என்று அழைக்கப்பட்ட நாட்டை வாக்களித்தார். ஆகவே இந்த நாடும் தேவன் தாமே இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்தது.

### பரிசுத்தத்திற்குத் தெரிந்துகொள்ளப்பட்ட ஜாதி

இஸ்ரவேல் மக்கள் பூமியிலுள்ள சகல மக்களிலும் விசேஷித்தவர்கள். ஏனென்றால் அவர்கள் கர்த்தருடைய கண்களிலே கிருபை பெற்றவர்கள் (யாத்.33:16). மேலும் **"சகல ஜனங்களிலும் நீங்களே எனக்கு சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்;** (SPECIAL TREASURE) **பூமியெல்லாம் என்னுடையது.**

**நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் (HOLY NATION) இருப்பீர்கள்**" என்று கர்த்தர் மோசே மூலமாக இஸ்ரவேல் மக்களுக்கு சொன்னார். ஆனாலும் அதை ஒரு நிபந்தனையின் பேரில் அப்படிச் சொன்னார். என்ன நிபந்தனை? நீங்கள் என் வாக்கை உள்ளபடியே கேட்டு என் உடன்படிக்கையைக் கைக்கொள்ளவேண்டும் என்பது தான் (யாத்.19:5,6) "**நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்**" (உபா.7:6) என்று வாசிக்கிறோம். இந்த தெரிந்து கொள்ளுதலுக்கு என்ன காரணம்? "சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள்பேரில் அன்புவைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள். கர்த்தர் உங்களில் அன்பு கூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்க வேண்டும் என்பதினாலும்; கர்த்தர் பலத்த கையினால் உங்களைப் புறப்படப் பண்ணி, அடிமைத்தன வீடாகிய எகிப்தினின்றும் அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் உங்களை மீட்டுக்கொண்டார்" (வ.7,8) என்று அவர்களுடைய விடுதலைப் பயணத்தை வழிநடத்திய மோசே கூறுவதை வாசிக்கிறோம். அதே சமயத்தில் ஒரு கடுமையான எச்சரிக்கையையும் சேர்த்தே கொடுத்தார். நீங்கள் சுதந்தரிக்கும் தேசத்திலுள்ளோரின், தேவர்களை எக்காரணத்தைக் கொண்டும் சேவிக்கக் கூடாது என்றும் அவர்களோடு சம்பந்தம் கலவாமல் இருக்கவேண்டும் என்றும் எச்சரித்து விட்டு எச்சரிக்கையை மீறினால் "கர்த்தருடைய கோபம் உங்கள்மேல் மூண்டு, உங்களைச் சீக்கிரம் அழிக்கும்" (உபா. 7:4) என்றார். மேலும் "**அந்த ஜாதிகள் செய்யும் அருவருப்புகளின்படி செய்யக் கற்றுக் கொள்ள வேண்டாம்**" (உபா.18:9) என்று சொல்லி அந்த அருவருப்புகளைப் பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறார் (வ.10–12). பின்னர் "**உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ உத்தமனாயிருக்கக்கடவாய்**" (THOU SHALT BE PERFECT WITH THE LORD THY GOD) (வ.13) என்ற கட்டளையைக் கொடுத்திருக்கிறார். சுருக்கமாகச் சொன்னால் "**நான் பரிசுத்தர்; ஆகையால் நீங்களும் பரிசுத்தமாயிருப்பீர்களாக**" (லேவி.11:45) என்று கூறுகிறார். அதுவே நம்மைக் குறித்தும் அவருடைய சித்தமாகயிருக்கிறது.

### இயேசுவைக் குறித்த தீர்க்க தரிசனம்

இந்தப் பின்னணியத்தில்தான் மோசே "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதர

ரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக" (உபா.18:15) என்று இஸ்ரவேல் மக்களுக்கு மோசே சொன்னார். எபிரேய மூலமொழியில் "தீர்க்கதரிசி" என்ற சொல்லுக்கு "நபி" (NABI) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு "தெய்வீக ஏவுதலால் தேவனுடைய சித்தத்தை அவருடைய பிள்ளைகளுக்கு அறிவிப்பவர் என்றும் அவர்களது எதிர்காலத்தை முன்பாகவே வெளிப்படுத்துகிறவர்" (ONE WHO IS DIVINELY INSPIRED TO COMMUNICATE GOD'S WILL AND TO DISCLOSE THE FUTURE TO THEM) என்ற ஒரு முக்கியமான அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு "விடுவிக்கிறவர்" அல்லது "இரட்சகர்" (Deliverer) என்ற மற்றுமொரு அர்த்தமும் சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக "இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, **கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கும்படி காலேபின் தம்பியான கேனாசுடைய குமாரனாகிய ஒத்னியேல் என்னும் ஒரு ரட்சகனை அவர்களுக்கு எழும்பப்பண்ணினார்**" (நியா.3:9) என்ற வசனத்திலிருந்து அதை விளங்கிக்கொள்ளுகிறோம். மேலும் கர்த்தர் மோசேயிடம் "உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே **அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்**" (உபா.18:18,19) என்று சொல்லி மோசே சொன்னதைக் கர்த்தர் உறுதிப்படுத்தியதைக் காண்கிறோம். அப்போஸ்தலனாகிய பேதுரு தன்னுடைய முதல் பிரசங்கத்தில் மோசேயின் தீர்க்கதரிசனம் மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையின் மூலம் (first advent of Jesus Christ) நிறைவேறிற்று என்பதை விவரித்துள்ளதை வாசிக்கிறோம். "மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றான்" (அப்.3:22,23) என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

## இயேசுவுக்குச் செவிகொடுங்கள்:

புதிய ஏற்பாடு கால தொடக்கத்தில் இயேசு கிறிஸ்து யோர்தான் நதியில் யோவான் ஸ்நானனிடம் ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறினவுடனே

“இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக் கிறேன் என்று உரைத்தது” (மத்.3:16,17) அது பிதாவாகிய தேவனுடைய சத்தம். “நான் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசகுமாரனை உங்களுக்காக அனுப்பித் தந்திருக்கிறேன். நீங்கள் அவரை நேசியுங்கள்” **(you love Him)** என்ற நற்செய்தியின் சத்தம்தான் அது. இதே செய்தியை மறுரூப மலையில் சற்றுவித்தியாசமாக நேரிடையாகச் சொல்லுகிறார். “இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், **இவருக்குச் செவிகொடுங் கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று**” (மத்.17:5) “இவருக்குச் செவிகொடுங்கள்” என்பதே முக்கிய செய்தி. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் பிதாவாகிய தேவனைத் தொடர்ந்து தம் மக்களுக்கு எச்சரிக்கையைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் மக்களோ செவிகொடுக்கத் தவறினார்கள். ஆகவேதான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து “எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச்சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” (மத்.23:37–39). இயேசு கிறிஸ்துவின் அங்கலாய்ப்பையும் அவருடைய கோபத்தின் உக்கிரத்தையும் பாருங்கள். அவர் அதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. எருசலேமின் தேவாலயத்தைப் பார்த்துவிட்டு “இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” (மத்.24:2) அது நிறைவேறும் காலமும் வந்தது.

## எருசலேம் முற்றுகை - யூத மக்களின் சிதறடிப்பு

முதல் முறையாக யூதர்கள் மீது ரோம அரசு போர் தொடங்கியது **(The First Jewish Roman War)**. தீத்து ராயன் **(Titus Caesar)** கி.பி.70ம் ஆண்டு திபோரியஸ் ஜூலியஸ் அலெக்சண்டர் **(Tiberius Julius Alexander)** என்ற

படைத்தளபதியின் உதவியுடன் (Second in command) எருசலேமை முற்றுகை யிட்டான். அது வரை எருசலேம் யூதர்களுக்குச் சொந்தமாக இருந்தது. ரோம இராணுவத்தின் நான்கு லீஜியன் (Ligion) படையுடன் முற்றுகை தொடர்ந் தது. ஒரு லீஜியன் என்பது சுமார் 6000 பேர் அடங்கிய ஒரு படைப்பிரிவாகும். எருசலேமின் மேற்குப்பக்கமாக 3 லீஜியன் படைப்பிரிவினரும் மாசிடோனிக்கா Xம்பிரிவு, (Macedonica X) புஃல்மினிட்டா XIIம் பிரிவு (Fulminita XII) அப்போலி னரிஸ் XVம் பிரிவு (Apollinaris XV) கிழக்கே ஒலிவமலைப் பக்கமாக ஒரு லீஜியன் படையினரும் (பிஃரட்டன் சிஸ் Xம் பிரிவு) (Fretensis X) முற்று கையைத் தொடர்ந்தனர். பஸ்கா பண்டிகைக்கு வந்தவர்களுக்கும் எருசலேமில் குடியிருப்போருக்கும் உணவு, தண்ணீர் விநியோகம் கிடைக்காத அளவுக்கு செய்து எருசலேம் படையினர் சரணடைய நிர்பந்தித்தனர். எனினும் அவர்கள் சரணடையவில்லை. யூத வரலாற்று ஆசிரியராகிய ஜோசபஸ் என்பவரை டைட்டஸ் சீசர் முற்றுகையின் கீழிருக்கும் எருசலேம் படையினரிடம் பேச்சு வார்த்தைக்கு வரும்படி (for Negotiation) தூது அனுப்பினான். தூதுவராகச் சென்ற ஜோசபசை அவர்கள் அம்பு எய்து காயப்படுத்திவிட்டனர். அதைத் தொடர்ந்து ரோமப்படை திடீர் தாக்குதலை ஆரம்பித்தது. இரு படை யினருக்கும் போர் தொடங்கிற்று. ரோமப் படையினர் எரிகிற தீப்பந்தங்களை சுவருக்கு உட்பக்கமாக எறிந்தனர். நெருப்பு எருசலேம் தேவாலயத்திற்குள் பரவிவிட்டது. டைட்டஸ் சீசரின் நோக்கம் தேவாலயத்தை அழிப்பது அல்ல. அதைக் கைப்பற்றி ரோம சக்கரவர்த்தியின் ஆலயமாகவும், அனைத்து தேவர்களுக்கான வழிபாட்டு ஸ்தலமாகவும் (Roman Pantheon) மாற்றத் திட்டமிட்டிருந்தான். ஆனால் எதிர்பாராத விதமாக எருசலேம் தேவாலயமும் பற்றி எரிந்தது. தேவாலயம் அழிந்தது. ரோமப் படையினர் அதைக் கொள்ளை யிடும்போது உருகிக் கிடந்த பொன் பாளங்களைக் கண்டனர். அவற்றை எல்லாம் இடிபாடுகளுக்கிடையே கிடந்ததை எடுத்தது மாத்திரமல்ல ஆலயச் சுவரின் ஒரு கல்லுக்கு மற்றுமொரு கல்லுக்கும் இடையே உள்ள இடுக்குகளில் பொற் பாளம் உருகி சென்றிருந்தபடியால் அதை எடுக்கும்பொருட்டு ஒரு கல்லின்மேல் ஒரு கல் இல்லாத அளவுக்கு உடைத்து எடுத்து தேவாலயம் முற்றுமாக நாசமாயிற்று. "ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுபோகும்" என்று இயேசு சொன்ன தீர்க்கதரிசனம் சுமார் 40 ஆண்டுகளுக்குள் நிறைவேறி முடிந்தது. ரோம லீஜியன்கள் யூதப் படையை நசிக்கிப்போட்டது. மக்கள் தப்பிப்பிழைக்க சிதறடிக்கப்பட்டுப் போனார்கள். 70ம் ஆண்டு செப்.7ம் நாள் எருசலேம் ரோமப் படையின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. எருசலேம் நகரைவிட்டு சிதறுண்டுபோன யூத மக்களை வேட்டை யாடுவதுபோல் தேடிப்பிடித்து அழிக்கத் தொடங்கினார்கள் (Hunt down the

Jews that had fled the city) ஆண், பெண், முதியோர், இளைஞர், குழந்தைகள், ஆசாரியர்கள் யாரையும் ரோமப் படையினர் விட்டுவைக்க வில்லை. இரக்கத்திற்காக மன்றாடியோரையும் கூட மிகக் கொடூரமாக வெட்டிக் கொன்றனர்.

ஜோசபஸ் என்ற யூத வரலாற்று ஆசிரியரின் கணிப்பின்படி 11 லட்சம் யூத மக்கள் இந்தப் போரில் கொல்லப்பட்டார்கள். 97,000 பேர் சிறைக் கைதிகளாக கொண்டு செல்லப்பட்டனர். அநேக யூத மக்கள் மத்திய தரைக்கடல் வழியாக பல நாடுகளுக்குத் தப்பிச் சென்றனர்.

வெற்றிபெற்று ரோமுக்குத் திரும்பிய டைட்டஸ் அவனைப் பாராட்டும் வகையில் அளித்த மலர்மாலையை ஏற்க மறுத்துவிட்டான். ஏனெனில் **"இந்த வெற்றி என்னுடைய சொந்த முயற்சியால் வரவில்லை. தேவனுடைய கோபாக்கினையின் கருவியாக நான் பயன்படுத்தப்பட்டேன்"** என்று சொன்னான். **(The victory did not come through my own efforts but that had been merely served as an instrument of God's wrath)** எனினும் அவனுடைய பெயராலுள்ள வெற்றி வளைவு **(Victory Arch of Titus)** இன்றும் ரோமில் உள்ளது. தேவாலயம் அழிக்கப்பட்டு ஆலயத்திலிருந்து கொள்ளை யிட்ட சில பொருட்களை ரோமப் படையினர் கொண்டு சென்றதை அந்த வெற்றி வளைவில் சித்தரித்திருப்பதைப் படத்தில் காணலாம்.





யூதர்களின் சர்வ நாசச் சம்பவங்களை சித்தரிக்கும் வகையில் அமெரிக்காவில் ஞாபகார்த்த அரும்காட்சியகம் ஒன்றுள்ளது. **(Holocaust Memorial Museum)** ஜெர்மனியில் சம உரிமையோடு கௌரவமாக வாழ்ந்த மக்கள் இரண்டாம் உலக யுத்தக் கால கட்டத்தில் தங்கள் உரிமைகளையும் இழந்து தீண்டத்தகாதவர்களாக **(Outcasts)** கருதப்பட்டது மட்டுமின்றி கொன்று அழிக்கப்பட்டார் கள். அந்த அரும்காட்சியகத்தின் ஒரு பகுதியைத்தான் மேலே உள்ள படத்தில் காண்கிறோம்.

தகவல் : **Holocaust Memorial Museum** இணையதளம்

# 3 தேவன் நேசித்த எருசலேம்

*"இதோ, உங்களில் ஒவ்வொருவரும் என் சொல்லைக் கேளாதபடிக்கு, உங்கள் பொல்லாத இருதய கடினத்தின்படி நடக்கிறீர்கள். ஆதலால், உங்களை இந்த தேசத்திலிருந்து நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத தேசத்திற்குத் துரத்திவிடுவேன்"* **(எரே.16:11,12).**

விக்டோரியா மகாராணி யூதரான தன்னுடைய பிரதம அமைச்சர் டிஸ்ரேலியிடம், "முழு வேதாகமத்தையும் நான் நம்பத்தக்கதாக, அதிலிருந்து ஒரே ஒரு வார்த்தையைச் சொல்ல முடியுமா?" என்று கேட்டார்கள், அறிவாளியான அந்த யூதன், "'ஆம்' மகாராணியே உங்களை நம்ப வைக்கத் தக்கதாக நான் சொல்லக்கூடிய ஒரே ஒரு வார்த்தை "யூதர்கள்" என்பதே" என்று பதிலளித்தார்.

யூதர்கள்தான் வேதாகமத்தின் ஜனங்கள், சுமேரியர், அக்காடியர், ஏலாமித்தியர் மற்றும் ஏத்தியரோடு ஒப்பிடும்போது யூதர்கள் உலகத்தில் கடைசியாக வந்தவர்கள். மற்றவர்கள் எல்லோரும் மறைந்துவிட்டனர். ஆனால் யூதர்கள் இன்னும் மறையவில்லை. பூமியிலே வாழ்கிற மக்களிலேயே, மிகப்பழமையானவர்கள் யூதர்களே. கிரேக்கர்களை விட ஓராயிரம் ஆண்டு களும், அமெரிக்கர்களை விட மூவாயிரம் ஆண்டுகளும் சீனர்களைவிட ஐநூறு ஆண்டுகளும் வாழ்ந்த யூதர்கள் அடையாளம் காட்டக்கூடிய நாட்டவர் என்பதோடு, சிறப்பாகக் குறிப்பிடத்தக்க நாகரிகமாக வாழ்ந்த மனித இனம் என்று சொல்லலாம்.

தங்கள் சொந்த ஜனங்கள் இன்னமும் வாழ்ந்து வருகிறதைக் கண்ட யூதர்கள், இன்றைக்கும் ஆச்சரியத்தோடு வாழ்கின்றனர். யூதர்கள் வாழ்ந்த பல்வேறு வகையான வாழ்க்கை முறைகள் ஆபிரகாமிலிருந்து மோசே வரை இயேசு முதல் சிக்மண்டு பிராய்டு, கார்ல் மார்க்ஸ், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் பாப்டைலான், ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் வரை உலகத்தினுடைய அறிவுத்திறனை, நீதி நெறிகளை, நாகரிகத்தை, உருவாக்கக் கூடியவையாக உள்ளன.

பூமியிலே தன்னைப் பிரதிபலிக்க தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட விசேஷ ஜனமான யூதர்கள் தங்கள் அண்டை நாடுகளைப் போல விக்கிரகங்

களிலே குருட்டுத்தனமாக இடறி தங்கள் அழைப்பை அடிக்கடி மறந்து விடுகிறார்கள். பிறகு தீர்க்கதரிசிகள், போதகர்கள், தேவனின் நியாயத்தீர்ப்பு எல்லாம் சேர்ந்து, அவர்களுடைய உண்மையான தேவனிடம் திரும்பச் செய்கின்றன. பிதாவினுடைய ஒரே குமாரனாகிய இயேசுவை, அவர்கள் புறக்கணித்ததாலே, தேவன் அவர்களை எல்லா தேசங்களிலும் சிதறடித்தார்.

யூதர்கள் தேவனுக்கு ஏன் அவ்வளவு முக்கியமானவர்கள்? யூதர்களை தேவனுடைய சபையென்றும் மற்றவர்களை அவிசுவாசிகள் என்றும் மனித இனத்தையே வேதாகமம் இரண்டாகப் பிரிக்கிறது. ஆபிரகாமின் கொள்ளுப் பேரனும், யூதாவின் வம்சத்தாரும்தான் 'யூதா' என்ற பெயரிலிருந்து யூதர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். தேவ சபையைச் சேர்ந்த ஜனங்கள், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக நம்புகிறவர்கள். இன்னும் இயேசுவின் மேல் நம்பிக்கை வைக்காதவர்கள் அவிசுவாசிகள். மேசியாவின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்தும், யூதர்களின் மேசியாவாக வந்த இயேசுவை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

யூத வரலாற்றுக்கு ஐந்தில் நான்கு பகுதியை ஒதுக்கியிருக்கிற வேதாகமத்திலேயே யூதரின் மேன்மையின் இரகசியம் அடங்கியுள்ளது. படைப்புக்குப் பிறகு, மனித இனத்தின் முதல் இரண்டாயிர ஆண்டு வரலாறு ஆதியாகமத்தில் பன்னிரெண்டு அதிகாரங்களில் சுருக்கிக் கூறப்பட்டுள்ளது. வேதாகமத்தில் யூதர்களின் வரலாற்றுக்கு மட்டும், ஓராயிரம் அதிகாரங் களுக்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது. சபையின் வரலாற்றையும், அதன் முடிவையும் வேதாகமத்தின் ஐந்தில் ஒரு பங்கே சொல்கிறது.

ஆபிரகாமின் மூதாதையரான ஏபேரின் சந்ததியை வைத்து எபிரெயர்கள் என்று அழைக்கப்பட்டவர்களே, இஸ்ரேல் மக்களின் முன்னோர்கள் கர்த்தருக்கு விரோதமாய் மனித இனம் எழும்பி பாவத்தில் விழுந்தபோது தனி மனிதனாகிய ஆபிரகாமை, மனித இனத்தை திரும்ப நீதிக்குட்படுத்தும் தெய்வீக திட்டத்திற்கு அழைத்தார். ஆபிரகாமையும் அவன் சந்ததியையும் தேவன் ஆசீர்வதித்தார்.

ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட தேசத்திலே கொடிய பஞ்சம் உண்டான போது, ஆபிரகாமின் கொள்ளுப் பேரனான யோசேப்பு பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்த எகிப்து நாட்டுக்கு ஆபிரகாமின் சந்ததியினரை தேவன் நடத்திச் சென்றார். நானூறு ஆண்டுகளுக்குப்பிறகு, பார்வோன் களால் அடக்கி ஆளப்பட்ட எபிரெயர்கள், பார்வோனின் அரண்மனையில்

வளர்க்கப்பட்ட, யூதனாகிய மோசேயின் தலைமையில் எகிப்தைவிட்டுச் வெளியேற வேண்டியதாயிற்று.

எகிப்திலிருந்து பாலஸ்தீன நாட்டுக்கு அழைத்து வந்த தேவனுடைய ஜனங்களே அவருடைய சொந்த ஜனமாகவும், உலகில் எல்லா நாடுகளிலும் சிறுமந்தையாகவும் இருக்கும் என்று வாக்குத்தத்தம் பண்ணினார். எகிப்திலிருந்து வனாந்திர வழியாய் நடத்தி வந்த பிரயாணம் முழுவதிலும், தேவன் அவர்களை வழிநடத்தி, போஷித்து, கற்பித்து, வழிவிலகிச் சென்ற போது சுத்திகரித்து, பரிசுத்தமான வாழ்க்கை வாழ கட்டளைகளைக் கொடுத்தார்.

இந்த ஒரு நாட்டை தேவன் தெரிந்தெடுத்து, கட்டுப்பாடுகளின் நடுவிலே கண்டிப்பாக நடத்தியதற்குக் காரணம், ஒரு நாளிலே இந்த தேசம், உலகம் முழுவதுக்கும் ஆசீர்வாதத்தின் வாய்க்காலாய் விளங்கும் என்பதற்காகவே. நெடுங்காலத்துக்கு முன்பாகவே, ஐசுவரியத்தை சம்பாதிக்கிறதற்கான பெலனையும் (உபா.8:18), நாட்டை ஆளும் ஞானத்தையும் இந்த மக்களுக்கு தேவன் கொடுத்தார். அன்றிலிருந்து யூதர்கள் சிறப்படையத் தொடங்கினர். ஆடு மேய்த்த யோசேப்பு, எகிப்தின் பிரதம அமைச்சர் ஆனான்; பாபிலோனுக்கு அடிமையாகக் கொண்டு செல்லப்பட்ட தானியேல், அங்குள்ள ராஜாக்களுக்கு நெருங்கியவனாக மாறியது மட்டுமல்ல, அநேக பிரதானிகளுக்கு அதிபதி ஆனான். உலகத்திலேயே ஞானம் நிறைந்த சாலமோன், மிகச்சிறந்த ராஜாக்களெல்லாரிலும் மதிப்புப் பெற்றவனானான். அவரது தகப்பனாராகிய தாவீது, ஆடு மேய்க்கும் சிறுவனாக இருந்தபோதே, பெலிஸ்தரின் மாவீரனாகிய கோலியாத்தை தோற்கடித்து, எருசலேமில் தன் ராஜ்யத்தை நிறுவினான்.

இன்று யூதர்கள், அறிவியல், மருத்துவம், கலை, இலக்கியம், இசை, வியாபாரம், விவசாயம், தொழில்கள் மற்றும் பாதுகாப்பு சார்ந்த அறிவியலிலும் சிறந்து விளங்குகிறார்கள். இந்த மக்களை தேவன் ஆசீர்வதித்திருக்கிறார்.

## தேவன் நேசித்த எருசலேம்

எருசலேம் உலகத்திலேயே ஒரு தனித்தன்மை (unique) வாய்ந்த நகரம். இது மலைகளால் சூழப்பட்ட ஒரு நகரம். இந்நகரம் சீயோன், ஓபேல், அக்கிரா, பெசத் என்ற நான்கு மலைக்குன்றுகள் மேல் நான்கு பாகமாகக் கட்டப்பட்ட மிக அழகிய நகரம். இதில் சீயோன் என்ற மலைக்குன்றில்தான்

இந்நகரமுள்ளது "வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது, அதுவே மகாராஜாவின் நகரம்" (சங்.48:2) என்று பேர்பெற்றது. மேலும் தாவீது இந்நகரைக் குறித்து "கர்த்தர் யாக்கோபின் வாசஸ்தலங்களெல்லாவற்றைப் பார்க்கிலும் சீயோனின் வாசல்களில் பிரியமாயிருக்கிறார். தேவனுடைய நகரமே! உன்னைக் குறித்து மகிமையான விசேஷங்கள் வசனிக்கப்படும்" (சங்.87:2,3) என்று குறிப்பிடுகிறார். அந்நகரை மாத்திரமல்ல அந்நகரத்தின் குடிகளையும் தேவன் "என் ஜனங்கள்" என்று கூறுகிறார். "நான் வானத்தை நிலைப் படுத்தி, பூமியை அஸ்திபாரப்படுத்தி, சீயோனை நோக்கி: நீ என் ஜனமென்று சொல்வதற்காக, நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி, என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்" (ஏசா.51:16) என்று வாசிக்கிறோம். தேவன் தாம் நேசித்த நகரத்தை, அதின் குடிகளை "என் ஜனம்" என்று பெருமிதத்தோடு சொன்ன தேவன் அதை அழிக்கவும் சித்தம் கொண்டார். ஏனெனில் தேவனைக் குறித்து அவர் தீமையைப் பார்க்காத சுத்தக்கண்ணன் என்றும் அநியாயத்தைச் சகித்துக்கொண்டிருக்கமாட்டார் (ஆப.1:13) என்றும் காண்கிறோம். அவர்கள் செய்த அநியாயம்தான் என்ன?

## எருசலேம் மக்களின் அருவருப்பான பாவங்கள்

எசேக்கியேல் 16ம் அதிகாரம் முழுவதையும் வாசித்தால் தேவனுக்கு விரோதமாக அம்மக்களின் கொடிய, அருவருப்பான பாவங்களை விளங்கிக் கொள்ள முடிகிறது. வேசித்தனம், வேசித்தனத்தோடு கூடிய விக்கிரக வழிபாடு, குமாரர்களையும் குமாரத்திகளையும் விக்கிரகங்களுக்கு நரபலி செலுத்தியது, சகலவிதஅருவருப்புகள் என அவைகளையெல்லாம் பட்டியல் போட்டுக் காட்டுகிறார். "எனக்கு கோபம் உண்டாக்கும்படி உன் வேசித் தனங்களைப் பெருகப்பண்ணினாய்" (எசே.16:26) என்று தேவன் சொல்லும் அளவுக்கு அருவருப்புகள் பெருகிப்போயின. ஆகவேதான் இதை அறிந்திருந்த டைட்டஸ் சீசர் எருசலேமை அழித்தபோது "தேவனுடைய கோபாக்கினையின் கருவியாகப் பயன்படுத்தப்பட்டேன்" என்று கூறியுள்ளான்.

## எருசலேமின் அழிவு தீர்க்கதரிசன நிறைவேறுதலே

யூதமக்கள் எருசலேமை விட்டு சிதறியடிக்கப்பட்டது பல்வேறு நூற்றாண்டு களுக்கு முன்பே வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் உரைத்துள்ளனர். ஆகவே யூத மக்களின் சிதறடிப்பு தீர்க்க தரிசனம் நிறைவேறுதலே என்பதை விளங்கிக்கொள்ளுகிறோம். சுமார் கி.மு.1400ம் ஆண்டில் உபாகமப் புத்தகத்தை எழுதிய மோசே யூதமக்களின்

சிதறடிக்கப்பட்டக் காரணத்தை பட்டியலிட்டுக் காட்டி சிதறடித்தலையும் குறித்து இவ்வாறு கூறுகிறார். ***"கர்த்தர் உன்னைப் பூமியின் ஒரு முனை துவக்கி பூமியின் மறுமுனைமட்டும் இருக்கிற எல்லா ஜனங்களுக் குள்ளும் சிதற அடிப்பார்; அங்கே நீயும் உன் பிதாக்களும் அறியாத மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய். அந்த ஜாதி களுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது, உன் உள்ளங்கால்கள் தங்கித் தரிக்க இடமும் இராது; அங்கே கர்த்தர் உனக்குத் தத்தளிக்கிற இருதயத்தையும், சோர்ந்துபோகிற கண்களையும், மனச்சஞ்சலத்தையும் கொடுப்பார். உன் ஜீவன் உனக்குச் சந்தேகத்தில் ஊசலாடும்; உன் ஜீவனைப்பற்றி நம்பிக்கையில்லாமல் இரவும் பகலும் திகில்கொண் டிருப்பாய். நீ பயப்படும் உன் இருதயத்தின் திகிலினாலும், உன் கண்கள் காணும் காட்சியினாலும், விடியற்காலத்தில் எப்பொழுது சாயங்காலம் வருமோ என்றும், சாயங்காலத்தில், எப்பொழுது விடியற்காலம் வருமோ என்றும் சொல்லுவாய்"*** (உபா.28:64–67).

"நீ அவர்களை நோக்கி: உங்கள் பிதாக்கள் என்னைவிட்டு அந்நிய தேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவித்து, அவர்களைப் பணிந்து கொண்டு, என் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல் என்னை விட்டு விட்டார்களே. நீங்கள் உங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் அதிக கேடாக நடந்தீர்களே; இதோ, உங்களில் ஒவ்வொருவரும் என் சொல்லைக் கேளாத படிக்கு, உங்கள் பொல்லாத இருதய கடினத்தின்படி நடக்கிறீர்கள். ஆதலால், உங்களை இந்த தேசத்திலிருந்து நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத தேசத்திற்குத் துரத்திவிடுவேன்; அங்கே இரவும் பகலும் அந்நிய தேவர் களைச் சேவிப்பீர்கள்; அங்கே நான் உங்களுக்குத் தயை செய்வதில்லை" (எரே.16:11–13) என எரேமியா தீர்க்கதரிசி சுமார் கி.மு.650ம் ஆண்டு காலகட்டத்தில் தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார்.

"மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் சுயதேசத்திலே குடியிருக்கையில் அதைத் தங்கள் நடக்கையினாலும் தங்கள் கிரியைகளி னாலும் தீட்டுப்படுத்தினார்கள்; அவர்களுடைய நடக்கை என் முகத்துக்கு முன்பாக தூரஸ்திரீயின் தீட்டைப்போல் இருந்தது. ஆகையினால் தேசத்திலே அவர்கள் சிந்தின இரத்தத்தினிமித்தமும், அதை அவர்கள் தங்கள் நரகலான விக்கிரகங்களால் தீட்டுப்படுத்தினதினிமித்தமும் நான் என் உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றி, அவர்களைப் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்தேன்" (எசே.36:17–19) என எசேக்கியேல் தீர்க்கதரிசி சுமார் கி.மு.590ம் ஆண்டு காலகட்டத்தில் தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார்.

இஸ்ரவேல் மக்களின் அடிமைத்தனத்தைக் குறித்து கர்த்தர் ஆபிரகாமுக்கு முன் அறிவித்தார். "உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய்" (ஆதி.15:13) என்று எச்சரிப்பைக் கொடுத்தார். ஆனாலும் எச்சரிக்கையைக் குறித்து சிந்தனையற்றவர்களானார்கள். இன்றும் ஆண்டவர் அடிமைத்தனத்திற்கும், வரயிருக்கும் அழிவுக்கும் தப்பித்துக் கொள்ளும்படி எச்சரிக்கைகளைக் கொடுத்துக்கொண்டேதானிருக்கிறார். **அன்று எகிப்தியருக்கு அடிமையானதுபோல பாவங்களுக்கும், உலக சிற்றின்பங்களுக்கும் பாலின ஒழுக்கக்கேடுகளுக்கும் அடிமையாக்கிக் கொண்டுதானிருக்கிறார்கள். எனினும் ஆண்டவர் மனந்திரும்புதலுக்கான தருணங்களைக் கொடுக்கிறார்.** அன்பின் ஆண்டவர் ஆபிரகாம் மீது கொண்ட அன்பின் காரணமாக இஸ்ரவேல் மக்கள் "நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள்" (வ.16) என்றும் கூறினார். சொன்னதுபோலவே வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ள ஆண்டவர் அப்படியே செய்தார்.

தேவனுடைய தீர்க்கதரிசியாகிய யோனா தேவனுடைய அறிவுரையின் படியே "இன்னும் நாற்பதுநாளுண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப் பட்டுபோம்" (யோனா 3:4) என்று எச்சரிக்கையின் குரலை எழுப்பினார். ஆனால் நடந்தது என்ன? எச்சரிப்பின் சத்தத்திற்குச் செவிசாய்த்த "நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள்; பெரியோர்முதல் சிறியோர் மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள்" (யோனா 3:5). தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்கள். அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கையிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பினார்கள் (வ.8) அவர்கள் அழிந்துபோகாதபடிக்கு அவருடைய உக்கிரகோபம் மாறியது (வ.9) "அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்" (யோனா 3:10) என்று வாசிக்கிறோம். அவர் இரக்கமும், மனஉருக்கமும், மிகுந்த கிருபையுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிற தேவனென்று அறிகிறோம். சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேல் மக்களுக்கு நடந்தென்ன?

# 4 எருசலேமின் தேவாலயம்

சிதறடிக்கப்பட்ட மக்களுக்கு நடந்தது என்ன என்பதைக் கண்டுகொள்வதற்கு முன்பாக இஸ்ரவேல் மக்களின் தேவாலயத்தின் துவக்கத்தைக் குறித்து **(the origin of the temple of God)** அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

## எருசலேமின் தேவாலயம்

எருசலேமின் தேவாலயத்திற்கும் அது கட்டப்பட்ட இடத்திற்கும் நீண்டதொரு வரலாற்று பின்னணியிருக்கிறது. எருசலேம் மலைகளும் பள்ளத்தாக்குகளுமுள்ள அழகிய நகரம். சாவுக்கடல் **(Dead Sea)** மட்டத்திற்கு **3800** அடி உயரமுள்ள மலையில் இந்நகரம் அமைந்திருக்கிறது. மத்திய தரைக்கடலுக்கு கிழக்கே **33** மைல் தூரத்திலும் சாவுக்கடலுக்கு மேற்கே **14** மைல் தூரத்திலும் அமைந்துள்ளது. முழு உலகத்திற்கும் எருசலேம் நகரமே மையமாக அமைந்திருப்பதாக கருதப்படுகிறது. அந்நகரின் மத்தியில் தான் எருசலேம் தேவாலயம் அமைந்திருந்தது. அது அமைக்கப்பட்ட இடம் மோரியா மலை. **"பின்பு சாலொமோன் எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையில் எபூசியனாகிய ஓர்னானின் களம் என்னும் தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத் துவக்கினான்.** அவன் தான் ராஜ்யபாரம் பண்ணின நாலாம் வருஷம் இரண்டாம் மாதம் இரண்டாம் தேதியிலே கட்டத் தொடங்கினான்" **(2 நாளா.3:1,2) (கி.மு.960)** என்று வாசிக்கிறோம். இந்த மோரியா மலையைக் குறித்து முதல் முறையாக ஆதியாகமம் இருபத்திரெண்டாம் அதிகாரத்தில் காண்கிறோம். அந்த இடம் ஆபிரகாமுக்கு தேவன் அவனுடைய ஒரே குமாரனாகிய ஈசாக்கைப் பலியிடும்படி காட்டிய இடம் "உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேச குமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு, **மோரியா தேசத்துக்குப்போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்" (ஆதி. 22:2). ஆபிரகாம் அந்த இடத்தில் ஒரு பலிபீடத்தைக் கட்டினான் (வ.9).**

## மோரியா மலைத் தெரிந்தெடுப்பின் சிறப்பு

இந்த இடத்தின் சிறப்பையும் நாம் அறிந்துகொள்வது நல்லது. இந்த இடம் தேவன் ஆபிரகாமை சோதித்த இடம். "தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்" (வ.1) **(God did tempt Abraham)** என்ற வசனத்தில் "சோதித்தார்" என்ற சொல்லுக்கு எபிரேய மூல மொழியில் "நேகா" **(Nacah)** என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பரீட்சித்து அதன் தன்மையை நிரூபிப்பது **(Test and Prove its quality)** என்று அர்த்தம். (இவ்வசனத்தில் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டிருக்கும் **"Tempt"** என்ற சொல் பாவம் செய்யச் தூண்டுகிற பின்னணியில் சொல்லப்படுகிற சொல் **(Inducement to sin)**. ஆனால் **Nacah** என்ற எபிரேயச் சொல் அதைக் குறிப்பிடுவதல்ல. **(No Hint of inducement is implied in this)** ஆபிரகாமின் விசுவாசம், கீழ்ப்படிதல், தேவபயம் எத்தன்மையதாக இருக்கிறது என்பதை தேவன் சோதித்தறிய விரும்பினார். ஆகவே ஈசாக்கைப் பலியிடச் சொன்னார். ஆபிரகாம் தேவ கட்டளைக்கு அசைவில்லாத விசுவாசத்தோடு முற்றிலும் கீழ்ப்படிந்து பலிபீடத்தையும் கட்டி ஈசாக்கை பலியிட ஆயத்தமானான். தேவனிடத்தில் வாக்குத்தத்தத்தைப் பெற்று 25 ஆண்டுகள் காத்திருந்து தனது முதிர் வயதில் பெற்றுக்கொண்ட ஈசாக்கைப் பலியிடக் கத்தியையும் ஓங்கிவிட்டான். அந்த நொடிப்பொழுதில் தேவன் தூதன் மூலம் குரல் கொடுத்தார். "ஆபிரகாமே பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்தபடியினால் **நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்** என்றார்" (ஆதி.22:12) என்று வாசிக்கிறோம். அந்த இடத்தில் ஈசாக்கைப் பலியிடுவதற்குப் பதிலாக தேவன் பலிப்பொருளாக ஒரு ஆட்டுக்கடாவைக் கொடுத்தார். ஆபிரகாம் அந்த இடத்திற்கு "யெகோவா யீரே" என்று பேரிட்டான் என்று காண்கிறோம். **ஆகவே ஆபிரகாம் பரீட்சையில் வென்ற இடம். "நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" என்று நற்சான்று பெற்ற இடம். ஈசாக்கின் ஜீவனுக்குப் பதிலாக (substitution) தேவன் காட்டிய ஆட்டுக் கடாவை பலியிட்ட இடம். மரணத்திற்கு ஒப்புவிக்கப்பட்ட ஈசாக்கை உயிர்த்தெழுதலின் சாயலாக ஜீவனோடு பெற்ற இடம். ஆபிரகாம் தன்னுடைய பகுதியில் தேவனுடைய எதிர்பார்ப்பிற்குச் சரியாக இருந்த படியால் "தேவன் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார்" என்ற விசுவாசத்தின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்ட இடம்.** தேவன் தமக் கென்று ஆலயம் கட்டப்படும் முன் குறித்த இடத்தின் தெரிந்தெடுப்பைப்

பாருங்கள். **ஆலயங்கள் ஆபிரகாம்கள் உருவாக்கப்பட வேண்டிய இடமாக இருக்கவேண்டும்** என்பதே தேவனுடைய எதிர்பார்ப்பு. அதுவே அவருடைய சித்தம்.

## மோரியா மலையிலுள்ள ஓர்நானின் களம்

மோரியா மலையில் அதே இடம் தேவனின் நியாயத்தீர்ப்பின் இடமாகவும் மாறிற்று. தாவீது இராஜா இஸ்ரவேலின் கோத்திரமெங்கும் தன் மக்களின் இலக்கத்தைத் தொகையிட இராணுவத் தளபதி யோவாபுக்குக் கட்டளை யிட்டான். யோவாப் மக்கட் தொகை கணக்கெடுப்பு வேண்டாமென தடுத்தும் தாவீதின் பிடிவாதத்தின் காரணமாக கணக்கெடுப்பு தொடங்கியது. இது தேவனுக்குப் பிரியமில்லாத காரியமாக இருந்தது. ஆனால் தாவீதின் இருதயம் அவனை வாதித்தது **"நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாவஞ்செய்தேன்; இப்போதும் ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும்; நான் மகா புத்தியீனமாய்ச் செய்தேன்"** (2 சாமு.24:10) என்று மன்னிப்பு கேட்டான். ஆனாலும் கர்த்தர் தாவீதிடம் காத் என்ற ஞானதிருஞ்டிக்காரனை அனுப்பினார். "காத் தாவீதினிடத்தில் வந்து, அவனை நோக்கி: உம்முடைய தேசத்திலே ஏழு வருஷம் பஞ்சம் வர வேண்டுமோ? அல்லது மூன்று மாதம் உம்முடைய சத்துருக்கள் உம்மைப் பின்தொடர, நீர் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போகவேண்டுமோ? அல்லது உம்முடைய தேசத்திலே மூன்றுநாள் கொள்ளைநோய் உண்டாக வேண்டுமோ? இப்போதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறு உத்தரவு கொண்டுபோக வேண்டும் என்பதை நீர் யோசித்துப் பாரும் என்று சொன்னான். அப்பொழுது தாவீது காத்தை நோக்கி: கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்; இப்போது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது; மனுஷர் கையிலே விழாதிருப் பேனாக என்றான்" (வ.13,14) இஸ்ரவேலில் பெரிய கொள்ளைநோய் தொடங் கிற்று. மக்களில் எழுபதினாயிரம் பேர் செத்துப் போனார்கள் (வ.15) கர்த்தர் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு சங்கரிக்கும் தூதனை நிறுத்தினார். அப்போது கர்த்தருடைய தூதன் எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே நின்றான். (வ.16) (அர்வனாவின் மறு பெயர் ஓர்நான்) அதைக் கண்ட தாவீது கர்த்தரை நோக்கி "இதோ, நான்தான் பாவஞ்செய்தேன்; நான் தான் அக்கிரமம்பண்ணினேன்; இந்த ஆடுகள் என்னசெய்தது? உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக என்று விண்ணப்பம் பண்ணினான்" (வ.17). அப்பொழுது காத் தாவீதினிடம்

சங்கார தூதன் நின்ற அந்தக் களத்திலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும்படி சொன்னான் (வ.18) தாவீது ஓர்நானின் களத்தை விலைக்கு வாங்கி பலிபீடத்தைக் கட்டி பலிசெலுத்தினான். அந்த இடத்தில் தாவீது இராஜாவின் தவறுக்கு ஒரு பெரிய நியாயத்தீர்ப்பு நடந்தது. **ஆகவே அந்த இடம் ஒரு நியாயத்தீர்ப்பின் இடமாகவும் மாறிற்று.** இதே இடத்தில் தாவீதின் அறிவுரைப்படி அவனது மகனாகிய சாலொமோன் 2 நாளா. 3:12ல் வாசிப்பதின்படி தேவாலயத்தைக் கட்டினான்.

**சாலொமோனின் தேவாலயம்**

சாலொமோன் தேவாலயத்தைக் கட்டிமுடித்து கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்து கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே இஸ்ரவேல் சபை யாரெல்லாருக்கும் எதிராக நின்று வானத்திற்கு நேராய்த் தன் கைகளை உயர்த்தி விண்ணப்பம் செய்தான் (1 இராஜா.8:22–66). இதற்குப் பின் கர்த்தர் சாலொமோனுக்குத் தரிசனமாகி **“நீ என் சமுகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையும் கேட்டேன்; நீ கட்டின இந்த ஆலயத்தில் என் நாமம் என்றைக்கும் விளங்கத்தக்கதாக, அதைப் பரிசுத்தமாக்கினேன்; என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கேயிருக்கும்”** (1 இராஜா.9:3) என்று வாக்களித்தார். ஆனால் **“நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்னைவிட்டுப் பின்வாங்கி, நான் உங்களுக்கு முன் வைத்த என் கற்பனைகளையும் என் கட்டளைகளை யும் கைக்கொள்ளாமற் போய், வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்துகொள்வீர்களாகில், நான் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தேசத்திலே அவர்களை வைக்காதபடிக்கு நிர்மூலமாக்கி, என் நாமம் விளங்க நான் பரிசுத்தமாக்கின இந்த ஆலயத்தை என் சமுகத்தை விட்டுத் தள்ளுவேன்; அப்பொழுது இஸ்ரவேல் சகல ஜனங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச் சொல்லாகவும் இருப்பார்கள்”** (வ.6,7) என்ற எச்சரிக்கையையும் கொடுத்தார்.

ஆண்டுகள் உருண்டோடின. இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய பிரமாணங்களுக்கும் சட்டதிட்டங்களுக்கும் உணர்வற்றவர்களாக (insensitive) மாறினார்கள். ஆவிக்குரிய வாழ்விலிருந்து விலகி ஒழுக்கக்கேடு களுக்கும் துன்மார்க்கமான வாழ்வுக்கும் (moral wickedness) இடம் கொடுத்தார்கள். தேவன் சாலொமோன் மூலமாக அவர்களுக்கு எச்சரிப்பு கொடுத்ததுமன்றி அவ்வப்போது தீர்க்கதரிசிகளை எழுப்பி எச்சரிக்கை களைக் கொடுத்தும் செவிகொடுக்காமல் போனார்கள். கர்த்தர் பாபிலோனிய இராஜாவாகிய (தற்போதைய ஈராக்) நேபுகாத்நேச்சாரை

எழுப்பினார். கர்த்தர் நேபுகாத்நேச்சாரை "என் ஊழியக்காரன்" என்றழைத்ததைக் காண்கிறோம். "என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவையும் அழைத்தனுப்பி, அவர்களை இந்த தேசத்துக்கு விரோதமாகவும், இதின் குடிகளுக்கு விரோதமாகவும், சுற்றிலுமிருக்கிற இந்த எல்லா ஜாதிகளுக்கும் விரோதமாகவும் வரப்பண்ணி, அவைகளைச் சங்காரத்துக்கு ஒப்புக்கொடுத்து, அவைகளைப் பாழாகவும் இகழ்ச்சிக் குறியாகிய ஈசல் போடுதலாகவும், நித்திய வனாந்தரங்களாகவும் செய்வேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (எரே.25:9). தேவனுக்கு விரோதமான முரட்டாட்டமான செயலுக்கும் அவர்களுடைய பாவ ஜீவியத்திற்கான தண்டனையாக நேபுகாத்நேச்சார் படையெடுத்து வந்து எருசலேமையும் தேவாலயத்தையும் அழித்தான். இராஜ குடும்பத்தைச் சேர்ந்தோரையும் அநேக மக்களையும் சிறைக்கைதியாக பாபிலோன் தேசத்திற்குக் கொண்டு சென்றான். சாலொமோனின் ஆலயம் கி.மு.586ல் அழிக்கப்பட்டது. எரேமியா மூலம் தேவன் முன்குறித்த தீர்க்கதரிசனம் நிறைவேறியதைக் காண்கிறோம். எருசலேம் தேவனுடைய ஆலயத்தை இழந்தது. பாபிலோனிய சாம்ராஜ்யம் பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டதோடு முடிவடைந்தது. பெல்ஷாத்சார் தன்னுடைய இராஜ்ஜியம் எங்குமுள்ள பிரபுக்களில் ஆயிரம் பேருக்கு பெரிய விருந்து செய்தான். அதில் திராட்சரசம் பரிமாறுவதற்கு நேபுகாத்நேச்சார் எருசலேம் தேவாலயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பொன், வெள்ளிப் பாத்திரங்களைக் கொண்டு வந்து தானும், தன் பிரபுக்களும் தன் மனைவிகளும் தன் மறுமனையாட்டிகளும் அதில் குடித்தார்கள். அப்பொழுதுதான் ஒரு கையுறுப்பு சுவரில் "மெனே மெனே, தெக்கேல் உப்பார்சின்" என்று எழுதியது. "தேவன் உன் இராஜ்ஜியத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார் என்றும் நீ தராசிலே நிறுக்கப்பட்டு குறைவாகக் காணப்பட்டாய் என்றும் உன் இராஜ்ஜியம் மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது" என்று அர்த்தம். அன்று இரவே அந்த விருந்தின்போது பெல்ஷாத்சார் கொல்லப்பட்டான். (தானி.5ம் அதிகாரம்) ஜெனோபோன் (XENOPHON) என்ற வரலாற்று ஆசிரியர் இதைப்பற்றி பெல்ஷாத்சார் இராஜாவால் அநீதி இழைக்கப்பட்ட கேடேட்டாஸ் (GADATAS) மற்றும் கோபிரியாஸ் (GOBRIAS) என்ற இரு பிரபுக்கள் தரியு இராஜாவின் இராணுவத்தினருக்குக் கையாட்களாக இருந்த தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு பெல்ஷாத்சாரை அன்று இரவு விருந்தின்போது கொலைசெய்து பழிவாங்கிக் கொண்டனர். தரியு இராஜா இவர்களை சாமர்த்தியமாகப் பயன்படுத்தி எளிதாக இராஜ்ஜியத்தைக் கைப்பற்றினான்.

## எருசலேமின் வாசம்பண்ணுகிற தேவனே தேவன்

மேதிய இராஜ்ஜியமும் பெர்சிய இராஜ்ஜியமும் தங்களுக்குள் ஒப்பந்தத்தை செய்துகொண்டு மேதிய பெர்சிய சாம்ராஜ்யம் உருவாயிற்று (CONFIDERATE OF MEDES AND PERSIA) அதை அடுத்து கோரேஸ் என்னும் பெர்சிய இராஜா (தற்போதைய ஈரான்) ஆளுகைக்கு வந்தான். கோரேஸ் இராஜா தான் இராஜாவாகிய முதலாம் வருஷத்திலேயே ஒரு பிரகடனம் செய்தான். "கர்த்தர் கோரேஸ் இராஜாவின் ஆவியை ஏவினதினாலே அவன் பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் இராஜ்ஜியங்களெல்லாம் எனக்குத் தந்தருளி யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்கு கட்டளையிட்டிருக்கிறார்.

"அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ, அவனோடே அவனுடைய தேவன் இருப்பாராக; அவன் யூதாவிலுள்ள எருசலேமுக்குப் போய், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டக்கடவன்; எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன்" (எஸ்றா 1:3) என பிரகடனம் செய்தான். இதே பகுதி 2 நாளா.36ம் அதிகாரத்தின் கடைசி பகுதியிலும் பதிவு செய்யப்பட்டுள்ளதையும் காணலாம். எருசலேமில் தேவாலயத்தைக் கட்டத் திரும்பச் செல்லுகிற மக்களை ஊக்குவித்தான். திரும்பிச் செல்லுகிறவர்களோடே "அவனுடைய தேவன் இருப்பாராக" என்றும் "எருசலேமிலே வாசம்பண்ணுகிற தேவனே தேவன்" என்றும் பிரகடனப்படுத்தி கட்டளையிடச் சொன்னான். அதோடு மாத்திரமல்ல நேபுகாத்நேச்சார் எருசலேம் ஆலயத்திலுருந்து கொண்டுவந்த சகல பணிமுட்டுகளையும் எடுத்துச் செல்லும்படித் திரும்பக் கொடுத்தான். கோரேசின் பொக்கிஷக்காரன் யூதாவின் அதிபதியாகிய சேஸ்பாத்சாரிடத்தில் எண்ணிக்கொடுத்தான் (வ.8). இந்த சேஸ்பாத்சார் செருபாபேலின் பாபிலோனியப் பெயர். ஏனெனில் செருபாபேல் யூதாவில் அதிபதியாக (GOVERNOR) இருந்தவன். எஸ்றா இரண்டாம் அதிகாரத்தில் எருசலேமுக்கு ஆலயத்தைக் கட்டச் சென்றோர்களின் குடும்பவாரியாகப் பட்டியலைக் காண்கிறோம். செருபாபேல், நெகேமியா, மொர்தேக்காய், எஸ்றா உட்பட உள்ள பட்டியலைக் காண்கிறோம். "முந்தின ஆலயத்தைக் கண்டிருந்த முதிர்வயதான ஆசாரியரிலும், லேவியரிலும், பிதாக்கள் வம்சங்களின் தலைவரிலும் அநேகர் இந்த ஆலயத்துக்குத் தங்கள் கண்களுக்கு முன்பாக அஸ்திபாரம் போடப்படுகிறதைக் கண்டபோது, மகா சத்தமிட்டு அழுதார்கள்; வேறே அநேகம்பேரோ கெம்பீர சந்தோஷமாய் ஆர்ப்பரித்தார்கள்" (எஸ்றா 3:12) என்று காண்கிறோம்.

இதற்கான காரணம் தேவ ஆவியினாலே ஏவப்பட்ட கோரேஸ் இராஜா தான். இந்த கோரேஸ் யார் தெரியுமா? யூதமக்களுடைய ஜீவன் காக்கும்படி "நான் செத்தாலும் சாகிறேன்" என்று சொன்ன பெர்சிய இராஜாவாகிய அகாஸ்வேருவின் மனைவியாகிய யூதப் பெண்ணான எஸ்தரின் மகன்தான் கோரேஸ். இவன் சிறு வயதாக இருக்கும்போது இஸ்ரவேலின் தேவனைக் குறித்தும் அவருடைய மேன்மையைக் குறித்தும் அவனடைய தாய் எஸ்தர் அவனுக்குக் கற்றுக்கொடுத்து வந்தாள் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். "எருசலேமின் தேவனே தேவன்" என்று கோரேஸ் சொன்னதற்கு இதுதான் காரணம். கோரேஸ் இராஜாவைக் குறித்து மற்றுமொரு விசேஷித்தச் செய்தியுண்டு. இவனது பிறப்பிற்கு சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பாகவே ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக இவனது பெயரைக் குறிப்பிட்டே தேவன் முன்னறிவித்துள்ளார். "கோரேசைக் குறித்து: அவன் என் மேய்ப்பன்; அவன் எருசலேமை நோக்கி: நீ கட்டப்படு என்றும்; தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான்" (ஏசா.44:28). ஒரு புறஜாதி இராஜாவை "என் மேய்ப்பன்" என்றழைக்கிறார். ஆகவேதான் தேவன் எருசலேமில் ஆலயத்தைக் கட்டும்படி ஏவினார் என்று காண்கிறோம். புறஜாதி இராஜாவைக் கொண்டும் எருசலேமுக்கு நன்மையானதைச் செய்ததைக் காண்கிறோம். ஆனாலும் 70 ஆண்டுகளுக்குப் பின் செருபாபேலும் அவனோடு நாடுகடத்தப்பட்ட சிலரும் எருசலேமுக்குத் திரும்பி வந்து கி.மு.516ல் இரண்டாவது தேவாலயத்தைக் கட்டி எழுப்பினார்கள். காலப்போக்கில் அதுவும் சரியான பராமரிப்பின்றி அழிந்தது. எருசலேமை ஆண்ட சாம்ராஜ்யங்கள் வீழ்ந்தன, எழுந்தன. கடைசியாக இஸ்ரவேல் தேசம் கி.மு.63ல் ரோம சாம்ராஜ்யத்தின் ஆளுகை யின் கீழ் வந்தது. அப்பொழுது யூதாவின் தேசாதிபதியாகிய பெரிய ஏரோது (Herod, the Great) கி.மு.43ம் ஆண்டு எருசலேமின் தேவாலயத்தைப் புதுப்பித்தான். எருசலேமிலுள்ள கோட்டை, கோபுரங்களைக் கட்டினான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இப்பூலோக ஊழிய காலத்தில் எருசலேமிலிருந்தது ஏரோதுவின் ஆலயம் தான். ஆனால் அந்த ஆலயமும் நாம் முன்பு கண்டதுபோல கி.பி.70 ஆண்டு தீத்துராயனால் அழிக்கப்பட்டது. இன்று இஸ்ரவேல் மக்கள் தங்களுக்குள்ள ஆலயத்தை இழந்து நிற்கின்றனர்.



ஒரு சிறிய திரைப்பட அரங்குபோல் அமைத்து யூதமக்கள் அனுபவித்த தாங்கொணா உபத்திரவங்களை காட்சித் தொடராகக் காண **(Visual presentation)** வகை செய்துள்ளனர். அக்காட்சிகளை சிறிய திரையில் மக்கள் காண்பதை மேலே உள்ள படத்தில் காணலம்.

தகவல் : **Holocaust Memorial Museum** இணையதளம்

# 5 ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்

*"ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்"* **(அப்.3:15).**

வெவ்வேறு நாடுகளுக்குச் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேல் மக்கள் அல்லது யூதமக்கள் ஏன் உபத்திரவத்திற்குள்ளானார்கள் என்ற வரலாற்றுப் பின்னணியத்தைச் சுருக்கமாக கவனிக்கலாம்.

முதலாவது நூற்றாண்டில் இயேசுவின் சிலுவை மரணத்தைக் கண்டு பயந்து ஓடி ஒழிந்துகொண்ட சீடர்கள், உயிர்த்தெழுந்த இயேசுவின் ஆலோசனைப்படி எருசலேமில் காத்திருந்து அதைத் தொடர்ந்து அவர்கள் முன்பு அறிந்திராத ஒரு பெரிய வல்லமையையும் பெலனையும் பெற்றுக் கொண்டார்கள். கேட்பவர்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இயேசு கிறிஸ்துவை வல்லமையோடும் தைரியத்தோடும் அறிவித்தனர். யூத மக்களைக் கண்டு பயந்த நிலை மாறி மிகுந்த தைரியமாகக் குற்றம் சாட்டிப் பேச ஆரம்பித்தார்கள். நீங்கள் **"ஜீவாதிபதியைக் (PRINCE OF LIFE) கொலை செய்தீர்கள்"** **(அப்.2:15).** "பிலாத்து அவர்களை விடுதலையாக்கத் தீர்மானித்தபோது அவனுக்கு முன்பாக அவரை (இயேசுவை) மறுதலித்தீர்கள்" **(வ.13)** "பரிசுத்தமும் நீதியுமுள்ள வரை நீங்கள் மறுதலித்து கொலை பாதகனை (பரபாசை) உங்களுக்கு விடுதலை பண்ணவேண்டுமென்று கேட்டீர்கள்" **(வ.14)** என்று நேரடியாகவே குற்றம் சாட்டினார்கள். பேசிய அவர்களைப் பிடித்துக் காவலில் வைத்தனர். "இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும், போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்"**(அப்.4:18)** அவர்களை பயமுறுத்தி அனுப்பினார்கள்.

யூதமக்கள் சிதறடிக்கப்பட்ட நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் அவர்கள் மீது சொன்ன குற்றச்சாட்டுகளில் முதன்மைப்படுத்திச் சொல்லப் பட்டது **இவர்கள் "கிறிஸ்துவைக் கொன்றவர்கள்" (CHRIST KILLERS)** என்பதுதான். அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் இவ்வாறான இழிச் சொல்லை சுமந்து திரிந்தனர். பிலாத்து இயேசுவை விடுதலை செய்ய தீர்மானித்தபோது யூத மதத்தலைவர்களும், யூதமக்களும் அதற்கு எதிர்த்து நின்றனர். அப்பொழுது பிலாத்து "ஜனங்களுக்கு முன்பாக கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லை

யென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தப் பழிக்கு நான் குற்ற மற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றான்.

அதற்கு ஜனங்களெல்லாரும்; **இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்"** (HIS BLOOD BE ON US AND ON OUR CHILDREN) அவர்கள் (மத்.27:24,25). அவர்கள் தாங்களாகவே தங்களில் ஏற்றுக்கொண்ட அந்த இரத்தப் பழி அவர்களையும் அவர்களுடைய சந்ததியையும் தொடர்ந்தது.

இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்த காலத்தில் எகிப்திய மக்களால் அருவருப்பாக எண்ணப்பட்டவர்கள் (ABOMINATION TO THE EGYPTIANS) (ஆதி.46:34). "எகிப்தியர் எபிரெயரோடே சாப்பிடமாட்டார்கள்; அப்படிச் செய்வது எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கும்" (ஆதி.43:32) என்று வாசிப்பதுபோல இஸ்ரவேல் மக்கள் ஒரு இழிவான ஜாதியாக எண்ணப் பட்டார்கள். அன்று எகிப்தியருக்கு இருந்த அதே எண்ணம்தான் சிதறடிக்கப் பட்ட நாடுகளில் இஸ்ரவேல் மக்கள் மீது தொடர்ந்தது.

எகிப்தில் பாரோன், இஸ்வேல் மக்கள் பலத்தும் பெருகிவிடக்கூடாது. ஏனெனில் யுத்தம் நேரிடும் காலத்தில் இவர்கள் பகைஞர்களோடு சேர்ந்து கொண்டு எகிப்தியர்களுக்கு விரோதமாக எழும்பிவிடக்கூடாது என்பதில் விழிப்போடிருந்து செயல்பட்டான் (யாத்.1:9,10). அதேபோல பரதேசிகளாக (நாடோடிகளாக) வந்தவர்கள் சரியான கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப் படவேண்டுமென்பதில் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேல் மக்கள் குடிபுகுந்த நாட்டின் ஆட்சியாளர்கள் மிகவும் விழிப்போடிருந்தனர். சில நாடுகளில் தங்கள் சுய முயற்சியில் சிலர் உயர்வை எட்டினாலும் அவர்கள் மீதிருந்த சந்தேகம் மாறாமல் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டிருந்தனர். ஆண்டுகள், நூற்றாண்டுகள் கடந்தோடி அந்த மக்களுக்கு நேர்ந்ததென்ன?

கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும், கிறிஸ்தவர்கள் நல்ல ஆவிக்குரிய வராக இருந்தாலும் அவர்களுக்குள்ளே பகைமை உணர்வு இருந்து கொண்டேதான் இருந்தது. மிகப் பிரபல்யமான கிறிஸ்தவத் தலைவரும் எழுத்தாளருமன புனித ஜான் கிறிஸ்சோஸ்டோம் (கிபி.345–407) (ST. JOHN CHRYSOSTOM) முதல் முறையாக யூதர்களை "கிறிஸ்துவைக் கொன்றவர் கள்" (CHRIST KILLERS) என்று குற்றஞ்சாட்டினார். அது தொடர்பான அவரது பிரசங்கச் செய்திகளை எல்லாம் மக்கள் ஆர்வமாகக் கேட்டார்கள். இதே காரியத்தைத்தான் முதலாம் நூற்றாண்டில் அப்போஸ்தலர்கள் "ஜீவாதி

பதியைக் கொலை செய்தீர்கள் அவரைத் தேவன் மரித்தோரிலிருந் தெழுப்பினார். அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்" என்றார்கள் (அப்.3:19).

ஈஸ்டர் தினங்களில் கிறிஸ்தவ போதகர்கள் யூதர்களுக்கு விரோதமாக ஆத்திர மூட்டும் வகையில் பிரசங்க பீடத்தில் நின்று பேசுவார்கள். அதன் விளைவாகச் சிலர் யூதர்களைப் பிடித்து ஆலயத்திற்குக் கொண்டுவந்து அவர்களைக் கொடூரமாக அடித்து விரட்டுவார்கள். இயேசு கிறிஸ்துவை எந்த காரணமுமின்றி சிலுவையில் அறைந்து கொலை செய்தார்களோ அதே போல அப்பாவி யூதர்களை அடித்துத் தாக்குவது ஈஷ்டர் தின வழக்கமாகவே மாறிற்று.

"ஜெர்மனியின் மிகமோசமான தீய சக்தி பொதுவாகக் கருதப்படுவது போல ஹிட்லரோ, பிஸ்மார்க்கோ, மகா பிரட்ரிக்கோ அல்ல மார்டின் லூத்தர் தான்" என்று டீன் இன்கே (DEAN INGE) என்ற நூலாசிரியர் குறிப்பிடுகிறார். (THE ROOTS OF ANTI-SEMITISM) மார்ட்டின் லூத்தர் கத்தோலிக்கத் திருச்சபை யிலிருந்து சீர்திருத்தத் திட்டங்களை உருவாக்கினார். பேராலயத்தில் கதவில் தனது 95 அம்ச திட்டங்களை வெளியிட்டார். தனது புதிய கிறிஸ்தவ சீர்திருத்த சபையை யூதர்கள் ஆதரிப்பார்கள் என்ற பெரிய எதிர்பார்ப்பு மார்ட்டின் லூத்தரிடம் இருந்தது. ஆனால் ஆதரவு கிடைக்காததால் யூதர்களை மிகவும் மோசமாக வர்ணித்ததும் அல்லாமல் அவர்கள் மீதான பகைமை உணர்வைத் தூண்டிவிட ஆரம்பித்தார். "யூதர்களைக் குறித்தும் அவர்களது பொய்யும்" (TRACT ENTITLED CONCERNING THE JEWS AND THEIR LIES) என்ற தலைப்பில் ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டார். நாம் கிறிஸ்தவர்கள் என்பதை தேவன் காணவேண்டும் என்றும் நமது செயலின் மூலம் கிறிஸ்தவமும் தேவனும் கனப்படுத்தப்படவேண்டும் என்றும் தேவனுடைய பெயராலேயே யூத விரோதத்தை அனல்மூட்டிக் கிளரினார். (THIS OUGHT TO BE DONE FOR THE HONOUR OF GOD AND CHRISTIANITY IN ORDER THAT GOD MAY SEE THAT WE ARE CHRISTIANS) யூதர்களுடைய தேவாலயங்கள் அழிக்கப்படவேண்டும் தேவ தூஷணங்களைப் போதிக்கும் அவர்களுடைய ஜெப யுத்தங்களும், யூதர் களின் சட்டத்திட்ட தொகுப்பு நூலும் (PRAYER BOOKS AND TALMUDS) எரிக்கப் படவேண்டும். இவற்றைப் போதிக்கும் ரபிகளுக்கு கொலை மிரட்டலுடன் எச்சரிப்புகள் கொடுக்கப்படவேண்டும். யூதர்கள் வெளியே நடமாடவிடாமல் அவர்கள் வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடப்பவர்களாக இருக்கவேண்டும் என்பதே அந்த வெளியீட்டின் சாராம்சமாக இருந்தது. இநத்க் காரியங்கள்

நான்கு நூற்றாண்டுகள் கழித்து அவருடைய நாட்டிலேயே ஹிட்லரின் வெறித்தன்மையால் செயல்படுத்தப்பட்டது (FOUR CENTURIES LATER, HOWEVER, HIS TRACT PRESCRIBING VICIOUS TREATMENT OF THE JEWIS PEOPLE WOULD BE CARRIED OUT ALMOST TO THE LETTER IN HIS OWN COUNTRY BY A MAD MAN NAMED HITLER). ஹிட்லர் ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவன். தனது யூத வெறித்தன விரோதப் போக்கிற்கு மார்ட்டின் லூத்தரின் பிரசுரத்தின் கட்டளைகளையே தனது செயல்பாடுகளாக்கிக் கொண்டான்.

# 6 பகைமை உணர்வின் வரலாறு - முதலாம் உலக யுத்தம்

***“நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை”*** **(2 கொரி.4:8,9).**

## பகைமை உணர்வின் வரலாறு

இஸ்ரவேல் மக்கள் மீதுள்ள பகைமை உணர்வு மிகவும் ஆழ்ந்து ஐரோப்பா முழுவதும் பரவிப்பாய்ந்திருந்தது. இதற்கு அந்தந்த நாடுகளில் ஒரு குறிப்பிட்டக் காரணம் சொல்லப்படாவிட்டாலும் இஸ்ரவேல் மக்களின் உண்மை நிலை அறிந்துகொள்வதற்கு முன்பாகவே அவர்கள் மீது தப்பெண்ணம் (PREJUDICE) கொண்டவர்களாக இருந்தார்கள். நாம் முன்பு கண்டதுபோல எகிப்தின் மன்னன், ஒரு யுத்தம் உண்டாகுமானால் இவர்கள் தங்களது பகைஞர்களோடு சேர்ந்துவிடுவார்களோ என்றும் அவர்கள் பலுகிப் பெருகிப் பலத்தவர்களாக இருப்பதால் அவர்கள் மீது எரிச்சலும் ஏற்பட்டதாகக் காண்கிறோம் (யாத். 1:9,12). அதன் காரணமாக அவர்களைக் கொடுமையாக நடத்தியதாகவும் காண்கிறோம். இஸ்ரவேல் மக்களைக் குறித்த இப்படிப்பட்ட எண்ணங்கள் நூற்றாண்டுகள் உருண்டோடியும் மாறாததாக இருந்தன.

பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் மிகப்பெரிய இராஜா நேபுகாத்நேச்சார் கி.மு.605ல் இஸ்ரவேல் மக்களைத் தோற்கடித்து அநேகமாயிரம் மக்களைச் சிறைக் கைதிகளாக பாபிலோனுக்குக் கொண்டு சென்றனர். பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் மேதிய பெர்சிய சாம்ராஜ்யம் ஆளுகைக்கு வந்தது. அந்த சாம்ராஜ்யத்தை கி.மு.486 முதல் கி.மு.465வரை அகாஸ்வேரு இராஜா ஆட்சி செய்துவந்தான். அந்த கால கட்டத்திலும் யூத மக்களுக்கு விரோதமாக சகல பிரபுகளுக்கும் மேலாக உயர்த்தப்பட்டிருந்த ஆகாகியனான ஆமான் பெரும் பகைமை உணர்வை உருவாக்கி அவர்களை முற்றிலும் அழித்தொழிக்க சதித்திட்டம் தீட்டினான். அகாஸ்வேரு இராஜாவிடம் அவன் சொன்னதைப் பாருங்கள். “உம்முடைய ராஜ்யத்தின்

சகல நாடுகளிலுமுள்ள ஜனங்களுக்குள்ளே ஒருவித ஜனங்கள் சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள்; அவர்களுடைய வழக்கங்கள் சகல ஜனங்களுடைய வழக்கங்களுக்கும் விகற்பமாயிருக்கிறது; அவர்கள் ராஜாவின் சட்டங் களைக் கைக்கொள்ளுகிறதில்லை; ஆகையால் இப்படி விட்டிருக்கிறது ராஜாவுக்கு நியாயமல்ல. ராஜாவுக்குச் சம்மதியானால், அவர்களை அழிக்க வேண்டுமென்று எழுதி அனுப்பவேண்டியது; அப்பொழுது நான் ராஜாவின் கஜானாவிலே கொண்டுவந்து செலுத்த பதினாயிரம் தாலந்து வெள்ளியை எண்ணிக் காரியக்காரர் கையில் கொடுப்பேன் என்றான்" (எஸ்தர் 3:8,9). இப்படிப்பட்ட பகைமை உணர்வே காலாகாலங்களாகத் தொடர்ந்தது.

## யூதமக்களுக்கு விரோதமான வதந்திகளும் தாக்குதல்களும்

ஐரோப்பிய நாடுகளில் பரவியிருந்த இஸ்ரவேல் மக்கள் பல இன்னல் களைச் சந்திக்க நேர்ந்தது. அவர்கள் புறக்கணிக்கப்பட்டவர்களாகவும் தீண்டத் தகாதவர்கள் போலும் கேவலமாகக் கருதப்பட்டார்கள். ஐரோப்பிய நாடுகளிலும் குறிப்பாக இத்தாலியிலும் இஸ்ரவேல் மக்கள் "கெட்டோ" (GHEETO) என்று அழைக்கப்படுகிற குறிப்பிட்ட எல்லைக்குள் காலனி குடியிருப்புகள் போல குடியிருக்கச் செய்தனர். அடிமைகளைப்போல நடத்தப் பட்டார்கள். ரஷ்ய தேசத்தில் பேல் (PALE) என்று அழைக்கப்படுகிற குறிப்பிட்டுக் கொடுக்கப்படுகிற இடத்தில் மட்டும்தான் அவர்கள் வாழ வேண்டும். அநேக பொய்யான குற்றச்சாட்டுகளை அவர்கள் மீது புனைந்து பகைமை உணர்வை வளர்த்து அவர்களை பொது மக்களே தாக்கும் அளவுக்கு (MASS VIOLENCE) அவர்கள் நெருக்கப்பட்டார்கள். அநேக இடங்களில் இஸ்ரவேல் மக்கள் கிறிஸ்தவக் குழந்தைகளைக் கொன்று அவர்களின் இரத்தத்தைக் கொண்டு பஸ்கா அப்பங்கள் (PASSOVER BREAD) தயாரிக்கின்றனர் என்று பொய்யை உண்மைபோன்று ஆக்கி வதந்திகளைக் கிளப்பிவிட்டனர். இந்த "இரத்த அவதூறுகள்" (BLOOD LIBELS) விளைவாக ஆங்காங்கே பல இடங்களில் இஸ்ரவேல் மக்கள் தாக்கப்பட்டார்கள்.

## நெருக்கத்திலும் சோர்ந்து போகாத யூதமக்கள்

இந்த சூழ்நிலையின் காரணமாக இஸ்ரவேல் மக்களின் பிரதிச் செயல் எப்படியிருந்தது? ஒரு சிறு கூட்டத்தார் அந்தந்த மக்களோடு இசைந்து அவர்கள் கலாச்சாரத்திற்கு ஒத்துப்போகவும் அவர்களைத் திருப்திசெய்து வாழவும் தங்களை மாற்றிக்கொண்டனர். ஒரு கூட்டத்தார் யூதமக்கள் என்ற தனித்துவத்தைக் காத்துக்கொள்ளவும் அந்த தேசத்தினர் தங்களை

அந்நாட்டின் அங்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் போராடி வந்தனர். வேறு சிலர் தாங்கள் பின்பற்றும் யூத கலாச்சாரமும், அவர்கள் பின்பற்றும் ஆராதனை முறைமைகளையும் நெருக்கங்கள் மத்தியிலும் தவறாது கைக்கொண்டுவருவதில் மிகவும் உறுதியாக இருந்து செயல் பட்டனர். இதன் காரணமாக மேற்கு ஐரோப்பாவின் பகுதியில் (WESTERN EUROPE) இஸ்ரவேல் மக்களுக்கு ஒரு புதுவாழ்வு மலர்ந்தது. அவர்கள் அரசியலில் இறங்கினார்கள். பாராளுமன்றங்களில் சிலர் உறுப்பினர்களா னார்கள். விஞ்ஞானம், மருத்துவம் போன்ற பகுதிகளில் இறங்கி அநேகர் நல்ல முன்னேற்றத்தைக் கண்டார்கள். சமுதாயத்தில் உயர் அந்தஸ்தை (ARISTOCRATIC JEWS) அநேகர் எட்டினார்கள். ஆனால் கிழக்கு ஐரோப்பாவில் (EASTERN EUROPE) சூழ்நிலைகள் யூதமக்களுக்கு முற்றிலும் மாறாக இருந்தது. ஆனாலும் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறதுபோல "நாங்கள் எப் பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை" (2 கொரி.4:8,9) என்ற உள்ளணர்வும் உறுதியும் உள்ளவர்களாயிருந்தனர்.

சாரிஸ்ட் ரஷ்யாவின் (TSARIST RUSSIA) உயர்மட்டத்தில் நிலப்பிரபுக்களும், இரண்டாம் மட்டத்தில் ரோமன் கத்தோலிக்கர்களும், மூன்றாவது மட்டத்தில் பாலிஷ் மொழி பேசுவோர் (POLISH - SPEAKING) அடுத்த மட்டத்தில் சாதாரண நிலையிலுள்ள மக்களாக இருந்தனர். அதற்கு அடுத்த மட்டத்தில் 18ம் நூற்றாண்டில் குடியேறிய ஜெர்மானிய வழிவந்தோர் ஆவர் (DESCENDANTS GERMAN SETTLERS). இவர்கள் ஜெர்மன் மொழி பேசுகிற சிறு விவசாயிகளாகவும் புராட்டஸ்டான்ட் கிறிஸ்தவர்களாகவும் இருந்தனர். யூதமக்கள் மேற்ச் சொன்ன அனைவருக்கும் கீழ்மட்டத்தில் இருந்தனர். அவர்கள் வீடுவீடாகச் சென்று பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகளாகவும் (PEDLARS) சிறு வியாபாரிகளாகவும் (SMALL MERCHANTS) இருந்தனர். அனைத்து மட்டத்திலுள்ள மக்களால் அற்பமாகக் கருதப்பட்டவர்களாயிருந்தனர்.

## முதலாம் உலகப்போர்

ஆனாலும் முதலாம் உலகப்போர் துவக்கத்திற்கு முன்பாக யூதமக்கள் அந்தந்த நாட்டின் இராணுவத்தில் சேர்ந்தனர். ஆரம்ப நாட்களில் யூதர்களை இராணுவத்தில் சேர்த்துக்கொள்வதில் எதிர்ப்புகள் தோன்றினாலும் அவர்கள் சார்ந்திருந்த நாட்டிற்கு உண்மையுள்ளவர்களாகக் கண்டபடியால் எதிர்ப்புகள் மறைந்தன. எனினும் சில இராணுவப் பிரிவுகளில் மாத்திரம்

யூதர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. ஆகஸ்ட் 1914ல் முதலாம் உலகப் போர் ஆரம்பித்தது. யுத்தக் களத்தில் யூத இராணுவ வீரர்கள் பதுங்கு குழிகளிலிருந்து எதிராளிகளை சுட்டனர். எதிராளிகளின் பதுங்கு குழிகளிலும் யூத இராணுவ வீரர்கள் இருந்தனர். ஜெர்மன் நாட்டிலிருந்த யூத இராணுவ வீரர்கள் ஜெர்மனுக்கு உண்மையுள்ளவர்களாக பிரிட்டிஷ் யூத இராணுவ வீரர்களுக்கு விரோதமாகச் சுட்டனர். பிரிட்டிஷ் யூதர்கள் ஜெர்மன் யூதர்களின் குண்டுகளுக்குப் பலியானார்கள். ஜெர்மன் யூதர்கள் பிரிட்டிஷ் யூதர்களின் குண்டுகளுக்கும் பலியானார்கள். ஜெர்மன் இராணுவத்தின் மொத்தம் 6,15,000 இராணுவ வீரர்களில், 1,00,000 ஜெர்மன் யூதர்களா யிருந்தனர். பல ஆயிரக்கணக்கான யூதர்களும், யூதர் அல்லாத இராணுவ வீரர்கள் யுத்தகளத்தில் மரணத்தை சந்தித்தனர். முதலாம் உலகம்போரில் ஜெர்மன் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர். லட்விக் ஹாஸ் **(Dr. LUDWIG HASS)** யுத்தக்களத்தில் மரணமடைந்தார். அவர் ஒரு பிரபல்யமான யூதர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜெர்மன் யூத இராணுவ வீரர்களுள் 12,000 பேர் யுத்த களத்தில் இராணுவச் சீருடையிலே ஜெர்மன் நாட்டிற்கு உண்மை யுள்ளவர்களாக மரணத்தை சந்தித்தனர். ஆஸ்ட்ரோ–ஹங்கேரியன் **(AUSTRO - HUNGARIAN)** இராணுவத்திலிருந்த யூதர்கள் ரஷ்யா, செர்பியன், இத்தாலி ஆகிய நாடுகளின் யூத இராணுவத்தினருடன் யுத்தம் செய்தனர். இருதரத்தாரிலும் யூத இராணுவத்தினர் மரணமடைந்தனர். 1918 நவம்பர் மாதம் முதலாம் உலக யுத்தம் முடிவுக்கு வந்தது. யுத்தக்களத்தில் அவர்கள் காட்டிய வீரச்செயல்களுக்காக பாராட்டு பட்டியலில் **(ROLL OF HONOUR)** யூத இராணுவ வீரர்கள், கடற்படையினர், விமானப்படையினர் ஆகியோரின் எண்ணிக்கைகள் நிறைவாக இருந்தன. அதேபோல இராணுவ மருத்துவ மனையிலும் யூத இராணுவ வீரர்களே அதிகம்பேர் இருந்தனர். கல்லறைத் தோட்டத்திலும் யூதர்களின் கல்லறையில் வெவ்வேறு நாடுகளின் கொடிகள் நாட்டப்பட்டிருந்தன.

## உலகப்போரின் முடிவு

முதலாம் உலக யுத்தத்திற்குப்பின் ஐரோப்பியா முழுவதிலும் சூழ் நிலைகளில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. போலந்து நாட்டில் அதிகமான யூதர்களிருந்தனர். ஹங்கேரி இராஜ்ஜியத்தில் **(HUNGARIAN KINGDOM)** 4,73,000 யூதர்கள் வாழ்ந்தனர். ருமேனியாவில் சுமார் அதே எண்ணிக்கை யுள்ள யூதர் களிருந்தனர். ஜெர்மனியில் 4,90,000 யூதர்களும், செக்கோஸ்லேவேக்கி யாவில் 3,50,000 யூதர்களும் பிரான்சில் 2,50,000

யூதர்களும் இருந்தனர். முதலாம் உலக யுத்தத்தின் முடிவைத் தொடர்ந்து உலக நாடுகளின் கூட்டமைப்பு ஒன்று உருவாயிற்று (LEAGUE OF NATIONS). அனைத்து நாடுகள் எடுத்துக்கொண்ட உடன்படிக்கையின்படி உருவான அக்கூட்டமைப்பு இனி மேல் நாட்டிற்கு நாடு யுத்தமே இருக்கக்கூடாது என பிரகடனப்படுத்தியது. அதோடு மாத்திரமல்ல ஒவ்வொரு நாட்டிலும் சிறுபான்மையினரின் பாதுகாப்பும், உரிமைகளும் காக்கப்படவேண்டும் என்ற உத்தரவாதம் தரப் படவேண்டுமென்றும் வலியுறுத்தியது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு நாடுகளில் சிறுபான்மையினராயிருந்த யூத மக்கள் சட்டப்படி, சமூக வாழ்விலும், பொருளாதார வாழ்விலும், கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் சம உரிமை கேட்க ஆரம்பித்தனர். அதுவரை அற்பமாகவும் அடிமைகளாகவு மிருந்த யூதமக்கள் சம உரிமை கேட்டவுடன் உயர் மட்டத்திலிருந்த மக்கள் யுத்தகாலத்தில் அவர்கள் சார்ந்திருந்த நாட்டிற்காக ஜீவனையும் கொடுத்தத் தன்மையையும் குறுகிய காலத்திற்குள்ளாக மறந்து யூத மக்களுக்கு விரோதமாகக் கொதித்தெழுந்தனர். நடந்த விபரீதங்கள் பட்டியலிடமுடியாத அளவு பெரிதாயிற்று.



ஜெர்மன் போலந்து நாட்டைத் தனது வசப்படுத்திய பின் போலந்தில் வாழ்ந்த யூத மக்கள் வன்கொடுமை முகாம்களிலும், விஷவாயு அறைகளிலும் தள்ளி கொல்லப்பட்டார்கள். போலந்தில் யூத மக்களின் அப்போதைய நிலவரத்தை சித்தரிக்கும் வகையில் பிரத்தியேகமாகச் சித்தரித்துக் காட்டியுள்ளனர். அதை மேலே கண்ட படத்தில் காணலாம்.

தகவல் : **Holocaust Memorial Museum** இணையதளம்

# 7 ஜெர்மனியில் நாஜிக்கட்சியின் தோற்றம் ஹிட்லர் அரசியலில் நுழைதல்

***"சகல யூதரையும் அழித்துக்கொன்று நிர்மூலமாக்கவும் அவர்களைக் கொள்ளையிடவும் அஞ்சற்காரர் கையிலே ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளைகள் அனுப்பப்பட்டது... சூசான் நகரம் கலங்கிற்று***

**(எஸ்.3:13,15)**

## மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட நாச விளைவு

கிழக்கு போலிஷ் **(Eastern polish)** நகரமாகிய லவோவ் **(LVOV)** என்ற இடத்தில் அங்கு வாழ்ந்த உக்ரெயினைச் சேர்ந்தவர்கள் **(UKRAINIANS) 50** யூதர்களை ஒரே சம்பவத்தில் கொன்று குவித்தனர்.

**1919** பிப்.**15**ம் நாள் தொடங்கி அவ்வாண்டின் இறுதிக்குள்ளாக புரோஸ்குரோவ் **(PROSKUROW)** என்ற உக்ரெயின் நகரில் சைமன் பெட்லூரா **(SIMON PETLURA)** என்ற உக்ரெயின் தேசியத் தலைவரின் **(UKRA- INIAN NATION-ALIST LEADER)** தலைமையிலான இயக்கத்தினர் **60,000** யூத மக்களை சிறிதேனும் மனிதாபிமானம் இன்றி கொன்று குவித்தனர். யூதர்கள் சாரிஸ்ட் ரஷ்யாவில் **(TSARIST RUSSIA)** முன்பு எவ்விதமாகக் கொல்லப்பட்டார்களோ அதைக்காட்டிலும் மிகக்கொடூரமான முறையில் படுகொலைகள் நடந்தன. இதைக் குறித்து சீயோனியத்தலைவர் கெய்ம் வெய்ஸ்மேன் **(Chaim weizmann, the Zionst Leader)** தனது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் "புதிதாக விடுதலைப் பெற்றிருக்கும் போல்ஸ் **(POLES)** நாடு யூத மக்களை முற்றிலும் கொன்றழித்துவிடும் செயலில் மிகவும் தீவிரமாக இறங்கி செயல் படுகின்றது. ரஷ்யர்களிடமிருந்து கற்றுக்கொண்ட கொடூர முறைமை களையேக் கையாளுகின்றனர். எங்களால் என்ன செய்ய முடியும்? நாங்கள் பெலனற்றவர்களாயிருக்கிறோம். நாங்கள் கேள்விப்படுகிற அழுகுரலின் செய்திகள் எங்கள் இருதயத்தையே பிளப்பதாக உள்ளன" என்று எழுதியுள்ளார்.

**1919** டிச.**18**ம் நாள் பிரிட்டிஷ் தூதுவர் **(BRITISH DIPLOMAT)** போல்ஷ் நாட்டில் நடந்த சம்பவங்களைக் குறித்து இவ்வாறு எழுதியுள்ளார். "அநேக யூதமக்கள் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் என்று கருதப்பட்டுக் கொல்லப்

அவ்வாறான ஆதரவாளர்கள் அல்ல.
பட்டார்கள். ஆனால் உண்மையிலேயே அவ்வாறான ஆதரவாளர்கள் அல்ல. எனினும் அப்படியொரு காரணத்தைச் சொல்லிக் கொல்லப்பட்டார்கள். அநேக யூதப் பெண்கள் கைது செய்யப்பட்டு எந்த விசாரணையுமின்றி சிறையிலடைக்கப்பட்டனர். அவர்கள் நிர்வாணமாக்கப்பட்டு சவுக்கால் அடிக்கப்பட்டனர். அவ்வாறு அடிக்கப்பட்டபின் நிர்வாணமாக இராணுவ வீரர்கள் மத்தியில் நடந்து செல்ல வைப்பார்கள். பின்னர் அவர்கள் கல்லறைத் தோட்டத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். அவர்களுடைய கல்லறைக் குழியை அவர்களையே தோண்ட வைப்பார்கள். பின்னர் அவர்களைத் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இறையாக்கி அவர்கள் தோண்டிய குழியிலேயே போட்டுப் புதைத்துவிடுவார்கள். இப்படிக் கொல்லப்பட்டவர்களில் அநேகர் மிகவும் மரியாதைக்குரியவர்கள். அநேகர் பள்ளி ஆசிரியைகளாக பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள்".

## போருக்குப் பின் ஜெர்மனியின் நிலை

ஜெர்மனியில் முதல் உலக யுத்தத்திற்குப்பின் யுத்தத்தால் உடைந்து போன ஜெர்மனியை கட்டி எழுப்ப மிகவும் பாடுபட்டனர். அதில் யூதமக்கள் மனப்பூர்வமாகப் பங்கெடுத்தனர். அப்போதிருந்த புதிய அரசின் உள்துறை அமைச்சர் யூத இனத்தைச் சேர்ந்த ஹீகோ பிரியுஸ் (HUGO PREUSS) இருந்தார். அவர் அரசின் அரசியல் சாசனத்தை வடிமைத்தார் (DRAFT OF WEIMER CONSTITUTION). அது ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் மிகச் சிறந்த மக்களாட்சி அமைப்பாக இருந்தது. வால்தர் ரத்தனு (WALTHER RATHNAU) என்ற மற்றொரு யூதர் ஜெர்மனியில் புனரமைப்பு அமைச்சராகவும் பின்னர் வெளியுறவு அமைச்சருமாகவுமிருந்தார். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மத்தியிலும் ஜெர்மனியின் தோல்விக்கு யூதர்களே காரணம் என்ற பகைமைக் குரலை எழுப்பினார்கள். அதைத் தொடர்ந்து தலைநகராகிய பெர்லினிலேயே யூதர்களுக்கும் யூதர் அல்லாதவர்களுக்கும் பெரும் கலவரம் ஏற்பட்டது.

## நாஜி கட்சியின் தோற்றம்

இந்த சூழ்நிலையில் ஜெர்மனியில் நேஷனல் சோசியலிஸ்ட் ஜெர்மன் ஒர்க்கர்ஸ் பார்ட்டி (NATIONAL SOCIALIST GERMAN WORKERS' PARTY) என்ற சிறிய அரசியல் கட்சி உருவாயிற்று. இக்கட்சியே மிகக்குறுகிய காலத்திற்குள்ளாக "நாஜி" என்று பெயர் பெற்றது. (NATIONAL என்ற சொல்லை ஜெர்மானியர்கள் NAZIONAL என்றே உச்சரிப்பார்கள். அந்த உச்சரிப்புச் சொல்லின் முதல் நான்கு எழுத்து அதாவது NAZI என்ற சொல்லே அக்கட்சியின் பெயராயிற்று). 1920 பிப்.25ம் நாள் அக்கட்சி முனிச் (MUNICH) நகரில் வைத்து தங்களது 25

அம்ச திட்டத்தை வெளியிட்டது. (TWENTY FIVE POINT PROGRAMME) அத்திட்டத்தின் முக்கிய அம்சம் என்னவெனில், தேசியம் அதாவது தேசிய உணர்வு உள்ள ஜெர்மனி (NATIONALISTIC GERMAN), யுத்தத்தில் இழந்த காலனிகளை மீண்டும் கைப்பற்றி அகண்ட ஜெர்மனி (Great Germany) உருவாக்கப்பட வேண்டும். இரத்த பந்த ஜெர்மானிய (GERMAN BLOOD) இனத்தார் மட்டுமே ஜெர்மானியர். மற்ற இனத்தார் அனைவரும் நாட்டைவிட்டு வெளியேற்றப்படவேண்டும். **இதன் அடிப்படையில் யூதர்கள் இந்தநாட்டின் குடிமக்களாக இருக்க முடியாது. அவர்கள் வெளியேற்றப்படவேண்டும்** என்பதே அக்கட்சியின் முக்கிய கொள்கைகளாக இருந்தன. இக்கட்சி துவக்கப்படும்போது 60 உறுப்பினர் மட்டுமே இருந்தனர். ஜெர்மனியில் அப்போது 18,000 யூதர்கள் இருந்தனர்.

## அடால்ஃப் ஹிட்லர் அரசியலில் நுழைதல்



அடால்ஃப் ஹிட்லர் ஒரு முன்னாள் இராணுவ வீரன். முதலாம் உலக யுத்தத்தின் முடிவுக்கு இரண்டு மாதத்திற்கு முன்பு அக்டோபர் 1918ல் மேற்கத்திய முன்னணியில் (WESTERN FRONT) யுத்தக்களத்தில் காயப்பட்டு சிகிச்சை பெற்று அதோடு இராணுவத்தை விட்டு வெளியேறியவன். நாஜி கட்சியின் 25 அம்ச திட்டத்தை அதிலும் குறிப்பாக யூதர்களுக்கு விரோதமான திட்டத்தை வடிவமைத்த மூவர் குழுவில் ஹிட்லரும் ஒருவர். அதைத் தொடர்ந்து ஹிட்லர் அக்கட்சியின் நிர்வாக அமைப்பின் ஏழாவது பதவி நிலைக்கு உயர்த்தப்பட்டார். (SEVENTH IN THE PARTY'S HIERACHY).

1920 ஆகஸ்ட் 13ம் நாள் முனிச் நகரில் திரளான மக்கள் கூட்டத்தில் இரண்டு மணிநேரம் "**நாங்கள் ஏன் யூதர்களுக்கு விரோதமாயிருக்கிறோம்**" (WHY WE ARE AGAINST THE JEWS) என்ற தலைப்பில் பேசினார். அதின் மையக்கருத்து என்னவெனில் "யூத இனமக்களின் மேலாண்மை" (SUPREMACY) ஜெர்மனியில் மாத்திரமல்ல ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பெருகி வருகிறது. அவர்களது வளர்ச்சி ஆபத்தானது. வரயிருக்கும் "அந்த ஆபத்திலிருந்து விடுதலை பெற்றாகவேண்டும்" என்பதுதான். அதோடு ஒரு புதிய கொள்கைக் குரலை உருவாக்கினான். "**உலகத்தில் யூதர் அல்லா**

தோர் அனைவரும் ஒன்றுபடுங்கள் ஐரோப்பியா முழுவதும் வாழும் மக்களே உங்களை நீங்களே விடுவித்துக்கொள்ளுங்கள்" இதுதான் அக்குரல் ("ANTI -SEMITES OF THE WORLD UNITE! PEOPLE OF EUROPE FREE YOUR-SELVES"), (சீமைட் SEMITES என்ற சொல் முக்கியமாக யூதர்களையும் பாலஸ்தீன அரேபியர்களையும் அசீரிய இனத்தையும் உள்ளடக்கிய சொல்) அதோடு மட்டுமின்றி முதற்கட்டமாக யூத இனத்தவர் நம்முடைய நாட்டை விட்டு அப்புறப்படுத்தப்படவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திப்பேசினார்.

## நாஜியின் புயல்படை (STORM TROOPS)

1921 ஆகஸ்ட் 13ம் நாள் "புயல் படை" என்ற பெயரில் நாஜி கட்சியைக் காக்கவும் அதற்கு விரோதமானவர் மீது எதிர்நடவடிக்கை எடுக்கும் நோக்குடன் ஹிட்லர் ஒரு படையை உருவாக்கினான். முதலில் தற்காப்புப் படை (A MEANS OF DEFENCE) என்ற தோற்றத்தோடு ஆரம்பிக்கப்பட்டாலும் பின்நாட்களில் அது ஒரு தாக்கும் படையாகவும் உருவாயிற்று (OFFENSIVE FORCE). தாக்குதலுக்கான பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. குறுகிய காலத்திற்குள்ளாக அவர்களுக்கென காவி நிற (BROWN) இராணுவம் போன்று சீருடை கொடுக்கப்பட்டது. அணிவகுப்பு மற்றும் படைப்பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. காலப்போக்கில் அப்படையினர் "காவிச்சட்டைப்படை" என்று அழைக்கப்பட்டனர். வெகு சீக்கிரமே நாஜி கட்சியினரின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மூவாயிரமாக உயர்ந்தது. கட்சியின் சின்னமாக ஸ்வஸ்திகா (SWASTIKA) வடிவமைக்கப்பட்டது. ஸ்வஸ்திகா என்ற சொல் சமஸ்கிருத வார்த்தை (SANSKRIT TERM). அதற்கு செழுமை (FERTILITY) என்று அர்த்தம். அந்த ஸ்வஸ்திகா கட்சி கொடியிலும், கட்சித் தோரணங்களிலும் அவர்கள் அணியும் ஷர்டின் (shirt) மார்பு பக்கம் அணியும் சின்ன மாகவும், கைகளில் அணியும் (ARMBAND) சின்னமாகவும் மாறியது.



நாஜி கட்சியும், அடால்ஃப் ஹிட் லரும், காவி சீருடையணிந்த புயல் படை ஆகியோரின் செயல்பாடுகள் எந்த அளவுக்கு யூத மக்கள் மீது பாய்ந்தது எந்த அளவுக்கான நாசத்தை உண்டுபண்ணியது என்பதையும் கவனிக்கலாம்.

# 8 ஜெர்மனியில் யூதர்களுக்கு விரோதமான செயல்களின் தீவிரம் – நாஜிக் கட்சியின் வளர்ச்சி

## யூதர்களுக்கு விரோதமான பகைமை உணர்வை உருவாக்குதல்

நாஜிக் கட்சியினர் முதற்கட்டமாக யூதமக்கள் மீது திட்டமிட்ட பகை உணர்வை உருவாக்கினார்கள். ஜெர்மானிய இன வாலிபர் முகாம்களை (YOUTH CAMPS) நடத்தி யூதர்கள் மீது பகைமை உணர்வை ஊட்டி வளர்த் தார்கள். தொடக்கப்பள்ளியிலுள்ள மாணவர்களின் பிஞ்சு உள்ளங்களில் யூத விரோதத்தை ஊட்டி ஒன்றுமறியாத உள்ளங்களை கல்லான இருதயமாக மாற்றினார்கள். அவர்களிடத்தில் நாய்க்குட்டிகளையும் பூனைக் குட்டிகளை யும் கொடுத்து அவைகளை சித்திரவதை செய்து மனச்சாட்சியில் எந்த பதட்டமுமின்றி "யூதன் செத்தான், யூதன் செத்தான்" என்று சத்தமிட்டு அவற்றைக் கொல்லுவதற்கு பயிற்சியளித்து யூதக்குழந்தைகளை கொல்லு வதற்கு ஆயத்தப்படுத்தினார்கள். காலப்போக்கில் ஜெர்மானிய இளைஞர்கள் கூட மனச்சாட்சியில் சூடுண்டு உணர்வற்றவர்களாகி யூதக் குழந்தைகளை எரியும் அடுப்பில் போடும் அளவுக்கு காட்டு மிராண்டித்தனத்தை உண்டாக் கினார்கள். அவர்கள் இருதயம் கல்லாயிற்று. சுருக்கமாகச் சொன்னால் அவர்கள் கற்றறிந்த காட்டுமிராண்டிகளானார்கள் (EDUCATED BARBARIANS).

அடிக்கடி பொதுக்கூட்டங்களையும், ஆங்காங்கே தெருமுனைக் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தி கொடிய, அற்பமான வார்த்தைகளை யூதர்களுக்கு விரோதமாக எழுப்பி விரோதத்தை மக்கள் மத்தியில் உருவாக்கியது மாத்திரமல்ல முதல் உலகமகா யுத்தத்தின்போது ஜெர்மானியர்களுக்கு ஏற்பட்ட தோல்விக்கும், அதன் விளைவாக ஜெர்மன் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கும், பொருளாதார நெருக்கடி களுக்கும், திடீரென்று ஏற்பட்டிருக்கும் பண வீக்கத்திற்கும் யூதர்களே காரணம் என்று அவர்களைக் குற்றம்சாட்டி யூதப் பகைமை உணர்வை வளர்த்தார்கள்.

யூத விரோதப் போக்கை ஹிட்லரின் கட்சி மாத்திரமல்ல சில தீவிரவாத இயக்கங்களும் யூதர்களுக்கு விரோதமாகச் செயல்பட்டு அப்பாவி யூதர்களை கண்ட இடங்களிலும் தாக்க ஆரம்பித்தார்கள். இதன் விளைவாக

ஹிட்லரின் கை இன்னும் ஓங்கிற்று. தனது யூத விரோதக்கொள்கைக்கு மிகப்பெரிய ஆதரவு இருக்கிறது என்று எண்ணி ஹிட்லர் பெருமிதம் கொண்டான். இதன் விளைவாக யூதமக்கள் உரிமையோடு வெளியே சென்று வர முடியாமல் பெரும் பீதியில் வாழ்ந்தனர்.

## வால்தெர் ரெத்தனோவ் படுகொலை

வால்தெர் ரெத்தனோவ் (WALTHER RATHENAU) யூத இனத்தைச் சேர்ந்தவர். அவர் ஒரு பெரும் வியாபாரி. சிறந்த கல்விமான். முதலாம் உலக யுத்தத்தின் போது ஜெர்மன் அரசின் வெளிஉறவு அமைச்சராக இருந்தார். இவர் உயர் ஸ்தானத்தில் இருந்தது யூத இன மக்களுக்கு நல்ல பக்க பலமாக இருந்தது. ஹிட்லரின் நாஜிக் கட்சியினர் இவர் மீது ஜெர்மானியர்களின் நலனுக்கு விரோதமாக செயல்படுகிறவர் என்று இவர் மீது விரோதப் போக்கை உருவாக்கினார்கள். அவர்கள் சொல்லுவதற்கு ஏதுவாக ஜெர்மன் அரசு ரஷ்ய அரசோடு ஒரு உடன்படிக்கை (TREATY) செய்தது. அதன்படி உலகப் போரின் போது ஜெர்மனுக்கு சொந்தமான சில இடங்களை ரஷ்ய அரசுக்கு விட்டுக்கொடுத்துவிட்டது. அந்த உடன்படிக்கைக்கு வால்தெர் ரெத்தனோவ் தான் காரணம் என்று பகைமை உணர்வைத் தூண்டினார்கள். நாஜிக் கட்சியினர் வெளிப்படையாகவே தெருக்கூட்டங்களில் "கடவுளாலும் நிராகரித்துத் தள்ளப்பட்ட அருவருக்கத்தக்க யூதனான வால்தெர் ரெத்தனோவை அழித்தொழியுங்கள்" (KNOCK OFF WALTHER RATHENAU, THE DIRTY GOD-DAMNED JEWISH SEED) என்ற முழக்கம் மேலோங்கிற்று. இந்த வார்த்தைகள் அவர்மீதான பகைமையுணர்வு உச்சகட்டத்தை அடைந்தது. அதன் விளைவாக 24.6.1922 அன்று அவர் கொடூரமாகக் கொல்லப்பட்டார்.


வால்தெர் ரெத்தனோவ்

24.6.1922 காலை அவர் தன் காரை ஓட்டிக்கொண்டு தன் வெளி உறவு அமைச்சகத்திற்குச் சென்று கொண்டிருக்கும்போது பின் தொடர்ந்து வந்த மெர்ச்சீட்ஸ் கார் அவர் சென்ற காருக்கு முன்பாகச் செல்ல முயற்சித்தது. மெர்ச்சீட்ஸ் பக்க வாட்டில் வந்ததும் பின் சீட்டில் அமர்ந்திருந்த எர்வின் கெம் (ERWIN KEM) MP.18 என்ற சப்மிஷின் துப்பாக்கியால் ரெத்தனோவை நோக்கி மிக நெருங்கிய தூரத்தில் மாறிமாறி சுட்டான். ரெத்தனோவ் உடனே மரண

மடைந்தார். பின் சீட்டில் எர்வின் கெம்மோடு அமர்ந்திருந்த ஹெர்மான் பிஷ்செர் (HERMANN FISCHER) அந்த காருக்குள் ஒரு கிரிளேடை வீசினான். காரை ஓட்டிய எர்னஸ்ட் டெக் கொவ் (ERNST TECHOW) சாமர்த்தியமாக காரை ஓட்டித் தப்பிவிட்டனர். இவர்கள் மூன்று பேர் தவிரவும் இக்கொலையைச் செய்ய சதித்திட்டம் தீட்டிய 7 பேர் இருந்தனர். அதில் சிலர் பள்ளி மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் தீவிர தேசியவாதிகள் (ULTRA- NATION-ALISTS) என்ற ஆர்கனைசேஷன் கான்சல் (OC - ORGANISATION CONSUL) என்ற இரகசிய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். ஜூலை 17ம் நாள் கொலையாளிகள் எர்வின் கெம்மும், ஹெர்மான் பிஷ்செரும் ஒன்றாக ஒரு இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டனர். அந்த வேளையில் இரண்டு துப்பறியும் காவலர்கள் (DETECTIVE POLICE) மட்டுமே இருந்தனர். கூடுதல் காவலர்கள் வருவதற்குள்ளாகவே ஒரு காவலர் கெம்மை தலையில் குண்டு பாய சுட்டு வீழ்த்திவிட்டார். ஹெர்மான் பிஷ்செர் தன்னையே சுட்டுக் கொண்டு மரணமடைந்தான். வால்தெர் ரெத்தனோவை கொலை செய்வதின் மூலம் ஜெர்மனியில் ஒரு புரட்சி வெடிக்கும் அப்பொழுது ஆர்கனைசேஷன் காண்செல் என்ற இரகசிய தீவிரவாத தேசியவாதிகள் ஆட்சியைப் பிடித்து சர்வாதிகார ஆட்சியை நிறுவலாம் என திட்டமிட்டிருந்தனர். ஆனால் அது செயல்படாமல் போயிற்று.

வால்தெர் ரெத்தினோவ் கொலை செய்யப்பட்டதைக் குறித்து ஹிட்லர் தன்னுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்திப் பொதுக்கூட்டத்தில் பேசினார். ஆகவே அவனை நீதிமன்றம் நான்குவார சிறைத்தண்டனை வழங்கியது. 1922 ஜூலை 28ம் நாள் சிறையிலிருந்து வெளியே வந்ததும் யூதர்களுக்கு விரோதமாக மிகவும் ஆக்ரோசமாக செயல்பட ஆரம்பித்தான். "நம்முடைய பயங்கர எதிரியாகிய யூதர்களுக்கு எதிராக நிற்க எங்களோடு நில்லுங்கள். எப்பொழுதும் எல்லா வேளையிலும் எங்களோடு நில்லுங்கள்" என்று ஹிட்லர் அறைகூவல் விடுத்தான். 1923ம் ஆண்டு நூரம் பெர்க்கில் நாஜிக் கட்சியை சேர்ந்த ஜூலியஸ் ஸ்டெய்செர் (JULIUS STREICHER) யூதர்களுக்கு விரோதமாக டெர்ஸ்டர்மர் (DERSTURMER) என்ற பத்திரிக்கையை ஆரம்பித்தான். அப்பத்திரிக்கையில் தலைப்பு வாசகமே "யூதர்கள் நம்முடைய துர்அதிர்ஷ்டம்" (THE JEWS ARE OUR MISFORTUNE) என்பதுதான். யூதர்களை ஒரு தீய சக்தியாகவே சித்தரித்தனர். (PORTRAYED JEWS AS AN EVIL FORCE) பகைமை உணர்வை ஊக்குவித்தனர்.

## ஹிட்லர் கைது செய்யப்படல்

1923 நவம்பர் 9ம் நாள் முனிச் நகரில் பெரும்புரட்சியை உருவாக்கி

ஜெர்மனின் ஆட்சியைக் கைப்பற்றி தேசியக்குடியரசு (NATIONAL REPUBLIC) என்று பிரகடனப்படுத்த திட்டமிட்டு நாஜிக்கட்சி செயல்பட்டது. ஆனால் அது வெற்றியடையாத நிலையில் ஹிட்லர் கைது செய்யப்பட்டார். அவர் மீது தேசதுரோக குற்றச்சாட்டை வனைந்து 1924 ஏப்.1ம் நாள் 5 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அவர் சிறையிலிருந்த காலத்தில் தான் கடந்து வந்த வாழ்க்கைப் பாதையையும் தன்னுடைய எண்ணங்களையும் எழுதி "என்னுடைய போராட்டம்" என்று தலைப்பிட்டு (MEIN KAMOF = MY STRUGGLE) புத்தக வடிவாக்கினார். எட்டுமாதம் கழித்து ஹிட்லர் பரோலில் விடுதலை செய்யப்பட்டார். தான் ஆக்கிய "என்னுடைய போராட்டம்" என்ற புத்தகத்தின் முதல் பாகத்தை 1925 ஜுலை 18ம் தேதி வெளியிட்டார். அப்புத்தகம் முற்றிலும் யூத மக்களுக்கு விரோதமாக விஷத்தைக் கக்குவதாக இருந்தது. மார்க்சிசமும் ஜுடாயிசம் இவ்விரண்டும் ஜெர்மானியர்களுக்கு விரோதமான வல்லமைகள் என்றும் அவ்வல்லமைகள் அரசியலுக்குள் புகுந்து ஐரோப்பா முழுவதையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர திட்டமிட்டு செயல் படுகின்றன என்றும் யூத இனம் அழிக்கப்படவேண்டும் என்ற மையக் கருத்தில் அப்புத்தகத்தை ஆக்கியிருந்தார். ஜெர்மனியில் இந்த இனம் அழிக்கப்படாத வரை ஜெர்மனி ஒரு மிகப்பெரிய தேசமாகத் தலைதூக்கவே முடியாது என்ற கருத்தையும் வலியுறுத்தி முடித்திருந்தார்.

## நாஜிக் கட்சியின் வளர்ச்சி


சைமன் பெட்லூர்ரா

இப்புத்தகம் மிக வேகமாக விற்பனை ஆயிற்று. ஜெர்மனியில் ஹிட்லரின் கருத்து வேரூன்றிற்று. இதற்கிடையில் 1926 மே 25ம் நாள், உக்ரெனியன் தேசிய தலைவரான சைமன் பெட்லூராவின் (SIMON PETLURA) கோஷ்டியினர் 1919 பெப்ரவரியில் 60,000 யூதர்களை உக்ரெய்ன் நாட்டில் கொன்று குவித்ததின் எதிரொலியாக பாரிஸ் நகரில் இருந்த சைமன் பெட்லூராவை 6 ஆண்டுகளுக்குப் பின்னர் பட்டப்பகலில் ஷாலோம் ஸ்கெவார்ஸ்பாட் (SHALOM SCHW-ARZBARD) என்ற யூதன் கொலை செய்தான். "என்னுடைய அப்பாவி யூத மக்களுக்காக நான் செய்ய வேண்டிய

கடமையைச் செய்கிறேன். யூதர்களின் இரத்தத்தைச் சிந்தியமைக்கு காரணமாயிருந்தவரை நான் பழிவாங்கப் போகிறேன்"என்று கொலை சம்பவத்திற்கு சிலமணி நேரங்களுக்கு முன் தன் மனைவிக்குக் கடிதம் எழுதியுள்ளான். ஷாலோம் ஸ்கொவார்ஸ்பாட்டுடைய பெற்றோரும் 14 மிக நெருங்கிய உறவினர்களும் சைமன் பெட்லூராவின் யூதர்களுக்கு விரோத மான நடவடிக்கையில் கொல்லப்பட்ட 60,000 யூதர்களுள் அவர்களும் கொல்லப்பட்டார்கள். இதுவே அவனது பழிவாங்கும் உணர்வை மேலோங்கச் செய்துவிட்டது. சைமன் பெட்லூராவின் கொலையின் எதிரொலி ஜெர்மனி யில் அதிகமாக இருந்தது. ஹிட்லரின் நாஜிக் கட்சியினர் ஜெர்மானிய இளைஞர்களை ஒன்றுபடுத்த சரியான வாய்ப்பாக பயன் படுத்திக்கொண்டனர். 1926 டிச.10ம் நாள் அப்புத்தகத்தின் இரண்டாவது பாகம் வெயிடப்பட்டது. அதிலும் யூத பகைமை உணர்வே மேலோங்கி நின்றது. நாஜிக் கட்சியின் வளர்ச்சி வேகமடைந்தது. 1926ல் 17,000ஆக இருந்த உறுப்பினர் பட்டியல் 1927ல் 40,000ஆக உயர்ந்தது. 1928 மே மாதம் நடந்த ஜெர்மானிய தேசிய தேர்தலில் ஹிட்லரின் நாஜிக்கட்சி போட்டியிட்டு 12 இடங்களையும் பிடித்தது. இந்நிலை நாஜிக்கட்சியினருக்கு பெரும் உந்துதலாக மாறிற்று. 1926 ஜுலை 4ம் தேதி "இளம் நாஜிஸ்" (YOUNG NAZIS) என்ற பெயரில் ஹிட்லர் இளைஞர் படை ஒன்றை திரட்டினார். அதோடு கருஞ்சட்டை அணிந்த பாதுகாப்புப் படை (PROTECTION SQUAD) ஒன்றை உருவாக்கினார்.

ஜெர்மனியின் பராளுமன்றத்தில் (REICHSTAG) 12 இடங்களைப் பிடித்து ஹிட்லரின் நாஜிக்கட்சிக்கு அனுகூலமான சூழ்நிலைகள் உருவாயின. எதிர் பாராத அளவுக்கு வேலையில்லாத திண்டாட்டம் பெருகியது. ஆளும் கட்சிக்கு ஆதரவாகயிருந்த கம்யூனிஸ்ட்கட்சி தொடர்ந்து ஆதரவளிக்கத் தயங்கியது. வேலையில்லாத திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகிற்று. தொழிற்சாலைகளிலும் வியாபார ஸ்தலங்களிலும் மந்தநிலை ஏற்பட்டது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. நாஜிக் கட்சியினர் இந்த சூழ்நிலையை யும் பயன்படுத்தி யூதர்கள் வைத்திருக்கும் சொத்துக்களை வெளிப்படையாக வெகுவாய்க் கண்டிக்கத் தொடங்கினார்கள். ஜெர்மனி சந்தித்துக் கொண் டிருக்கும் பொருளாதார நெருக்கடி யூதர்களின் சதித்திட்டமே அன்றி வேறில்லை என திட்டவட்டமாக பிரகடனப்படுத்த ஆரம்பித்தார்கள். இதைத் தொடர்ந்து 1930 ஜனவரி முதல் நாள் பெர்லினில் காவிச் சீருடைய அணிந்த புயல் படையினர் எட்டு யூதர்களைப் பட்ட பகலில் எந்தவித காரணமின்றித் தாக்கிக் கொலை செய்தனர். அதைத் தொடர்ந்து ஹோட்டல்கள், தியேட்டர்கள், யூத ஜெப ஆலயங்களுக்கு செல்வோரை மானபங்கம்

படுத்துவதும், கொல்வதுமாக நடந்துகொண்டனர்.

1930 செப்டம்பர் மாத பொதுத் தேர்தலின்போது நாஜிக்கட்சியின் புயல் படையினர் யூதர்களையும், அரசுக்கு ஆதரவாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியினரையும், அரசியல் எதிராளிகளையும் மிரட்ட ஆரம்பித்தனர். தேர்தல் பிரச்சாரத்தின்போது மிரட்டியது மாத்திரமல்ல 78 யூதர்களைத் தாக்கிப் படுகாயப்படுத்தினார்கள். செப்.14ம் தேதி நடந்த தேர்தல் 12 உறுப்பினர்களைப் பெற்றிருந்த நாஜிக்கட்சி 107 இடத்தைக் கைப்பற்றியது. அதன் விளைவு ஜெர்மனியின் இரண்டாவது பெரிய கட்சியாக மாறியது. புதிய பாராளுமன்றத்தின் தொடக்க நாளில் பெர்லின் நகரில் அநேக யூதர்கள் கொடூரமாக தாக்கப்பட்டனர். யூதர்கள் நடத்திய டெப்பார்ட்மெண்டல் ஸ்டோர்கள் அடித்து நொறுக்கி நாசம் செய்யப்பட்டன. யூதர்களில் முக்கிய மானவர்களின் வீடுகள் தகர்க்கப்பட்டன. நாஜிக் கட்சியினர் பாராளு மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், கட்சியில் முக்கிய மானவர்களும் பாராளுமன்றத்திற்குள் நுழையும்போதே அவர்கள் கட்சி கோஷமாகிய “ஜெர்மனியே விழித்தெழு, யூதர்களை ஒழித்துக்கட்டு” (GERMANY AWAKE, DEATH TO JEWS) என்று முழங்கிக்கொண்டே உள்ளே சென்றனர்.

# 9 ஹிட்லர் ஜெர்மனியின் சர்வாதிகாரியானான் - வன்கொடுமை முகாம்கள் திறப்பு

"ஜெர்மனியே விழித்தெழு யூதர்களை ஒழித்துக்கட்டு" என்ற நாஜிக் கட்சியினர் பாராளுமன்றத்திற்குள் நுழையும்போது எழுப்பிய முழக்கம் ஜெர்மனி எங்கும் ஒலிக்க ஆரம்பித்தது. அது யூதமக்களிடையே பெரும் பீதியை உண்டாக்கிற்று. என்ன நடக்கப்போகிறதோ என்ற பதட்டநிலை உருவாயிற்று.

நாஜிக் கட்சியினரின் புயல்படையினர் யூதர்களின் புதிய ஆண்டிற்கு முந்தியநாள் யூத ஆலயங்களுக்குச் சென்று திரும்பிய யூதர்களை கொடூர மாகத் தாக்கினார்கள். ஒரு சம்பவத்தில் மூன்று ஜெர்மானிய வாலிபர்கள் முதிற்வயதான ஒரு கண்ணியமான யூதப்பெரியவரை ரப்பர் குண்டாந் தடியைக் கொண்டு தாக்கினார்கள். 5 வாலிபர்கள் தாக்குபவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்து சுற்றி நின்றனர். ஒரு பலவீனனை சில பலவான்கள் சேர்ந்து தாக்குவதும் தாக்கும் பலவான்களுக்கு சில பலவான்கள் பாதுகாப்பு கொடுப்பதும் நாஜிக்கட்சி புயல் படையினரின் வழிமுறையாகவே மாறி விட்டது. அதைத் தொடர்ந்து 50க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் தீட்டுப் படுத்தும் வகையில் சில அருவருப்பான காரியங்களைச் செய்து யூதர்களைப் புண்படுத்தினார்கள். 100க்கும் மேற்பட்ட யூத கல்லறைத் தோட்டங்களிலுள்ள கல்லறைகள் அழிக்கப்பட்டன. தங்கள் முன்னோர்களில் கல்லறைகள் அழிக்கப்படுவதைக் கண்டு மனங்குமுறினார்கள்.

### ஹிட்லர் ஜெர்மனியின் சர்வாதிகாரியானார்



1932 ஜுலை 31ம் நாள் நடந்த தேர்தலில் 230 பாராளுமன்ற இடங்களை பிடித்தது. கூட்டாட்சி அமைக்கும் சூழ்நிலை உருவாயிற்று. ஹிட்லரின் தலைமையை ஏற்றுக் கொள்ளத் தொடக்கத்தில் எதிர்ப்பு கள் இருந்தாலும் பின்னர் அவ ருடைய தலைமையை ஏற்க ஒப்புக் கொண்டனர். 1933 ஜன. 30ம் நாள்

தனது 43வது வயதில் சான்ஸ் செலராக (CHANCELLOR) அதாவது ஜெர்மனியின் அதிபதியாகப் பதவி ஏற்றார். யூத மக்களிடையே சிறுபிள்ளைகள் கூட அஞ்சி நடுங்கும் சூழ்நிலை உருவாயிற்று.

1933 பிப்ரவரி 5வது நாள் ஜெர்மனின் பாராளுமன்றத்தில் அவசர கால சட்டம் பிறப்பிக்கப்பட்டு (EMERGENCY DECREE) ஹிட்லர் ஜெர்மனியின் சர்வாதிகாரியானார். கம்யூனிஸ்ட் கட்சியினர், தொழிலாளர் அமைப்புகள் மற்றும் எதிர்கட்சியினர்களின் அலுவலக கட்டடங்களும் அரசின் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன. இந்த சூழ்நிலை ஹிட்லரின் புயல் படையினருக்கு தாங்கள் நினைத்தபடி எந்தக் கட்டிடத்தையும் கைப் பற்றினார்கள். எதிர்ப்பாளர்களை கடுமையாகத் தாக்கி விரட்டியடித்தனர்.



அவசரகாலச்சட்டம் பிரகடனப் படுத்தப்பட்ட 3 வாரங்களில் அதாவது பெப்ரவரி 27ம் நாள் பாராளுமன்றக் கட்டிடம் (REICHSTAG BUILDIND) தீப்பற்றி எரிந்தது. துரிதமாகத் தீ அணைக்கப் பட்டது. எனினும் விசாரணை தீவிர மடைவதற்கு முன்பாகவே விசாரணை யின்றி யாரையும் கைது செய்து சிறை யிலடைக்கும் சட்டம் பெப்ரவரி 28ம் நாள் பிரகடனப்படுத்தப்பட்டது. இச் சட்டத்தைப் பயன்படுத்தி ஹிட்லரின் அரசியல் எதிர்ப்பாளர்கள், தீ வைத்தது யூதர்களின் சதித்திட்டத்தின் விளைவே என்ற பரபரப்பை நாஜிக்கட்சியினர் உருவாக்கிவிட்டு அதைச் சொல்லி யூதமக்களையும் கூட்டம் கூட்டமாக கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர். அரசியலிலும் யூத மக்களிடையேயும் நன் மதிப்பைப் பெற்ற பெர்லினைச் சேர்ந்த பேர்ன்ஸ் டெயின் (BERNSTEIN) என்பவரைக் கைதுசெய்து பலர் அறிய பொது இடத்தில் வைத்து அவர் கம்யூனிஸ்ட் என்ற காரணத்தால் 50 கசையடிகளும் (FIFTY LASHES) அவர் யூதன் என்ற காரணத்தால் மேலும் 50 கசையடிகளும் கொடுக்கப் பட்டன. இச்சம்பவம் பரபரப்பை உண்டாக்கினாலும் யாராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. இதுபோன்ற நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணமானவைகளாக மாறிவிட்டன. புயல்படையினரால் பல யூதர்கள் இரத்தம் சொட்டச்சொட்ட கொடூரமாக அடிக்கப்பட்டனர். அடித்து குற்றுயுராய் சாலை ஓரங்களில்

போடப்பட்டனர். வெளிநாட்டுத் தூதுவர்கள், பத்திரிக்கையாளர்கள் இச்சம்பவங்களுக்கெல்லாம் சாட்சிகளாக இருந்தார்கள்.

### வன்கொடுமை முகாம்கள் (CONCENTRATION CAMPS)

கைது செய்யப்பட்டவர்களை அடைப்பதற்கும் போதிய சிறைகள் வசதிகள் இல்லாத காரணத்தால் முனீச் அருகிலுள்ள டாக்கொவ் (DACHAU) என்ற இடத்தில் வன்கொடுமை முகாம்களை (CONCENTRATION CAMPS) உருவாக்கினார்கள். கற்கள் எடுக்கப்பட்ட கல்குவாரிகளில் குழிகளில் குடிசைகள் போன்று கூரைகள் போட்டு (HUTS IN A GRAVEL PIT) கைது செய்யப் பட்டவர்கள் பாதுகாக்கப்பட்டனர். அடிப்படை வசதிகள் அற்ற அந்த இடத்தில் கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் குவிக்கப்பட்டனர். புயல் படையினரே அதைக் காவல் செய்தனர். மார்ச் 1933ல் டாக்கொவ் வன் கொடுமை முகாமில் 5000 கைதிகளை வைக்கும் அளவுக்கு அதைப் பெரிதாக்கினார்கள். மார்ச் 13ம் நாள் யூதவழக்கறிஞர்கள். நீதிபதிகள் யூதர்களுக்கு அனுகூலமாக இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு காரண மாக எல்லா யூத வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் பிரஸ்லெள நீதிமன்றத்தை விட்டு வெளியே தள்ளப்பட்டனர். யூதர்கள் கொடூரமாகத் தாக்கப்படுவதும் கைது செய்யப்பட்டு வன்கொடுமை முகாம்களுக்கு அனுப்பப்படுவதும் தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தன. யூதர்களின் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டு கடை உரிமையாளர்கள் தாக்கப்பட்டனர். யூத மத குருக்களாகிய ரபிக்கள் கேவலமாக நடத்தப்பட்டுத் தாக்கப்பட்டனர். யூத மக்களை ஒன்று படுத்தித் திரட்டக்கூடிய தலைவர்கள் என்று கருதப்படுகிற அனைவரும் கைது செய்யப்பட்டு மிகக் கொடூரமாக நடத்தப்பட்டனர். அப்படிப்பட்டவர்களுள் கிண்டர்மான் (KINDER-MANN) என்ற பேக்கரி உதவி யாளர் குறிப்பிடத்தக்கவர். அவரைத் தாக்கிய புயல்படையினரை நீதி மன்றத்தில் புகார் செய்துவிட்டார் எந்த காரணத்திற்காக பெர்லினிலுள்ள புயல்படையினரின் தங்குமிடத்திற்குக் (STORM TROOP BARRACKS) கிண்டர் மானைக் கொண்டுவந்து அவரைப் பயங்கரமாகத் தாக்கி அவரைக் கொன்று விட்டார்கள். அவருடைய பிரேதத்தை ஜன்னல் வழியாக தெருவில் வீசி எரிந்துவிட்டனர். அவருடைய பிரேதம் நெஞ்சில் பலவெட்டுக்காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டது.

### யூதர்களின் வியாபார ஸ்தலங்கள் விலக்கி வைக்கப்பட்டன

யூதர்களுடைய கடைகளில் ஜாமான்கள் வாங்கக்கூடாது என ஹிட்லரின் அரசு அறிவிப்பு கொடுத்தது. அதற்கு எதிர்ப்புகள் இருந்தது. ஆனால்

எதிர்ப்புகள் பொருட்படுத்தப்படவில்லை. ஏப்ரல் 1ம் தேதி முதல் யூதர்களுடைய கடைகளுக்கு முன்பாக ஒரு ஜெர்மானியன் கூட நுழையக்கூடாது என ஹிட்லரின் புயல்படையினர் நின்று காவல்செய்ய ஆரம்பித்தார்கள். யூதர் களுடைய கடைகளின் கதவுகளில் "யூதனே, வெளியேறு பாலஸ்தீனத் திற்குப்போ, எருசலேமுக்குப்போ" என்ற அறிவிப்பு எழுத்துக்களைப் பதித்து யூதர்களை ஒடுக்க ஆரம்பித்தனர்.

## யூத மாணவர்கள் பல்கலைக் கழகங்களைவிட்டு வெளியேற்றம்

யூதமாணவர்களும் யூதப் பேராசிரியர்களும் பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். இரசாயனத்தில் நோபல் பரிசுபெற்ற பிஃரிட்ஜ் ஹாபர் (FRITZ HARBER) பேராசிரியர் ஸ்தானத்தை விட்டு தள்ளப் பட்டு வெளியேற்றப்பட்டார். மிகவும் பெயர் பெற்ற பேராசிரியரும் சட்ட நிபுணருமான மார்ட்டின் உல்பஃ (MARTIN WOLFF) ஸ்வஸ்திக் அடையாளம் அணிந்திருந்த மாணவர் கும்பல் ஒன்று அவரைத் தாக்கி வெளியேற்றி னார்கள். அல்பெர்ட் ஜன்ஸ் டின் தானாகவே நாட்டைவிட்டு ஓட வைத்தனர். யூத நூலாசிரியர்கள் எழுதிய அருமையான புத்தகங்களையெல்லாம் சேகரித்து பொது இடத்தில் போட்டு தீ வைத்தனர். தீ வைப்பதும் யூத அறிஞர்கள் கொலை செய்யப்படுவதும் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தது. புத்தகங்கள் எரிக்கப்பட்ட மறுநாள் டாக்டர் மேயர் என்ற புகழ் பெற்ற யூத பல் டாக்டர் கொடூரமாகக் கொல்லப்பட்டார். கொடுமைகள் தொடர்ந்தன.

# 10

# யூத விரோதப் போக்கு அண்டைய நாடுகளுக்கும் பரவுதல்

1933 பிப்ரவரி 5ம் நாள் ஜெர்மனியின் பாராளுமன்றத்தில் அவசரகால சட்டம் பிறப்பிக்கப்பட்டு ஹிட்லர் தன்னை சர்வாதியாகப் பிரகடனப் படுத்தியதைத் தொடர்ந்து ஜெர்மனியில் யூதமக்கள் சந்தித்த கொடூர மரணங்களையும், வன்கொடுமை முகாம்களில் எந்த காரணமுமின்றி, விசாரணையுமின்றி அடைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளான நிலவரத்தை யும், பல்கலைக் கழகங்களிலிருந்து யூத மாணவர்களும் பேராசிரியர்களும் மிகவும் சிறுமைப்படுத்தப்பட்டு விரட்டப்பட்டனர்.

## யூதர்களுக்கு விரோதமான வன் முறை

தொடர்ந்து யூதர்களுக்கு விரோதமாக நடந்த வன்முறை நிகழ்வுகள் காரணமாகவும் யூத சமூகத்தின் முன்னணித் தலைவர்களை தேடிப் பிடித்து கொலைசெய்யப்படுகிற சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டிருந்த காரணத் தாலும் ஆயிரக்கணக்கான யூதர்கள் தங்கள் வீடுகள், வாழ்நாள் முழுவதும் சம்பாதித்த அனைத்து உடைமைகள், நண்பர்கள் எல்லோரையும் விட்டு குடும்பத்தினரோடு ஜெர்மனியை விட்டு வெளியேறினார்கள். 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாலஸ்தீனத்திற்குத் திரும்பினார்கள். அநேகமாயிரம் யூதர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குக் குடிபெயர்ந்து சென்றனர். ஜெர்மனியைவிட்டு வேறு நாட்டுக்குச் செல்லமுடியாத நிலவரத்திலுள்ள சிலர் தற்கொலை செய்து கொண்டனர். வேறு சிலர் இந்தப் புயல் கடந்து சென்றுவிடாதா என்ற ஏக்கத்தோடு காத்திருந்தார்கள். ஆனாலும் 26 ஜீன் 1933 ஜெர்மானிய அரசு பத்திரிக்கை அறிக்கையின்படி "யூதர்கள் அல்லாத ஜெர்மனியை உருவாக்க வேண்டும். அதுவே எங்கள் தேசிய இலட்சியம்" என்று பிரகடனப்படுத்திற்று.

## அண்டைய நாடுகளிலும் அச்சம்

ஜெர்மனிக்கு வெளியே பல்வேறு நாடுகளில் வாழுகிற யூதர்கள் ஜெர்மனியில் யூதர்களுக்குச் சம்பவிப்பதை மிகுந்த அச்சத்தோடு கவனித்து வந்தனர். குறிப்பாக போலந்து ஜெர்மனியின் கிழக்கு எல்லையிலுள்ள அண்டைய நாடு. அந்த நாட்டில் மட்டும் 30 லட்சம் யூதர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மிகுந்த பீதியில் வாழ்ந்து வந்தனர். வார்சா **(WARSAW)**

போலந்து நாட்டின் தலைநகரம். வார்சாவைச் சேர்ந்த இளம் யூத வரலாற்று ஆசிரியர் இம்மானுவேல் ரிங்கெல்புளும் (EMANUEL RINGEL- BLUM) ஜெர்மனியில் யூதர்களுக்கு சம்பவிக்கும் கொடுமைகளால் மனம் நொந்தவராக ஹிட்லரின் யூதப் பகைமைக் கொள்கைக்கும், அவனுடைய செயல்பாடுகளைக் குறித்தும் ஆதாரங்களை சேகரிக்க ஆரம்பித்தார். ஹிட்லரின் அரசு அவ்வப்போது வெளியிடும் அறிக்கைகள், உத்தரவுகள், கடிதங்கள், புகைப்படங்கள், அறிவிப்பு போர்டுகள், சுவரொட்டிகள் போன்ற ஆதாரங்களை சேகரிக்க ஆரம்பித்தார். அதற்கான செய்தியை வெளியிட்டு ஆதாரங்களை சேகரித் தார். போலந்திலுள்ள வில்னா என்ற நகரத்தைச் சேர்ந்த டாக்டர் ஜேக்கப் விகோட்ஸ்கி (DR. JACOB WIGODSKY) வில்னாவிலுள்ள பத்திரிக்கை மூலமாக ஹிட்லரின் யூத விரோத திட்டங்களுக்கு எதிராகவும் யூதர்களுக்கு சர்வதேச அமைப்பு (LEAGUE OF NATIONS) அளித்திருக்கும் சம உரிமை கொள்கைகளைச் செயல்படுத்தக் கோரியும் நாம் போராடியாகவேண்டும் என்ற ஒரு அறிக்கையைக் கொடுத்தார். டாக்டர். ஜேக்கப் விகோட்ஸ்கி, இம்மானுவேல் ரிங்கெல்புளும் ஆகியோரின் செயல்பாடுகள் போலந்து யூதர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை உருவாக்கிற்று. போலந்து யூதர்கள் ஜெர்மானிய பொருட்களை புறக்கணிக்க ஆரம்பித்தனர். (BOYCOTTED GERMAN-MADE GOODS) மேலும் ஜெர்மன் திரைப்படங்கள் திரையிடும் சினிமா தியேட்டர்களில் துர்நாற்றத்தை உண்டாக்கும் குண்டுகளை (STINK BOMBS) வீசி புறக்கணித் தனர். ஆனாலும் ஜெர்மனியில் நாஜிப் படையினரின் யூதர்களுக்கு விரோத மான போக்கும் கொடூரச் சம்பவங்களும் பெருகியதே அன்றி எவ்வகையிலும் குறையவில்லை.

## நாஜிக்கட்சி தவிர மற்ற கட்சிகளுக்குத் தடை

1933 ஜீலை 14ம் நாள் ஹிட்லரின் நாஜிக்கட்சி மட்டுமே செயல்பட வேண்டு மென்றும் மற்ற கட்சிகள் தடைசெய்யப்பட்டு பிரகடனம் செய்யப்பட்டது. இப்பிரகடனம் ஹிட்லரின் ஏதேச்சிய அதிகாரம் இன்னும் வலுப்பெற்றது. பிராங்கோனியா (FRANKONIA) ஜெர்மனியின் ஒரு மாவட்டம் போன்ற அமைப்புள்ளது. நியூரம்பெர்க் (NUREMBERG) அம்மாவட்டத்தின் தலைநகரம். டெர்ஸ்டர்மெர் (DER STURMER) என்ற ஜெர்மானியர் பத்திரிகை ஹிட்லரின் திட்டங்களுக்கு வலதுகரம்போல இயங்கிவந்தது. அப்பத்திரிகையின் ஆசிரியர் ஜூலியஸ் ஸ்ட்ரீச்சரை (JOLIUS STREICHER) பாராளுமன்றப் பிரதிநிதியாக ஜீலை 30ம் நாள் நியமனம் செய்தனர். அவருக்கு நீதியியல் அதிகாரங்களும் (JUDI-CIAL POWER) கொடுக்கப்பட்டது. அவர் தன்னுடைய அதிகாரத்தைக் கொண்டு

நியூரம்பெர்க் நகரில் 250 மிகப் பிரபல்யமான யூத வியாபாரிகளை ஹிட்லரின் ஜெர்மானிய முற்போக்குத் திட்டங்களுக்கு விரோதமாக செயல்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்ய உத்தரவிட்டார். அதோடு மட்டுமின்றி அவர்கள் கைது செய்யப்பட்டு வயலில் புற்களை பல்லால் கடித்து பறிக்க வேண்டும் (PLUCKING THE GRASS OUT OF A FIELD WITH THEIR TEETH) என்ற தீர்ப்பும் அளிக்கப்பட்டது.

### *வன்கொடுமை முகாம்களில் யூதப் பிரமுகர்கள்*

எதிர்த்து கேட்க எதிர்கட்சிகளின் செயல்பாடுகள் அற்றுப்போனபடியால் ஹிட்லரின் கீழுள்ள அதிகாரி ஹிட்லரைப் பிரியப்படுத்தவேண்டுமென்ற நோக்கில் தங்களுக்குத் தோன்றியபடியெல்லாம் யூதர்களுக்கு விரோத மாகச் செயல்பட ஆரம்பித்தார். ரீகென்ஸ்பெர்க் (REGENSBERG) நகரில் மட்டும் ஒரே நாளில் 427 யூதர்கள் கைதுசெய்யப்பட்டு வன்கொடுமை முகாம்களில் வைக்கப்பட்டனர். பெர்லின் நகரில் முதிர் வயதான யூதர்களுள் முற்றும் செவிடானவர்களின் காப்பகத்திலிருந்த ஆதரவற்ற 32 செவிடர் களை மனிதாபிமானமின்றி வெளியேற்றப்பட்டார்கள். அவர்களுடைய பராமரிப்பிற்காக அவர்களே ஒரு பெருந்தொகை செலுத்தியதின் பேரில் மாதந்தோறும் அரசும் சிறுமானியத்தைக் கொடுத்து அவர்கள் பராமரிக்கப் பட்டுள்ளனர். அவர்கள் வெளியேற்றப்பட்டபோது அவர்கள் செலுத்திய தொகையும் திரும்பக் கொடுக்கப்படவில்லை.

### கடும் தண்டனைச்சட்டம்

1933 அக்டோபரில் வன்கொடுமை முகாம்களைக் குறித்த புதிய தண்டனைமுறை அமுல்படுத்தப்பட்டது. முகாமின் சட்டதிட்டங்களுக்கு மாறாக சிறிய தவறானாலும் அவர்களுக்கு தூக்குத்தண்டனை வழங்கப்படும் என்பது செயல்முறைக்கு வந்தது. ஒருவனை கருவியாக வைத்துக்கொண்டு முகாம் அதிகாரிகள் நினைத்தால் யாரையும் தூக்கிலிடலாம் என்ற நிலை உருவாயிற்று. இதைப் பயன்படுத்தி அநேகர் கொல்லப்பட்டனர். டாக்டர். தியோ கட்ஜ் (DR.THEO KATZ) என்ற யூதர் வன்கொடுமை முகாம் மருத்துவ மனையில் மருத்துவராக இருந்தார். அவர் எந்தவித வெளிப்படையான காரணமின்றிக் கொல்லப்பட்டார். டாக்டர். அல்பெர்ட் ரோசென்பெல்டர் என்ற யூதர் மிகப் பிரபல்யமான வழக்கறிஞர். அவர் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். அவர் என்ன ஆனார் என்று தெரியாத அளவுக்கு அவரை இல்லாமல் ஆக்கிவிட்டனர்.

## யூதர்கள் வெளியேற்றம்

ஒவ்வொரு நகரங்களிலும், கிராமங்களிலும் எல்லோரும் அறியத்தக்க இடத்தில் "யூதர்களே வெளியேறுங்கள் உங்களை நாங்கள் விரும்பவில்லை" என்று கொட்டை எழுத்தில் பெரிய விளம்பர போர்டுகள் நிறுவப்பட்டன. நகரங்களில் ஹோட்டல், ஸ்டேடியம், கடைகள், சாலைகள் ஆகிய இடங்களில் எங்கும் திரும்பினாலும் காணும் வகையில் சிறிய போர்டுகள் வைக்கப்பட்டன. யூதர்கள் எங்கும் தலைகாட்ட முடியாத சூழ்நிலைகள்ஏற்பட்டன. 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட யூதர்கள் மேற்கு ஐரோப்பியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குக் குடிபெயர்ந்து சென்றனர். 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாலஸ்தீனத்திற்குச் சென்றனர். பாலஸ்தீனத்திற்குச் சென்ற யூத மக்கள் அங்குள்ள அரேபியர்கள் குடிபெயர்ந்து வந்த யூதர்களுக்கு விரோதமாகக் கலகம் செய்தனர். ஆகவே வந்த இடத்திலும் அவர்கள் இளைப்பாறுதல் அற்றவர்களாக இருந்தனர். இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி ஹிட்லரின் நாஜி அரசு பாலஸ்தீனம், சிரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கு ரேடியோ பெர்லின் மூலம் வானொலிச் செய்திகளை அனுப்பி யூதர்களுக்கு எதிராக பகைமை உணர்வை ஊக்குவிக்கும் வகையில் செயல் பட்டனர்.

## "யூதரில்லாத கிராமம்"- அமைக்கும் திட்டம்

1934ம் ஆண்டு துவக்கத்தில் ஹிட்லரின் நாஜி அரசு "யூதரில்லாத கிராமம்" (JEW-FREE VILLAGES) என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி நாஜி புயற்படையினர் (STORM TROOPS) இதை செயல்படுத்த ஆரம்பித்தனர். இதை முதல் முறையாக ஆர்ன்ஸ் வால்டெ என்ற கிராமத்தில் செயல்படுத்தினர். புயல்படையினர் திடீரென்று கிராமத்திற்குள் நுழைந்து யூதர்களின் வீடுகளை அடித்து நொறுக்கி, வீடுகளை கொள்ளையிட்டு இரவெல்லாம் நாசவேலையில் ஈடுபட்டனர். கையில் சிக்கிய யூதர்களை கொடூரமாக அடித்து சித்திரவதை செய்தனர். யூத மதவழிபாடுகளை நடத்தும் ரபிகளின் வீட்டிற்குள் நுழைந்து அவர்களை அடித்து அவமானப்படுத்தினார்கள். யூதர்களுடைய ஆலயங்களுக்குள் நுழைந்து அணையா விளக்கை உடைத்து மற்றும் வழிபாட்டு பொருட்களை உடைத்து நாசம் செய்தனர். எதிர்த்து நிற்கமுடியாதவர்களாக விடிவதற்குள்ளாக மனைவி, பிள்ளைகளை யும் இழுத்துக்கொண்டு கிராமத்தை விட்டு தங்கள் வீடுகளையும் உடைமை களை விட்டுவிட்டு ஜீவன் தப்ப ஓடி விட்டனர்.

யூதரில்லாத முதல் கிராமம் உருவாயிற்று.

“ஜெர்மனியில் யூதர்கள் இல்லாத கிராமங்களை (Jew-free villages) அமைப்போம்” என்ற ஹிட்லரின் திட்டம் நாஜிப் புயற்படையினரைக் கொண்டு (Storm Troops) தீவிரமாக செயல்பட ஆரம்பித்தது. 1934ல் ஆர்ன்ஸ் வால்டே என்ற யூதரல்லாத முதல் கிராமம் உருவாயிற்று. அத்திட்டத்தை நிறைவேற்றும் பணியில் யூத மக்கள் எவ்வளவு கொடுமைக்குள்ளானார்கள், விரட்டி யடிக்கப்பட்டனர்.

யூதர்கள் அற்ற கிராமத் திட்டம் தீவிரமாகத் தொடர்ந்தது. நாஜிப் புயற்படையினர் இரவு வேளைகளில் யூதர்கள் வாழும் கிராமத்திற்குள் நுழைந்து திடீர் தாக்குதல்களை நடத்தி பெண்களை, சிறு பிள்ளைகளை வெளியே இழுத்து வந்து அவர்களை அவமானப்படுத்துவதும் வீடுகளிலுள்ள பொருட்களை அடித்து நொறுக்கி நாசப்படுத்துவதும் குடும்பத்திலுள்ள ஆண்களைக் கொடூரமாகத் தாக்குவதும் கிராமங்கள் தோறும் தொடர்ந்தனர். இதற்கு பயந்து அநேகர் அண்டைய நாடுகளாகிய போலந்து, ஆஸ்திரியா போன்ற நாடுகளுக்குத் தப்பியோடினார்கள். சிலர் இந்த சூழ்நிலைகளில் தற்கொலை செய்துள்ளனர்.

## யூத தேவாலயங்கள் நொறுக்கப்பட்டன

யூதர்களுடைய தேவாலயங்களுக்குள் (Synagogue) நுழைந்து தோரா (Torah) என்ற மோசேயின் ஐந்தாகமப் புத்தகத்தை கால்களின் கீழே போட்டு மிதித்து அவற்றைக் கிழித்து நாசப்படுத்துவதும், அணையாவிளக்குகளை (Eternal Lamp) அணைத்து அவற்றை நொறுக்கி நாசப்படுத்துவதும் யூதப் போதகர்களாகிய ரபியின் (Rabbi) வீடுகளுக்குள்ளும் நுழைந்து அவர்களைத் தாக்குவதும் தொடர் நிகழ்ச்சிகளாக நடந்தன. யூதர்கள் தெருக்களிலும் மற்ற இடங்களிலும் காணும் இடங்களிளெல்லாம் கொடூரமாகத் தாக்கப்பட்டார் கள். இதன் காரணமாக யூதர்கள் அநேக கிராமங்ககளை விட்டு வெளி யேறினார்கள். ஒருவேளை வெளியேறாமல் யாரேனும் யூதர்கள் இருந்தால் அவர்கள் தீண்டத்தகாதவர்களாக புறக்கணிக்கப்பட்டும் கொடுமைகளுக்கு ஆளானார்கள்.

## வதந்திகளைக் கிளப்பி யூதப் பகைமையை வலுப்படுத்தினர்

1934 மே 1ம் தேதி டெர்ஸ்ட்ரம்மெர் (Der sturmer) என்ற நாளேடு யூதர்களுக்கு விரோதமான செய்திகள் அடங்கிய 14 பக்க துணை நாளேடாக (Supplimentary) வெளியிட்டது. யூதர்கள் பஸ்கா அப்பத்தைத் (Passover Bread) தயாரிக்க கிறிஸ்தவர்களை கொலை செய்து அவர்களின் இரத்தத்தைக் கலந்து

தயாரிக்கின்றனர் என்றும் "சடாங்காச்சார கொலை" (Ritual murders) செய்கின்றனர் என்றும் ரபிகள் கிறிஸ்தவ குழந்தைகளின் இரத்தத்தை உறிஞ்சுகின்றனர் என்றும் அதற்கு ஆதாரமென சில படங்களையும் வெளியிட்டது. 1,30,000 பத்திரிக்கை அச்சடிக்கப்பட்டு எங்கும் விளம்பரப் படுத்தப்பட்டது. இந்த செய்திகள் யூதர்கள் மீது வெறுப்புணர்வுகளை தூண்டி கிராமங்களிலுள்ள யூதர்களை வெளியேற்றும் திட்டம் இன்னும் தீவிரப் படுத்தப்பட்டது. யூதர்கள் விட்டுச் சென்ற வீடுகள் மற்றும் சொத்துக்கள் அனைத்திலும் ஸ்வஸ்திக் சின்னமிட்ட கொடிக்கம்பங்களை நாட்டி நாஜிக் கட்சியினர் அவற்றை உரிமை பாராட்டினார்கள். இது ஜெர்மனியிலுள்ள மாவட்டங்கள் தோறும் தீவிரமாகப் பரவியது. "ஒரு நாள் விரைவில் வரும் அன்று ஜெர்மனியில் ஒரு யூதர் கூட இருக்கமாட்டான்" என்று பெரிய விளம்பர போர்டுகளை வைத்தனர். மீதமிருந்த யூதர்களுக்குள் பெரும் பீதி உண்டாயிற்று.

ஜுலை 12ம் நாள் "யூதர்களை ஒழித்துக்கட்டுங்கள்" (Finish up with the Jews) என்று நேரிடையான செய்திகளை பத்திரிக்கை வெளியிட்டது. ஜெர்மானியப் பெண்கள் யூதர்களோடு எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது. அப்படிப்பட்டத் தொடர்புகளை உடனடியாகத் துண்டித்துக் கொள்ளாவிட்டால் நீங்கள் தேசத் துரோகிகளாகக் கருதப்படுவீர்கள். யூதர்களுக்கும் யூதர் அல்லாதவர்களுக்கும் பாலியியல் தொடர்பு இருக்கக்கூடாது என்ற சட்டம் பிறப்பிக்கப்படவேண்டும் என நாஜி ஆதரவுப் பத்திரிக்கைகள் வலியுறுத்த ஆரம்பித்தன. தொடர்ந்து எட்டு வாரங்களுக்குள்ளாக இந்தக் கருத்தை வலியுறுத்தி 14 கட்டுரைகள் வெளியாயின. அப்படிப்பட்டவர்கள் "இனத்தைக் கேடுண்டாக்குபவர்கள்" (Race defiler) எனப் பட்டம் கட்டியது. அனைத்தும் யூதப் பகைமை அனலைக் கொட்டுவதாக இருந்தன.

**முத்திரையிடப்பட்டச் சவப்பெட்டிகள்:**

இதைத் தொடர்ந்து அநேக யூதர்கள் பிடிக்கப்பட்டு வன்கொடுமை முகாம்களுக்குக் (concentration camp) கொண்டு செல்லப்பட்டு சித்திர வதைக்குள்ளாகி சவப்பெட்டியில் தான் வெளியே கொண்டுவரப்பட்டனர். அந்த சவப்பெட்டிகள் மூடி முத்திரையிடப்பட்டுதான் வரும். அதை யாரும் திறந்து பார்க்க முயற்சிக்கக் கூடாது. யூதர்கள் எலிகளையும் மிருகங்களையும் வேட்டையாடுவது போல வேட்டையாடி வன்கொடுமை முகாம்களுக்குக் கொண்டுவந்தனர். இதன் விளைவாக 75,000 யூதர்கள் அநேக நாடுகளுக்கு அகதிகளாக சிதறடிக்கப்பட்டனர். பிரான்ஸ், பிரிட்டன், பெல்ஜியம், ஹாலந், ஆஸ்த்தியா, செக்கோஸ்லோவாக்கிய நாடுகளுக்குள் அடைக்கலம் புகுந்தனர்.

## குடியுரிமை மறுப்பு :

ஜெர்மானிய இரத்தமும் ஜெர்மானிய கவுரவமும் காக்கப்படவேண்டு மென்ற திட்டத்தில் ஜெர்மன் பாராளுமன்றம் புதிய சட்டம் ஒன்றைப் பிறப்பித்தது. அதன்படி ஜெர்மானிய குடிமக்களுக்கு மாத்திரம் ஜெர்மானிய குடியுரிமை (citizenship) வழங்கப்படும். ஜெர்மானிய – யூத கலப்புள்ளவர் களுக்குக் கூட ஜெர்மானிய குடியுரிமை வழங்கக்கூடாது என்பது சட்ட மாயிற்று. ஜெர்மனியிலிருந்த யூத மக்களுக்கு ஜெர்மனியை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலவரம் உருவாயிற்று. யூத மக்கள் அடைக்கலம் புகுந்த நாடுகளுக்கு ஹிட்லர் அவனுடைய பிரதிநிதிகளை அனுப்பி "யூதர்களுக்கு அடைக்கலம் கொடுத்தால் அவர்கள் ஒரு நாள் உங்களுக்கு பேராபத்தாக மாறுவார்கள். ஆகவே உங்களுக்கு விரோதியாக வரப்போகிறவர்களை இப்பொழுதே அழித்தொழியுங்கள்" என்ற செய்தியை வலியுறுத்தினான்.

## அடைக்கலம் புகுந்த நாடுகளிலும் வேதனை தொடர்ந்தன

ஹிட்லர் பாலஸ்தீன அரபியர்களை தூண்டிவிட்டு அங்கேயும் யூதர்களுக்கு விரோதமான பகைமை உணர்வை உண்டாக்கினான். இதன் விளைவாக பாலஸ்தீனத்தில் அவர்களை குடியேறியதற்கு விரோதமாக ஒரு பொது வேலை (general strike) நிறுத்தம் நடத்தியது. யூதர்களுக்கு விரோதமான வன்முறைச் சம்பவங்கள் நிகழ ஆரம்பித்தன. அதே நாளில் துல்கார்ம் என்ற இடத்தில் இரண்டு யூதர்கள் கொல்லப்பட்டனர். சில தினங்களுக்குள் யோப்பாவில் ஒன்பது யூதர்கள் கொல்லப்பட்டார்கள். மீண்டும் சில தினங்களுக்கு ஐந்து யூதர்கள் கொல்லப்பட்டார்கள். சொந்த நாட்டிலும் பகைமை உருவாகி கொடுமைகளைச் சந்தித்தனர்.

ஹிட்லரின் பிரதிநிதியாகச் ஸ்விட்சர்லாந்து சென்ற வில்கெம் கஸ்ட்லோஃப் (Wilhelm Gustloff) என்பவரை 25 வயது நிரம்பிய மருத்துவ மாணவனாகிய யூத வாலிபன் அவரைச் சுட்டுக்கொன்றான். அவனைப் பிடித்து காவற்துறையினர் விசாரித்தபோது ஜெர்மனியில் யூத மக்கள் நாஜிப் புயற்படையினரால் கொடுமைக்குள்ளாவதையும் அடைக்கலம் புகுந்த நாடுகளிலும் ஹிட்லர் தன் கொடிய கரங்களை யூதர்களுக்கு விரோதமாக நீட்டுவதையும் உலக நாடுகளின் கவனத்தைக் கொண்டு வருவதற்காகவே இந்தக் கொலையைச் செய்ததாக ஒப்புக்கொண்டான். இச்சம்பவம் நடந்த ஆறாவது நாள் போலீஸ், நாஜிப் புயற்படை, கெஸ்டபோ (Gestapo) என்ற ஹிட்லரில் இரகசியப் பிரிவினர் யாவும் ஒன்றாக்கப்பட்டு நாஜி ஜெர்மனியில்

அது பெரியதொரு வல்லமையான படையாயிற்று. (Great Force) இப்படைக்கு நீதிமன்ற உத்தரவின்றி யாரையும் கைது செய்யவும் விசாரணைக்கு நீதிமன்றக் காவலில்லாமல் தங்களுடைய காவலிலே வைத்துக்கொள்ளும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. இதை அறிந்த ஜெர்மனியிலிருந்த மீதமிருந்த கொஞ்ச யூதர்களும் போலந்திற்கு ஓடி அடைக்கலம் புகுந்தனர். போலந்திலும் யூதர்களுக்கு விரோதமான பகைமை உணர்வுகளை ஹிட்லரின் கெஸ்டவோ என்ற இரகசியப் பிரிவினர் உருவாக்கினார்கள். யூதர்களுக்கு விரோதமான கொடுமை போலந்திலும் உருவாயிற்று.

போலந்திலுள்ள வர்த்தக அமைச்சரகம் (Ministry of commerce) அனைத்து வர்த்தக நிறுவனங்களும் தங்களுடைய இனத்தின் பெயரை கொட்டை எழுத்தில் எழுதி போர்டு தொங்கவிடப்படவேண்டும் என்ற ஒரு நியதியைக் கொண்டு வந்தனர். அது செயல்படுத்தப்பட்டபோது யூத விரோத இயக்கத்தினர் யூதர்களுடைய கடைகளில் வர்த்தக நிறுவனங்களில் எதுவும் வாங்கக்கூடாது என்ற நிர்பந்தமான சூழ்நிலைகளும் உருவாயிற்று. யூதர்கள் அடைக்கலம் புகுந்த இடத்திலும் சோகச் சம்பவங்களைச் சந்தித்தனர்.

# 11

# ஜெர்மனியின் விரிவாக்கத் தொடக்கம்

ஜெர்மானிய தேசத்தைவிட்டு தங்களது சகல உடைமைகளையும் இழந்து வெளியேறிய யூதமக்கள் தங்கள் ஜீவன் தப்ப ஓடி அடைக்கலம் புகுந்த நாடுகளிலும் ஹிட்லரின் ரகசிய பிரிவினராகிய கெஸ்டபோ மூலமாக அந்தந்த நாடுகளில் யூதர்களுக்கு விரோதமாக பகைமை உணர்வை உருவாக்கினார்கள்.

## ஜெர்மனியின் விரிவாக்கத் தொடக்கம்

"யூதர்களில்லாத கிராம அமைப்பு" என்ற திட்டத்தை ஹிட்லர் தன்னுடைய நாஜி புயற்படையினரைக்கொண்டு வெற்றிகரமாக செயல்படுத்தி முடித்தான். இது ஹிட்லரின் யூத விரோதக் கொள்கையில் மிகவும் தெம்பையளிப்பதாக அமைந்தது. தன்னுடைய அதிகாரத்தை எந்த வல்லமையும் அசைக்க முடியாது என்ற மிகப்பெரிய தைரியத்தை உருவாக்கிக் கொண்டான். தன்னுடைய இராணுவத்தை குறுகிய காலத்திற்குள் துரிதமாக பலப்படுத்திக் கொண்டான். முதலாவது உலக யுத்தத்திற்கு முன்பு ரினிலான்ட் (RHINELAND) என்ற மாநிலம் ஜெர்மனியோடிருந்தது. ஆனால் யுத்தத்தின் முடிவில் வெர்சைலீஸ் உடன்படிக்கையின்படி (TREATY OF VERSAILLES) அம்மாநிலம் ஜெர்மனியின் கட்டுப்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. 1936 மார்ச் 7ம் நாள் ஹிட்லர் உடன்படிக்கையை மீறி தனது படையை அனுப்பி அம் மாநிலத்தைப் பிடித்துத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தான். இதை முதலாம் யுத்தத்தில் கூட்டணி நாடுகளாக இருந்த பிரிட்டன், பிரான்ஸ் இதை எதிர்த்து செயல்படவில்லை. ஹிட்லர் முதல்முறையாக அனைத்து தேச சட்டத்தை (International Law) உடைத்து ரினிலான்டைப் பிடித்தான். இதுவும் அவனுக்கு மிகுந்த தெம்பையும் தைரியத்தையும் அளித்தது.

## யூத திரைப்படத் தயாரிப்பாளர் தற்கொலை

ஸ்டீபன் லக்ஸ் (STEFAN LUX) ஜெர்மனியில் வாழ்ந்த ஒரு யூதர். புகழ் பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர். ஹிட்லரின் உபத்திரவங்கள், கொடுமைகள் காரணமாகத் தன் தொழிலை இழந்தார். வருமானங்களை இழந்து, அநேக உடைமைகளை இழந்து வறுமை நிலையை எட்டிவிட்டார். ஆனாலும்

ஹிட்லரால் யூதர்களுக்கு விரோதமான கொடூரமான உபத்திரவங்கள் தொடர்வதை உலக நாடுகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து ஏதேனும் எதிர்ப்பைக் காட்டவேண்டும் என தீர்மானித்தார். கடைசியாக அவர் எடுத்துக்கொண்ட வழி தற்கொலை. 1936 ஜூலை 3ம் நாள் ஜெனிவாவிலுள்ள உலக நாடுகளின் அமைப்பு (LEAGUE OF NATIONS) அலுவலகக் கட்டிடத்திற்கு முன்பாக அநேக பத்திரிகையாளர்கள் சூழ்ந்திருந்த வேளை தற்கொலை செய்துகொண்டார். அப்பொழுது அவருக்கு வயது 48. உலகநாடுகளின் அமைப்புக்குப் பொறுப்பாளராக இருந்த பிரிட்டீஷ் அமைச்சர் அந்தோனி ஈடனுக்கு (ANTHONY EDEN, THE BRITISH CABINET MINISTER) ஜெர்மனியின் ஹிட்லரின் கொடூர, மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் காரணமாக யூதர்களின் மோசமான நிலவரத்தையும் எழுதிய கடிதம் ஒன்றை எழுதி வைத்திருந்தார். "யூதர்கள் சந்தித்துவரும் பிரச்சனைகளை உலக நாடுகளின் மக்களின் இருதயத்தை எட்ட எனக்கு இது தவிர வேறு வழி தெரியவில்லை. இப்போதாவது, உலக மக்களின் மெத்தனப் போக்கு மாறாதா என எதிர்பார்க்கிறேன்" என்று கடிதத்தை முடித்திருந்தார்.

## இங்கிலாந்து பாராளுமன்றத்தில் வின்ஸ்டன் சர்சில் ஹிட்லரைக் குறித்த பேச்சு

யூதர்கள் என்ன செய்தாலும் ஹிட்லர் அவற்றை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்வதில்லை. 1937ம் ஆண்டு ஹிட்லர் தன் இராணுவ பலத்தையும் குறிப்பாக விமானப்படையையும் பன்மடங்கு பெருக்கிக் கொண்டான். இதை அறிந்து இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் மக்களவையின் (HOUSE OF COMMONS) ஏப்ரல் 14ம் நாள் ஹிட்லரின் போக்கைக் குறித்துப் பேசும்போது வின்ஸ்டன் சர்ச்சில் "நம்முடைய எண்ணங்களுக்கும் உலகின் ஒவ்வொரு இன மக்களின் எண்ணங்களுக்கும் மாறாக ஒரு பெரிய அழிவை நோக்கி சென்றுகொண்டிருக்கிறோம்" என்று குறிப்பிட்டார். இது இங்கிலாந்து மக்கள் மத்தியில் ஒரு தாக்கத்தை உண்டு பண்ணிற்று.

## அமெரிக்க யூத இளைஞனுக்கு மரண தண்டனை

இந்த சூழ்நிலையில் ஜெர்மனியில் 20 வயதான ஒரு யூத இளைஞனான ஹெல்முட் ஹிர்ச் (HELMUT HIRSCH) ஒரு சூட்கேசில் ஒரு ரிவால்வர் மற்றும் சில வெடிகுண்டுகளுடன் பிடிக்கப்பட்டான். அவன் அமெரிக்காவில் பிறந்து ஜெர்மனியில் வளர்ந்தவன். ஆகவே அவன் அமெரிக்காவின் குடி மகனான யூதன். அவனது பெட்டியில் ஒரு ரிவால்வரும் சில வெடிகுண்டுகளும் இருந்தது உண்மைதான். ஆனால் அவன் அரசியலில் ஹிட்லருக்கு வலது

கரம் போல செயல் பட்டுக்கொண்டிருந்த ஸ்டீரிக்கர் (Streicher) என்பவரை கொலை செய்யத் திட்டமிட்டிருந்தான் என்ற பொய்யான குற்றச்சாட்டை வனைந்து நீதிமன்ற விசாரணையில் நிறுத்தப்பட்டான். நீதிமன்றம் அவனுக்கு மரண தண்டனை விதித்தது. ஹெல்முட்ஹிரிச் பிறப்பால் அமெரிக்கக் குடிமகனானபடியால் அமெரிக்கத் தூதுவர் வில்லியம் டோட் (AMERICAN AMBASSADOR WILLIAM DODD) ஹிட்லருக்கு மரண தண்டனையை மாற்றிக்கொடுக்க முறையீடு செய்தார். ஆனால் அவருடைய முறையீடு மறுக்கப்பட்டது. மேலும் அமெரிக்கத் தூதுவர் ஹிட்லரை நேரில் சந்திக்க அனுமதி கேட்டார். ஹிட்லர் அதையும் மறுத்துவிட்டான். ஜூன் 4வது நாள் அதிகாலை ஹெல்மூட்டின் தண்டனை நிறைவேற்றப்பட்டது. கோடாரி யால் அவன் வெட்டிக் கொல்லப்பட்டான். (EXECUTED WITH AXE). ஹிட்லரின் இந்த அலட்சியப்போக்கு அமெரிக்காவை அவமதிப்பாக இருந்தது.

## யூதப் பகைமை உணர்வை வளர்க்கக் கண்காட்சி

இதைத் தொடர்ந்து கொஞ்சம் கொஞ்சம் மீதியிருந்த யூதர்களும் ஏதேனும் குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டு நூற்றுக் கணக்கான யூதர்கள் டாக்கோவ் வன்கொடுமை முகாம்களில் அடைக்கப் பட்டனர். யூதர்களுக்கு விரோதமான பகைமை உணர்வு யூதர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கெல்லாம் பரவும் அளவில் 1937 நவம்பர் 8ம் நாள் நியூரம்பெர்க் நகரில் ஒரு பெரிய கண்காட்சி (AN EXHIBITION) திறக்கப்பட்டது. அதில் யூதர்களை மிக மோசமானவர்களாகச் சித்தரித்து சோவியத் முறைமையின்படி மக்கள் அனைவரையும் அடிமைப்படுத்தும் திட்டமுள்ளவர் கள், மற்றவர்களை கொடுமையாக நடத்தும் சுபாவமுள்ளவர்கள். ஆகவே அவர்கள் அழிக்கப்படவேண்டிய தீய சக்தி என்பதை மையப்படுத்தி அக்கண் காட்சியை ஹிட்லர் அமைத்திருந்தான். அதன் விளைவாக, இத்தாலி, போலந்து, ருமேனியா, ஹங்கேரி, மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள யூதர்களுக்கு விரோதமான அரசு நடவடிக்கைகளும், அவர்கள் தாக்கப் படுவதும் கொலை செய்யப்படுவதுமான சம்பவங்கள் தொடர்ந்து நடந்தன. யூதமக்கள் பாதுகாப்பான புகலிடம் தேடி எங்கெங்கோ சென்றார்கள். ஆனால் அங்கெல்லாம் அவர்களுக்குக் கொடுமையே தொடர்ந்தது. யூதர்கள் எலிகளைப்போல வேட்டையாடப்பட்டார்கள். இந்த சூழ்நிலையில் ஹிட்லர் தான் ஆட்சிக்கு வந்த ஐந்து ஆண்டுகள் நிறைவு நாளை அதிக சிறப்போடு கொண்டாடினான். உலக நாடுகள் வேடிக்கை பார்த்ததேயன்றி வேறு எதையும் செய்ததாகத் தெரியவில்லை. யூதர்கள் தங்கள் உச்சகட்ட கொடுமைகளை எட்ட இச்சூழ்நிலைகள் ஏதுவாக அமைந்தன.

## சிந்தனைக்கும் அப்பாற்பட்ட கோரக்காட்சிகள்

"ஜெர்மனியிலுள்ள டாக்கோவ் வன்கொடுமை முகாமிலிருந்த யூத மக்களை இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவில் 1945 ஏப்ரல் 28ம் நாள் நேசப் படையினர் விடுவித்தனர். அப்பொழுது அவர்கள் கண்ட காட்சிகள் வார்த்தையால் வர்ணிக்க முடியாது என்று கூறுகின்றனர். புதைக்கப்படாத ஏராளமான பிணங்கள் நாற்றமெடுத்த நிலையில் கிடந்துள்ளன. உயிரோடிருந்த மக்களும் அந்தக் கொடிய நாற்றத்திற்கு மத்தியில் குடியிருந்துள்ளனர். விஷவாயு அறையில் பலவந்தமாக உள்ளே அடைத்து 2 மணி நேரத்தில் 3000 பேரைக் கொன்றபடியால் அவர்களைப் புதைப்பது பிரச்சனைக்குறிய காரியமாக ஆகியுள்ளது. ஆகவே அவற்றை எரித்துள்ளனர். அது சாம்பலாவதற்கு வெகு நேரம் எடுத்த படியால் அரைகுறையான நிலையில் சில சரீரங்களைப் புதைத் துள்ளனர். சில சரீரங்கள் புதைக்கப்படாமலே கிடந்துள்ளன. இது நமது சிந்தனைக்கும் அப்பாற்பட்டதாக இருக்கிறது. அக்கோர காட்சிகளைப் படமெடுத்து மியூசியத்தில் வைத்துள்ளனர். அந்த முகாமை பார்வையாளர்கள் பார்க்கும்படி வைத்துள்ளனர்.

நானும் என் குடும்பத்தினரும் ஜெர்மன் சென்றிருந்த போது போய் டாக்கோவ் வன்கொடுமை முகாமை பார்த்தோம். அங்கிருந்த வழிகாட்டி (GUIDE) எங்களுக்கு எல்லாவற்றையும் விவரித்தான். அதைக் கேட்ட நான் பெரும் அதிர்ச்சியடைந்தேன். இப்போதும் நான் அதை நினைக்கும் போதெல்லாம் அதிர்ச்சியடைந்து பாதிக்கப்படுகிறேன்".

– பென்னி ஹின் –

"BLOOD IN THE SAND"

# 12 டாக்கோவ் வன்கொடுமை முகாமின் உச்சக்கட்ட படுகொலைகள்



டாக்கோ வன்கொடுமை முகாம் நுழைவாயில்

ஹிட்லர் யூதர்களில்லாத கிராம அமைப்பை நாஜி புயற் படையினரைக் கொண்டு வெற்றி கரமாக செயல் படுத்தினான். தன்னுடைய இராணுவ பலனைப் பெருக்கிக் கொண்டு ரினிலான்டைப் பிடித்து ஜெர் மனியோடு சேர்த்துக்கொண் டான். ஹிட்லரின் போக்கைக் குறித்து இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் சர்ச்சில் பேசியதைக் குறித்தும், அமெரிக்க தூதுவரான வில்லியம் கோட்டை அவமதிப்பதாக அமைந்த அமெரிக்க யூத இளைஞன் ஹெல்முட் ஹிர்ச்சின் மரண தண்டனை நிறைவேற்றுதல் போன்ற கொடிய நிகழ்ச்சிகளைக் குறித்துக் கவனித்தோம்.

1938 ஜன. 30ம் நாள் ஹிட்லரின் ஆட்சியின் 5 ஆண்டுகள் நிறைவு நிகழ்ச்சியில் உலக நாடுகளுக்கே ஒரு எச்சரிக்கையைக் கொடுத்தான். ஜெர்மன் மொழி பேசும் மக்கள் எந்த தேசத்தில் இருந்தாலும் அவர்களுக்கு எந்த வகையிலும் தீங்கு ஏற்படுமாயின் இராணுவ நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்ற ஒரு அறிவிப்பைக் கொடுத்தான். அப்பொழுதும் உலக நாடுகள் இதை ஒரு பொருட்டாக எடுக்கத் தவறிவிட்டது.

### ஆஸ்ட்டிரியா பிடிக்கப்பட்டது - அங்குள்ள யூதர்கள் கொடுமைக்குள்ளா னார்கள்

இந்த சூழ்நிலையில் ஜெர்மன் இராணுவம் ஆஸ்ட்ரியாவை பிடிக்கப் போகிற செய்தி பரவலாகப் பேசப்பட்டது. 1938 மார்ச் 12ம் நாள் ஹிட்லரின் நாஜிப்படை ஆஸ்ட்ரியாவின் தலைநகரான வியன்னாவிற்குள் நுழைந்து ஆஸ்ட்ரியாவைக் கைப்பற்றியது. ஆஸ்ட்ரியா ஜெர்மானியர் வசமாயிற்று. ஆஸ்ட்ரியாவில் 1,83,000 யூதர்கள் வாழ்ந்தார்கள். அவர்களில் பெரும் பான்மையோர் வியன்னாவிலே இருந்தார்கள். அவர்களுக்கு விரோதமாக

நாஜிப்படையினரின் வன்கொடுமை ஆரம்பமாயிற்று. முதல் நாள் இரவிலேயே பிறப்பிக்கப்பட்டச் சட்டத்தின்படி யூதர்களுக்கு குடிமக்களுக்கான எந்த உரிமையும் (CIVIL RIGHTS) கிடையாது. சிறுபான்மையினருக்கான உரிமைகளும் கிடையாது என்று பிரகடனப்படுத்தப்பட்டது. அந்த உத்தரவின்படி யூதர்கள் சிறிதானாலும் பெரிதானாலும் எந்த சொத்துக்களையும் வைத்துக்கொள்ளும் உரிமை கிடையாது. எந்த தொழிற்சாலை நடத்தும் உரிமையோ தொழிற் சாலைகளில் வேலைபார்க்கும் உரிமையோ கிடையாது. எந்த வேலைகளில் அமரும் உரிமை கிடையாது. யாரையும் வேலைக்கு அமர்த்தும் உரிமையோ கிடையாது. ஹோட்டல், பொது குளியலறை, பொருள் விற்பனைக் கூடங்கள் ஆகிய இடங்களுக்குள் நுழையக்கூடாது. யூதர்கள் நடத்தும் கடைகள், ஹோட்டல்கள் இருக்குமாயின் அவற்றில் சிவப்பு பெயின்ட் அடித்துக் காட்டி யூதர்கள் அல்லாதவர்கள் யாரும் அதற்குள் நுழையக்கூடாது. அப்படி நுழைந்தவர்கள் புயற்படையினரால் கண்டு பிடிக்கப்பட்டால் அவர்கள் கழுத்தில் "நான் ஒரு பன்றி யூதனுடைய கடையில் பொருட்களை வாங்கினேன்" என்று அட்டையில் எழுதி தொங்க விட்டு பொது இடங்களில் நிறுத்தி அவமானப்படுத்தப்படுவார்கள். யூதர்களை யாரும் அடித்துத் தாக்கினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. அவர்கள் வீடுகள், கடைகள் கொள்ளையிடப்பட்டாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது.

## கொடுமை தாங்காது தற்கொலைச் சம்பவங்கள்

இதன் விளைவாக யூத ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் இரக்க மின்றி தெருக்களில் மிகக் கேவலமாக நடத்தப்பட்டுத் தாக்கப்பட்டார்கள். இதில் கற்றறிந்தவர்களும், முதியவர்களும் விலக்கல்ல. இதைக் குறித்து பிரிட்டிஷ் பத்திரிகையாளர் G. E. R. கெட்டே (British Journalist G.E.R Gedye) குறிப்பிடும்போது சில யூதமக்கள் வீடுகளில் தற்கொலை செய்துகொண் டார்கள். தற்கொலை எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வந்ததைக் கண்டு நாஜிப்படையினர் மகிழ்ச்சியடைந்ததைக் கண்டதாகவும் குறிப்பிடுகிறார். ஒரு இளம் யூத மருத்துவரும், அவரது தாயாரும் தங்களது வீட்டில் தற்கொலை செய்துகொண்ட சம்பவத்தையும் குறிப்பிடுகிறார். வியன்னாவில் மிகப் பிரபல்யமான நூல் ஆசிரியரும், பத்திரிகையாளருமான டாக்டர். குர்ட் சன்னன்பீல்ட் (Dr. Kurt Sonnenfeld) என்பவரும், மிகச் சிறந்த வழக்கறிஞர் டாக்டர். மோர்ட்டிஸ் ஸ்டென்பெர்க் (Dr. Mortiz Sternberg) என்பவரும், மிகச் சிறந்த வரலாற்று ஆசிரியரும், நாடக ஆசிரி ருமான 60 வயது நிரம்பிய ஈகோன் பிரைடெல் (Egon Friedell) என்பவரும், தற்கொலை செய்தவர்களுள் அடங்குவார்கள். ஈகோன் பிரைடெல் என்பவர் "தற்கால

கலாச்சார வரலாறு" (Cultural History of Modern age) என்ற மிகச்சிறந்த புத்தகத்தை எழுதி அவரது மரணத்திற்கு 6 ஆண்டுகளுக்கு முன் வெளியிட்ட சிறப்பைப் பெற்றவர். யூதர்களின் ஆலயத்தில் (Synagogue) புனிதப்பணியாற்றும் ரபிக்களையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. 70 வயதைத் தாண்டிய யூத தேவாலயத்தின் பிரதம ரபியாகிய டாக்டர். டாக்லி செட் (Dr.Taglicht, Chief Rabbi) என்பவரைப் புயற்படையினர் பிடித்து ரபி உடையையும், அணிந்திருந்த ஜெப சால்வையையும் (Prayer Shawl) கிழித்து அவமானப்படுத்தி ஒரு வாளியில் கொதிக்கும் தண்ணீரைக்கொடுத்து சாலை ஓரத்தில் மனிதர்கள் நடக்கும் நடைபாதையை கையால் தேய்த்து சுத்தம்பண்ணும்படி ஆணையிட்டனர். கொதிக்கும் தண்ணீரை மோந்ததில் அவர் கை பொக்களம்போல் ஆகிவிட்டது. ஆனாலும் அவரை விடவில்லை. வயிற்றால் படுத்துக்கிடந்து நடைபாதையைத் தேய்த்து சுத்தம்பண்ண வைத்தனர். இவைகளெல்லாம் புயற்படையினருக்குப் பொழுது போக்காகவும் அவர்கள் வேதனைப்படுவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறவர்களாகவுமிருந்த னர். இவ்வாறு யூதர்கள் அவமானப்படுத்தப்படுவதை, கடந்துசெல்லுகிற யூதர் அல்லாதவர்கள் கண்டு அவர்களும் அவர்களை அவதூறாகப் பேசி, மகிழ்ந்தனர். யூதர்கள் எப்பொழுதும் தங்களிடம் புனித ஜெபப்பட்டை (Sacred Prayer Band) ஒன்று வைத்திருப்பார்கள். தேவனை வழிபடும் வேளைகளில் மாத்திரம் அதைக் கையில் அணிந்துகொள்வார்கள். ஆனால் புயற்படையினர் யூதர்களைப் பிடித்து அவர்களது கைகளில் புனித ஜெபப்பட்டையை அணிந்து கொண்டு பொதுக் கழிப்பிடங்களைக் கட்டாயமாகக் கழுவ வைப்பார்கள். கழுவ மறுக்கிறவர்களையோ, தயங்குகிறவர்களையோ பயங்கரமாக அடித்துத் துன்புறுத்துவார்கள். இப்படிப்பட்ட கட்டாய வேலைகளைச் செய்யும் போது மயங்கி விழுந்தாலும் பாசாங்கு செய்வதாக சொல்லி அவர்களைக் கொடூரமாக அடிப்பார்கள். இந்த கொடூர சூழ்நிலையின் காரணமாக ஒரு மாதத்திற்குள் 500க்கும் மேற்பட்ட யூதர்கள் தற்கொலை செய்துகொண் டார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட யூதர்கள் இருதய நோவால் (Heart attack) மரண மடைந்தார்கள். அநேக யூதர்கள் போலந்து, செக்கோஸ்லோவேக்கியா ஹங்கேரி ஆகிய நாடுகளுக்குத் தப்பியோடினார்கள்.

ஜெர்மன், ஆஸ்த்திரியா நாடுகளிலிருந்த அனைத்து யூத தேவாலயங் களும் தீக்கிரையாக்கப்பட்டன. இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலை களுக்குப் பின்னரும் ஆஸ்திரியாவிலிருந்த 15,000க்கும் கூடுதலான யூதர்கள் கைதுசெய்யப்பட்டு டாக்கொவ், மற்றும் புச்சான்வால்டு வன் கொடுமை முகாம்களுக்கு அனுப்பப்பட்டார்கள். ஜெர்மனியில் விடுபட்டிருந்த

98,000 யூதர்களும் கைதுசெய்யப்பட்டு அந்த முகாம்களுக்குக் கொண்டு வரப்பட்டார்கள். அங்கு அவர்கள் தாங்கொண்ணாக் கொடுமைக்குள்ளா னார்கள். வன்கொடுமை முகாமைவிட்டுத் தப்பியோட முயற்சித்தால் முகாமைச்சுற்றி உச்சநிலை மின்சாரம் பாய்ச்சப்பட்டக் கம்பி வேலி உண்டு (High tension Electricity fence). அந்த கம்பிவேலியில் விழுந்து மரித்த வர்களின் எண்ணிக்கை எண்ணி லடங்காது. எண்ணற்ற சடலங் களை ஒன்று சேர்த்து ஒரு பெருங் குழியாக வெட்டி **(Mass Grave)** மூடி விடுவார்கள்.






1938ல் நடந்த மியூனிச் ஒப்பந்தப்படி செக்கோஸ்லோ லாக்கியாவின் எந்தப்பகுதியை யும் ஆக்கிரமிப்பதில்லை என்று ஹிட்லர் வாக்குறுதி அளித்திருந் தான். என்றாலும் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பும் சண்டைகளும் அதி கரித்துவிட்டன. ஹிட்லர் கட்டாயப் படுத்தி இராணுவத்தில் ஆட்களைச் சேர்த்தான். ஆஸ்த்திரியாவைப் பிடித்தபின் ஹிட்லர் போலந்தைப் பிடிக்கத் திட்டமிட்டான். இதுவும் போலந்து மக்களுக்கு எட்டியது. ஆகவே ஜெர்மனி போலந்தின்மீது படையெடுக்கும் பட்சத்தில் பிரிட்டனும் பிரான்சும் போலந்துக்கு ஆதரவாக வரவேண்டும் என ஒப்பந்தம் செய்துகொண்டனர். இந்த சூழ்நிலையில் ஹிட்லர் போலந்து நாட்டை ஊடுருவி ஒரு இருப்புப் பாதையை அமைக்க திட்டமிட்டான். போலந்து அனுமதி மறுத்த காரணத்தால் போலந்து நாட்டின்மீது 1939 ஜன. 1ம் நாள் படையெடுத்து அதையும் பிடித்துக்கொண்டான். பிரிட்டனும் பிரான்சும் ஒப்பந்தத்தில், போலந்திற்காக போரில் இறங்கியது. ஜெர்மனியின் மீது யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டது. இது இரண்டாவது உலக யுத்தமாக மாறிற்று.

ஒப்பந்தங்களை மீறி செக்கோஸ்லோவாக்கியா, ஆஸ்திரியா, போலந்து ஆகிய நாடுகளின்மீது ஹிட்லர் படையெடுத்து, அகண்ட ஜெர்மனியை **(LARGER GERMAN)** உருவாக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அந்நாடுகளைப்

பிடித்துக்கொண்டான். இதன் விளைவாக ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளின் கூட்டணி அச்சு நாடுகள் (AXIS COUNTRIES) என்றும் பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகள் நேசநாடுகள் கூட்டணி (ALLIED FORCES) என்றும் ஆக இரு அணி நாடுகளுக்கும் 1939 செப்டம்பர் 3ம் நாள் யுத்தம் உண்டாயிற்று. இதுவே இரண்டாவது உலகயுத்தத்தின் துவக்கம்.

## இரண்டாம் உலக யுத்தத்தில் போலந்து யூதர்கள்

ஹிட்லர் போலந்தைப் பிடித்த நாளில் போலந்தின் தலைநகராகிய வார்சாவில் (WARSAW) மட்டும் 3,93,950 யூதர்கள் வாழ்ந்து வந்தனர். ஜெர்மனியில், ஹிட்லரின் நாஜிப் படையினராலும் புயற்படையினராலும் அங்குள்ள யூதர்கள் எவ்வளவாய் கொடுமைக்குள்ளாக்கப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள், அதற்குத் தப்பி யூதர்கள் அண்டைய நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குத் தப்பியோடினார்கள் என்பனபோன்ற காரியங்களை சுமார் 6 ஆண்டுகளுக்கு மேலாகக் கவனித்துக் கொண்டுதான் இருந்தனர். ஆனாலும் போலந்தில் ஹிட்லரின் படையினருக்கு எதிர்த்து நிற்கும் திறனுள்ள ஒரு பெரும் கூட்டம் யூதர்கள் இருந்தனர். போலந்து பாராளுமன்றத்தில் அவர்களுக்காகப் பரிந்து பேசக்கூடிய அநேக உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றும் அவர்களுக்குச் சொந்தமான வல்லமையான பத்திரிக்கை ஊடகங்களும் (PRESS MEDIA) மிகப்பெரிய நிறுவனங்களை நிர்வகிக்கிற யூதர்கள் இருக்கின்றனர் என்ற தெம்பு அவர்களுக்கு இருந்தது. அவைகள் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என நம்பினார்கள். ஆனாலும் அவைகளெல்லாம் தவிடுபொடியாக்கப்பட்டு ஹிட்லர் மேற்கொண்டான். போலந்து நாட்டிற்குள் பிரவேசிக்கும் முன்பாகவே இராணுவம் வந்து இறங்கு வதற்கு வசதியாக இரயில் பாதையை அமைத்திருந்தான். அது ஹிட்லருக்கு வெற்றியைப் பெற்றுத் தந்தது.

நேசநாட்டுப் படையினரால் நாஜிப் படையினரின் முன்னேற்றத்தையும் தாக்குதலையும் தடுத்து நிறுத்த முடியவில்லை. போலந்து நாட்டிற்குள் நாஜிப் படையினர் புகுந்து நகரங்களிலும் கிராமங்களிலும் யூதர்களைத் தனிமைப் படுத்தி கொடூரமாகத் தாக்கினார்கள். இதில் நாஜியின் புயற் படையினர் மிகுந்த ஆக்ரோசமாகச் செயல்பட்டனர். போலந்தின் ஒரு எல்லைப்புற நகராகிய வீருஸ்சௌவ் (WIERUSZOW) என்ற நகருக்குள் நுழைந்து புயற் படையினர் முன்கூட் டியே திட்டமிட்டபடி 20 மிக முக்கியமான யூதர்களைப் பிடித்து அனைவரும் காணும்படி சந்தைவெளியில் கொண்டுவந்து நிறுத்தி னார்கள். அவர்களை வரிசையாக நிறுத்தி துப்பாக்கிக்குண்டுகளுக்கு

இறையாக்க ஆயத்தப்பட்ட வேளையில் வரிசையில் நிறுத்தப்பட்டிருந்த இஸ்ரவேல் லேவி (ISRAEL LEVI) என்ற 64 வயது நிரம்பியவரை அவரது மகள் லைபி லெவி (LIEBE LEWI) என்பவள் ஓடிச்சென்று அணைத்துக் கொண்டுக் கதறினாள். புயற்படையினர் இது அவர்களுக்கு எதிரான அவளுடைய ஆணவச் செயல் என்று கருதி அவளுடைய வாயை விரிவாகத் திறக்கக் கட்டளையிட்டனர். அவளும் தைரியமாகத் திறந்தாள். அவளுடைய வாயில் துப்பாக்கியை வைத்து சுட்டனர். அவளுடைய தலை சிதறி செத்து விழுந்தாள். பின்னர் 20 பேரும் சுட்டு வீழ்த்தப்பட்டனர். அவர்களுள் மிகப் பிரபல்யமும் செல்வாக்குமான ஆபிரகாம் லெப்கோவிட்ஸ் (ABRAHAM LEFKOWITZ) மோஷி மோசஸ் (MOSHE MOZES) யூசீல் பவுமட்ஸ் (USIEL BAUMATZ) ஆகியோர் அடங்குவர். இவர்களைச் சுட்டு வீழ்த்தியதின் மூலமாக யூத மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலையும் எச்சரிக்கையையும் கொடுத்தனர்.

மேற்கு போலந்தில் சுமார் 15,000க்கும் மேற்பட்ட யூதர்கள் வாழும் பியோட்டிரோகோவ் (PIOTRKOW) என்ற நகரில் யூதர்கள் வாழும் பகுதியில் விமானத் தாக்குதல் (AIR BOMBARDMENT) நடத்தி ஆயிரக்கணக்கான யூதர்களைக் கொன்றார்கள். வார்சா நகரில் ஒருவாரமாகத் தொடந்து நடத்தியக் கடுமையான விமானத்தாக்குதலில் 10,000க்கும் மேற்பட்ட யூதர்கள் கொல்லப்பட்டார்கள். பெருநகரங்கள் விமானத்தாக்குதலுக் குள்ளானபடியால் யூதமக்கள் சிறிய கிராமங்களுக்குத் தப்பியோடினார்கள். பியோட்டிரொகோல் நகரின் அருகாமையிலுள்ள சுலிஜோவ் (SULEJOW) என்ற கிராமத்தில் அதிகமான யூதர்கள் அடைக்கலம் புகுந்துள்ளனர் என்பதை நாஜிப்படையினர் அறிந்து அக்கிராமத்திலும் விமானத்தாக்குதல் நடத்தி னார்கள். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டார்கள். அவர்களுள் பியோட்டிரோகோவ் நகரைச் சேர்ந்த பிரப்ல்யமான யூத ரபியான ஜேக்கப் கிளேசர் (JACOB GLAZER) ஒருவராவார். அவருடனிருந்த அவரது மகளும் பேரக்குழந்தையும் கொல்லப்பட்டார்கள்.

விமானத்தாக்குதல் நடத்திய பகுதியில் குண்டு வீச்சால் கட்டிடங்கள் பற்றி எரியும்போது குண்டு வீச்சுக்குத் தப்பி வெளியே ஓடுபவர்களைக் குறி வைத்து நாஜிப்படையினர் சுட்டுக்கொன்றனர். கட்டடங்களுக்குள் நெருப்புக்குத் தப்பி அரைகுறையாய் உயிரோடிருப்போரையும் ஈவு இரக்கமின்றிச் சுட்டுக் கொன்றார்கள். இவ்வாறு முதல் பத்து நாட்களில் நகரங்களிலும் கிராமங் களிலும் நடத்திய தாக்குதலில் எந்தவித ஆயுதமும், எதிர்த்து நிற்கும் தன்மையற்ற யூத மக்களைக் கொன்று குவித்தார்கள்.

## கொலைவெறி முகாம்கள் (EXTERMINATION CAMP)

ஜெர்மானிய நாஜிப்படை போலந்தைக் கைப்பற்றிய பின் இரண்டாவது உலக யுத்தத்தின்போது போலந்தின் தலைநகரான வார்சா நகருக்கு வட கிழக்கே ட்ரெபிளிங்கா (TREBILINKA) (தற்போது மகசோவியன் என்று சொல்லப்படுகிற கிராமம்) என்ற கிராமத்தில் கொலைவெறி முகாம் ஒன்றை அமைத்தனர். அம்முகாம் 1942 ஜூலை 23 முதல் 1943 அக்.19 வரை தீவிரமாகச் செயல்பட்டது. யூத மக்களை பூண்டோடு ஒழிக்கவேண்டும் என்ற ஒரு திட்டத்தை ''ஆப்பரேஷன் ரெயினார்டு'' (OPERATION REINHARD) என்ற பெயரில் செயல்படுத்தினார்கள். அம்முகாம் முற்றுமாக ஹிட்லரின் புயற்படையினரின் கீழ் செயல்பட்டது. அவர்களுள்ளிருந்த கொலைக்குழுவினர் (KILLING SQUADS) ஈவு இரக்கமின்றி செயல்படுவர். அது யூதர்களை கூட்டம் கூட்டமாக கொன்று அழிப்பதின் உச்சகட்டமாக இருந்தது. மேலே குறிப்பிட்ட அந்த கால கட்டத்திற்குள் அம்முகாமில் வைத்து 10லட்சம் யூதர்கள் கொல்லப் பட்டார்கள். அதற்கான ஆதாரங்களும், நேரடியாகக் கண்ட, கொலைக்குத் தப்பியவர்களின் சாட்சியங்களும் உள்ளன.

யூத மக்களிடையே ஒரு சிறு கூட்டத்தைப் பயன்படுத்தியே கட்டாயமாக புதைகுழிகளைத் தோண்டச் செய்து கொல்லப்பட்ட யூதர்களை ஒரே கல்லறையில் ஒட்டு மொத்தமாகப் புதைத்தனர் (MASS GRAVES). சில வேளைகளில் புதைகுழிகள் தோண்டுவதற்கும் புதைப்பதற்கும் சிரமங்கள் ஏற்படுகிறபோது பிரேதங்களை மொத்தமாகக் குவித்து தீயிட்டு கொளுத்தி எரித்தனர் (MASSINE OPEN-AIR PYRES). இம்முகாமில் ஜெர்மானியக் காவலர் களுள் (GERMAN GUARDS) ஒரு கலகம் ஏற்பட்டு அக்கலகத்தை அடக்க அநேக காவலர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இக்கலகத்தின் விளைவாக சுமார் 300க்கும் மேற்பட்ட கைதியாக வைக்கப்பட்ட யூதர்கள் தப்பினார்கள்.

## விஷவாயு அறைக் கொலைகள்

இதைத் தொடர்ந்து யூதர்கள் துரிதமாகவும் எளிதாகவும் கொல்லப் படவேண்டுமென்ற திட்டத்தில் விஷ வாயு அறைகளை நியமித்தனர். அம் முகாமை ட்ரெபிரிங்கா II என்று பெயரிட்டிருந்தனர். அந்த இடம் 42X33 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடத்தில் அமைந்திருந்தது. போலந்திலுள்ள யூதர்கள் மாத்திரமல்ல ஜெர்மானியர் கைப்பற்றிய அனைத்து நாடுகளிலுள்ள யூதர்களையும் இந்த முகாமுக்குள் கொண்டுவந்தனர். முதலில் அவர்களிட மிருந்த தங்க நகைகள், பணம், மற்றும் விலையேறப்பெற்ற எல்லா பொருட் களையும் கைப்பற்றினார்கள். கொடுக்க மறுத்த, யூதர்களை மிகக்

கொடூரமாக நடத்தினார்கள். பலர் முன்னிலையில் ஆண்களையும் பெண் களையும் அவர்களுடைய உடைகளைக் கழற்றி நிர்வாணமாக்கப்பட்டு விஷவாயு அறைக்குள் அனுப்புவார்கள். உள்ளே அனுப்பப்பட்ட ஆண்களும் பெண்களும் இடும் கூக்குரலும் கதறுதலும் வெளியே அடுத்து உள்ளே அனுப்பக் காத்திருப்பவர்களைப் பீதியடையச் செய்யும். உள்ளே சுமார் 20 நிமிடங்களில் அவர்கள் மூச்சுத்திணறி இறந்துவிடுவார்கள். அந்தக் கட்டிடத்தின் பின்வாசல் வழியாக சரீரங்கள் இழுத்துச் செல்லப்பட்டு ஒட்டு மொத்தமாக ஒரே புதைகுழியில் போடப்படுவார்கள். இக்காட்சியை நேரில் பார்த்து பின்னர் தப்பியவர்கள் இந்த பரிதாபக் காட்சிகளை விவரித்துள்ளனர். தாய்மார் தங்களுடைய குழந்தைகளைக் கட்டி அணைத்த நிலையிலேயே இருவருமே மரித்த காட்சிகள் இருதயத்தையே உலுக்கிவிடும். பின்னர் அடுத்த கூட்டத்தினர் அனுப்பப்படுவார்கள். இப்படியாகத் தொடர்ந்து விஷவாயுக் கொலை நடந்துகொண்டேயிருக்கும். சில வேளைகளில் விஷவாயு அறையை விட்டு வெளியே எடுத்த பின்னும் சிலருக்கு உயிர் இருப்பது காணப்பட்டால் அவர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள்.

இப்டிப்பட்ட விஷவாயுச்சாவு அறையில் (DEATH CHAMBER) 2 மணி நேரத்தில் 3000 பேரைக் கொல்லும் அளவுக்கு திறனுள்ளதாக அமைத்துள்ளனர். ஒரு நாளைக்கு 12,000 பேர் முதல் 15,000 பேர் வரை அதில் கொல்லப்படுவார்கள். சில நாட்களில் 22,000 பேர் வரை அதில் கொல்லப்பட்டுள்ளனர். தொடர்ந்து 24 மணி நேரமும் விஷவாயுச் சாவு அறை செயல்படும். சைக்குலோன் .B. (ZYKLON. B) சோபிபார் (SOBIBOR) பெல்ஜெக் (BELZEC) என்ற விஷ வாயுக்களை பயன்படுத்திக் கொன்றுள்ளனர். இவ்வகைச் சாவை கார்பன் மோனாக்சைடு (CARBON MONOXIDE POISIONING) விஷச்சாவு என்று சொல்லப்படுகிறது.

# 13

# பாபியார் பள்ளத்தாக்கு இனப்படுகொலை

நாஜிப்படையினர் போலந்தைப் பிடித்தது அவர்களுக்கு ஒரு பெரும் வெற்றியாக அமைந்தது. அந்த தைரியத்தின் காரணமாக போலந்திலிருந்த யூதமக்களையும் ஜெர்மனியிலிருந்து தப்பி போலந்திற்கு வந்த யூதர்களையும் நாஜிப்படையினர் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள் என்றும் கூட்டுக் கல்லறைகளில் (MASS GRAVE) புதைக்கப்பட்டார்கள்.

**பாபியார் (BABIYAR) பள்ளத்தாக்கு இனப்படுகொலை**



பாபியார், உக்ரெய்ன் (UKRAINE) நாட்டின் தலைநகராகிய கீவ் (KIEV) நகரில் மலைப்பகுதியிலுள்ள பள்ளத்தாக்கு. நாஜிப் படையினரால் யூதமக்கள் சந்தித்த சர்வ நாசத்தில் (HOLO-CAUST) மிகப் பெரிய அளவில் யூத இன மக்கள் படுகொலை செய்யப்பட்டது இந்த இடத்தில் தான். இருதினங்களில் மாத்திரம் 33,771 யூத மக்கள் மிகக் கொடூரமான படுகொலை செய்யப்பட்டனர். நாஜிப் படையினர் சோவியத் யூனியனை பிடிக்கும் பெருமுயற்சியில் ஈடுபட்டிருக்கும் போது உக்ரெய்ன் நாட்டைப் பிடித்து நாஜிப்படையினர் தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள். உக்ரெய்ன் நாட்டை நாஜிப்படையினர் பிடித்தது சோவியத் யூனியனுக்கு போர்க்கள ரீதியில் (STRATEGICAL LY) அனுகூலமற்ற சூழ்நிலை உருவாயிற்று. நாஜிப்படையினரின் கை ஓங்கியிருந்த காலகட்டம்.

கீவ் மற்றும் உக்ரெய்னிலுள்ள அனைத்து யூதர்களையும் கொன்று அழிக்கும்படி மிலிட்டரி கவர்னர் தீர்மானம் செய்து மேஜர் ஜெனரல் குர்ட் எபர்ஹார்ட் (KURT EBERHARD) என்பவனிடம் இத்திட்டத்தை செயல்படுத்த ஒப்புவித்தான். நாஜிப்படையினரின் ஒரு பிரிவாகிய S.S.போலிஸ் பெட்டாலியனைக் கொண்டு மேஜர் ஜெனரல் குர்ட் இதை செயல்படுத்தினான். இதை



பால் பிளோபெல்

முன்னணியிலிருந்து களத்தில் செயல்படுத்திய வன் S.S. படையைச் சேர்ந்த பால் பிளோபெல் (PAUL BLOBEL) (படத்தில் காணலாம்).

“செப்.28.1941ல் கீவ் மற்றும் வட்டாரத்திலுள்ள அனைத்து யூதமக்களும் 29ம் தேதி காலை 8 மணிக்கு மெல்நிக்கோவா தெருவிலுள்ள கல்லறைத் தோட்டத்திற்கு அருகிலுள்ள மைதானத்தில் வந்து கூடவேண்டும். அப்படி வரும்போது அவர்களுக் கான அனைத்து ரெக்கார்டுகள், விலையேறப் பெற்ற பொருட்கள், பணம், குளிர்தாங்கும் உல்லன் ஆடைகள் இவைகளுடன் வரவேண்டும். இவர்களுக்கு குடியிருப்பு பகுதிகள் மாற்றிக்கொடுக்கப்படும் (RESETTLEMENT). வரத் தவறி வீட்டிலிருந்தாலோ அல்லது வேறு எங்கு மிருந்தாலோ அவர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள்” என்ற சுவரொட்டி (WALL POSTERS) ரஷ்ய மொழியிலும் ஜெர்மன் மொழியிலும் அச்சிடப்பட்டு நகர் முழுவதும் ஒட்டப்பட்டது. இதைக்குறித்து அறிவிப்பும் கொடுக்கப்பட்டது. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் அவர்கள் எதிர் பார்ப்பிற்கும் மேலாக 30,000க்கும் அதிகமான யூதமக்கள் கூடிவிட்டனர். அவர்களுக் கென பிரத்தியேகமான பாதுகாப்பான குடியிருப்புப் பகுதி கொடுக்கப்படும் என்ற நம்பிக்கையில்தான் யூதமக்கள் கூடி வந்தனர். ஆனால் நாஜிப் படையினரின் மறைவான திட்டத்தை சற்றேனும் அறியாதிருந்தார்கள்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உடுத்தியிருந்த உடை தவிர அவர்கள் கொண்டு வந்திருந்த பொருட்களையும், மதிப்புள்ள பொருட்களையும், தங்க நகைகள், கைக்கடி காரங்கள் யாவற்றையும் ஒப்படைக்கும்படி உத்தரவிடப் பட்டது. மறுத்து பேசியவர்கள் பொருட்களைக் கொடுப்பதற்கு தயக்கம் காட்டிய போது அடித்து உதைக்கப்பட்டனர். மிகத் துரிதமாக இந்த சேகரிப்பு வேலை முடிந்தவுடன் இராணுவ டிரக்குகளில் ஏற்றப்பட்டார்கள். கால்பதிப்பதற்கு இடமில்லாத அளவுக்கு ஏற்றி பிாபியார் பள்ளத்தாக்குப் பகுதிக்கு கொண்டு வந்தனர். அப்பள்ளத்தாக்கின் மலைச்சரிவில் அவர்கள் நிறுத்தப்பட்டார்கள். மலைச்சரிவின் கீழ் தண்ணீர் ஒடி சுமார் 150 மீட்டர் நீளம் 30 மீட்டர் அகலம் 15 மீட்டர் ஆழத்தில் ஒரு பெரும் பள்ளமிருந்தது. அப்பொழுது தான் யூத மக்கள் எதிர்பார்ப்பிற்கு மாறாக ஏதோ நடக்கப்போகிறது என்பதை உணர்ந் தார்கள். ஆனாலும் மனைவி பிள்ளைகள் அனைவரும் எப்படித் தப்பிக்க முடியும் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது. இப்பள்ளத்தாக்கிற்கு வந்தபின் ஆண்கள் பெண்கள் அனைவரும் தாங்கள்

உடுத்தியிருந்த உடையை கழட்டும்படி உத்தரவிட்டு நிர்வாணமாக்கினார்கள். மறுத்தவர்கள் தனியான இடத்திற்குக் கொண்டு சென்று கொடூரமாகத் தாக்கப்பட்டார்கள். மற்றவர்கள் சிறு கூட்டமாக மலைச்சரிவில் அந்த பள்ளத்தை நோக்கி ஓடவிட்டு குழி அருகில் செல்லும்போது மிஷின்கன் துப்பாக்கியால் சுடப்பட்டார்கள். குழியில் பிணமாக யூதமக்கள் விழுந்தார் கள். ஒரு அடுக்கு (LAYER) நிரம்பியதும் அரை குறையாக உயிர் இருப்பதாக காணப்பட்டவர்களையும் துப்பாக்கியால் சுட்டுக்கொன்று அந்த அடுக்கை மணல்போட்டு மூடிவிட்டு அடுத்த அடுக்கு தயாராகும். இப்படியாக கொண்டு வரப்பட்டவர்கள் இரண்டு தினங்களில் கொல்லப்பட்டார்கள். கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கை 33,771 என்று கணக்கிடப்பட்டனர்.

இந்தக் கொடூர நிகழ்ச்சியை டிரக் டிரைவர் ஹோப்ஃபர் (HOFER) என்பவர் தனது வாக்குமூலத்தில் விவரித்துள்ளார். மேலும் டினா புரோனிச்செவா (DINA PRONICHEUA) கீவ் நகரில் பொம்மலாட்டம் நடத்தும் ஒரு நடிகை (AN ACTRESS OF THE KIEV PUPPET THEATRE) இந்தக் கொலை வெறி நிகழ்ச்சியிலிருந்து ஆச்சரியமாகத் தப்பித்தவள். இவள் மலைச்சரிவில் ஓடிவரும்போது தன்மீது குண்டுபடுவதற்கு முன்பாக குழியில் விழுந்துவிட்டாள். ஆனால் குழியில் விழுந்தவர்கள் உயிர் ஊசலாடிக் கொண்டிருப்போரை ஒரு அடுக்கு மூடுவதற்கு முன்பாக குறிபார்த்து சுட்டுக்கொன்றுவிடுவார்கள். இதைக் கவனித்த டினா செத்தது போல் நடித்து எந்த அசைவுமின்றி பிணக் குவியலோடு படுத்துக்கொண்டாள். அடுத்த அடுக்கு பிணங்கள் விழும் போது இவள் மூடிய மண்ணை நீக்கி மேல் அடுக்கிற்கு வந்துள்ளாள். முதல் நாள் இரவு வேளையில் அந்தக் குழியிலிருந்து வெளியே வந்து காவலர்களின் கண்ணிற்குத் தப்பி இருட்டோடு இருட்டாக மறைந்து சென்றுவிட்டாள். இதேபோல குழியில் குண்டடிப்பட்டவர்களும் குண்டடிபடுவதற்கு முன்பாக இந்தக் கொலைவெறிக்குத் தப்பியவர்கள் 29பேர் உள்ளனர்.

பாபியார் பள்ளத்தாக்கில் நாஜிப்படை செய்த கொலைவெறி நிகழ்ச்சிக்குப் பின்னர் சோவியத் யூனியன் படையினருக்கு ஈடுகொடுக்க முடியாமல் நாஜிப் படையினர் பின்வாங்கும் சூழ்நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து உக்ரெய்ன் தலைநகராகிய கீவை விட்டு வெளியேறுவதற்கு முன்பு யூதமக்கள் புதைக்கப் பட்டக் குழியைத் தோண்டி பிணங்களை வெளியே எடுத்து கட்டைகளை அடுக்கி பெரிய சூளைகளை (FURNACE) உருவாக்கி பிணங்களை எரித்து சாம்பலாக்கினார்கள். நாற்பது நாட்கள் வரை இந்தப் பிணங்களை எரிக்கும் வேலை நடந்தது.

பாபியார் பள்ளத்தாக்கு கொலை வெறி நிகழ்ச்சிக்குப் பொறுப்பாயிருந்து

செயல்படுத்திய பால் புளோ பெல் 2ம் உலக யுத்தம் முடிவிற்கும் பின்னர் பிடிக்கப்பட்டு நியூரம்பெர்க் மிலிட்டரி டிரிபுயுனல் முன்பு விசாரணை நடத்தி மரணதண்டனை விதிக்கப்பட்டது. 1951 ஜுன் மாதம் லேன்ட்ஸ் பெர்க் சிறையில் தூக்கிலிடப்பட்டார்.

பாபியார் கொலைவெறிக்குத் தப்பிய டினா புரோனிச்செவா 1946 ஜன.24ம் நியூரம்பெர்க் மிலிட்டரி டிரிபுயூனல் முன் சாட்சியமளித்த படம்.



# 14 2வது மகா உலக யுத்தத்தீவிரம் – அமெரிக்காவின் பேர்ல் துறைமுகம் தாக்கப்படுதல் – முசோலியின் வீழ்ச்சி

பாபியார் பள்ளத்தாக்கில் நடந்த படுகொலை ஹிட்லரின் நாஜிப் படையினரால் யூத மக்கள் சந்தித்த சர்வ நாசத்தின் (Holocaust) மிகப் பெரிய சோக வரலாறு ஆகும். இரண்டே நாட்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 33,771 யூதர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள்.

## சீனா - ஜெர்மன் ஒப்பந்த முறிவு / ஜப்பானுடன் உடன்படிக்கை

இரண்டாவது உலக யுத்தத்தின் துவக்கத்தில் ஹிட்லரின் நாஜிப் படையினரும் அவர்களைச் சார்ந்த ஆக்சிஸ் படையினரும் பல வெற்றிகளைச் சந்தித்தனர். இந்த சூழ்நிலை ஹிட்லருக்கு பெரும் தெம்பையும் மன தைரியத்தையும் உருவாக்கியது. இந்த சூழ்நிலையில் ஹிட்லர் சீனாவுடன் பிப்.1938ல் கொண்டிருந்த சீனா–ஜெர்மன் உடன்படிக்கையை (Sino-German Alliance) முறித்து யுத்த கண்ணோட்டத்தில் ஜப்பானுடன் உடன்படிக்கையை கையெழுத்திட்டு ஜப்பானுடன் உறவை உருவாக்கிக் கொண்டான். ஜப்பானிடம் நவீன யுத்த ஆயுதங்களும் மேலும் தற்கால டெக்னாலாஜியின் அடிப்படையில் சரியான முன்னேற்றம் காட்டி வருகின்றனர் என்பதைக் கருத்தில் கொண்டு ஜப்பானுடன் உடன்படிக்கை செய்துகொண்டான். ஜப்பான், சீனாவின் மஞ்சூரியா மாநிலத்தை கைப்பற்றி தனதாக்கியதை ஹிட்லர் அங்கீகரித்தான். அதோடு சீனாவோடு இருந்த முந்திய ஒப்பந்தத்தின்படி சீனா இராணுவத்தி லிருந்த அனைத்து ஜெர்மானிய இராணுவ அதிகாரிகளை திரும்ப வரவழைத்துக் கொண்டான். ஒப்பந்தத்தின்படி சீனாவுக்கு கொடுக்க இருந்த அனைத்து இராணுவத் தளவாடங்களையும் நிறுத்திக்கொண்டான்.

## சோவியத் ரஷ்யாவுடன் போர்

ஹிட்லர் சோவியத் ரஷ்யாவின் மறைமுகமான ஆதரவு தேவை என்று கருதி இரகசியமாக ரஷ்யாவில் தலைவர் ஸ்டாலினுடன் 1939ல் ஒருவருக் கொருவர் ஆக்கிரமிப்பு செய்துகொள்வதில்லை என்று ஒப்பந்தம் செய்தி ருந்தான் (Hitler-Stalin non-aggression PACT 1939). ஆனால் 1941 ஜூன் 22 அன்று அந்த ஒப்பந்தத்தை மீறி 5.5 மில்லியன் ஆக்சிஸ் படையுடன் சோவியத் யூனியன் மீது ஒரு பெருந்தாக்குதலை நடத்தினான். அந்த

தாக்குதலுக்கு ஆப்பரேஷன் பார்பரோசா (operation Barbarossa) என்று பெயரிட்டிருந்தான். அந்த தாக்குதலில் பிரதான நோக்கம் ரஷ்யாவின் இயற்கையாகவே உள்ள கனிம வளங்களை (Resources) தனது ஆளுகைக்குள் கொண்டுவரவும் அதைத் தொடர்ந்து மேற்கத்திய வல்லரசுகளை (western powers) எளிதில் வென்றுவிடலாம் என்று திட்ட மிட்டிருந்தான். அந்த தாக்குதலின் விளைவாக பால்டிக் ரிபப்ளிக், பெலாரஸ், மேற்கு உக்ரெய்ன் ஆகிய நாடுகளின் பெரும் பகுதியைப் பிடித்து தனது ஆளுகைக்குள் கொண்டு வந்தான். இந்த வெற்றியோடு தங்களது படையை மாஸ்கோவை நோக்கிச் சென்றால் மாஸ்கோவைப் பிடித்துவிடலாம் என்று இராணுவ அதிகாரிகள் ஒருமித்து கருத்து தெரிவித்தனர். ஆனால் ஹிட்லர் அவர்களுடைய கருத்தைத் தள்ளி லெனின்கிராடு கீவ் என்ற இடத்திற்குப் படையைத் திருப்பினான். இந்த முடிவின் காரணமாக இராணுவ அதிகாரி களுக்கும் ஹிட்லருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இந்த சூழ்நிலை ரஷ்யாவைச் சேர்ந்த சிவப்பு இராணுவம் (Red Army) மற்ற இராணுவப் பிரிவுகளையும் ஒன்று திரட்டி (mobilise fresh reserves) எதிர் தாக்குதலுக்கு ஆயத்தமாக நல்ல வாய்ப்பாக மாறிவிட்டது.

அதைத் தொடர்ந்து ஸ்டாலின் கிராட் யுத்தக்களத்தில் (Battle of Stalingrad) நாஜிப்படையினருக்கு சாதகமான சூழ்நிலை இல்லை என்பதை இராணுவ அதிகாரிகள் மூலமாக ஹிட்லர் அறிந்திருந்தும் தற்காலிகமாக பின்வாங்கிக் கொள்ள (withdrawal of the Battle) ஹிட்லர் மறுத்துவிட்டான். அதன் காரணமாக 2,00,000 ஆக்சிஸ் இராணுவ வீரர்கள் யுத்தக்களத்தில் கொல்லப்பட்டார்கள். 2,35,000 இராணுவ வீரர்கள் போர்க் கைதிகளாக பிடிப்பட்டனர். அதில் தோல்வியடைந்த 6000 இராணுவ வீரர்கள் மட்டுமே ஜெர்மனுக்குத் திரும்பினார்கள். எந்த நாஜிப்படையினரைக் கொண்டு யூத மக்களை இலட்சக் கணக்காக கொன்று குவித்தானோ அப்படையினரின் சர்வ நாசத்தைப் பாருங்கள். ஹிட்லர் எதை விதைத்தானோ அதையே அறுத்தான் என்பதை சிந்தித்துப் பாருங்கள் ஹிட்லரின் இராணுவ நிதானிப்பு (military judgement) தவற ஆரம்பித்தது. அதோடு ஜெர்மனியின் பொருளா தாரம் நிலைகுலைந்தது. ஹிட்லரின் சரீர ஆரோக்கியத்திலும் குறைவுகள் ஏற்பட்டது. சோவியத் ரஷ்யாவுடன் ஹிட்லர் யுத்தத்தை ஆரம்பித்தபோது ஹேம்லர் (Hammler) என்ற வரலாற்று ஆசிரியர் “ரஷ்யாவிலுள்ள யூதர்களை நீங்கள் என்ன செய்வீர்கள்?” என்று கேட்டார். அதற்கு ஹிட்லர் “அவர்கள் முற்றுமாக அழிக்கப்படுவார்கள்” (Exterminate them as partisans) யகூதா பௌர் (Yehuda Bauer) என்ற இஸ்ரேல் வரலாற்று ஆசிரியர் பின்னர் இதைக் குறித்து “இலட்சக் கணக்கான ரஷ்ய யூதர்கள் சர்வ நாசத்திற்குத்

(Halocaust) தப்பினார்கள்" என்று சொன்னார். ஆனாலும் ஹிட்லர் சோர்ந்து போய் விடவில்லை. மிகவும் திடமாகவே போரை நடப்பித்தான்.

## எல் அலாமீன் யுத்தக்களம் (Battle of El Alamien)

ஜெர்மனியின் நாஜிப் படையினர் சுயஸ் கால்வாயைக் கைப்பற்றி மத்திய கிழக்கு நாடுகளைப் பிடிக்கும் திட்டத்துடன் எகிப்தோடு போர் தொடுத்தனர். ஹிட்லர் தனக்கிருந்த இராணுவ அனுபவத்தையும், நிபுணத்துவத்தையும் கொண்டு தன்னுடைய இராணுவ பெலத்தின் மீது அளவுக்கு மிஞ்சிய நம்பிக்கை வைத்திருந்தான். ஆகவே இராணுவ அதிகாரிகளின் கணிப்பில் நம்பிக்கை வைப்பதில்லை. இது அனுகூலமற்ற விளைவுகளை உண்டாக்கிற்று. ஆகவே அந்த யுத்தக் களத்தில் (எல் அலாமீன் யுத்தக் களம்) ஹிட்லரின் இராணுவம் தோல்வியை சந்தித்தது.

## அமெரிக்காவின் பேர்ல் துறை முகம் (Pearl Harbour) தாக்கப்படுதல்




இரண்டாவது உலகப்போரில் 1941 டிசம்பர் 7ம் நாள் ஜப்பானின் இப்பீரியல் கப்பற் படை அமெரிக்கா வின் பேர்ல் துறை முகத்திலிருந்த கப் பற்தளத்தின் மீது அதிரடி தாக்குதல் நடத்தி அமெரிக்கா வின் கப்பற்படைக்கு பெரிய நாசத்தை உண்டு பண்ணிய சம்பவம் தான். மிகப் பெரிய சம்பவமாகும். இச்சம்பவம் அமெரிக்காவிற்கு பெரும் அதிர்ச்சி யளிப்பதாகயிருந்தது. அமெரிக்காவின் கப்பற்படை பெலத்தை முடக்கவிட வேண்டும் என்பதே ஜப்பானின் நோக்கமாக இருந்தது. அதே சமயத்தில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலிருந்த பிலிப்பைன்ஸ் மீதும் பிரிட்டிஷ் கட்டுப் பாட்டிலிருந்த, மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங் ஆகிய நாடுகளிலும் தாக்கு தலில் ஈடுபட்டது. பேர்ல் துறை முகத்தின் தாக்குதலின் விளைவாக எட்டு கடற்படை யுத்தக்கப்பல்கள் முற்றுமாக சேதப்படுத்தப்பட்டது. அதில் நான்கு யுத்தக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 188 போர் விமானங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டன. 6 விமானந்தாங்கும் கப்பல்கள், 8 டேங்கர்கள், 4 நீர்

மூழ்கிக் கப்பல்கள், 2402 அமெரிக்க இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். 1282 பேர் படுகாயம் அடைந்தனர். ஜப்பானியப் படையினர் 29 போர் விமானங்களையும் 5 நீர் மூழ்கிக் கப்பல்களையும் 65 இராணுவத்தினர் களையும் இழந்தார்கள். இதன் விளைவாக அமெரிக்கா ஜப்பான் மீது யுத்த பிரகடனம் செய்தது. பிரிட்டனும் யுத்தத்தில் தீவிரமாக இறங்கியது. அமெரிக்கா, ஜப்பான் மீது யுத்தப் பிரகடனம் செய்த அதே நாளில் (11.12.1941)


ஹிட்லரும் முசோலினியும்

ஜெர்மனும், இத்தாலியும் அமெரிக்கா மீது யுத்த பிரகடனம் செய்தனர். ஜெர்மனியின் ஹிட்லரைப் போலவே இத்தாலியின் பெனிட்டோ முசோலினி ஒரு சர்வாதிகாரியாக செயல் பட்டான். இதைத் தொடர்ந்து ஹிட்லரும் முசோலினியும் மிகவும் நெருக்கமானார்கள். முசோலினி யின் இராணுவ பலத்தைப் பெருக் கிக்கொள்ள ஜெர்மன் இராணு வத்தினர் இத்தாலிக்கு அனுப்பப் பட்டனர்.

## ஹிட்லரை கொலை செய்ய முயற்சி

ரஸ்டன்பர்கில் **(Rusten Burg)** உல்ஃப் லேயர் **(Wolf Lair)** என்பது தான் ஹிட்லரின் தலைமைச் செயலகம். பொதுவாக ஹிட்லரின் இராணுவ அதி காரிகள் மத்தியில் ஹிட்லரின் தவறான கணிப்புகள்தான் **(misjudgement)** யுத்தக்களத்தில் ஏற்ப்பட்ட அநேக தோல்விகளுக்குக் காரணம் என்ற கருத்து நிலவியது. ஆகவே ஹிட்லரை கொலை செய்ய சில திட்டங்கள் மறைமுகமாக உருவாயிற்று. மேலும் ஹிட்லரின் தலைமையில் இராணுவம் இயங்குமானால் ஜெர்மன் தோல்வியை சந்திக்கும் என்ற கருத்தும் பரவலாக நிலவியது. அதில் முக்கியமான சதித்திட்டம் ஹிட்லர் தனது தலைமைச் செயலக அலுவலகத்தில் கான்பிரன்ஸ் மேஜேயின் அடியில் சிறிய பெட்டி வெடிகுண்டு **(Briefcase Bomb)** வைக்கப்பட்டிருந்தது. அந்த வெடிகுண்டு வெடித்ததில் உறுதியான அந்த மேஜை சிதறியதே தவிர மிகச் சிறிய காயங்களுடன் ஹிட்ல்ர் உயிர் தப்பினார். இந்த வெடிகுண்டை வைத்த கிளாயஸ் வோன் **(Claus von)** கண்டு பிடிக்கப்பட்டான். இதன் காரணமாக ஜெர்மனின் இராணுவ அதிகாரிகள் உட்பட 4900 பேர் துப்பாக்கிக் குண்டு களுக்கு இறையாக்கப்பட்டு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

## சர்வாதிகாரி முசோலினியின் பரிதாப முடிவு

1945 ஏப்ரல் 21ம் நாள் அமெரிக்கா உட்பட்ட நேச நாட்டுப் படையினர் **(Allied Troups)** இத்தாலியின் முக்கிய பெரு நகரமாகிய போலோக்னா **(Bologna)** நகரைக் கைப்பற்றியது. முசோலினியின் பாசீச படையின் தலைவர் **(Fascist chief)** அர்ப்பிநாட்டி **(Arpinati)** பிடிபட்டு அவன் கொல்லப் பட்டான். இத்தாலியில் போர் வலுத்தது. நேசப்படையினர் முன்னேறினார் கள். அப்பொழுது முசோலினி மிலான் நகரில் தனது மிக முக்கியமான பாசீச ஆதரவாளர்களுடன் தங்கியிருந்தான். இத்தாலியில் முசோலினியின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக விடுதலைக் குழு **(Liberation committe)** மிகத் தீவிரமாகச் செயல்பட்டு வந்தது. நேசப்படையினருக்கு ஆதரவாக யிருந்து முசோலினியின் ஆட்சிக்கு முடிவுக்குக் கொண்டு வர விடுதலைக் குழு தீர்மானித்து செயல்பட ஆரம்பித்தது.

நேசப்படையினர் முன்னேறி வருவதை அறிந்த முசோலினியின் பாசீசப் படையின் தலைவர்களில் ஒருவனான பவோலினி **(Pavolini)** தன்னுடைய படைப்பிரிவுடன் முசோலினியைத் தப்புவிக்க விரைந்தான். இத்தாலியில் பாசீசப் படையினருக்கு லெப்டினன்ட் பாஃல்மேயர் **(Lt-Fallmeyer)** தலைமை யில் உதவியாகயிருந்த ஜெர்மானிய விமானப்படைப் பிரிவு முசோலினி தங்கியிருந்த மெனாகியோ **(Menaggio)** என்ற இடத்திற்கு விரைந்தது. சூழ்நிலைகளின் நெருக்கத்தை அறிந்த முசோலினி நேசப்படையினரிடம் பிடிப்பட்டு விடக்கூடாது என ஜெர்மனியின் கூட்டணிப் படையினரிடம் அடைக்கலம் புகுந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்தான். ஏனெனில் இத்தாலியை விட்டு வெளியேறிச் செல்ல அவனுக்கு மனதில்லை. ஜெர்மன் படைப்பிரிவைச் சேர்ந்த லெப்டினன்ட் பாஃல்மேயர், மாசோ **(Masso)** என்ற ஒரு பாதுகாப்பான இடத்திற்கு முசோலினியையும் அவனது மனைவி கிளாரா, மனைவிபோல வைத்திருந்த ஏஞ்ஜெலா குர்ட்டி **(Angela Curti)** சில முக்கியமான பாசீச ஆதரவாளர்கள் மற்றும் முசோலினியின் மெய்க்காப்பாளர்களுடன் தனது படைப்பிரிவினரின் பாதுகாப்புடன் சென்றான். இந்த தகவலை அறிந்த விடுதலைக்குழு பிரிவினர் அவர்கள் சென்ற சாலையின் முக்கியமான இடத்தில் சாலைத் தடையை **(Road Block)** வைத்துத் தடுப்பதற்கான ஏற்பாட்டை செய்து விட்டு நேசப் படையினருக்குத் தகவல் கொடுத்து முசோலினி சென்ற வாகனத் தொடர் **(convoy)** வருவதற்குள் டோங்கோ **(Dongo)** என்ற இடத்தில் சுற்றி வளைக்க **(Ambush)** ஏற்பாடாயிற்று. கடைசியில் முசோலினியின் வாகனத் தொடர் பொறியில் மாட்டியதுபோல் சிக்கிக்கொண்டது. லெப்டினன்ட் பாஃல்

மேயரால் எதிர்நடவடிக்கை எடுக்கமுடியாத சூழ்நிலையில் நேசப் படையினரிடம் சரணடைந்தனர். ஆனாலும் முசோலினியைக் காட்டிக்கொடுக்கவில்லை. நேசப்படையினர் ஒவ்வொரு வாகனமாக சோதனை செய்தனர். கடைசியில் முசோலினி ஒரு ட்ரக்கின் பின் பகுதியில் ஜெர்மன் ஓவர்கோட் அணிந்து தன்னை மறைத்துக் கொண்டிருந்ததைக் கண்டு பிடித்து அவனைப் பிடித்துவிட்டனர். 1945 ஏப்ரல் 28 அதிகாலை 1.30 மணிக்கு முசோலினியும் அவனது 15 பாசீச தீவிர ஆதரவாளர்களும் மற்றவர்களும் பிடிப்பட்டனர்.



தொங்கிய நிலையில் முசோலினி

நேசநாட்டுப் படையினரின் (Allied Forces) ஒத்தாசையுடன் இத்தாலியின் விடுதலைக் குழுவினர். ஏப்.29ம் நாள் முசோலினியையும் அவனைச் சார்ந்த 15 தீவிர ஆதரவாளர்களையும் துப்பாக்கிச் சுடும் குழுவினர் (Firing squad) முன் நிறுத்தி சுட்டுக்கொன்றனர். முசோலினியும் 15 தீவிர ஆதரவாளர்களும் துடிதுடித்துச் செத்தனர். அவர்கள் அந்த சரீரங்களை அதோடு விடவில்லை. மிலான் (Milan) என்ற நகரில் எஸ்சோகேஸ் ஸ்டேஷனில் தலைகீழாகத் தொங்க விட்டனர். அதைப் படத்தில் காணலாம். தொங்க விடுவதற்கு முன் முசோலினி மனைவியாய் வைத்திருந்த ஏஞ்ஞெலா குர்டின் மார்பில் சாய்ந்த மட்டில் கையில் செங்கோலுடன் உள்ளதை கீழுள்ள படத்தில் காணலாம். சர்வாதிகாரி முசோலினியின் இழிவுச்சாவைப் பாருங்கள். எத்தனையோ ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் சாவுக்குக் காரணமாயிருந்தவனின் முடிவைப் பாருங்கள். அவன் வாழ்ந்த வாழ்வையும் அவனது அவமானச் சாவையும் சிந்தித்துப் பாருங்கள். “மனுஷர் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்” (கலா.6:7).





முசோலினியின் அவமானச் சாவு ஹிட்லரில் பெருந்தாக்கத்தை உண்டாக்கிற்று. முசோலினைப் போல தன்னையும் ஒரு வேடிக்கைப் பொருளாக ஆக்கிவிடக் கூடாது என்ற அச்சம் அவனில் உருவாயிற்று.

## கல்லறையில் ஒரு பிறப்பு

பால் டில்லிக் (PAUL TILLICH) அமெரிக்காவில் வாழ்ந்த ஜெர்மானியர். அவர் மிகவும் பெயர்பெற்ற இறையியல் வல்லுனர். இரண்டாவது உலக மகா யுத்தத்தின் முடிவுக்குப் பின்னர் ஹிட்லரின் நாஜிப்படையினரில் அநேகர் போர்க் கைதிகளாக கைது செய்யப்பட்டு (PRISONER OF WAR) அவர்கள்மீது "நியுரம்பர்க் போர்க்கைதிகள் விசாரணை" (NUREMBURG WAR CRIME TRIAL) நடந்தது. அந்த விசாரணையின்போது நாஜிப் படையினர் நடத்திய விஷய வாயு கொலை அறைக்கு (GAS CHAMBER) தப்பிய யூதர் ஒருவரின் சாட்சியத்தை பால் டில்லிக் குறிப்பிட்டுப் பேசினார்.

போலந்து நாட்டில் ஒரு யூத வாலிபன் விஷவாயு கொலை அறைக்குத் தப்பி ஒரு கல்லறைத் தோட்டத்தில் காலியாகயிருந்த கல்லறைக் குழியில் மறைந்திருந்தான். பல நாட்கள் அங்கேயே

மறைந்திருக்கவேண்டியதிருந்தது. அவன் மாத்திரம் அல்ல. அவனைப் போன்று நாஜிப்படையினரின் கொலைவெறிக்குத் தப்பிய சில யூத ஆண்களும் பெண்களும் கூட அது போன்ற கல்லறைக் குழியில் மறைந்திருந்தனர். அது மனித வரலாற்றிலேயே யூதர்களுக்கு நடந்த மிகப்பெரிய பேரழிவு என்று சொல்லலாம். அந்த யூத வாலிபன் அங்கு மறைந்திருந்த காலகட்டத்தில் அநேக பாடல்களை (POEMS) எழுதி யுள்ளான்.

அதில் ஒரு பாடல், தான் மறைந்திருந்த குழிக்கு அருகாமையில் ஒரு யூதப் பெண்ணுக்கு பிரசவ வேதனை ஏற்பட்டு ஒரு ஆண் மகனைப் பெற்றெடுத்தச் சம்பவத்தை குறித்ததாகும். அங்கு குழிவெட்டவும் கல்லறைகளையும் பராமரிக்கிறவருமாயிருந்த எண்பது வயது தாத்தா அந்த இளம் தாய்க்கு உதவி செய்தார். அவர் அந்தக் குழந்தையை மெல்லிய துணியில் சுற்றி தன் கரத்தில் ஏந்திக்கொண்டார். அந்தக் குழந்தை முதல் முறையாக அழுதது. அதைப் பார்த்துக் கொண்டே இருந்த அந்த முதியவர் சத்தமாக ஜெபித்தார். "மகா பெரிய தேவனே, எங்களுக்குக் கடைசியாக மேசியாவை அனுப்பியிருக்கிறீரோ? கல்லறையிலிருந்து மேசியாவை தவிர வேறு யார் பிறக்கமுடியும்?" அது தான் அவருடைய சுருக்கமான ஜெபம். முதல் நூற்றாண்டிலேயே மேசியா பிறந்து பின் அவர் அடக்கம் பண்ணப்பட்டக் கல்லறையிலிருந்து மூன்றாவது நாள் உயிர் பெற்று எழுந்தார் என்பது ஆச்சரியமான உண்மை. நமக்கும் கல்லறையிலிருந்து ஒரு பிறப்பு இருக்கிறது. ***"எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்"*** (1 கொரி. 15:52) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கல்லறையிலிருந்து ஒரு பிறப்பை விவரிக்கிறார். இதைக்குறித்து மார்ட்டீன் லூத்தர் "கல்லறை யில் நித்திரையாகயிருக்கும் நம்மை இயேசு கிறிஸ்து வந்து நம்முடைய கல்லறையைத் தட்டி "மார்ட்டீன் எழுந்திரு" (MARTIN GET UP) என்று சொல்லுவார் நான் எழுந்திருப்பேன். இயேசு வரும்போது மகிழ்ந்து களிகூருவேன்" என்று குறிப்பிட்டார். அந்த நம்பிக்கை நமக்கு இருக்கிறதா?

**நன்றி:** HONEY DROP.

# 15 பெர்லின் யுத்தக்களம் – ஹிட்லரின் தற்கொலை

ஹிட்லர் தனது படையினரின் வெற்றிகளில் இறுமாப்பும், மிஞ்சிய தைரியமும் ஏற்பட்டதால் சீனாவுடன் கொண்டிருந்த ஒப்பந்தத்தை மீறினான். ஒருவருக்கொருவர் ஆக்ரமித்துக்கொள்ளக்கூடாது என சோவியத் ரஷ்யாவின் ஸ்டாலினோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறி உதாசீனப் படுத்தினான். ஜப்பானுடன் புதிய உடன்படிக்கையை உண்டாக்கிக்கொண் டான். ஜப்பான் அமெரிக்காவின் பேர்ல் ஹார்பரைத் தாக்கியதின் விளைவாக அமெரிக்கா யுத்தத்தில் மிகத் தீவிரமாக இறங்கியது. அதைத்தொடர்ந்து இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினியும் ஜெர்மனும் அமெரிக்கா மீது யுத்தப் பிரகடனம் செய்தனர். நேசப்படையினர் (ALLIED FORCES) இத்தாலிமீது படையெடுத்து சர்வாதிகாரி முசோலினி கொல்லப்பட்டு அவமானப்படுத்தப் பட்டான்.

## ஆஸ்கிவிட்ஸ் - பிர்க்கனோவ் வன்கொடுமை, கொலைகள் முகாம் விடுவிப்பு

ஹிட்லரின் ரஷ்யப்படையெடுப்பில் ஸ்டாலின்கிராட் யுத்தக்களத்தில் (BATTLE OF STALINGRAD) அவனது போர்ச்செயல் திட்டம் (WAR STRATEGY) தோல்விகளை சந்தித்தது. இது ரஷ்யாவின் செம்படைக்கு (RED ARMY) பெரும் தெம்பையும் தைரியத்தையும் அளித்தது. உக்ரெய்ன் நாட் டின் தலைநகராகிய கீவ் நகரையொட்டிய பாபியார் பள்ளத்தாக்கு ஒரு கொலைக்கள முகாமாக மாறியது போலவே போலந்து நாட்டில் நாஜிப் படையினரின் வன்கொடுமை மற்றும் கொலைக்கள முகாம் (CONCENTRATION AND DEATH CAMP) ஆஸ்கிவிட்ஸ் – பிர்க்கெனோவ் (AUSCHWITZ - BICKENAU) என்ற இடத்தில் வைத்திருந்தனர். அது போலந்தில் மிகப் பெரிய, வன்கொடுமைக்குப் பெயர் பெற்ற முகாமாக இருந்தது. ரஷ்யாவின் செம்படை இதைக் குறித்து கேள்விப்பட்டனர். 1945 ஜன.27ம் நாள் செம்படையினரின் 60வது படைப்பிரிவு போலந்துமீது படை யெடுத்துச் சென்று இந்த வன்கொடுமைக் கொலைக்கள முகாமுக்குச் சென்று அங்கு இருந்த யூதமக்களை விடுதலை செய்தனர். ரஷ்யாவின் இப்படைத் திட்டம் ஆக்சிஸ் படையினருக்கு கடைசிவரைத் தெரியாததால்

செம்படையினரைத் தடுக்க முடியவில்லை. இதே முகாமில் அதன் விடுதலைக்கு முன்னர் 1 மில்லியன் யூதர்கள் கொல்லப்பட்டார்கள் எனக் கணக்கிடப்பட்டது.




அன்று விடுவிக்கப்பட்ட யூத மக்களில் ஒரு பகுதியைப் படத்தில் காணலாம்.

பெரும்கூட்டம் யூதமக்கள் விடு விக்கப்பட்ட ஜன.27ம் நாள் ஒவ்வொரு ஆண்டும் நினைவு நாளாக அனு சரிக்கப்படுகிறது. ஹிட்லரின் சர்வ நாசத் திட்டத்தில் அழிக்கப்பட்ட (HOLOCAUST) யூதமக்களின் நினைவாக சர்வதேச நினைவு நாளாக அனுச ரிக்கப்படுகிறது. (INTERNATIONAL DAY OF COMMEMORATION IN MEMORY OF THE VICTIMS OF HOLOCAUST) இந்த நாள் ஐக்கியநாடு களின் பொது அவையிலும் (U.N. GENERAL ASSEMBLY) அனுசரிக்கப்படுகிறது.

## பெர்லின் யுத்தக்களம் (Battle of Berlin)

1945 ஏப்ரல் 23ம் நாள் சோவியத் ரஷ்யாவின் செம்படை (RED ARMY) மூன்று பகுதியாக பிரிந்து ஜெர்மனின் தலைநகராகிய பெர்லினை சுற்றிவளைத்துக் கொண்டது. பெர்லின் நகரின் புறநகர்ப் பகுதிகள் (SUBURBS) செம்படையில் கட்டுப்பாட்டிற்குள் வந்தன. செம்படை பெர்லின் நகருக்குள் நுழைந்து விடாத வண்ணம் பெரும் தடுப்புகளை அமைத்திருந்தனர் (HEAVY BARRICADE). செம்படையின் நோக்கம் பாராளுமன்றத்தை (REICH-STAG) பிடிக்கும் திட்டத்தை அறிந்து அதை சரியான பாதுகாப்பில் வைத்தனர். செம்படை சுற்றிவளைத்துக்

கொண்டதின் காரணமாக பெர்லின் நகருக்கு ஏப்.27 முதல் எந்த வெளித் தொடர்பும் இல்லாமல் துண்டிக்கப்பட்டது. ஜெர்மனின் நாஜிப்படையினருக்கு இக்கட்டான நிலை ஏற்பட்டது. இராணுவத் தளவாடங்கள், மற்றும் துப்பாக்கித் தோட்டாக்கள் எதுவும் வெளியேயிருந்து கொண்டுவரமுடியவில்லை. வெளியே இருக்கும் நாஜிப்படையினரும் பெர்லின் நகருக்குள் உள்ளேயிருக்கும் படையினருக்கு உதவிக்கு வரமுடியாத சூழ்நிலைகள் ஏற்பட்டது. ஏப்.30ம் தேதி காலை பெர்லின் நகரைக்காக்கும் படைப் பிரிவிலிருந்த இராணுவ அதி காரி வீட்லிங் (WEIDLING) ஹிட்லரை அவர் தங்கியிருந்த நிலத்தடி பதுங்குமிடத் தில் (UNDERGROUND BUNKER) போய்ச் சந்தித்து நிலவரங்களை எடுத்துச் சொன்னார். அதிகபட்சம் நாம் இரண்டு நாட்களுக்குமேல் நாம் நின்று பிடிக்க முடியாது என்றும் நாம் தாக்குப்பிடிக்கமுடியாது என்றும் சொன்னார். அப்பொழுது



ஜோசப் கொயபெல்ஸ்

ஹிட்லர் “கடைசி வரை போரா டுங்கள் (FIGHT TO THE FINISH) படையைக் கலைத்து விட வேண்டாம்” என்று அறிவுரை கொடுத்தார். ஆனால் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய காரிய மாக இல்லை. எனினும் உத் தரவை ஏற்று வீட்லிங் வெளியேறி னார். அன்றைய தினமே ஹிட்லர் யுத்தக்களத்தில் எந்த முடிவையும் எடுக்க முழு அதி காரத்தையும் ஜோசப் கொய பெல்ஸ் (JOSEPH GOEBBELS) பொது விழிப்புணர்வும் கொள்கை பரப்பு அமைச்சருக்கு (PUBLIC ENLIGHTENMENT AND PROPAGANDA MINISTER) கொடுத்தார். எந்த அறிவுரையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள் ளும்படி களத்திலிருக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் தகவல் கொடுக்கப் பட்டது. எந்த நேரத்திலும் பாராளுமன்றமும் (REICHSTAG) ஹிட்லர் தங்கும் இராஜ்பவன் போன்ற அரண்மனையும் (REICH CHANCELLERY) பிடிபடும் என்ற நெருக்கடி சூழ்நிலை உருவாயிற்று.

### ஹிட்லர் தற்கொலை

ஹிட்லர் தனது அரண்மலையில் (CHANCELLERY) அதற்கு 55 அடி ஆழத்தில்

அமைக்கப்பட்ட மிகவும் பாதுகாப்பான பதுங்கு குழியில் இருந்தான் (FORTI-FIED UNDERGROUND BUNKER). அதில் 18 அறைகள் இருந்தன. தடையில்லாத மின்சார வசதி தண்ணீர் வசதி மாதக்கணக்காக தங்கி சாப்பிடுவதற்கான



சகல உணவு வசதிகளோடு உள்ளது தான் அந்த பதுங்குமிடம். ஒரு குட்டி அரண்மனை என்று சொல்லலாம். 1945 ஜனவரி மாதம் முதலே அவன் தங்குமிடம் அந்த பதுங்குமிடம்தான். அடிக்கடி தங்குமிடத்தை மாற்றுவான். சிலவேளைகளில் அவன் எங்கு இருக் கிறான் என்பதே இரகசியமாக இருந் தது. ஏனெனில் எந்த வேளையிலும் தனக்கு ஆபத்து இருக்கிறது என்ற அச்சத்திலே வாழ்ந்தான். அதன் கார ணமாக எந்த காரியத்திலும் அவனுக்கு சரியான தீர்மானம் எடுக்க முடியவில்லை. எப்பொழுதும் மிகுந்த மன அழுத்தத்தோடுதான் இருப்பான் (HIGH TENSION). 1945 ஏப்.28ம் நாள் அச்சு நாடுகளின் கூட்டணியிலிருந்த இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி நேசப்படையினரால் பிடிக்கப்பட்டு 29ம் நாள் கொல்லப்பட்டு பொது இடத்தில் அவமானப்படுத்தும் வகையில் அவனுடைய சரீரம் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு இழிவு செய்யப் பட்ட சம்பவத்தை ஹிட்லர் அறிந்திருந்தான். அது அவனது உள்ளத்தில் பெரும்தாக்கத்தை உண்டுபண்ணியது. தானும் பிடிபட்டு அப்படிப்பட்ட நிலை தனக்கு வந்துவிடக்கூடாது என அஞ்சினான். தற்கொலை செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவனது மரணத்திற்கு சில வாரங்களுக்கு முன்பாகவே அவனுடைய சிந்தையில் ஓடியிருக்கவேண்டும். ஏனெனில் நாஜிப்படையினர் “அவமானத்திற்கு முன்பே மரணத்தை சந்திக்கவேண்டும்” (DEATH BEFORE DISHONOUR) என்ற ஒரு கோட்பாடு வைத்திருந்தனர். நாஜிப் படையினருடைய இராணுவ டாக்டரை வருவித்து மரணத்தின் வேதனை (AGONY OF DEATH) இல்லாமல் துரிதமாக தற்கொலை செய்துகொள்வதற்கு வழி என்ன என்பதை கேட்டுள்ளான். அந்த டாக்டர் சையனைடு விஷம் (CYA-NIDE POISON) ஒன்றுதான் மரணத்தின் வேதனையை அனுபவிக்காமல் துரிதமாக உயிரைமாய்த்துக் கொள்ளும் வழி என்றும் ஒருவேளை சையனைடு விஷத்தில் அளவு போதாமல் உயிர் பிரிவதில் சற்று தாமதம் ஏற்படுமானால் கைத்துப்பாக்கியால் (PISTOL) நெற்றியில் சுட்டுக்கொண்டால் மரணம் உடனே

சம்பவிக்கும் (INSTANT DEATH) என்று ஆலோசனை சொல்லியுள்ளார். அன்றே ஹிட்லர் சையனைடு விஷத்தை வாங்கி வைத்துக்கொண்டதாகத் தெரிகிறது. எதிரியின் இராணுவத்தினரிடம் பிடிபட்டு வேடிக்கைப் பொருளாக மாறி விடக்கூடாது (BEING MADE SPECTACLE) என்பதில் ஹிட்லர் மிகவும் கருத்தா யிருந்தான். பெர்லின் எதிரிகளிடம் பிடிபடப்போகிறது என்பது உறுதியான வுடன் எல்லா நம்பிக்கையும் இழந்தான். ஆனாலும் பைத்தியம் பிடித்தவனைப் போல (NERVOUS BREAKDOWN) சம்பந்தமில்லாத உத்தரவுகளைப் பிறப்பித்து கொண்டிருந்தான். ஜெர்மனியின் கோட்டை என்று கருதப்பட்ட பெர்லின் நகருக்குள் செம்படையினர் நுழைந்து குண்டு வீச்சுத் தாக்குதல் (BOMBARDMENT) தொடர்ந்தது. கடைசியாக "நாம் தோற்றுவிட்டோம்" என்பதை தனது நம்பகமானவர்களிடம் ஒப்புக்கொண்டான். இனியும் தாமதிக்க அவன் விரும்பவில்லை.

ஈவாபிரவுன் (EVABRAUN) திருமணம் செய்து கொள்ளாமலே ஹிட்லரின் மனைவிபோலிருந்தாள் (MISTRESS OF HITLER). கடைசிவரை அவள்தான் கூட இருந்தவள். ஹிட்லரின் மரணத்திற்கு சுமார் 40 மணி நேரத்திற்கு முன்பாக ஒரு சிறிய எளிமையான நிகழ்ச்சியில் ஈவாபிரவுனை திருமணம் செய்து கொண்டான்.

1945 ஏப்.30ம்தேதி பிற்பகல் 3 மணி அளவில் ஹிட்லர் ஈவா பிரவுனுக்கு சையனைடு விஷத்தைக் கொடுத்து விழுங்கச் சொல்லிவிட்டு தானும் விஷயத்தை விழுங்கினான். சற்று தாமதமானபடியால் ஹிட்லர் தன்னை நெற்றியில் சுட்டு தலை சிதறி உடனடியாக மரணத்தை சந்தித்தான். ஈவாபிரவுன் சையனைடு விஷத்தினாலேயே மரணமடைந்தாள். ஹிட்லரின் முன் ஏற்பாட்டின்படி ஹிட்லரின் மெய்க்காப்பாளர்களால் இருவருடைய சரீரமும் அரண்மனைத் தோட்டத்திலேயே அவசர அவசரமாகத் தீக்கிரை யாக்கப்பட்டது.

பெர்லின் படையினருக்குப் பொறுப்பாகயிருந்த இராணுவ அதிகாரி வீட்லிங் ஏப்.30ம் தேதி இரவு தன் படைகளை கலைத்துவிட (BREAK OUT ORDER) உத்தரவிட்டான். கலைந்த படையினர் சோவியத் ரஷ்யாவின் செம்படை யினரிடம் சரணடைந்தனர். பெர்லின் வீழ்ந்தது. மே 1ம் தேதி சோவியத் ரஷ்யாவின் கொடி ஜெர்மன் பாராளுமன்றத்தில் ஏற்றப்பட்டது.

ஜோசப் கொயபெல்ஸ் ஹிட்லரின் வலதுகரம்போலிருந்து செயல்பட்ட அமைச்சர். ஹிட்லரின் தற்கொலை அவனை மிகவும் பாதித்தது. ஹிட்லரின் மரணத்தைக் குறித்து "ஜெர்மனியின் இதயத்துடிப்பு நின்றுவிட்டது (THE

தலைவர் மறைந்தார்" என்று
HEART OF GERMANY HAS CEASED TO BEAT). 
சொன்னான். மேலும் மிகவும் பரிதாபத்திற்குரிய காரியம் என்னவெனில் ஹிட்லர் நம்மோடில்லை. நாம் எல்லாவற்றையும் இழந்துவிட்டோம். ஹிட்லர் தெரிந்துகொண்ட வழியைத் தவிர வேறு வழியே இல்லை. நான் அவருடைய மாதிரியையே பின்பற்றுவேன். (THE ONLY WAY LEFT FOR US IS THE ONE WHICH HITLER CHOSE. I SHALL FOLLOW HIS EXAMPLE). மே 1ம் தேதி காலை 8 மணி அளவில் நாஜிப்படை பல் டாக்டர் ஹெல்மூட் குன்ஸ் (HEL-MUT KUNZ) என்பவரை வருவித்தான். தன் ஆறு குழந்தைகளையும் மார்பின் (MORPHIN) இஞ்ஜெக்ஷன் போட்டு சுயநினைவு இழந்தவுடன் சயனைடு விஷத்தை அவர்கள் வாயில் ஊற்றும்படி கேட்டுக்கொண்டான். பின்னர் நடந்த விசாரணையில் குன்ஸ் மார்பின் இன்ஜெக்ஷன் கொடுத்ததாக ஒப்புக்கொண்டான். ஆனால் சயனைடு விஷத்தை ஹிட்லரின் தனிப்பட்ட டாக்டர் (HITLER'S PERSONAL DOC-TOR) கொடுத்தார் என்று கூறியுள்ளான். இதை முடித்துவிட்டு கொயபெல்சும் அவரது மனைவி அரண்மனை தோட்டத்திற்குள் சென்றனர். முதலில் தன் மனைவியை கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு தன்னையும் சுட்டுக் கொண்டு மரணத்தை சந்தித்தான். உதவியா ளர்களுக்கு அவனது கட்டளைப்படி எரிக்கச் சொன்னாலும் போதிய பெட்ரோல் இல்லாத காரணத்தால் அரை குறையாக எரித்து புதைக்கப்பட்டனர். எனினும் பின்னர் புதை குழியிலிருந்து எடுத்து அடையாளம் உறுதி செய்யப்பட்டது. பெண்களென்றும், தாய்மார்கள் என்றும், குழந்தைகள் என்றும் பாராமல் சுமார் 6 மில்லியன் யூத மக்களை சர்வநாசம் செய்து கொன்றழித்தவர்களின் முடிவைப் பாருங்கள். யூதமக்களின்



ஜோசப் கொயபெல்ஸ், அவனது மனைவி, 6 பிள்ளைகள், (இராணுவ உடை அணிந்திருப்பவன் வளர்ப்பு மகன் தற்கொலைக்குத் தப்பியவன்)

கண்ணீரும் கதறுதலும் சர்வநாசத்திற்கு (HOLOCAUST) பொறுப்பாயிருந்து செயல்பட்டவர்களை எப்படி சாபமாக மாறி அழித்துவிட்டது என்பதை சிந்தித்துப்பாருங்கள். ***"அநியாயத்தை உழுதீர்கள் தீவினையை அறுத்தீர்கள்"*** (ஓசி.10:13) என்ற ஓசியா தீர்க்கதரிசியின் வார்த்தை அவர்களுக்கு எப்படி பலித்துவிட்டது என்று பாருங்கள்.

ஜெனரல் வீட்லிங் மே 1ம் தேதி காலை 6 மணிக்கு தன்னுடைய படையினருடன் சோவியத் படையினரிடம் எந்த நிபந்தனையுமின்றி சரணடைந்தான். காலை 8.25 மணிக்கு ஜெனரல் வீட்லிங் சோவியத் படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சுக்கோவிடம் (CHUIKOV) கொண்டு நிறுத்தப் பட்டான். இந்த சுக்கோவ் தான் ஸ்டாலின் கிராட் யுத்தத்தை (BATTLE OF STALINGRAD) வெற்றிகரமாக முடித்தவன். "நீதான் பெர்லின் படைக்கு (BERLIN GARRISON) பொறுப்பாளனா?" என்று சுக்கோவ் கேட்டான். "ஆம் நான்தான்" என்றான் ஜெனரல் வீட்லிங். "உங்கள் தலைவன் எங்கே இருக்கிறான்?" "நேற்று பார்த்தேன். அவர் நேற்றே தற்கொலை செய்திருப் பார் என்று எண்ணுகிறேன்" என்று வீட்லிங் பதிலளித்தான். பின்னர் வீட்லிங் சரணடைந்த பத்திரத்தில் கையெழுத்திட்டான்.



## அடால்ஃப் இச்மேன் (ADOLF EICHMANN)

அடால்ஃப் இச்மேன் இரண்டாவது உலகமகா யுத்த காலத்தில் ஜெர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லரின் மூத்த இராணுவ அதிகாரியாக யிருந்தார். ஆனால் ஹிட்லரின் ஆணைப்படி யூதர்களைக் கொன்று அழிக்கும் நாஜிப் படை யினருக்கு செயல்பாட்டு அதிகாரியாகயிருந்தார் **(CHIEF OF OPERATION).** இஸ்ரவேல் நாட்டின் உளவுத்துறை **(MOSSAD)** தலைமறைவாகயிருந்த அவரை மிகுந்த சாமர்த்தியமாக கண்டுப் பிடித்து கைது செய்து இஸ்ரவேல் நாட்டிற்குக் கொண்டுவந்தனர்.

நாஜிப்படையிலும் நாஜிப்படையினருக்கு உடந்தையாயிருந்தோரின் தண்டனைச் சட்டம் **(1950) (NAZIS AND NAZI COLLABORATORS (PUNISHMENT ACT - 1950)** என்ற சட்டத்தின் கீழ் அவரை நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்தனர். விசாரணை **1961** ஏப்ரல் மாதம் தொடங்கியது. மனுக்குலத்திற்கு விரோதமாக குறிப்பாக யூத இன மக்களுக்கு விரோதமாகச் செயல்பட்டு அநேகமாயிரம் யூதர்களின் கொடூர கொலைக்குக் காரணமாயிருந்தவர் என்று முடிவு செய்து இஸ்ரவேல் நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை வழங்கியது.

அடால்ஃப் இச்மேன் உச்சநீதிமன்றத்திற்கு **(SUPREME COURT)** முறையீடு செய்தார். உச்சநீதிமன்றம் அவரது முறையீட்டை நிராகரித்து தூக்குத் தண்டனையை உறுதிசெய்தது. **1962** மே **30**ம் நாள் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டது.

**நன்றி : FACTS ABOUT ISRAEL**

# 16

# பால்போர் பிரகடனம்

## முதல் உலகமகா யுத்தத்தின் வெளிப்படையான காரணமும் விளைவுகளும்

முதலாவது உலகமகா யுத்தம் 1914ம் ஆண்டு ஆகஸ்ட் 4ம்தேதி தொடங்கி 1918 நவம்பர் 11ம் நாள் முடிவுக்கு வந்தது. இந்த யுத்தத்திற்கான நேரிடையான காரணம் என்னவெனில் 1914ம் ஆண்டு ஜூன் 28ம் தேதி ஆஸ்த்திரியா நாட்டு இளவரசனாகிய பெர்டினாண்டும் (FERDINAND) அவருடைய மனைவியும் பார்சினியா நாட்டின் தலைநகரமாகிய செஜியோ நகரத்திற்குச் சென்றபோது செர்பியா நாட்டின் வாலிபன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இதனால் ஆத்திரமடைந்த ஆஸ்த்திரியா செர்பியாவுக்கு விரோதமாகப் படையெடுத்தது, நட்பு நாடாகிய ரஷ்யா செர்பியாவுக்கு உதவி செய்ய முன் வந்தது. அப்பொழுது ஆஸ்த்திரியாவின் நட்பு நாடாகிய ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்க முற்பட்டது. இதைக்கண்ட ரஷ்யாவின் நட்பு நாடாயிருந்த பிரான்ஸ் ஜெர்மானியைத் தாக்க முனைந்தது. இதனைக் கண்ணுற்ற ஜெர்மனி 1914ம் ஆண்டு ஆகஸ்ட் 3ம்நாள் பிரான்ஸ் நாட்டின்மீது படையெடுத்தது. ஜெர்மனி பிரான்சைத் தாக்க பெல்ஜியத்தின் வழியாக அந்நாட்டின் முன் அனுமதி பெறாமல் தன் படையை அனுப்பினபடியால் பெல்ஜியத்தின் நட்பு நாடாக யிருந்த இங்கிலாந்து ஜெர்மனியைக் கண்டித்து ஆகஸ்ட் 4ம் நாள் போரில் இறங்கியது. இதில் 33 நாடுகள் கலந்துகொண்டன. ஆகவே அன்று உலகயுத்தம் தொடங்கிற்று. இப்போரின் விளைவாக 4 கோடிபேர்கள் உயிரிழந்தனர். பலகோடி மக்கள் கொடிய காயமுற்று அங்கவீனர்களானார் கள். பல நகரங்கள் தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டன. சுமார் 11 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட் சேதங்கள் ஏற்பட்டன.

## இரண்டாவது உலக மகா யுத்தத்தின் காரணங்களும் விளைவும்

இரண்டாவது உலக மகாயுத்தம் 1939ம் ஆண்டு செப்.3ம் நாள் தொடங்கி 1945ம் ஆண்டு செப்.2ம் நாள் முடிவுக்கு வந்தது.

1938ல் நடந்த மியுனிச் ஒப்பந்தத்தின்படி செக்கோஸ்யோவாக்கியாவின் எந்த பகுதியையும் ஆக்கிரமிப்பதில்லை என்று ஹிட்லர் வாக்குறுதி யளித்திருந்தான். எனினும் ஜெர்மனியின் ஆக்கிரமிப்புகளும் சண்டைகளும்

கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்துவிட்டது. ஹிட்லர், கட்டாயப் படுத்தி இராணுவத்தில் ஆட்களைச் சேர்த்தான். தன்னுடைய இராணுவ பலத்தைப் பெருக்கினான். 1938ல் ஆஸ்த்திரியாவைக் கைப்பற்றிக் கொண்டான். ஜெர்மனியின் நட்பு நாடாகிய இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி அல்பேனியாவைக் கைப்பற்றிக்கொண்டான். ஹிட்லரின் அத்து மீறிய நடவடிக்கைகளைக் கண்ட பிரிட்டனும் பிரான்சும் போலந்துடன் உடன்படிக்கை செய்துகொண்டன. 1939ல் ஜெர்மனியும் ரஷ்யாவும் உடன் படிக்கை செய்துகொண்டன. ஹிட்லர் போலந்து எல்லை வழியாக ஒரு இருப்புப்பாதை அமைக்க போலந்திடம் அனுமதி கேட்டான். போலந்து இதை மறுக்கவே 1939ம் ஆண்டு ஜன. 1ம் தேதி ஜெர்மனியின் இராணுவம் போலந்துக்குள் ஊடுருவிச் சென்றது. ஆதலால் பிரிட்டனும் பிரான்சும் தங்கள் வாக்குறுதிகளை போலந்துக்கு நிறைவேற்றும்படி 1939ம் ஆண்டு செப். 3ம் தேதி ஜெர்மனியின் மீது யுத்தப் பிரகடனம் செய்தது. இவ்வாறு இரண்டாவது உலகமகா யுத்தம் தொடங்கிற்று.

இப்போர் அச்சு நாடுகள் **(AXIS FORCE)** எனப்பட்ட ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளின் கூட்டணிக்கும் நேசநாடுகள் எனப்பட்ட **(ALLIED FORCE)** பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகளின் கூட்டணிக்கும் இடையே நடைபெற்றது. யுத்தத்தில் 61 நாடுகள் கலந்துகொண்டன. அதில் 40 நாடுகள் யுத்தக் களங்காயின. 1941ம் ஆண்டு டிச. 7ம் தேதி ஜப்பான் அமெரிக்காவின் கப்பல் தளமாகிய பேர்ல் துறைமுகத்தைத் **(PEARL HARBOUR)** தொடர்ந்து அமெரிக்கா நேசநாடுகளின் தரப்பில் ஜப்பானுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தது ஜெர்மனியின் தலைநகராகிய பெர்லினின் வீழ்ச்சி சர்வாதிகாரி ஹிட்லரின் தற்கொலை இவைகளைத் தொடர்ந்து 1945, மே 7ம்தேதி ஜெர்மனி நிபந்தனையின்றி ரஷ்ய செம்படையிடம் சரணாக தியடைந்தது. ஆனால் ஜப்பான் மாத்திரம் தொடர்ந்து போர் செய்தது. 1945ம் ஆண்டு ஜூலை 26ம் தேதி அமெரிக்காவும் கூட்டு நாடுகளும் சேர்ந்து ஜப்பானை சரணடைய எச்சரிக்கை விடுத்தது. ஜப்பான், அதற்கு செவிசாய்க் காதபடியால் 1945ம் ஆண்டு ஆக.6ம் நாள் அமெரிக்க விமானப்படை ஹிரோஷிமா நகரின் மீதும் 9ம் தேதி நாகசாகி நகரின் மீதும் அணுகுண்டைப் போட்டது. அக்கொடிய நிகழ்ச்சியில் இரு நகரங்களும் விளையாட்டு மைதானம் போன்று தரைமட்டமாக்கப்பட்டது. 2 இலட்சத்திற்கு அதிகமான பேர் கொல்லப்பட்டார்கள். அணுகுண்டு கதிர்வீச்சால் இன்றும் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த பெரு நாசத்திற்குப் பின் ஆகஸ்ட் 14ம் நாள் நிபந்தனையின்றி ஜப்பான் சரணடைந்தது. செப்.2ல் அது

தொடர்பான கையெழுத்தாயிற்று. அதோடு இரண்டாவது உலக யுத்தம் முடிவுக்கு வந்தது.

இந்த யுத்தத்தின் விளைவாக மொத்தம் 5,48,00,000 பேர்கள் கொல்லப் பட்டார்கள். சோவியத் யூனியனில் மட்டும் 2,08,00,000 பேர்களும் ஜெர்மனியில் 66,00,000 பேர்களும் மற்ற ஐரோப்பிய நாடுகளில் 44,00,000 பேர்களும் அமெரிக்காவில் 3,29,000 பேர்களும் கொல்லப்பட்டார்கள். இதில் கொல்லப் பட்டவர்களுள் 1,30,00,000 குழந்தைகளும் அடங்குவார்கள். இந்த உயிரிழப்பு தோராயமான ஒரு மதிப்பீடே தவிர சம்பந்தப்பட்ட அனைத்து நாடுகளிலும் உயிரிழப்பு எண்ணிலடங்காது என்று சொல்லப்படுகிறது.

ஜெர்மனியில் ஹிட்லரின் நாசிக் ஆட்சியும் இத்தாலியில் முசோலினியின் பாசிய ஆட்சியும் ஒழிந்தன. ஜெர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்டு மேற்குப் பகுதி நேசநாடுகளான இங்கிலாந்து பிரான்ஸ் ஆகிய நாடுகளின் மேற் பார்வையின் கீழும், கிழக்கு பகுதி ரஷ்யாவின் மேற்பார்வையிலும் விடப் பட்டது. பெர்லின் நகரமும் இரண்டாப் பிரிக்கப்பட்டு கிழக்கு பெர்லின், மேற்கு பெர்லின் என ஆனது.

### இரண்டு யுத்தங்களின் முக்கிய பயனாளி (BENEFICIARY) யார்?

உலகம் இரண்டு மகாயுத்தங்களைச் சந்தித்தது. மேலே குறிப்பிடப்பட்டத் தகவலின்படி ஆச்சிஸ் கூட்டணி நாடுகளிலும் நேசநாடுகளிலிருந்தும் இராணுவத்தினரும் பொதுமக்களுமாக கோடிக்கணக்கான மக்கள் யுத்தக் களத்தில் மரணத்தைச் சந்தித்தார்கள். பலகோடி ரூபாய் பெறுமான பொருள் நஷ்டத்தைச் சந்தித்தார்கள். இந்த யுத்தத்தினால் நாடுகள் அடைந்த நஷ்டத்திற்கு கணக்கே இல்லை. எத்தனைபேர் இறந்தார்கள் எத்தனை பேர் அங்கவீனர்கள் ஆனார்கள் என்பதற்கு கணக்கே சொல்லமுடியாது என உலகப் பிரசித்திப்பெற்ற என்சைக்கிளோபீடியா பிரிட்டானிக்கா (ENCYCLO PAEDIA BRITANNICA) கூறுகிறது.

### எருசலேம் யுத்தக்களம் (BATTLE OF JERUSALEM)

இவ்வளவு பேரழிவுக்கும் மத்தியில் யூதமக்களைக்குறித்து தேவன் ஒரு மேலான நோக்கத்தை வைத்திருந்தார். அது என்னவெனில் முதல் உலக மகா யுத்தத்தின்போது பாலஸ்தீனமும் எருசலேம் நகரமும் பிரிட்டீஷ் இராணுவத்தின் வசமாயிற்று. எருசலேம் அப்பொழுது ஒட்டாமான் ஆட்சியின் கீழிருந்தது. 1917ம் ஆண்டு நவ.17 முதல் டிச.30 வரை ஒட்டாமான் (OTTOMAN) இராணுவத்தோடு பிரிட்டிஷ் ஜெனரல் எட்மண்ட் ஆலன்பி (Genrl. Edmand

Allenby) தலைமையில் நடந்த எருசலேம் யுத்தக்களத்தில் (Battle of Jerusalem) எருசலேம் பிரிட்டிஷ் வசமாயிற்று. ஜெனரல் ஆலன்பி எருசலேம் நகருக்குள் செல்லும்போது அந்நகரின் பரிசுத்தம் கருதி குதிரையிலேயோ அல்லது எந்த வாகனத்திலேயோ செல்லாமல் கால்நடையாகவே சென்றார். (படத்தில் காண்க). அதோடு எருசலேமில் 400 ஆண்டுகால ஒட்டா மான் ஆட்சி முடிவுக்கு வந்தது.



**வேதாகம கால யுத்த யுக்தி (BIBLICAL BATTLE STRTEGY)**

எருசலேம் நகரம் ஜெனரல் ஆலன்பி தலைமையிலான படையினரால் பிடிக்கப்பட்டதில் ஒரு ஆச்சரியமான சம்பவம் நிகழ்ந்தது. “எருசலேம் யுத்தக் களம்” (BATTLE OF JERUSALEM) என்றிருந்தாலும் பிரிட்டிஷ் படையினருக்கும் துருக்கியப் படையினருக்கும் ஒரு பெரும் மோதலின்றி எளிதாக எருசலேம் பிடிபட்டது. வேதகாலத்தில் நடந்ததுபோலவே 20ம் நூற்றாண்டிலும் யுத்தக் களங்களில் தேவன் ஆச்சரியமானவைகளைச் செய்கிறார்.

மேஜர் விவியன் கில்பெர்ட் (MAJOR VIVIAN GILBERT) ஜெனரல் ஆலன்பி படைப் பிரிவில் இருந்தவர். இவர் ஒரு நல்ல கிறிஸ்தவர். யுத்தக் களத்திலிருந்தால் வேதவாசிப்பில் தவறாத ஒரு தேவமனிதர். அவர் வேதத்தை வாசித்துக் கொண்டிருந்தபோது “மிக்மாஸ்” (MICHMASH) என்ற சொல் அவருடைய சிந்தையில் பளிச்சென்று வெளிப்பட்டது. இந்த பெயர் அவருக்குக் கேள்விப் பட்ட பெயராக இருந்தது. அவர் வேதத்தில் தேட ஆரம்பித்தார். கடைசி

யாக, 1 சாமு.13:16ல் "மிக்மாஸ்" (MICHMASH) பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக படையெடுத்து வந்தபோது பெலிஸ்தர் முகாமிட்டிருந்த இடம் என்பதை அறிந்துகொண்டார். ஏன் இந்த இடத்தை தேவன் இப்பொழுது சுட்டிக்காட்டுகிறார் என்று அதை ஆழ்ந்து படிக்க ஆரம்பித்தார்.

சவுல் இராஜாவாக இருந்த காலத்தில் பெலிஸ்தருக்கும் இஸ்ரவேலர் களுக்கும் ஒரு யுத்தம் நடந்தது. பெலிஸ்தர் "மிக்மாஸ்" என்ற இடத்தில் பாளயமிறங்கினார்கள். சவுலின் குமாரனாகிய யோனத்தானும் அவனுடைய ஆயுத தாரியும் மாத்திரம் தங்களுடைய படையினருக்குத் தெரியாமல் பெலிஸ்தரின் பாளையத்தை உளவு பார்க்கும்படி இரவோடு இரவாகச் சென்றனர். பெலிஸ்தரின் பாளையத்தின் அருகில் ஒரு செங்குத்தான பாறை இருந்தது. அந்தப் பாறைக்கு எதிர்புறத்தில் செங்குத்தான மற்றுமொரு பாறையும் இருந்தது. அப்பாறையின் ஒன்றின் பெயர் போசேஸ், மற்றொன் றின் பெயர் சேனே. யோனத்தான் தனது ஆயுததாரியிடம் ***"ஒருவேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார். அநேகம்பேரைக் கொண்டாகிலும், கொஞ்சம்பேரைக் கொண்டாகிலும் இரட்சிக்கக் கர்த்தருக்குத் தடையில்லை என்றான்."*** பெலிஸ்தரின் காவலாளிகள் "நாங்கள் உங்களிடத்துக்கு வருமட்டும் நில்லுங்கள்" என்றால் நின்று விடுவோம். "எங்களிடத்துக்கு ஏறிவாருங்கள்" என்றால் ஏறிப்போவோம், கர்த்தர் அவர்களை நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார். இது நமக்கு அடையாளம் என்றான்" (1 சாமு.14:10,11). யோனாத்தானின் விசுவாசத்தின் படியே பெலிஸ்தரின் காவலாளிகள் "எங்களிடத்துக்கு ஏறிவாருங்கள். உங்களுக்கும் புத்தி கற்பிப்போம் என்றார்கள்." யோனத்தானும் ஆயுத தாரியும் கைகளாலும் கால்களாலும் தவழ்ந்து ஏறிப்போனார்கள். அவர்களை அவன் நெருங்கியவுடன் அவர்கள் எதிர்பார்க்காமல் அடித்த அடியில் 20பேர் விழுந்தார்கள். அவனுடைய ஆயுததாரி யோனத்தான் பின்னாலே சென்று அவர்களை வெட்டிக்கொன்றான். இந்த திடீர் தாக்குதலில் சுமார் அரை ஏக்கர் இடத்தில் அவர்கள் செத்துக்கிடந்ததையும் பார்த்த பெலிஸ்தர் இஸ்ரவேலர் நம்மைச் சுற்றி வளைத்துவிட்டனர் என்று பயந்து தப்பியோட முயற்சித்தனர். எதிராளிகளின் படையினர் இரவானபடியால் தங்களைத் தாக்குபவர்கள் யார் என்பதைக்கூட அடையாளங்கண்டுகொள்ளமுடியாமல் ஒருவரையொருவர் வெட்டிக்கொண்டதில் பலர் உயிரிழந்தனர். எதிராளியின் முகாமின் கூக்குரல் கேட்டு இஸ்ரவேலர் புறப்பட்டுச் சென்று தப்பியோடிய வர்களை விரட்டிச்சென்று வெட்டிப்போட்டார்கள். ***"இப்படிக் கர்த்தர் அன்றையதினம் இஸ்ரவேலை இரட்சித்தார்"*** (1 சாமு.14:23).

மேஜர் கில்பெர்ட் ஜெனரல் ஆலன்பியிடம் சென்று இதை விவரித்தார். சம்பந்தப்பட்ட வேதப்பகுதியை வாசித்துக்காட்டினார். இதில் விசேஷம் என்ன வெனில் இதே மிக்மாஸ் பகுதியில்தான் துருக்கிய இராணுவம் முகாமிட்டி ருந்தது. ஜெனரல் ஆலன்பியும் மேஜர் கில்பெர்ட்டும் இதைக்குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். தங்களது சிறிய ரோந்துப் படையினரை (PATROL PARTY) அனுப்பி அந்த குறிப்பிட்ட இடத்தை முன்கூட்டியே அடையாளங்கண்டு கொண்டனர். யோனத்தானைப் போலவே இரவு வேளையைத் தெரிந்து கொண்டு அனைத்துப் படையினரையும் பயன்படுத்தாமல் ஒரு கம்பெனி இராணுவத்தினரை மட்டும் பயன்படுத்தி எதிர்பட்ட முகாம் காவற்படை யினரை எந்த சத்தமுமின்றி கொன்று திடீரென்று துருக்கிய இராணுவத் திற்குள் நுழைந்து பிரிட்டிஷ் படையினர் தாக்க ஆரம்பித்தனர். துருக்கிய இராணுவம் பிரிட்டிஷ் இராணுவம் தங்களை சுற்றி வளைத்துக்கொண்டதாக எண்ணி எதிர்தாக்குதலுக்கும் ஆயத்தமின்றி துருக்கிப் படையினர் தப்பியோட ஆரம்பித்தனர். அநேகர் கொல்லப்பட்டார்கள். மீதமுள்ளோர்கள் யுத்தக் கைதிகளாகப் பிடிபட்டார்கள். பிரிட்டிஷ் இராணுவம் ஒரு பெரிய யுத்தமின்றி வெற்றியைக் கண்டது.

மேஜர் கில்பர்ட் மூலமாக வேதப்பகுதியை சுட்டிக்காட்டி அதன்படியே இந்த யுத்தத்தையும் நடத்த தேவனுடைய நடத்துதலை எண்ணிப்பாருங்கள். தேவனுடைய திட்டத்தில் எருசலேம் பிடிக்கப்பட்டு இஸ்ரவேலர்களுக்கு கொடுக்கப்படவேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார். அவருடைய திட்டத் தின்படியே நடந்தது. ***"தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீ செய்ய நினைத்தது தடைபடாது"*** (யோபு 42:2) என்பது எவ்வளவு பெரிய உண்மை.

**டாக்டர் கெய்ம் வெய்ஸ்மேனின் கண்டுபிடிப்பு:**


டாக்டர் கெய்ம் வெய்ஸ்மேன்

டாக்டர் கெய்ம் வெய்ஸ்மேனின் கண்டு பிடிப்பு முதல் உலக மகா யுத்தத் தில் பிரிட்டனின் வெற்றிக்கு ஒரு முக்கிய மான காரணமாயிருக்கிறது. டாக்டர் கெய்ம் வீஸ்மான் (Dr. CHAIM WEIZMAN) என்ற இரசாயன விஞ்ஞானி ஸ்விட் சர்லாண்டு நாட்டில் ஒரு கல்லூரியில் ஒரு விஞ்ஞானப் பேராசிரியராக பணியாற்றி வந்தார். அவர் ஒரு யூதர். ஆனால் திடீரென்று 1904ம் வருடம் அப்பணியை விட்டுவிட்டு இங்கி

லாந்திலுள்ள மான்செஸ்டர் நகரில் பேராயராகப் பணியேற்றார். அதே சமயம் சொந்தமாக சோள வகைகளி(**Maize**)லிருந்து அசிட்டோன் (**Acetone**) என்னும் மருந்து செய்வதைப் பற்றியும் ஆராய்ச்சி செய்துவந்தார். அசிட்டோன் என்ற மருந்து கப்பல்களிலுள்ள பீரங்கிகளில் உபயோகப்படும் மருந்து. இது ஐரோப்பாவில் வளர்ந்து வந்த ஒருவகை மரத்திலிருந்து செய்யப்பட்டது. 1914ம் வருடம் ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் யுத்தம் தொடங்கி அது உலக மகாயுத்தமாக மாறிவிட்டது. அதனால் ஐரோப்பாவிலிருந்து அந்த மரங்களை கொண்டுவர வழியில்லை. அசிட்டோன் செய்வதும் தடைபட்டது. பீரங்கிகளுக்கு வேண்டிய குண்டு மருந்து இல்லாதபடியால் இங்கிலாந்து திகைத்தது, எங்கே யுத்தத்தில் தோற்று விடுவோமா என்று பயந்தது.

**பால்போர் பிரகடனம்:**

இதற்கிடையில் செய்ம் வெய்ஸ்மேனுக்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பெரிய அதிகாரிகளுக்கும் பழக்கம் ஏற்பட்டது. பாதுகாப்பு அமைச்சர் வெய்ஸ்மேனிடம் அசிட்டோன் மருந்து பெரிய அளவில் செய்து தரமுடியுமா என்று கேட்டார். வெய்ஸ்மேன் அதற்கு வேண்டிய சோள வகைகளும், தொழிற்சாலையும் கொடுத்தால் வேண்டிய அளவு தயாரித்துத் தருவதாகக் கூறினார். அப்படியே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் எல்லா நாடுகளிலுமிருந்தும் வேண்டிய சோளம் கொண்டுவரப்பட்டன. தொழிற்சாலைகளும் இயங்கின. வேண்டிய அளவு அசிட்டோன் மருந்தை வெய்ஸ்மேன் தயாரித்துக் கொடுத்தார். பிரிட்டன் யுத்தத்தில் ஜெயித்தது. அப்பொழுது இங்கிலாந்தின் பிரதம அமைச்சர் லாயிட் ஜார்ஜ், வெளிநாட்டு செயலாளர் ஜேம்ஸ் பால்போர், யுத்தத்தில் ஜெயம் பெறுவதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருந்த செய்ம் வீஸ்மானுக்கு நல்ல வெகுமதி கொடுக்கவேண்டும் என்று அவர்கள் எண்ணி, அவருக்கு என்ன வேண்டும் என்று கேட்டனர். அவர், யூதர்கள் பலஸ்தீனாவில் வந்து குடியேற அனுமதிக்கப்பட வேண்டுமென்றார். அப்படியே அமைச்சரவையின் ஒப்புதலின் பேரில் வெளிநாட்டுச் செயலாளர் ஜேம்ஸ் பால்போர் ஒரு பிரகடனம் **9.12.1917**ல் வெளியிட்டார். அதன் சாராம்சம், யூதர்கள் எந்த நாட்டிலிருந்தாலும் அங்கிருந்து பலஸ்தீனாவில் வந்து தங்கித் தங்களுக்கு அங்கே சொந்த வீடு கட்டிக் குடியிருப்பதற்குப் பிரிட்டனுக்கு ஒரு ஆட்சேபனையும் இல்லை என்பதே. அச்சமயத்தில் பலஸ்தீனாவின் நிர்வாக பொறுப்பு பிரிட்டனிடம் இருந்து வந்தது. அதற்கு பால்போர் பிரகடனம் என்றே பெயரும் உண்டானது.

**இந்தப் பிரகடனத்துக்குப் பின் 1918க்கும் 1948க்கும் இடையில் பல ஸ்தீனாவுக்குள் வந்து சேர்ந்த யூத ரின் எண்ணிக்கை 5,65,000.**

## தீர்க்கதரிசனம் நிறைவேறுதல்



இஸ்ரவேல் மக்கள் மீண்டும் தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்ப வருவார்கள் என்பது தேவனுடைய திட்டம். அவர் அதை தமது தீர்க்கதரிசிகள் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார் என்பதை வேதத்திலிருந்து அறிகிறோம்.

எரேமியா (கிமு.590) ***"இதோ, என் சினத்திலும், என் கோபத்திலும், என் மகா உக்கிரத்திலும், நான் அவர்களைத் துரத்தின எல்லாத் தேசங்களிலுமிருந்து அவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களை இந்த ஸ்தலத்துக்குத் திரும்பி வரவும் இதிலே சுகமாய்த் தங்கியிருக்கவும் பண்ணுவேன். அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்"*** (எரே.32:37,38). ***"அவர்களுக்கு நன்மை செய்யும்படி அவர்கள்மேல் சந்தோஷமாயிருந்து, என் முழு இருதயத்தோடும் என் முழு ஆத்துமாவோடும் அவர்களை இந்தத் தேசத்திலே நிச்சயமாய் நாட்டுவேன்"*** (வ.41). ***"என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்"*** (ஆமோஸ் 9:14,15) என்று வாசிக்கிறோம். தீர்க்கதரிசனங்கள் உரைத்து நூற்றாண்டுகள் உருண்டோடினாலும் தேவன் தமது தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்ததை மறந்துவிடவில்லை. அவற்றை நினைவு கூர்ந்து அவர்களைத் திரும்பவும் சொந்த நாட்டிற்குத் திரும்பக் கொண்டு வந்து சேர்த்தார்.

இஸ்ரவேல் மக்கள் 400 ஆண்டுகள் அந்நிய தேசத்திலே அடிமையாக இருப்பார்கள். அவர்கள் அங்கு உபத்திரவப்படுவார்கள் என்றும் மீண்டும் அவர்களை திரும்ப சொந்த தேசத்திற்குக் கொண்டுவருவேன் என்று ஆபிரகாமுக்குச் சொன்னார் (ஆதி. 15:13,14) அது அப்படியே நடந்தது. 400 ஆண்டுகள் நிறைவேறியபோது தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதியை நினைவுகூர்ந்தார் (யாத்.2:23–25). அவர்களை மோசேயின் தலைமையின் கீழ் எகிப்திலிருந்து மீட்டுக் கானானுக்குக் கொண்டுவந்தார்.

அதேபோலவே முதலாம் நூற்றாண்டில் பல்வேறு நாடுகளுக்கு சிதறடிக்கப்பட்ட மக்களை 20ம் நூற்றாண்டில் திரும்பக் கொண்டுவந்தார். அவர் அதற்காக செயல்பட்டார். நிறைவேற்றினார். ***"தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்"*** (யோபு 42:2) என்ற யோபின் அறிக்கை எவ்வளவு உண்மை என்பதை எண்ணிப்பாருங்கள். நடந்த யுத்தங்களின் உள்ளார்ந்த நோக்கத்தை (ULTIMATE OBJECT) விளங்கிக்கொள்ள முடிகிறதா? தேவன் தெரிந்துகொண்ட தம்முடைய மக்களை சொந்த நாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்பதே. அதை தேவன் நமது புரிந்துகொள்ளுதலுக்கும் அப்பால் செய்து முடித்தார். அவருடைய ஞானம் ஆராய்ந்து முடியாதது.

*"கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் என்பதே"*

*(எண்.6:24-26).*



விஷவாயு அறையின் உள்தோற்றம். அறையின் கூரையில் ஒரு சிறிய திறப்பைக் **(Small opening)** காணலாம். அந்த திறப்பின் வழியாக வெளியே கசிவு வராத வண்ணம் அமைத்து விஷவாயுவை நாஜிப்படையினர் உள்ளே செலுத்துவார்கள்.

தகவல் : **Holocaust Memorial Museum** இணையதளம்

# 17 இஸ்ரவேல் சுதந்திர நாடாகப் பிரகடனம்

***"அக்காலத்திலே உங்களைக் கூட்டிக்கொண்டுவருவேன்; அக்காலத்திலே உங்களைச் சேர்த்துக் கொள்ளுவேன்; உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது, பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"***
(செப்.3:20).

## இஸ்ரவேல் உருவாக தியோடர் ஹெர்சலின் பணி


தியோடர் ஹெர்சல்

"இஸ்ரவேல் தனி நாடாக விரைவில் உருவாகும். அப்பொழுது என்னுடைய கல்லறையைத் தோண்டி என் எலும்புகளை எடுத்து அவைகளை எருசலேமில் புதைக்கவேண்டும்" இது உலக சியோனியர் சங்கத்தை (WORLD ZIONIST ORGANISATION) உருவாக்கிய தியோடர் ஹெர்சல் (THEODOR HERZEL) 1904ம் ஆண்டில் தனது மரண சாசனத்தில் எழுதி வைத்த வாசகம். அவருடைய மேன்மையான விசுவாசம் குறிப்பிடத்தக்கதாகும். 1896ல் அவர் எழுதிய "யூதர்களுக்குத் தனிநாடு" (THE JEWISH STATE) என்ற புத்தகம் யூதர்கள் சிதறியிருந்த அனைத்து நாடுகளிலும் மிகவும் பிரபல்யமாயிற்று. சிறையிருப்பிலும், சித்திரவதைகளிலும் மரணத்தின் விழிம்பில் ஊசலாடிக்கொண்டிருந்த யூதமக்களை அப்புத்தகம் உயிர்ப்பித்தது. அப்புத்தகம் வெளியாகிய 52வது ஆண்டுகள் இஸ்ரவேல் தனி நாடாக மாறியது என்றால் அது எவ்வளவு பெரிய ஆச்சரியம். இஸ்ரவேல் மக்கள் அவருடைய இறுதி விருப்பத்தைக் கனப்படுத்தினார்கள். அவருடைய எலும்புகளைத் தோண்டி எடுத்து வந்து 1949 ஆகஸ்ட் 10ம் நாள் எருசலேம் நகரில் ஒரு மலை உச்சியில் மீண்டும் அடக்கம் செய்தனர். அந்த மலைக்கு அவருடைய நினைவாக "ஹெர்சல் மலை" என பெயர் சூட்டினர்.

முதலாம் உலக மகா யுத்தத்தின் இறுதியில் அனைத்து நாடுகளின் சபை (LEAGUE OF NATIONS) என்ற உலக அமைப்பு தோன்றியது. அது ஒரு வலுவற்ற

அமைப்பாகவே செயல்பட்டது. அந்த அமைப்பால் இரண்டாவது உலக மகா யுத்தத்தைத் தடுத்து நிறுத்தமுடியவில்லை. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் இறுதியில், ஐக்கிய நாடுகளின் சபை (UNITED NATIONS ORGANISATION) என்ற அமைப்பு அதிக அதிகாரங்களோடு உருவாயிற்று. உலக யுத்தம் முடிவடைந்தபோது யூதர்களுக்கு ஆதரவாகயிருந்த பிரிட்டீஷ் அரசாங்கம் பாலஸ்தீனத்தில் குடியேறிய யூதமக்களை 1920ல் தங்களுக்கென்று ஒரு அரசாங்கத்தை அமைத்துக்கொள்ள அனுமதித்தது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னர் யூதர்களின் குடியேற்றத்திற்கு தனி அரசாங்கம் அமைப்பதிலும் அமெரிக்கா ஆதரவு அளித்தது.

### இஸ்ரவேல்- ஐ. நா. சபை தீர்மானம்

1947 ஏப்.28ம் நாள் பாலஸ்தீனர்களின் பிரச்சனை ஐக்கிய நாடுகளின் சபைக்கு (UNO) வந்தபோது அரபியருக்கும் யூதர்களுக்கும் பாலஸ்தீனாவை பகிர்ந்து கொடுப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. அதை நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஏழு மாதங் களுக்குப் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையில் இதற்கான தீர்மானம் நிறைவேறியது. பாலஸ்தீனத்திலிருந்த பிரிட்டீஷ் படைகள் 1948 மே 14ம் தேதி வெளியேறுவதாக இருந்தது. யூதர்கள் தங்களுடைய சுதந்திரத்தை இந்த வெளியேற்றத்தின்போது பிரகடனப்படுத்துவதா அல்லது வேறொரு நாளைத் தெரிந்து கொள்வதா என்று இஸ்ரவேல் தலைவர்கள் கலந்தாலோசனை செய்து அதே நாளிலே தங்களை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தினார்கள்.

பாலஸ்தீனம் பகுக்கப்பட்டதற்கு அரபிய நாடுகளில் கடும் கண்டனம் எழும்பியது. ரஷ்யா இந்த தீர்மானத்திற்கு ஆதரவு தந்ததைக் கண்டித்து தமஸ்குவில் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகம் சீரிய நாட்டு வாலிபர்களால் எரித்து சாம்பலாக்கப்பட்டது. பெய்ரூட் நகரில் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டுவதற்காக ஒரு கும்பல் அங்கே இருந்த அரபிய அமெரிக்க எண்ணெய் நிறுவனத்தின் உள்ளே புகுந்து வன்முறையில் ஈடுபட்டனர். ஜோர்டானின் தலைநகரான ஆமானில் இரண்டு பேராசிரியர்களை கொலை வெறி கொண்ட கும்பல் கொன்றது.

### இஸ்ரவேல் - சுதந்தர நாடாகப் பிரகனம்

இவ்விதமாக எதிர்ப்புகள் மத்தியில் 1948 மே 14ம் நாள் இஸ்ரவேல் தன்னுடைய சுதந்தரத்தைப் பிரகடனப்படுத்தியது. அன்று அதிகாலை சூரியன் உதிப்பதற்கு முன்பாகவே இஸ்ரவேல் மக்கள் சுதந்தரத்தை

வீதிகளில் கொண்டாடிக்கொண்டிருந்தார்கள். அன்று அதிகாலை 3 மணிக்கெல்லாம் யூதர்களுடைய ஜெப ஆலயங்கள் திறக்கப்பட்டு ஸ்தோத்தரிக்கும் கூட்டத்தால் நிரம்பி வழிந்தன. அன்று பிரிட்டிஷார், பாலஸ்தீனத்தைவிட்டு வெளியேறினர். அவர்கள் அந்த நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன்பாக செய்த கடைசி காரியம் என்னவெனில் ஒரு பெரிய இராணுவ அணிவகுப்பை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி யூத ரபியாகிய மொர்தெகாய் வெயினார்ட்டான் என்பவரிடம் சீயோன் வாசலுக்கான திறவுகோலைக் கொடுத்ததுதான்.

## முதல் ஜனாதிபதி

டாக்டர். செய்ம் விஸ்மானைக் குறித்து அவரது விஞ்ஞானக் கண்டு பிடிப்பைக் குறித்து கடந்த இதழில் நாம் கவனித்தோம். அவருடைய கண்டு பிடிப்பே முதலாம் உலகப்போரில் பிரிட்டனின் வெற்றிக்கு ஏதுவாக அமைந்தது. அவர் அரசியல் வட்டாரத்தில் செல்வாக்குள்ளவராக இருந்த படியால் யூதமக்களுக்கு பாலஸ்தீன நாட்டில் குடியேறும் உரிமை வேண்டு மென்று கேட்டார். அதுவே பால்போர் பிரகடனத்திற்கு ஏதுவாயிற்று. அவர் ஒருமுறை "இந்த தேசத்திற்கு விஞ்ஞானம் சமாதானத்தையும் மறுமலர்ச்சி யையும் கொண்டுவரும் என நான் நிச்சயமாக நம்புகிறேன். அது உலகப் பிரகாரமான செயலுக்கு மாத்திரமல்ல ஆன்மீக மறுமலர்ச்சியையும் உருவாக்கும். விஞ்ஞானம் ஒரு இலக்கை அடையும் வழி. அதுவே இலக்கு அல்ல" என்று சொன்னார். அவருடைய கண்ணோட்டத்தைப் பாருங்கள். டாக்டர். செய்ம் விஸ்மானைக் கனப்படுத்தும் வகையில் அவரை சுதந்தர இஸ்ரவேல் நாட்டின் முதல் ஜனாதிபதியாக **(First President)** ஆக்கினார் கள். அவர் 1949 மே 11ம் நாள், ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார்.

## முதல் பிரதம அமைச்சர்



டேவிட் பென் குரியன் **(DAVID BEN GURION)** இஸ்ரவேல் நாட்டின் முதல் பிரதம அமைச்ச ராகப் பொறுப்பேற்றார். அவர் அப்போதைய ரஷ்யப் பேரரசின் **(RUSSIAN EMPIRE)** கீழிருந்த போலந்து நாட்டில் பியோனிக்ஸ் **(PIONSK)** என்ற நகரில் பிறந்து வளர்ந்தவர். அவருடைய தகப்பனார் அவிக்டான் கிரன் **(AVIG-DON GRUN)** ஒரு சிறந்த வழக்கறிஞர். சீயோன் சங்கத்தின்

(ZION MOVENMENT) தலைவராகவுமிருந்தார். பென் குரியன் 14 வயதாக இருக்கும்போது அவர் நண்பர்களை இணைத்து "எஸ்றா இளைஞர் குழு" (EZRA YOUTH CLUB) ஒன்றை ஆரம்பித்து எபிரெய மொழியைக் கற்றுக் கொள்ளவும் தங்கள் சொந்த நாடாகிய புனித பூமிக்குச் செல்ல ஆயத்தப் படவும் அநேகரை ஊக்குவித்தார். இளம் வயதிலேயே அப்படிப்பட்ட தேசபக்தி உள்ளவராக இருந்தார். 1905ம் ஆண்டு வார்சா (WARSAW) பல்கலைக் கழகத்தில் மாணவராக சேர்ந்தார். மாணவ பருவத்திலேயே "சோஷல் டெமாக்கிரட்டிக் ஜூயிஷ் ஒர்க்கர்ஸ் பார்ட்டி" (SOCIAL-DEMOCRATIC JEWISH WORKERS PARTY) என்ற ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார். 1905ம் ஆண்டு நடந்த ரஷ்யப் புரட்சியின்போது இரண்டு முறை கைது செய்யப்பட்டு சிறையில டைக்கப்பட்டார். 1906ம் ஆண்டு ஒட்டாமான் துருக்கியர் ஆட்சியிலிருந்து பாலஸ்தீன சொந்த நாட்டிற்குத் திரும்பினார். முதல் உலக மகா யுத்தத்தின் போது பிரிட்டிஷ் இராணுவத்தில் யூதர் பிரிவில் (JEWISH LEGION) சேர்ந்து செயல்பட்டார். முதல் உலக யுத்தத்திற்குப் பின் அவர் இராணுவத்திலிருந்து விலகி போலிஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலாகப் பதவி ஏற்றார். (DY- IN-SPECTOR GENERAL OF POLICE) யூதர்களுக்கும் அரபியர்களுக்குமுள்ள பூசலில் அர பியர்களுக்கு சில இடங்களை விட்டுக் கொடுத்தாலும்கூட அரபியர்கள் திருப்தியடையாதது அவரை மிகவும் துக்கப்படுத்தியது. இருதரத்தாரின் சமாதானத்தை விரும்பி அவர் ஒரு மிதவாதியாகவே (LIBERAL) செயல்பட்டார். பல தீவிரவாத கோட்பாடுள்ள (RADICALS) தலைவர்கள் இருந்தாலும் அவரே பிரதம அமைச்சராகத் தெரிந்து கொள்ளப்பட்டார்.

## இஸ்ரவேல் மக்கள் சொந்த நாட்டிற்குத் திரும்புதல்

முதல் உலக மகா யுத்தத்தின் முடிவில் பால்போர் பிரகடனத்திற்கு பின்னர் பல நாடுகளில் கொடுமைக்குள்ளாக்கப்பட்ட யூதர்கள் அவர்கள் சொந்த நாட்டிற்குத் திரும்ப ஆரம்பித்தனர். இரண்டாம் உலக யுத்த முடிவில் ஜெர்மனியிலிருந்து 1,65,000 யூதர்கள் நாடு திரும்பினார்கள். நாடு சுதந்தரம் அடைந்த பின்னர் 1950ம் ஆண்டு யூதர்கள் நாடு திரும்புவதற்கான சட்டம் வடிவமைக்கப்பட்டது. பல்வேறு நாடுகளிலும் பல்வேறு கலாச்சாரங்களிலும் இருந்து யூதர்கள் இஸ்ரவேலுக்கு வந்து சேர்ந்தார்கள். இப்படி வந்த யூதர்கள் பல்வேறு திறமையுள்ளவர்களாகவும் இருந்தனர். ஐரோப்பியாவிலிருந்து வந்த யூதர்களில் பலர் மருத்துவர்களும், பொறியியல் நிபுணர்களும், தொழில் நுட்ப வல்லநர்களும், வணிகப் பெருமக்களும், பண்டிதர்களும், விஞ்ஞானிகளும், முதலீடு செய்வதற்கு வல்லவர்களாகவும் இருந்தார்கள். ரஷ்யாவிலிருந்து

வந்த யூதர்கள் இஸ்ரவேல் நாட்டின் வேளாண்மை மற்றும் தொழிற் சாலைகளின் முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்தார்கள். ரஷ்யா விலிருந்து வந்த யூதர்கள் இஸ்ரவேலின் எதிர்காலத்தை வடிவமைத்தலில் பெரும்பங்கு வகித்தார்கள். மூன்று ஜனாதிபதிகள், இரண்டு பிரதம அமைச்சர்கள் ஆகியோர் ரஷ்யாவிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களே.

உலகமெங்குமுள்ள யூதர்களை இஸ்ரவேலுக்குக் கொண்டுவர இஸ்ரவேல் அரசாங்கம் அதிக முயற்சிகளை மேற்கொண்டது. 1949ம் ஆண்டு மே மாதம் 45,000 யூதர்களை இஸ்ரவேல் நாடு விமானப் போக்குவரத்து ஒழுங்கு செய்து ஏமன் நாட்டிலிருந்து கொண்டு வந்தது. அச்செயல்பாடு "ஆப்ரேஷன் மேஜிக் பிளாநெட்" (OPERATION MAGIC PLANET) என்று அழைக்கப்பட்டது. அதேபோல ஈராக்கிலிருந்து" எஸ்றா, நெகேமியா செயல்பாடு" (OPERATION EZRA NEHAMIA) என்ற செயல்பாட்டின் காரணமாக ஈராக் நாட்டிலிருந்து 1,21,000 யூதர்கள் கொண்டு வரப்பட் டனர். "மோசே செயல்பாட்டின்" (OPERATION MOSES) கீழ் எத்தியோப்பியாவிலிருந்து ஒரே ஜம்போ விமானத்தில் 1100 யூதர்கள் இஸ்ரவேலுக்குக் கொண்டுவரப்பட்டனர். மும்பாய், கொச்சின் மற்றும் மீசோராமிலிருந்து யூதர்கள் இடம் பெயர்ந்து இஸ்ரவேலுக்குப் போய் குடியேறினார்கள்.

***"பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன்; நான் உன் சந்ததியைக் கிழக்கிலிருந்து வரப்பண்ணி, உன்னை மேற்கிலும் இருந்து கூட்டிச்சேர்ப்பேன். நான் வடக்கே நோக்கி: கொடு என்றும், தெற்கை நோக்கி: வைத்திராதே என்றும் சொல்லி, தூரத்திலிருந்து என் குமாரரையும், பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் குமாரத்தி களையும், நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன்"*** (ஏசா.43:5–7) என்று ஏசாயா மூலம் சொன்னதை தேவன் நிறைவேற்றிக் காட்டிவிட்டார்.

தீர்க்கதரிசன நிறைவேறுதல்கள் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வரு கையோடு தொடர்புள்ளவைகளே.

"கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" (மத்.24:25).

# 18 கிறிஸ்துவின் வருகையின் அடையாளம் நிறைவேறுதல்

முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யூதமக்களின் தேவாலயம் இடிக்கப்பட்டு தங்கள் நாட்டையும் இழந்து நாட்டைவிட்டு உலகின் வெவ்வேறு பகுதிகளுக்குச் சிதறடிக்கப்பட்டார்கள். அவர்களின் சிதறடிப்பு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு வேதத்தில் முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல் என்பதை நாம் கண்டோம். கி.பி. 70ம் ஆண்டில் ரோமப் பேரரசின் தளபதி டைட்டஸ் சீசர் எருசலேமைக் கைப் பற்றியபோது "இந்த வெற்றி என்னுடைய முயற்சியால் கிடைத்ததல்ல, இஸ்ரவேல் மக்களுக்கு விரோதமாக தேவனுடைய கோபாக்கினை நிறை வேற்றப்பட நான் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டேன்" என்று கூறினான். ஆகவே கி.பி.70ம் நூற்றாண்டில் எருசலேமுக்கும் எருசலேமிலே வாழ்ந்த யூதர்களுக்கும் நடந்தது தீர்க்கதரிசன நிறைவேறுதலே என்பதையும் கண்டோம்.

**உபத்திரவமே சுயதேசத்தின் மீது நாட்டத்தைக் கொடுத்தது:**

இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் 400 ஆண்டுகள் அடிமைகளாக உபத்திரவப் படுவார்கள் என தேவன் ஆபிரகாமுக்கு முன் அறிவித்தார் (ஆதி.15:13). அவர்கள் மீண்டும் திரும்ப வருவார்கள் என்றும் முன் அறிவித்தார் (வ.14). ஆனால் விடுதலைக்கான காலம் நிறைவேறியபோது அவர்களுக்குக் கொடிய உபத்திரவம் ஆரம்பித்தது. "தேவன் இஸ்ரவேல் புத்திரர்களைக் கண்ணோக்கினார். தேவன் அவர்களை நினைந்தருளினார்" (யாத். 2:24,25). மோசேயை தேவன் தெரிந்துகொண்டு அவர்களை விடுவித்து பின்னர் யோசுவாவைக் கொண்டும் கானான் தேசத்திற்கு அவர்களை வழி நடத்தினார். அதேபோலவே முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேல் மக்கள் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிதறடிக்கப்பட்ட நாடுகளில் தாங்கொனா உபத்திரவங்களைச் சந்தித்தார் கள். குறிப்பாக ஹிட்லரின் தலைமையிலான ஜெர்மனியிலும் அண்டைய நாடுகளிலும் வன்கொடுமை முகாம்களிலும், கொலை வெறி முகாம்களிலும் ஆயிரக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டனர். அதுவே அவர்களுக்கு தங்களுடைய சொந்த நாடாகிய இஸ்ரவேலை மீண்டும் அடையவேண்டும். சுய தேசத்திற்குக் குடிபோக வேண்டும் என்ற அவசரத்தை உணர்ந்தார்கள்.

## ஆபிரகாமுக்கு வாக்களித்த நித்திய சுதந்திரம்:

முதலாம் உலகமகா யுத்தத்தின்போது நேசநாடுகளின் இராணுவத்தில் (ALLIED FORCE) ஜெனரல் ஆலன்பி தலைமையிலான பிரிட்டிஷ் இராணுவம் ஒட்டாமான் துருக்கியரிடமிருந்த எருசலேமை 1917ல் கைப்பற்றி தங்கள் வசமாக்கிக் கொண்டது. அதைத் தொடர்ந்து யூதர்களுக்கு அனுகூலமான சூழ்நிலைகள் ஏற்பட்டது. பால்போர் பிரகடனத்தின்படி யூதர்கள் அங்கே குடியேறும், உரிமையைப் பெற்றார்கள். இரண்டாவது உலக மகா யுத்தத் திற்குப் பின் 1948ல் இஸ்ரவேல் சுதந்திர நாடாக மாறியது. இவை யாவும் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலம் முன்னறிவித்தபடி நடந்து நிறைவேறியது என்பதையும் முந்திய அதிகாரங்களில் கண்டோம். கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்களித்த போது ஒரு நித்திய உடன்படிக்கையையும் ஒரு நித்திய சுதந்தரத்தைக் குறித்தும் சொல்லுகிறார் "உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன். நீ பரதேசியாய்த் தங்கிவருகிற **கானான் தேசம் முழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன்**" (ஆதி.17:7,8) என்று காண் கிறோம். ஆகவே இப்பொழுது இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் சுதந்திரம் ஆபிரகாமுக்கு வாக்களித்தபடி அது நித்திய சுதந்தரமாக இருக்கும். அதை யாரும் பறித்துக் கொள்ள முடியாது என்பதும் தேவனுடைய வாக்குத்தத்தமாகும்.

## இனிவரயிருக்கும் மகா பெரிய உபத்திரவமும் தப்புவிக்கும் வழியும்:

அநேக அதிகாரங்களில் யூத மக்கள் நம்முடைய சிந்தனைக்கும் அப்பாற்பட்ட வகையில் சந்தித்த கொடூரமான சித்திரவதைகளையும் கொடிய மரணங்களைக் குறித்தும் கண்டோம். நடந்து முடிந்த கொடுமைகளை அறிந்து நமக்கு என்ன பயன் என்றும் ஒருவேளை சிலர் நினைக்கக்கூடும். அதிலும் பின் சந்ததியாராகிய நமக்கு தேவன் ஒரு பாடத்தை வைத்திருக் கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகைக்கும் பின்னர் இந்த உலகம் அந்திக்கிறிஸ்துவின் ஏழு வருட கால ஆட்சிக்கு ஒப்புவிக்கப் படும். அந்த ஆட்சி மிகுந்த உபத்திரவகாலம் நிறைந்ததாக இருக்கும். அதைக் குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து குறிப்பிடும்போது **"உலக முண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்ப**

**வியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்"** (மத்.24:25). ஆகவே யூதர்கள் சந்தித்த கொடுமைகளை விட மிக அதிகமான கொடுமைகள் வரயிருக்கிறது என்பதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். இந்தக் கொடுமைகளுக்குத் தப்பித்துக்கொள்ளும் ஒரே வழி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் நாம் எடுத்துக் கொள்ளப்படுவதற் கான தகுதிகளை இப்பொழுதே அடைந்துகொள்வதுதான் என்பதை வலியுறுத்தி நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது வருகையைக் குறித்து இரண்டு காரியங்களை நமக்குச் சுட்டிக்காட்டு கிறார். "உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் **விழித்திருங்கள்"** (மத். 24:42) என்றும் "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் **ஆயத்தமாயிருங்கள்"** (வ.44) என்று சொல்லியுள்ளார். அப்போஸ்தலனாகிய பவுல் "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கு வாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" (1 தெச.5:23) என்று கூறுகிறார். அப்போஸ்தலனாகிய யோவான் "அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளு கிறான்" (1யோவா.3:2,3) என்று கூறுகிறார். "உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான்" (யாத்.31:13) என்கிறார். "நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே" (2 கொரி.5:5). ஆகவே நம்முடைய பகுதியில் அவர் அருளும் கிருபையில் சார்ந்துகொண்டு நம்மை அவருடைய கரத்தில் ஒப்புவிக்கும் போது நம்மைப் பரிசுத்தப்படுத்தி அவரோடு சேர்த்துக்கொள்வதற்கு அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அந்திக் கிறிஸ்துவின் உபத்திரவ காலத்திற்குத் தப்பித்துக்கொள்ள அதற்கு முன்பு சம்பவிக்கயிருக்கிற அவருடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட ஆயத்தப்படுவோம்.

**அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக் கிறார்:**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கான அடையாளங்களை தமது சீடர்களுக்குச் சொல்லும்போது ஒரு அடையாளம் **"அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள் ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளை**

**யெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்"** (மத்.24:32,33) என்றார். வேத ஆராய்ச்சியாளர்கள் இந்த அடையாளத்தைக் குறித்ததான அர்த்தத்தைத் தெரிவித்துள்ளனர். அத்திமரம் இஸ்ரவேல் நாட்டின் தேசிய மரமாகக் கருதப்படுகிறது. 2000 ஆண்டுகளாக நாடற்றவர்களாக உலகமெங்கும் சிதறிக் கிடந்த மக்களுக்கு இஸ்ரவேல் நாடு 1948 மே 14ம் நாள் சுதந்தர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அத்திமரத்திலே இளங்கிளை தோன்றி துளிர் விடும்போது கோடைகாலம் நெருங்கிவிட்டது என்று அறிகிறோம். ("வசந்த காலம்" என தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பது தவறானது. ஆங்கில வேதாகமத்திலும் (SUMMER) என்றும் கிரேக்க மூலமொழியில் கோடைக் காலத்தைக் குறிக்கும் "சுக்கோன்" (SUKON) என்ற சொல்லே பயன்படுத்தப் பட்டுள்ளது). கோடை காலத்தின் தொடக்கத்தில் துளிர் விட்டு கோடையில் கனிகொடுக்கும். ஆகவே கோடையின் தொடக்கத்தை அத்திமரம் துளிர் விடுவதிலிருந்து அறிந்து கொள்ளுகிறோம். கனி கொடுக்கத் தொடங்கும் போது "அவர் சமீபமாக வாசலருகே வந்திருக்கிறார்" என்பதை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். இஸ்ரவேல் நாடு துளிரிட்டு செழித்து கனிகொடுக்கத் தொடங்கிவிட்டது. பெரும்பகுதி பாலைவனமாக இருந்த நாடு இப்பொழுது வளம் பெருகி வெளிநாடுகளுக்கு அதன் விளைச்சல்களை ஏற்றுமதி செய்கிற இடத்தை எட்டியிருக்கிறது என்பதை சிந்தித்துப் பாருங்கள். "ஆகையால் இனிச் சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப் படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்" (லூக். 21:36) இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படும் மார்க்கத்தைப் பற்றிக் கொள்வோம்.

## தேவனுடைய வார்த்தை நிறைவேறாமல் ஒழிந்துபோவதில்லை:

வேதம் சொல்லுகிறது "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" (மத். 24:35) என்றும் "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.5:18) என்றும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார். அவர் மாறாதவர் "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபி.13:8). யூத மக்களின் சோக வரலாறு நம்முடைய ஜீவியத்தை மாற்றட்டும். இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட தகுதிப்படுத்தட்டும்.

# பகுதி - 2

"அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண் ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன் முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்"

(எரே.31:33,34).

# 1 ஹிட்லரால் ஏற்பட்ட பேரழிவுக்குத் தப்பிய ரோஸ் பிரைஸின் உருக்கமான அறிக்கை



யூதமக்களுக்கு ஹிட்லரால் ஏற்பட்ட பேரழிவில் (HOLOCAUST) நான் தப்பிப் பிழைத்தவள். யூதமார்க்கத்தின் பழமையான பாரம்பரிய முறைப்படி என் பெற்றோர் என்னை வளர்த்தார்கள். யூதமார்க்கம் தான் ஜீவன் (JUDAISM WAS LIFE) என்று என் தாயார் ஒவ்வொருநாளும் அதைக் கருத்தாய் போதிப் பார்கள். ஒவ்வொரு நாளும் என் தகப்பனார் ஆலயத்திலிருந்து (SYNAGOGUE) வந்ததும் பிள்ளைகளையும், அப்பத்தையும் ரசத்தையும் மனதார ஆசீர்வதிப் பார். சனிக்கிழமை நாங்கள் குடும்பமாக ஆலயத்திற்குச் செல்வோம். திரும்பும்போது பேக்கரியில் எங்களுக்குப் பிரியமானதை என் தகப்பனார் வாங்கித் தருவார். மதியம் வயதான என் பாட்டி உட்பட யாவரும் ஒரே மேஜையைச் சுற்றி அமர்ந்து சாப்பிடுவோம். அது எங்கள் குடும்பத்தின் மகிழ்ச்சியான வேளை. நாங்கள் போலந்து நாட்டில் ஒரு சிறிய நகரத்தில் வாழ்ந்துவந்தோம்.

## நாஜிப் படையினரால் உண்டான பயங்கரம்

ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்த பின்னர் 1939ம் வருடம் செப்டம்பர் மாதம் ஜெர்மானியர் போலந்து மீது படையெடுத்தனர். போலந்து ஹிட்லரின் ஆளுகைக்குள் வந்தது. எங்களுக்குக் கொடிய சோதனை காலம் துவங்கியது. ஒருநாள் யூத மாணவர்களெல்லாம் எங்கள் வகுப்பறையை விட்டு வெளியே வந்து நிற்கும்படி ஆணை வந்தது. அப்பொழுது எனக்கு 10 1/2 வயது. என் அக்காள் என்னை விட இரண்டு வயது மூத்தவள். வெளியே வந்ததும் யூத மாணவ மாணவியர் யாரும் இனிமேல் பள்ளிக்கு வரக்கூடாது என்று கடுமையான கட்டளை கொடுக்கப்பட்டது. நாஜிக் காவலர்கள் காவல் செய்து நின்றனர். நாங்கள் நிலைகுலைந்து போனோம். வெட்கத்தோடு வெளியே அனுப்பப்பட்டோம். எங்கள் குடியிருப்பையும் சிதறடிக்கவைத்து யூதமக்களை நகருக்கு வெளியே மோசமான இடத்தில் காலனி போன்ற குடியிருப்பு பகுதிக்கு அனுப்பினார்கள். எந்த நிமிடத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சநிலை உருவாயிற்று. இனிமையான குடும்பச் சூழ்நிலையில் வாழ்ந்த எனக்கு இது பேரிடியாக இருந்தது. ஒரு நாள் என் மூத்த

சகோதரியும் நானும் எங்கள் பாட்டியைக் காணச்செல்லும் வழியில் திடீரென எங்களைப் பிடித்துத் துப்பாக்கி குண்டு தயாரிக்கும் தொழிற்சாலையில் பணி புரியுமாறு கட்டளையிட்டனர். தொழிற்சாலையில் சிறிய தவறு செய்தாலும் சிறுபிள்ளைகள் என்ற ஈவு இரக்கம் இல்லாமல் பெரிய சாட்டையால் கசையடி விழும். அவற்றை எல்லாம் தாங்க முடியாமல் நான் கதறியிருக்கிறேன். குடும்பத்தின் அன்பும் அரவணைப்பும் நீங்கி கசையடி பெறும் வாழ்விற்கு தள்ளப்பட்டேன். கோடையிலே காளாஸ்டஸ் பழங்கள் காளான்கள் சேகரிக்கும்படியாக வனப்பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு வேலை முடிந்தபின் அங்கேயே முகாமில் சிறைவைக்கப்பட்டோம்.

நினைத்துப் பார்க்க முடியாததும் விவரிக்க இயலாததுமான துன்பங்களை அனுபவித்தேன். அதிகாலை இருட்டோடு எழுந்து சிறைவாசிகள் எண்ணப் பட்டு தொழிற்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு நாள் முழுவதும் தொழிற் சாலையில் வேலை செய்ய வைப்பார்கள். இப்பொழுது 1/4 அங்குல நீள அலுமினியத்துண்டை ஒரு துப்பாக்கி தோட்டா அளவிற்கு நீட்டும் வேலையைச் செய்தேன். அவர் இயந்திரத்திற்கு கிரீஸ் **(grease)** இடுதல், தகடுகளை உட்செலுத்தி தோட்டாவை வெளியே எடுத்தல் போன்றவற்றை கவனமாக செய்யவேண்டியதிருந்தது. கவனக்குறைவாக அதில் தவறு செய்தால் குண்டுவெடித்து நானே கொல்லப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படும். அந்த வேலையை நான் தவறின்றி செய்ய விரைவாகக் கற்றுக் கொண்டேன். நான் பட்ட வேதனை மேலும் கண்ணீர்விட்டு அழமுடியாதவாறு கண்களில் கண்ணீர் இன்றி வரண்டுபோகச் செய்தது. அந்த முழு நகரத்தில் உள்ளோர் அனைவரும் வெளியேற்றப்பட்டபின்னர் நான் இனி என் பெற்றோரை மீண்டும் காண இயலாது என அறிந்தேன். அதுதான் நான் கண்ணீர்விட்ட கடைசி நாள்.

ஆரம்பத்தில் நான் எந்த சூழ்நிலையிலும் ஜெபிக்கக்கூடியவளாக இருந்தேன். ஜெபத்திலே என் தாயார் என்னை வந்து பார்க்க அனுப்பித் தருமாறு வேண்டினேன். வீட்டாரை காண வேண்டும் என்ற ஏக்கமும், பசியும் வாட்டியதும் அடி உதைகளுக்குப் பதிலாக தாயாரின் அரவணைப்பு எனக்குத் தேவைப்பட்டது. எனது சரீரமெங்கும் புழுதிபடிந்திருந்தபடியால் குளிக்க விரும்பினேன். ஆனால் சோப் கிடைக்கவில்லை. நான் ஜெபித்த போதும் ஒன்றும் நடக்கவில்லை. ஜெபத்திற்கு பதில் கிடைக்காதுபோன படியால் தேவன் இல்லை என்ற முடிவிற்கு வந்தேன்.

## வன் கொடுமை முகாம்கள் (Concentration Camps)

நான் ஒரு வன்கொடுமை முகாமிலிருந்து மற்றொரு முகாமிற்கு மாற்றப்பட்டேன். பெர்கென்பெல்சென் (Bergen- Belsen)க்கும் அதற்குப் பின்னர் டாச்சாவ் (Dachav)க்கு மாற்றப்படும் வரை தொடர்ந்து சிறைமாற்றம் செய்யப்பட்டேன். சிறைகளில் நடந்த பயங்கரங்களின் வழியாக நான் கடந்து சென்றது என்னால் நம்பக்கூடாத அளவிற்கு இருந்தன. பெல்கென் பெல்செனில் அதிபயங்கரமான காரியங்கள் நடந்தன. அங்கு சித்திர வதைகளுக்கு ஆளானேன். வெறுங்கையால் சர்க்கரைகிழங்கு (Sugar beets) தோண்டியெடுக்கும் வேலையைச் செய்தேன். என் கைகள் மிக மோசமாகி, இரத்தம் ஒழுகத் துவங்கியது.

அநேக ஆண்டுகளாக போதிய உணவின்றி கிழங்கு தோண்டும் பணியில் ஈடுபட்டபடியால் நடைப்பிணம் போல ஆனேன். 1/4 அங்குல அளவு சன்ன மானதும் 80 சதவீதம் ரம்பத் தூளினால் ஆனதுமான ரொட்டித் துண்டே எனக்கு உணவாகக் கிடைத்தது. கடுமையான குளிரில் வாழவும் வேலை செய்யவும் அவ்வுணவு போதுமானதாக இல்லை. ஒருநாள் பசி வாட்டியதால் ஒரு கிழங்கை (Sugar beet) மற்றவர்களுக்குத் தெரியாமல் பிடுங்கி தின்றேன். காவலாளியால் பிடிக்கப்பட்டேன். என் கைகளைக் கட்டி என்னைத் தொங்க விட்டு அடித்தனர். முதுகிலும், முகத்திலும், உடலைச் சுற்றிலும் இரத்தக் காயமுண்டாக அடிக்கப்பட்டேன். கைகளைக் கட்டி என்னைத் தொங்க விட்டனர். இந்த நிகழ்ச்சி மறக்கமுடியாத அளவிற்கு என் மனதில் பதிந்தது. பசிக்கொடுமையால் நான் செய்த சிறிய திருட்டு பெரிய தண்டனையில் முடிந்தது.

கைதிகள் அனைவரும் காலணியின்றி அரை நிர்வாணமாக வரிசையாக கடும்பனியில் நிறுத்தப்பட்டோம். போதுமான ஆடையில்லாததால் கடுங் குளிரில் அநேகர் மடிந்துபோயினர்.

ஒருமுறை கைதிகள் அனைவரும் வரிசையாக நிறுத்தப்பட்டனர். கடும் குளிரில் இரத்தம் உறைவதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்று சோதனை செய்து பார்க்கும் பொருட்டு நாங்கள் முற்றிலும் நிர்வாணமாக்கப்பட்டோம். இந்நாள் வரை நான் குளிரில் இருக்கும்போது முன்னங்காலும் விரல்களும் முற்றிலுமாக மரத்துப்போகும் போது, சரீரம் உறைய ஆரம்பித்த அந்த நேரத்தை நினைத்துப் பார்க்கிறேன். அந்த சோதனையின்போது அநேகர் மரித்து என் மீது விழுந்து மூடினபடியால் நான் வெதுவெதுப்படைந்து உயிர் தப்பினேன்.

தேவன் இல்லை என்று சொன்ன அந்த நாளில்தானே நான் உயிர் தப்பினேன். அது கர்த்தரால் அவ்வாறு நடந்தது என்று உணர்ந்தேன்.

ஒரு நாள் டசாவ் (Dachav) செல்லும் வழியில் நான் பயணித்த ரயிலில் குண்டு வெடித்தது. அநேகர் அந்த ரயிலில் இருந்து தப்பி ஓடி காட்டுப் பகுதிக்குள் நுழைந்தனர். அப்பொழுது “துப்பாக்கி தொழிற்சாலையில் நாங்கள் தயாரித்த குண்டுகள் எவ்வளவோ உள்ளன. ஒன்று எனக்கு விரோதமாக அவர்கள் பயன்படுத்தினால் பரவாயில்லையே என்று சிந்தித்தேன். சாவு ஜீவனைக்காட்டிலும் நன்மையானதாக எனக்குத் தோன்றியது.

ஒருமுறை நான் 12 வயது சிறுமியாக என் சொந்த நகரத்தில் இருக்கும் போது நான் ஒருவருடன் நடந்து சென்று கொண்டிருக்கும்போது சிரித்து பேசிய காரணத்தால் மனித கழிவு நிரப்பும் தொட்டியில் 24 மணி நேரம் நிறுத்தப்பட்டேன். மூழ்கிவிடாமல் இருக்கும்படியாக தன் பாத முனையினை ஊன்றி நின்றேன். சிரித்தாலும் மிகப்பெரிய தண்டனை உண்டு. என் சகோதரி அந்த முகாமில் டைபாய்டு சுரத்தால் பீடிக்கப்பட்டு இருந்தார்கள். அவள் என் குடும்பத்தில் உயிரோடு இருந்த கடைசி உறுப்பினர். அவளையும் இழந்துவிட்டால், எனக்கு மேற்கொண்டு வாழ்க்கையை தொடர்வது மிகவும் கடினமான காரியமாகும். காவலர்கள் நோய்வாய்ப்பட்டோரை தவறாது சோதனை செய்யும்படி வந்து கொண்டிருந்தனர். கொடிய நோய்வாய்ப் பட்டவர்களை கண்டறிந்தால் அவர்களை பனியில் உறைந்து சாகும்படியாக வெளியே விட்டுவிடுவார்கள். என் சகோதரியை பாதுகாக்கும்படியாக அவளை என் சரீரத்தால் மூடிபடுத்திருந்தேன். ஆரோக்கியமாக இருப்பவர்கள் தங்கள் கைகளை உயர்த்தும்படி காவலர்கள் கேட்கும்போது, என் சகோதரியின் இடத்தில் நான் என் கைகளை உயர்த்தினேன்.

### சுட்டுக்கொல்லும்படித் தெரிந்தெடுக்கப்பட்டேன்

நான் சுட்டுக்கொல்லப்படுவதற்கு இரண்டுமுறை தெரிந்தெடுக்கப் பட்டேன். ஆனால் அந்த இருமுறையும் காவலர்கள் துப்பாக்கியை எடுக்க சங்கிலியை அவிழ்க்கும்போது நான் தப்பி ஓடிவிட்டேன். இரண்டாவது முறை அதிக வேகமாக ஓடி, ஒரு காவலர்மீது மோதி தூக்கியெறியப்பட்டேன். ஆனால் அந்த காவலர் என்னைப் பார்க்கவில்லை. அது தேவனால் மாத்திரமே நடக்கக்கூடிய செயல். நான் அந்த காவலரை அண்ணாந்து பார்த்துவிட்டு முகாமின் அருகில் உள்ள காட்டுப்பகுதிக்குள் ஓடிப்போனேன். சாவுக்குத் தப்பினாலும் மீண்டும் பிடிக்கப்பட்டேன்.

1945ஆம் ஆண்டு மே மாதம் நாங்கள் முழுமையாக விடுதலையாக்கப் பட்டோம். நான் கடந்துவந்த பாதையின் நிமித்தம் ஜெர்மானியர்களையும் நாஜிக் படையினரையும் முற்றிலும் மன்னிக்க இயலாதவளாக மாறினேன். ஆழ்ந்த உணர்வுடன் அவர்களை வெறுத்தேன். என்னுடைய மன்னிக்க இயலாமை எனது சரீரத்தை விஷமாக்கியதால் 27 அறுவை சிகிச்சைகள் எனக்கு செய்யவேண்டியதிருந்தது.

ஜெர்மன் மீதும் போலந்து மீதும் குண்டுவீசக்கூடிய ஒருவர் எழும்ப மாட்டாரா என்று நான் தேடிக்கொண்டிருந்தேன். ஒரு சகோதரி மற்றும் ஒரு அத்தையைத் தவிர அவருடைய உறவினரில் ஏறத்தாழ 100 பேரை இழந்தார்.

## என் புதிய வாழ்க்கை

விடுதலைக்குப்பின் நான் அமெரிக்கா சென்றேன். எனக்குத் திருமண மாகி குழந்தைகளும் பிறந்தன. நான் தேவனை எவ்வளவு வெறுத்தேனோ அந்த அளவிற்கு பாரம் பரியமான தேவாலயத்தில் ஈடுபாடுள்ள உறுப்பினராக மாறினேன். எனது குழந்தைகளுக்கு யூதமதத்தைப்பற்றி போதிக்க வேண்டியதிருந்தது. ஆனால் உள்ளாக மரித்த நிலவரத்தில் இருந்த எனக்கு அதைச் செய்ய இயலவில்லை. சமுதாயத்தின் பார்வையில் நான் ஒரு சிறந்த யூதப் பெண்ணாகத் திகழ்ந்தேன். எபிரெய பள்ளிக்கூடம் கட்டுவதில் நான் முனைந்து செயல்பட்டேன். சகோதரிகளின் சங்கத்தில் தலைமை பொறுப்பு ஏற்கும் அளவிற்கு என் உழைப்பால் உயர்ந்தேன்.

யாரேனும் ஒருவர் என்னிடம் தேவனை நம்புகிறீர்களா என்று கேட்டால் நான் இல்லை என்றுதான் கூறியிருப்பேன். இன்றும் அநேக யூத ரபிகள் **(Rabbis)** வேதத்தை **(Bible)** நம்புவதில்லை. வெகு சிலரே தேவன்மேல் நம்பிக்கை வைக்கின்றனர். ஆனால் நான் ஒரு யூதப்பெண் என்று இனம் கண்டுகொள்ளப்படுவதையும், யூத பாரம்பரியத்தையும் நான் பாதுகாத்து வருவதிலும் கவனமாகயிருக்கிறேன்.

## என் மகள் இயேசுவை விசுவாசிக்கத் துவங்கினாள்

ஒரு நாள் என் இளவயது மகள் என்னிடத்தில் “அம்மா நான் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன். அவர் தான் யூதர்களின் இரட்சகர்” என்று கூறினாள். இவ்வார்த்தைகள் என்னால் கற்பனை செய்து பார்க்கவும் முடியாத அளவிற்கு மோசமானதாக காணப்பட்டது. அது எனக்கு மாரடைப்பு ஏற்பட்டது போன்று ஆயிற்று, “உன்னுடைய அத்தை, மாமா, பெரிய தந்தை, சிறிய தந்தை முதலானவர்கள் இறப்பிற்கு இந்த இயேசுவே காரணமாக

இருந்தார்.'' "நாஜி (Nazi) காவலர்கள், நீங்கள் இயேசுவை கொன்றபடியால் உங்களைக் கொல்லும்படியாக அவர் உங்களை வெறுத்து முகாமில் வைத்திருக்கிறார் என்று மீண்டும் மீண்டுமாக என்னிடம் கூறினர்'' என்று நான் என் மகளுக்கு விளக்கினேன்.

சபையின் முன் இருந்த நடைமேடையில், நான் ஏழு அல்லது எட்டு வயது சிறுமியாக இருக்கையில் நடந்து சென்றதை குற்றமாக கருதிய சபை குரு ஒரு சிலுவை சொரூபத்தைக் கொண்டு தலையில் அடித்தார். இச்சம்பவம் இயேசுவின் மீது வெறுப்பை மேலும் தூண்டியது.

எனவே என்னைப் பொறுத்தவரை எனது மகள் இயேசுவை விசுவாசிப்பது மரணத்திற்கு ஒத்ததாகும். நான் என் மகளை விரோதியாகக் கருதி வீட்டை விட்டு வெளியேற்றினேன். என் கணவர் என் மகள் இருந்த வீட்டிற்கு அவளைக் கண்காணிக்கும்படியாக சென்றவர் இயேசுவை விசுவாசிக்க ஆரம்பித்தார். அவர் சென்ற வீடு யூத மக்களுக்கு ஒரு சேவை மையமாக பயன்பட்டது.

என் இளையமகள் ஒரு எபிரெய பள்ளிக்கு சென்றுகொண்டிருந்தாள். ஆனால், அவள் இரகசியமாக மேசியாவின் விசுவாசியாக மாறிவிட்டாள் என அறிந்து நான் அவளை அடித்தேன்.

வீடு திரும்பிய என் கணவர் இயேசுவை ஏற்றுக்கொண்டார் என அறிந்து மிகவும் துக்கப்பட்டேன். எனக்கு நீதிமொழிகள் 3வது அதிகாரத்தை வாசித்துக் காட்டினார். அதை என்னவென்று நான் அறியவில்லை. ஆனால் என் கணவர் விசுவாசியானதைக் கேட்டு அவரை துரோகியாக கருதினேன். ரபியால் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர் மிகவும் பிடிவாதமாக இருந்தார். இதன் காரணமாக நான் குடும்பத்தாரைவிட்டு விலக தயாரான போதும் என்னால் அப்படி செய்ய முடியவில்லை. அவருக்கு நண்பராய் இருந்த ஒரு வழக்கறிஞர் சிறுவயது பிள்ளைகளை கை விட்டுச் சென்றால் சிறைசெல்ல நேரிடும் எனக்கூறினார்.

இந்த இயேசுவின் காரணமாகத் தான் நான் முதல் குடும்பத்தை இழந்ததோடு மட்டுமல்லாமல், தற்பொழுது இரண்டாவது குடும்பத்தையும் இழக்க வேண்டியதிருக்கும் என நான் பயந்தேன். நான் இயேசுவை சந்தித்தால் அவரைக் கொல்லும் அளவிற்கான வெறி என்னில் இருந்தது.

என் பிள்ளைகளை மீட்டுக்கொள்ள நான் மிகவும் முயன்றேன். முதன் முறையாக ஜெர்மானிய கடுஞ்சிறை வாசத்தைப் பற்றி என் பிள்ளைகளுக்கு

எடுத்துரைத்தேன். அவர்களை மிகவும் கெஞ்சினேன். யூதர்களின் பகைவனாகிய இயேசுவை விட்டு விலகுமாறு வாதாடினேன். 2000 வருடங்களாக மேசியா எனக் கருதப்பட்ட இந்த மனிதனின் நிமித்தம், யூதர்கள் உபத்திரவத்திற்குள்ளாக்கப்பட்டதை விவரித்தேனே தவிர நான் தெரிந்து கொண்ட எல்லாவற்றையும் நான் எடுத்துக்கூறியும் பயன் ஒன்றும் ஏற்படவில்லை.

என் மகள் இயேசுவின் விசுவாசியாக மாறியபின் மற்றவர்களுக்கு சாட்சி பகருவதை நிறுத்திக்கொள்ளும்படியாகவும், ஆராதனை முடித்து வீடு திரும்பும்படியாகவும் என கணவர் வற்புறுத்தினார். ஆனாலும் தொடர்ந்து இயேசுவைக் குறித்து சாட்சி கொடுத்தாள். நான் என் யூத வேதாகமத்தைத் திறந்தபோது அதில் கிறிஸ்தவ வேதவாக்கியங்கள் அடங்கிய வசன அட்டைகளை கண்டேன்.

நான் கிறிஸ்தவ வேதத்தை அறியாதபடியால், அவைகளை விளங்கிக் கொள்ள முடியவில்லை. இந்த சூழ்நிலையில் நான் ஒரு ரபியைப் போய் சந்தித்தேன். அவர் மூலமாக என் குடும்பத்தில் இயேசுவை ஏற்றுக் கொள்ளாத நிலவரத்தை உருவாக்கலாம் என்ற நம்பிக்கையில் அவருடைய ஆலோசனையை பெற சென்றேன்.

அவருடைய ஆலோசனை பயனளித்ததா? தொடர்ந்து குடும்பத்தில் ஏற்பட்ட சூழ்நிலைகளில் இயேசுவின் வல்லமை மிக்க வார்த்தைகள் இயேசு விரும்புகிறபடி ரோஸை எவ்வாறு மாற்றியது.

நான் ரபியினிடத்தில் ஓடினேன். என் மகளும் என் கணவரும் யூத முறைமைக்கு மாறாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட என் மன அங்கலாய்ப்பைச் சொன்னேன். அவர் அவர்களுக்கு சவால்விடும் படியாக வித்தியாசமான வேதவாக்கியங்களை கூறினார். அதைப் போய் என் குடும்பத்தாரிடம் சொன்னால் அவ்வாக்கியங்களுக்கு எதிர்ச் சவாலாக இன்னும் அதிகமான ஐந்து வாக்கியங்களை அவர்கள் தருவார்கள்.

நான் என் வீட்டார் சொன்னபடி ஏசாயா 53ம் அதிகாரம்பற்றி ரபியிடம் விசாரித்தேன். அதற்கு ரபி "எந்த யூதனும் அதனைப் படிப்பதில்லை, குறிப்பாக எந்த யூதப்பெண்ணும் அதைப் படிப்பதில்லை" என்று கூறி விட்டார். அதைப்போன்றே சங்.22 ஐப்பற்றியும் கூறிவிட்டார். பாடுபட்ட மேசியாவைப் பற்றி 328 தீர்க்கதரிசனங்கள் உள்ளன. அவைப்பற்றி ரபியிடம் கேட்டபடியால், மீண்டுமாக தேவாலயத்திற்கு (Synagogue) வரக்கூடாது என்று என்னிடம் ரபி கூறிவிட்டார்.

என்னைத் தவற என் முழுக்குடும்பமும் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரின் பின் செல்ல ஆரம்பித்துவிட்டது. இந்த சூழ்நிலையில் எனக்கு உதவி செய்யுமாறு நான் தொடர்ந்து கூக்குரலிடவும், அலறவும் அழவும் தொடங்கினேன். மேற்கொண்டு எதுவும் செய்ய இயலாது என ரபி மறுத்து விட்டார்.

எனவே கீழ்த்தள அறை ஒன்றில் தாளிட்டுக்கொண்டு இயேசு கிறிஸ்துவைக் குறித்து என்னதான் எழுதப்பட்டிருக்கிறது என்று அறிய புதிய ஏற்பாட்டை நான் படிக்க ஆரம்பித்தேன். மத்தேயு எழுதிய சுவிசேஷத்தை படித்த பின்னர் இயேசு கண்ணியமானவர் என்றும் யூத மக்கள் கொல்லப் பட்டதற்கு அவர் காரணமல்ல என்றும் அறிந்துகொண்டேன். பின்னர் நான் நம்புகிறது சரி தானா என்று சிந்திக்க ஆரம்பித்தேன்.

மீண்டுமாக உதவியை நாடி நான் வேறொரு ரபியிடம் சென்றேன். அவர் வேதபுத்தகத்தை அதிகமாக படித்ததில்லை என்றும், உதவி எதுவும் செய்ய இயலாதென்று மறுத்துவிட்டார்.

### பெருஞ்செல்வந்தர் ஒருவரை சந்தித்தல்

குறுகிய காலத்திற்கு பின்னர் ஆர்தர் டீமோஸ் **(Arthur De Moss)** என்பவரது வீட்டிற்குச் சென்று அவரை சந்தித்தேன். அவர் செல்வமிக்க கிறிஸ்தவ வியாபாரி. அவர் ஆண்டிற்கு ஒருமுறை தன் வீட்டை யூதர்களை சந்திக்கும் ஒரு கிறிஸ்தவ அமைப்பான கூடுகைக்குத் தருவார். அவர் என்னிடம் தான் ஜெபம் செய்ய அனுமதி கேட்டார். நான் அனுமதிக்கவே ஆர்தர் ஜெபித்தார். பொதுவாக யூதர்கள் ஜெபிக்கும்போது கண்களை மூடுவதில்லை. ஆனால் அன்று என் கண்களை மூடி ஜெபிக்கத்துவங்கினேன். "ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் தேவனே. உம்முடைய குமாரன் என்று சொல்லப் படுபவர் உம்முடைய குமாரனேயானால், அவர் மெய்யான இரட்சகரேயானால் அது நல்லது. அதை ஏற்றுக்கொள்ளும் இருதயத்தை இவளுக்கு அருளும். நீர் இவளில் செயல்படும். ஆனால் தகப்பனே, அவ்வாறு அவர் உமது குமாரன் இல்லையாயின் நான் உம் மிடத்தில் விண்ணப்பித்ததை மறந்துவிடும்" என்று ஜெபித்தார். இயேசு கிறிஸ்து தேவகுமாரன் என்ற உணர்வு என் இருதயத்தை நிறைத்தது.

1942ம் ஆண்டிற்குப் பின்னர் நான் ஜெபித்த முதல் ஜெபம் அது. என் முதுகிலிருந்து ஒரு பெரிய பாராங்கல் உருண்டு விழுந்ததைப் போன்று உணர்ந்தேன். யுத்தத்திற்குப் பின் நான் அழுத முதல்முறை அதுதான். நான் சுத்தமாக்கப்பட்டதுபோல உணர்ந்தேன். அவர் மெய்யானவர் என்று அறிந்து இயேசுவை அவர் மேசியாவாக ஏற்றுக்கொண்டேன். நான் ஒரு

மேசியானிய யூதப்பெண் (**Messianic Jew**) (இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட யூதர்கள்) என்று ஜெர்மனில் என்னோடு பேரழிவுக்கு உயிர் தப்பியவர்கள் அறிந்து என்மீது கோபப்படுவதுண்டு. நான் அவர்களது உணர்வினை அறிந்து அவர்களிடம் அன்பு காட்டினேன். நானும் அவர் களுடன் பாடுகளுக்குட்பட்டதை நினைத்து அவர்களிடம் வாதிடவில்லை.

### பெர்லின் அழைக்கிறது

ஒருநாள் திரு சிட் ரோத் (**Sid Roth**) அவர்களிடமிருந்து ஒரு அழைப்பு வந்தது. அவரின் நண்பர் ஒருவர் பெர்லினில் உள்ள மிகப்பெரிய சபையின் போதகராக இருந்தார். அவர் பெர்லினில் உள்ள ஹிட்லர் பயன்படுத்திய மிகப்பெரிய அரங்கத்தை (**Colosseum**) வாடகைக்கு எடுக்கவும் அதில் நடத்தும் கூட்டங்களுக்கு பங்குபெற மேசியானிய யூதர்களை தேடிக் கொண்டிருப்பதாகக் கூறினார்.

அக்கூட்டத்தில் பங்குபெற நான் மிகவும் தகுதி வாய்ந்தவள் என்று சிட்ரோத் எண்ணியுள்ளார். ஆனால் என்னை அதற்காக அழைத்தபோது நான் அதை மறுத்துவிட்டேன்.

அந்த சபிக்கப்பட்ட பூமிக்கு மீண்டுமாக செல்வதில்லை என நான் ஆணையிட்டிருந்தேன். ஆனால் சிட் ரோத் கேட்டுக்கொண்டே இருந்த படியால் பெர்லின் போகலாமா வேண்டாமா என என் மனதிலே மிகப்பெரிய போராட்டம் ஏற்பட்டது. ஆறுமாதங்களாக தொடர்ந்து போராடிக்கொண் டிருந்தேன். "என்னை வேண்டுமானால் கொன்றுவிடும் என்னை அங்கே மட்டும் கொண்டு செல்லவேண்டாம்" என்று கர்த்தரை வேண்டிக்கொண் டேன். "என்னை உம்முடைய வீட்டுக்கு வேண்டுமானால் அழைத்துச்செல்லும். ஆனால் மீண்டும் ஜெர்மனுக்கு திரும்ப கொண்டு செல்ல வேண் டாம்" என ஜெபத்தில் வேண்டிக் கொண்டேயிருந்தேன். நான் அப்படி ஜெபம்பண்ணும் போது எனக்கு ஒரு பதில் வந்தது. "நீ திரும்பச் ஜெர்மனுக்குச் செல்லத்தான் வேண்டும். நீ அவர்களை மன்னிக்கத்தான் வேண்டும்" என்ற வார்த்தை எனக்கு உண்டானது. அப்பொழுது நான் தேவனுக்கு கீழ்ப்படிந்தேன். நான் என் கணவர் மற்றும் நான்கு விசுவாசிகளுடன் ஜெர்மனுக்குச் சென்றோம். இந்த பயணத்திற்கு முன்னர் எனக்கு ஏற்பட்ட போராட்டம் என்னை விட்டு நீங்க எனக்காக அநேக மக்கள் உபவாசித்தார்கள். ஜெபித்தார்கள்.

ஜெர்மனில் அது ஒரு மிகப்பெரிய நிகழ்ச்சியாகும். அதில் புகழ்பெற்ற கிறிஸ்தவர்களாகிய பேட் ராபர்ட்சன் (**Pat Robertson**) டிமோஸ் ஷக்கரியன் (**Demos shekarian**), பேட்பூன் (**Pat Boon**) ஆகியோர் கலந்துகொண்டனர்.

நான் அரங்கத்திற்குள் நுழைந்தேன். அவ்வரங்கம் ஹிட்லர் அறை கூவல் விடுத்த இடமாகும். "நாஜிக்கள் உலகத்தை ஆயிரமாண்டுகள் ஆட்சி செய்வார்கள்" என ஹிட்லர் சவால்விட்ட இடம் அது. அந்த அரங்கம் இப்போது இளம் ஜெர்மானியர்களால் நிறைந்திருந்தது. அதில் குறிப்பிடத் தக்க எண்ணிக்கை உள்ளவர்கள் தாவீதின் நட்சத்திரம் **(Stars of David)** யூத நட்சத்திரம் **(Jewish Stars)** ஆகியவற்றை கழுத்தில் அணிந்திருந்தனர். அங்கே இஸ்ரவேல் நாட்டு கொடிகள் பறந்தன.

நான் அறிந்திருந்த அமெரிக்கத் தலைவர்கள் அரங்கிற்கு வந்திருந்தனர். தாவீதின் நட்சத்திரத்தை **(Stars of David)** அணிந்த ஜெர்மன் மக்களையும் நான் கண்டேன். அது நடக்கக் கூடாத ஒரு காரியமாக இருந்தது. நான் சிந்தனை செய்யத் துவங்கினேன். "நான் இங்கு என்ன செய்து கொண் டிருக்கிறேன்? கர்த்தாவே நீர் என்னிடத்தில் என்ன விரும்புகிறீர்? இங்கே இருந்து என்னை வெளியே கொண்டுசெல்லும். நான் ஜெர்மனி மொழியில் பேசுவதையே விரும்பவில்லை. நான் இதைச் செய்துகொண்டிருப்பது சரியா? யூதர்களைக் கொன்றது சரிதான் என்று ஜெர்மானியரிடம் கூறுவதா?" இத்தகைய சிந்தனை என்னை சித்திரவதை செய்தது.

## நாஜிக்களை நேருக்கு நேர் சந்தித்தல்

ஞாயிறன்று என்னைப் பேசுமாறு அழைத்தார்கள். நான் பேசுவதற்கு ஆயத்தப்படுத்தி அச்சிடப்பட்டு வைத்திருந்த விஷயம் எதுவும் என் நினைவுக்கு வரவில்லை. மன்னித்தலைக்குறித்து பேசியதும் எனது நினைவில் இல்லை. நான் பேசி முடித்தபின்னர் நான் பார்க்க விரும்பாத சிலர் மேடைக்கு வந்தார்கள். அவர்கள் முன்னாள் நாஜிக்கள். நான் வெளிப்படையாக எந்த முன்னாள் நாஜியையாவது பிரார்த்தனை செய்து கொள்ளவும், மன்னிக்கப்படவும் விரும்புகிறார்களா என்று கேட்டதாக நினைவில்லை. எனினும் நான் கூறியதை நானே மறந்துவிட்டாலும், முன்னாள் நாஜிக்கள் தங்களை மன்னிக்குமாறு வேண்டி நின்றனர். 'மேடையில் நின்று கொண்டு முகமுகமாக அவர்களைப் பார்த்து மன்னிக்க முடியுமா?' என்று நான் எண்ணினேன். ஆனால் என்னையும் அறியாமலேயே மன்னித்தலைக் குறித்து தான் பேசியதை நான் உணர்ந்தேன். வந்திருந்த மனிதர்களில் ஒருவர் டசாவைச் **(Dachav)** சேர்ந்த நாஜிப் படையைச் சேர்ந்தவர். அவர் தண் டனை நிறைவேற்றும் அதிகாரியாகப் பணியாற்றியவர் அவர் வந்தவுடன் தன்னை இன்னார் என்று அறிமுகப்படுத்திக்கொண்டார். அவர் எனக்கு முன்பாக முழங்கால்படியிட்டபோது என் சரீரம் வேதனையால் துடித்தது. அந்த மனிதர் தன்னை மன்னிக்கும்படியாக மன்றாடினார்.

நான் ஒரு விசுவாசி. இருப்பினும் சாவிலும், பெர்கன் – பெல்சனிலும் உள்ள வன்கொடுமை முகாம்களில் நான் பெற்ற அனுபவத்தை மக்கள் அறிய வாய்ப்பில்லை. நாங்கள் சென்ற நரகப்பாதையை அவர்களால் கற்பனை செய்யவும் இயலாது. தேவனுடைய கிருபை என்னைத் தாங்கியதால் என்னால் மேடையில் வந்தவர்களை மன்னிக்க முடிந்தது. கிருபை இல்லையாயின் குழந்தைப்பருவத்தில் எனக்கு நேர்ந்த கொடுமைகளை மன்னிக்க முடியாது.

நான் பெர்லினைவிட்டு செல்லும் முன்னர் நான் மன்னிக்கும்படி ஜெபித்த ஒரு முன்னாள் நாஜி என்னைக் காணும்படி வந்திருந்தார். “போருக்கு பின் நீங்கள் ஜெபித்த பின்னர்தான் தான் முதன்முறையாக நிம்மதியாகத் தூங்கினேன்” என்று அவர் சாட்சி கொடுத்தார். மன்னித்தலில் கிரியை எனக்கு ஆச்சரியமாகயிருந்தது.

## உம்முடைய பெலனை எனக்குக் காட்டும்!

மீண்டும் ஒருமுறை நான் ஜெர்மனி சென்றேன். வன்கொடுமை முகாம் அமைத்து எங்களைச் சித்திரவதை செய்த பெர்கன் – பெல்சன் என்ற இடம் நாங்கள் சென்றிருந்த இடத்திற்கு அருகாமையில்தான் உள்ளது என அறிந்தவுடன் நான் அங்கு செல்ல விரும்பினேன். என்னுடன் ஸ்வீடன் தேசத்தை சார்ந்த சூசன் (Susan) கேரி (Gary) ஆகியோருடன் ஆட்டோ (Otto) என்ற ஜெர்மானியரும் மற்ற விசுவாசிகளும் இருந்தனர்.

பெர்கன் – பெல்சின் பிரதான வாசல் எங்குள்ளது என்று ஒரு வழி காட்டியை நான் கேட்டேன். அங்கிருந்த படைவீரர் குடியிருப்புகள் எரிக்கப் பட்டிருந்தபடியால் என்னால் அந்த இடத்தை கண்டுகொள்ள முடியவில்லை. வழிகாட்டி பிரதான வாசலில் என்னைக் கொண்டு சென்றிருப்பாரெனில் குடியிருப்புகள் இருந்த இடத்தை அறிந்திருப்பேன். அந்தப் பகுதி முழுவதிலும் புல் கூட முளைக்காததைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். எத்தனை முறை அங்கு செடிகளையோ, மரங்களையோ, புல்லையோ நட்டாலும் அது முளைப்பதில்லை என அந்த வழிகாட்டி சொன்னார். வழிகாட்டி வைத்திருந்த பெயர் பட்டியலில் என்னுடைய பெயரும் என்னுடைய சகோதரியின் பெயரும் இருந்தது. சிறையிருப்பின்போது பெர்கன் – பெல்சனில் இருந்து டசாவிற்கு கொண்டுசெல்லப்பட்டேன். நான் சென்றபின் அங்கிருந்த மற்ற யூதர்கள் டைபஸ் (typhus) என்ற பூச்சிகளால் உண்டாகும் நோயால் மரணமுற்றதாகக் கேள்விப்பட்டேன். நான் அதை நினைத்து கதறினேன்; கண்ணீர் விட்டேன். நான் பெர்கன் – பெல்சென் வன்கொடுமை முகாமை நோக்கி ‘நீ செத்து விட்டாய், ஆனால் நான் உயிர்பிழைத்தேன். நான் இங்கு மீண்டும் வந்து

நிற்கிறேன். உயிரோடு இருக்கிறேன்' என்று என்னைக் கட்டுபடுத்த முடியாத அளவு கூச்சலிட்டேன்.

பின்னர் நான் ஜெர்மன் தேசத்து இரட்சிப்பிற்காக, ஜெர்மானியர் மேசியாவின் அன்பை அறிந்துகொள்ள வேண்டும் என ஜெபிக்க விரும்பினேன். ஆனாலும் சில தடைகள் என்னில் எழும்பின. எனினும் ஜெபத்திலே நான் தேவனிடம் இவ்வாறு கேட்டேன். "கர்த்தாவே எத்தனையோ அப்பாவி யூத மக்களின் கல்லறைகள் அடங்கிய இந்த இடத்தில் நான் எவ்வாறு ஜெபத்தை ஏறெடுக்கமுடியும் எனக்கு இவ்வளவு கொடுமைகள் நிகழ்ந்திருக்கும்போது, விவரிக்க முடியாதகாரியங்கள் நடந்திருக்கும்போது நான் எவ்வாறு ஜெபிக்க முடியும்" என்று கேட்டேன். தேவன் ஜெப ஆவியை கட்டளையிட்டார். நான் ஜெபித்தேன்.

ஜெபித்துக்கொண்டிருக்கும்போது அந்த ஜெர்மானிய மனிதன் உணர்ச்சி வசப்பட்டு அழத் துவங்கினான். அவனைத் தேற்றும்படியாக நான் அவனை அணைத்துக்கொண்டேன். "நாங்கள் இவ்வளவு தீங்குகள் உங்களுக்கு விளைவித்திருக்கும் போது நீங்கள் எவ்வாறு எங்களுக்கு ஜெபிக்கமுடியும். யூதர்களுக்கு நேர்ந்த கொடிய சம்பவங்களில் என் குடும்பம் தொடர்பு கொண்டிருக்கிறது. நாங்கள் உங்களை இத்துயர சூழ்நிலைக்கு உள்ளாக்கி னோம். உங்களால் எவ்வாறு எங்களுக்காக ஜெபிக்க முடிகிறது. அதன் இரகசியத்தை எனக்குச் சொல்லுங்கள்" என்று அந்த மனிதன் கூறினான். பின்பு அவன் தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். அவர்கள் நால்வரும் அழவும் ஜெபிக்கவும் செய்தனர். ஒருவருக்கொருவர் ஜெபித்தனர். ஜெர்மானிய மக்களுக்காக ஜெபித்தனர்.

## நீங்கள் மன்னித்துதான் ஆக வேண்டும்

நான் கூற விரும்புவது இது தான்.

"நீங்கள் ஒருவரை மன்னிக்க இயலாது என்று உணர்வீர்கள் என்றால் நான் ஜெர்மானியரை வெறுத்தது போன்று நீங்கள் யாரையும் வெறுத்திருக்க முடியாது. நான் என் சகிப்புத் தன்மையினை முற்றிலுமாய் இழந்திருந்தேன். முற்றிலும் வெறுப்புள்ளவனாய் இருந்தேன். பெர்லினுக்குச் செல்லும் முன் எனக்கு 27அறுவை சிகிச்சைகள் செய்தார்கள். பகைமைக்கு உங்கள் சரீரத்திலே ஒரு அடையாளம் உண்டு. ஒரே சரீரத்தில் பகைமையும் அன்பும் சேர்ந்து வசிக்க இயலாது. நான் பகைமையை விட்டு விட்டபோது அன்பு எனக்குள்ளே வந்தது. என்னுடைய சரீரத்திற்குள்ளே ஏதோ ஒன்று

நிகழ்ந்தது. அதற்குப்பின் எனக்கு எந்த வலியோ வேதனையோ இல்லை. பகை என்ற விஷத்தை கர்த்தர் என்னிலிருந்து எடுத்துப் போட்டபடியால் 1981ம் வருடத்திற்குப் பின்னர் எனக்கு எந்த அறுவைசிகிச்சையும் நடக்க வில்லை.

நீங்கள் கடந்து சென்ற வேதனையை யாரும் அறியமுடியாது. நான் கடந்து சென்ற வேதனையையும் யாரும் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. ஆனால் பகைமையை உங்களுக்குள் வைத்துக்கொள்ள எந்த விதமான சாக்குபோக்கும் கிடையாது. நீங்கள் மன்னித்து தான் ஆக வேண்டும். நீங்கள் பகைமையை விடத்தான் வேண்டும். மன்னிக்க வேண்டிய பெலனைப் பெற்றுக்கொள்வது உங்களுடைய திறமை அல்ல. உங்கள் சொந்த வல்லமையினால் ஒன்றையும் செய்யமுடியாது. நீங்கள் தேவனிடம் செல்லவேண்டும். அவர் உங்களுக்கு பெலனை அருளுவார்."

"உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்" (எசே.36:26) என்று சொன்னவர் கொடுப்பார்.

"அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப் போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதர னையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரே.31:33, 34).

வாக்களித்தவர் உண்மையுள்ளவர் அப்படியே செய்வார்.

## தீமையை நன்மையால் வெல்லலாமே!

"அரபியர்கள் தங்கள் ஆயுதங்களை இன்று விட்டுவிட்டால் வன்முறையே இருக்காது. யூதர்கள் தங்கள் ஆயுதங்களை இன்று விட்டுவிட்டால் இஸ்ரவேல் நாடே இருக்காது" (IF THE ARABS PUT DOWN THEIR WEAPONS TODAY THERE WOULD BE NO MORE VIOLENCE. IF THE JEWS PUT DOWN THEIR WEAPONS TODAY THERE WOULD BE NO MORE ISRAEL).

BENJAMIN NETANYAHU - PRIME MINISTER OF ISRAEL

*"நீ தீமையினால் வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு"* (ரோம.12:21).

# 2 ஐ. நா. பொது அவையில் இஸ்ரவேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹோ வரலாற்றுச் சிறப்புரை



இஸ்ரவேல் ஒரு பழம்பெரும் வரலாற்று சிறப்புடைய நாடு. நாட்டை இழந்து நாடற்றவர்களாக அரசியல் நிர்பந்தங்களால் உலகநாடுகள் முழுவதும் முதலாம் நூற்றாண்டிலேயே ஒரு காலகட்டத்தில் சிதறடிக்கப்பட்டார்கள். சிதறடிக்கப்பட்டவர்கள் இந்தியா உட்பட முஸ்லீம் நாடுகள் தவிர எல்லா நாடுகளிலும் சென்று வாழ்ந்தார்கள். சென்றடைந்த நாடுகளிலும் இரண்டாந்தரக் குடிமக்களாகக் கருதப்பட்ட நிலையிலும், சமூக கலாச்சார, பொருளாதார நெருக்கத்தின் மத்தியிலும் தனித்து நின்று எதிர்நீச்சல் போட்டே அவற்றையெல்லாம் மேற்கொண்ட மக்கள். உயிர் இழப்புகளையும் உடைமை இழப்புகளையும் சகித்து அவற்றையெல்லாம் கடந்து வந்த மக்கள். இப்படிப்பட்ட பாதைகளில் அவர்கள் கடந்து சென்றாலும் அவர்கள் தேவன் தெரிந்து கொண்ட மக்கள் என்பது மாற்றமில்லாத உண்மை. முதலாம் உலகயுத்தத்தின் முடிவில் இஸ்ரவேல் நாடு சிதறடிக்கப்பட்ட அந்த மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இரண்டாம் உலகயுத்தத்தின் முடிவில் பால்போர்டு பிரகடனத்தின்படி (BALFORD DECLARATION) இஸ்ரவேல் மக்கள் சுமார் 19 நூற்றாண்டுகள் கழித்து தேவன் அவர்களை நினைந்தருளியபடியால் தங்களுக்கென்று அந்த நாட்டைப் பெற்றுக் கொண்டனர். 1948 மே 15ம் நாள் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப் பட்டது. அதற்குப் பின்னரும் அண்டைய முஸ்லீம் நாடுகள் நிமித்தம் பல யுத்தங்களை சந்தித்தனர். ஆனாலும் தைரியமாக நிலை நிற்கிறார்கள்.

## ஐக்கிய நாடுகள் சபையில் வேதத்தின் தொனி

2013 அக்டோபர் 1ம் நாள் ஐக்கிய நாடுகள் சபையின் பொது அவையில் உலகநாடுகளின் பிரதிநிதிகளுக்கு இஸ்ரவேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹோ உரை நிகழ்த்தினார். அது ஐக்கிய நாட்டு சபை வரலாற்றில் சிறப்புமிக்கது. வேதத்தில் பழைய ஏற்பாட்டிலிருந்து மட்டுமல்ல புதிய

ஏற்பாட்டிலிருந்தும் மேற்கோள்களை எடுத்துக் கூறியது அவரது பேச்சுக்கு சிறப்பாய் அமைந்திருந்தது. பழைய ஏற்பாட்டு காலத்தில் இஸ்ரவேல் மக்களை நடத்திய தேவன் இனியும் நடத்துவார் என்ற நம்பிக்கையின் பிரதிபலிப்பாக இருந்தது. தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசனங்களை மேற்கோள் காட்டியிருப்பது அதற்கு ஆதாரமாக இருக்கின்றன.

## ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய முற்பிதாக்களின் தேசம்

பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹோவின் பேச்சின் சில பகுதிகளைக் காணலாம். “இஸ்ரவேல் நாட்டின் அனைத்து குடிமக்களின் பிரதிநிதியாக இன்று உங்கள் முன்பாக நிற்கிறேன். எங்களுடைய மூதாதையர்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் மிகப்பழமையான தாய் நாடாகிய இஸ்ரவேல் நாட்டிற்கு 4000 ஆண்டுகால வரலாறு உண்டு. அப்படிப் பட்ட எங்கள் முற்பிதாக்களின் நாட்டை இரண்டு நாடுகளாக துண்டாட முடியாது. நாங்கள் ஒரு நீண்டகாலத்தைக் கடந்து வந்திருக்கிறோம். மிகப் பெரிய தடைகளையெல்லாம் மேற்கொண்டு வந்திருக்கிறோம். இந்த நெடும்பயணம் எங்களுக்கு இரண்டு காரியத்தைக் கற்றுத் தந்திருக்கிறது. நம்பிக்கையை ஒருபோதும் விட்டுவிடக்கூடாது **(NEVER GIVE UP HOPE)** எப்பொழுதும் விழிப்போடிருக்கவேண்டும். **(ALWAYS REMAIN VIGILANT)** நம்பிக்கை எதிர்காலத்தை நிர்ணயிக்கிறது, விழிப்புடனிருப்பது அதைக் காத்துக் கொள்ளுகிறது.”

இஸ்ரவேல் பிரதமரின் கருத்துப்படி பார்த்தால் தேவனுடைய வார்த்தை அரசியல் ரீதியாக சரியானதே. அது இன்றும் என்றும் பொருத்தமானதே என்று கருதுகிறார் என்று தோன்றுகிறது.

## எருசலேம் ஆலயத்தைக் கட்ட கோரேஸ் இராஜாவின் கட்டளை

ஈரான் நாடு, எதிர்காலத்தைக் குறித்த எங்களுடைய நம்பிக்கைக்கு சவால்விடும் வகையில் நியுகிளியர் ஆயுதங்களை தயாரித்து எங்களை அழித்துவிடப்போவதாக அச்சுறுத்துகிறது. இஸ்ரவேல் நாட்டிற்கு விரோத மாகவே அது செயல்பட்டு வருகிறது. இந்த அச்சுறுத்தல் எப்பொழுதும் தொடர முடியாது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டுமென்று விரும்புகிறேன். வேதத்தில் சொல்லப்பட்டிற்கும் ஒரு வரலாற்று நிகழ்ச்சியை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பெர்சிய சாம்ராஜ்யத்தின் (தற்போதைய ஈரான்) ஆளுகையின்போது கோரேஸ் இராஜா அவன் யூதனாக இல்லாதிருந்தும் எருசலேம் ஆலயத்தைக் கட்டி எழுப்ப உத்தரவிட்டான். எருசலேமைக் கட்டி

எழுப்ப தேவன் கோரேஸைப் பயன் படுத்தியிருப்பதைப் பாருங்கள். "பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்" (எஸ்றா 1:2) என்று கோரேசைக் குறித்து வாசிக்கிறோம். பெர்சிய இராஜாவாகிய கோரேசே எருசலேமைக் கட்டி எழுப்ப உத்தரவிட்டார். இஸ்ரவேலைக் கட்டி எழுப்புவது தேவ சித்தமாயிருந்தபடியால் தேவன் அப்படிச் செய்தார். ஆனால் இப்போதைய ஈரான் பிரசிடென்ட் ரோகானி (ROUHANI) இஸ்ரவேல் மக்களை அழிக்கத் திட்டமிடுகிறார். அழித்துவிடுவோம் என்று சவால் விடுகிறார். ஆகவே யூதமக்களை தேவசித்தத்திற்கு விரோதமாக எதிர்த்து நிற்காதீர்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்வீர்களானால் அது உங்களுக்கேத் திரும்பும் (WILL BACKFIRE) ஈரானில் ஜனாதிபதிகள் வந்தார்கள், போனார்கள். எனினும் எங்களுடைய மூதாதையர்களின் தேசத்தில் நாங்கள் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறோம்."

### ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்

இஸ்ரவேல் பிரதமர் நெத்தன்யாஹோ புதிய ஏற்பாட்டையும், குறிப்பாக மத்தேயு சுவிசேஷத்தை வாசிக்கிறார் என்று அவர் மேற்கோள் காட்டு வதிலிருந்து தெரிகிறது. மேற்குறிப்பிட்ட மேற்கோள் (மத்.7:15) மத்தேயு சுவிசேஷத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் நாட்டின் எதிரிகள் யார் என்பது அவர்களுடைய செயலால் வெளிப்படும் என்று குறிப்பிடும் வேளையில் **"அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்"** (மத்.7:20) என மேற்கோள் காட்டுகிறார். ஈரானிய பிரசிடென்ட் ரோகானியின் வார்த்தையும் செயலும் ஒருபோதும் இசைந்து போவதில்லை அது மாறாக நடந்திருக்கிறது. ஏனெனில் எத்தனையோ கொலைகள், பயங்கரவாத சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இது அவருடைய வார்த்தைக்கு முற்றிலுமாக மாறாக இருக்கிறது என்று அவருடைய பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆண்டவராகிய இயேசு தேவாலயத்திற்குச் சென்று ஆலயத்திலே விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி காசுக்காரர்களுடைய பலகைகளையும் புறாவிற்கிறவர்களுடைய ஆசனங் களையும் கவிழ்த்து நிலவரங்களை சரிசெய்ய யாவருடைய கவனத்தையும் ஈர்த்துபோல "நமக்கென்ன" என்று மெத்தனப்போக்கிலிருக்கும் உலக நாடுகளை தட்டி எழுப்பி ஈரான் தேசத்தின் வஞ்சகமான செயலால் தவிர்க்கமுடியாத ஒரு பேராபத்து இருக்கிறது என்பதை உணர்த்தும்

வகையில் அவருடைய பேச்சு அமைந்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் பொது அவையில் அமர்ந்திருந்த அனைவரும் ஈரானின் பொய்யுக்கு மேல் பொய் சொல்லி மற்றவர்களை வஞ்சித்து ஆபத்திற்கு அடிகோலும் இந்த தேசத்தை "முரட்டு ஆட்சி" (ROGUE REGIME) என்று வெளிப்படையாக நிராகரிக்க வேண்டும் என்ற காரியத்தை உணர்ந்துகொள்ளும் வகையில் பேசினார்.

**இஸ்ரவேல் தனித்து நிற்கும்**

ஆஷீர் இன்ட்ரேட்டர் (ASHER INTRATER) என்ற தீர்க்கதரிசனமுள்ள இஸ்ரவேலிலுள்ள யூதத்தலைவர், நெத்தனயாஹோவின் பேச்சில் "ஈரானிய நியுகிளியர் அச்சுறுத்துதலிருந்த இஸ்ரவேல் நாட்டைக் காத்துக்கொள்ள தனித்து நிற்க வேண்டிய நிலை வந்தாலும் அது தனித்து நிற்கும்" என்று குறிப்பிட்டது வேதத்திலுள்ள தீர்க்கதரிசனத்தை (உபா.33:28,29) அடிப் படையாகக் கொண்டது. "இஸ்ரவேல் சுகமாய் தனித்து வாசம்பண்ணுவேன். யாக்கோபின் ஊற்றானது தானியமும் திராட்சரசமுமுள்ள தேசத்திலே இருக்கும்.... இஸ்ரவேல், நீ பாக்கியவான். கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்?" இவ்வளவு நெருக்கத்தின் வழியாக சென்று கொண்டிருக்கும் இஸ்ரவேல் தேசம் இந்த உண்மையை அறிந் திருக்கும்போது தன்னுடைய இரட்சிப்புக்கு தேவனை முற்றுமாகச் சார்ந்து கொள்ளவேண்டும்.

நெத்தென்யாஹோ தன்னுடைய பேச்சை நிறைவு செய்வதற்கு முன்பாக தன் குடும்பத்தில் நடந்த ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார். "லேடீஸ் அன் ஜென்டில்மென், 19ம் நூற்றாண்டில் நடுங்க வைக்கும் குளிரான ஒரு நாளில் என்னுடைய தாத்தா நாத்தானும் அவருடைய தம்பி ஜூடாவும் ஐரோப்பியா வின் மையமான இடத்திலுள்ள ஒரு ரயில்வே ஸ்டேஷனில் நின்றுகொண் டிருந்தார்கள். யூதர்களுக்கு விரோதமான ஆயுதம் தாங்கிய ஒரு கும்பல் "யூதர்களே, ஒழிந்துபோங்கள்" (DEATH TO JEWS) என்று பலத்த சத்தத்தை எழுப்பி அவர்களை தாக்குவதற்குப் பாய்ந்தார்கள். அப்பொழுது அவருடைய தம்பியை நோக்கி, "ஜூடா நீ ஓடித் தப்பித்துக்கொள்" என்று அவரை ஓடித் தப்பவைத்தார். அந்த கும்பல் என் தாத்தாவை மூர்க்கத்தனமாகத் தாக்கி இரத்த வெள்ளத்தில் தள்ளிவிட்டு செத்துவிட்டதாக எண்ணி மறைந்து விட்டனர். அவர் மரிப்பதற்கு முன்பாக "எவ்வளவு பெரிய அவமானம், எவ்வளவு பெரிய அவமானம் (WHAT A DISGRACE, WHAT A DISGRACE) எங்களைக் காத்துக் கொள்ள பெலனற்றவர்களாக நாங்கள் இப்படி மண்ணில் கிடக்கவேண்டுமா?

நான் ஜீவனோடு இருப்பேனானால் நான் என் குடும்பத்தை யூத மக்களுக்கான தாய்நாட்டிற்கு அழைத்துச்சென்று அந்த நாட்டைக் கட்டி எழுப்ப நான் பாடுபடுவேன்'' என்ற தீர்மானத்தை குரல் எழுப்பினார். ஆனால் என் தாத்தா மரித்துப்போனார். இன்று நான் இஸ்ரவேல் நாட்டின் பிரதமராக இந்த அவையில் நிற்கிறேன். அவருடைய தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. எனக்கு மாத்திரமல்ல இஸ்ரவேலிலுள்ள ஒவ்வொருவருக்கும் நாடற்றவர் களாக சிதறடிக்கப்பட்ட தங்கள் பெற்றோரைக் குறித்தும் பெற்றோரின் பெற்றோரைக் குறித்தும் சோக வரலாறு உண்டு. அந்த சோகத்தை ஏந்திக் கொண்டு தங்கள் தாய்நாட்டிற்கு வந்து குடியேறியுள்ளார்கள். செத்து விட்டதாக போடப்பட்ட எங்களை உயிர்ப்பித்து இன்று எங்களை இதை செழுமை நாடாக மாற்ற வைத்திருக்கிறார். எங்களை நாங்களே காத்துக் கொள்ளும் திறனையும் தைரியத்தையும் பெற்றிருக்கிறோம்.

எங்களுடைய காலத்திலேயே வேதாகமத்தில் ஆமோஸ் தீர்க்கதரிசி சொல்லிய தீர்க்கதரிசனம் நிறைவேறுவதைக் காணச் செய்திருக்கிறார். **"என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப்பிடுங்கப்படுவதில்லை யென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்''** (ஆமோ. 9:14,15). தேவனே இஸ்ரவேல் மக்களை மீண்டும் அவர்களை தாய்நாட்டிற்கு கொண்டுவந்து நாட்டியிருக்கிறார் என்றால் அவர்கள் பிடுங்கி எறியப் படுவதற்கு அல்ல. எந்த அச்சுறுத்தலும் அது நியுகிளியர் அச்சுறுத்தலாக இருந்தாலும் எங்களை எங்கள் நாட்டிலிருந்து பிடுங்கி எறிய முடியாது. ஏனென்றால் இந்த மக்களை தேவன் நிலைநிறுத்தியிருக்கிறார்'' என்று கூறி தன்னுடைய உரையை முடித்தார்.

உலக நாடுகளின் பிரதிநிதிகள் கூடுகிற அவையில் வேதாகம தீர்க்க தரிசனங்கள் மாறாதவைகள் என்றும் அதைத் தந்த தேவன் மாறாதவர் என்றும் அந்த தேவன்மீது நம்பிக்கையோடு சார்ந்திருக்கிறோம் என்றும் உலக நாடுகள் அனைத்துக்கும் பிரகடனப்படுத்த நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.



விஷவாயு அறையின் (Death Chamber) உள்தோற்றம். கார்பன் மோனாக்சைடு (Carbon Monoxide), சைக்கிலோன் B (Zyclon B) கலந்த விஷவாயுவை அறைக்குள் செலுத்திய சில விநாடிகளில் அவர்கள் மரணத்தைச் சந்திப்பார்கள்.

தகவல் : Holocaust Memorial Museum இணையதளம்

# 3 நாஜிப் படையினரின் பொற்கஜானா

இரண்டாவது உலக யுத்தத்தின்போது 1945ம் ஆண்டு ஏப்ரல் மாத துவக்கத்தில் ஜெர்மனியிலுள்ள மெர்க்கர்ஸ் என்ற இடத்தை பிரிட்டனைச் சேர்ந்த ஜெனரல் பேட்டனின் (General Patton) 3வது இராணுவப் பிரிவு கைப்பற்றியது. ஜெர்மன், நேசநாடுகளின் (ALLIED FORCES) படைக்கு விழுந்து விடும் நிலையை எட்டியது. பிரிட்டனின் இராணுவம் மெர்க்கர்சுக்கு வெளியே முகாமிட்டிருந்த நேரம் பிரான்சைச் சேர்ந்த நிறைமாதக் கற்ப்பிணிப் பெண் ஒருத்தியை இராணுவப் போலிசார் நிறுத்தினார்கள். அவள் தான் தாமத மின்றி மெர்க்கர்ஸ் நகரிலுள்ள மருத்துவமனைக்கு பிரசவத்திற்குச் செல்ல வேண்டும் என்று மிகுந்த பரிவோடு அவர்களோடு சொன்னாள். அவள் மீது இரக்கம் கொண்ட இராணுவத்தினர் தங்களது இராணுவ வாகனத்தில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். மெர்க்கர்ஸ் நகருக்குள் நுழைவதற்குமுன் ஒரு சுரங்கத்திற்கு அருகேயுள்ள ஒரு கட்டிடத்தைச் சுட்டிக்காட்டி "இந்தச் சுரங்கமும் கட்டிடமும்தான் நாஜிப் படையினரின் கஜானா (Treasure of Nazis). இங்கேதான் விலையேறப்பெற்ற அநேகப் பொருட்களை வைத்திருக்கின்றார்கள்" என்றாள். அழைத்துச் சென்ற இராணுவத்தினர் அவளை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு தங்களது இராணுவ அதிகாரியோடு தொடர்புகொண்டு நாஜிப் படையினரின் கஜானாவைக் குறித்தத் தகவலைச் சொன்னார்கள். இராணுவ மூத்த அதிகாரியும் இன்னும் இராணுவத்தினரும் வந்து குவிந்தனர். உள்ளே நுழைந்து சோதனை நடத்தினார்கள்.



சோதனையில் 8000 தங்கப் பாளங்களும் (gold bars) 2000 சாக்குப் பைகள் நிறைய வெவ் வேறு நாடுகளைச் சார்ந்த தங்க நாணயங்களும் (gold Coins) பல பெட்டிகளில் ஜெர் மானிய கரன்சி நோட்டுகளும், அநேக சூட்கேஸ்கள், டிரங்க்

பெட்டிகளில் தங்க நகைகள், கைக்கடிகாரங்கள் மற்றும் அநேக தங்கம், வெள்ளியினால் ஆன ஜாமான்களைக் கைப்பற்றினார்கள். இவைகளெல்லாம் ஹிட்லரின் புயற்படையினரால் யூதர்களின் வீடுகளில் கொள்ளையடிக்கப் பட்டவைகளும் பல்வேறு வன்கொடுமை முகாம்களில் யூத மக்களிடமிருந்து பறிக்கப்பட்டதும் கொல்லப்பட்ட அநேகமாயிரம் யூத மக்களிடமிருந்து கைப்பற்றியவைகளாகும். யுத்தத்தில் ஜெர்மனியின் வீழ்ச்சிக்குப் பின்னர் இவைகள் யாவும் நேசநாடுகளின் பொதுச் சொத்துக்களாக மாறின. இவைகள் யாவும் உண்மையான உரிமையாளர்களுக்குத் (RIGHTFUL OWN-ERS) திரும்பக் கொடுக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்தனர்.

இதற்கென ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது (GOLD COMMISSION). அந்த அமைப்பு, வன்கொடுமை முகாம்களிலிருந்து உயிர் தப்பியவர்கள் (SURVIVORS FROM CONCENTRATION CAMPS) நாஜிப்படையினரால் பாதிப்புக்குள்ளான எந்த நாடுகளின் யூதர்களாயினும் அவர்களுடைய வீடுகள் கொள்ளையிடப் பட்டிருந்தாலும் அவர்கள் தங்க நகைகளாயினும் பொருட்களாயினும் இருக்குமானால் அவற்றை அடையாளம் காட்டித் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்ற அறிவிப்பைக் கொடுத்தனர். அந்தப் பெரும் நாசத்திற்குத் (HOLOCAUST) தப்பிப் பிழைத்தவர்கள் மிகச் சிலரே. எனினும் அப்படி அடை யாளம் காட்டி சிலர் தங்கள் பொருட்களைத் திரும்பப் பெற்றிருக்கின்றனர்.



கடைசியாக 1998ல் இந்த தங்க நகைகள் யாவையும் ஒன்று சேர்த்த தங்க சேமிப் பாக்கி (STOCK OF GOLD) நாஜிப் படையினரால் வன்கொடு மைக்குத் தப்பிப் பிழைத்தவர் களுக்கு உதவும் நிதியாக மாற்றப் பட்டுள்ளது. (NAZI PER SECUTION RELIEF FUND FOR HO LOCAUST SURVIVORS) இந்த நிதியின் மூலம் அநேக யூதர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

நாஜி கஜானா நேசநாடுகளின் படைப்பிரிவினருக்கு ஜெர்மனியில் வாழ்ந்த ஒரு பிரான்ஸ் தேசத்து கர்ப்பிணிப் பெண்ணால் அடையாளம் காட்டப்பட்டது. தற்செயலாக நடந்ததுபோல நம்முடைய பார்வைக்குத் தெரிந்தாலும் தேவன் எவ்வளவு கரிசனையுள்ளவராக அந்த இடத்தைக் காட்டிக்கொடுத்து அது அன்று பாதிக்கப்பட்ட யூதர்களுக்கு உதவும்

நிதியாக மாற்றியிருப்பது எவ்வளவு அற்புதமான நிகழ்ச்சி என்பதை சிந்தித்துப் பாருங்கள். இத்தனை பெருமதிப்புள்ள சொத்துக்களை அனுபவிக்க ஹிட்லரும் இல்லை. ஹிட்லரின் புயற்படையினரும் இல்லை. ஆனால் அவைகள் மீண்டும் யூதர்களுக்கு உதவும் நிதியாக மாறியிருப்பது உண்மை யிலேயே நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

"தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்" (யோபு 42:2) என்ற தேவனுடைய வார்த்தை எவ்வளவு பெரிய சத்தியத்தை நிரூபித்துக் கொண்டிருக்கிறது. எகிப்தில் இஸ்ரவேல் மக்கள் 400 ஆண்டுகள் அடிமைகளாக வாழ்ந்தனர். கடினமான வேலைகளுக்கு ஆண்களும் பெண்களும் உட்படுத்தப்பட்டனர். அவர்களை நடத்திய ஆளோட்டிகளின் கொடூர நடத்துதலால் வேதனைப் பட்டனர். கூக்குரலிட்டனர். அவர்களுக்கு சேர வேண்டிய நியாயமான கூலி வஞ்சிக்கப்பட்டு எகிப்தியர் தமதாக்கிக் கொண்டனர். அவர்கள் நீதி கேட்க முடியாது. ஏனெனில் அவர்கள் கொத்தடிமைகள். ஆனால் தேவன் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்க சித்தம் கொண்ட போது நடந்தது என்ன? "மோசே சொல்லியிருந்தபடி இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தியரிடத்தில் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டார்கள். கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்ததினால், கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்கள்; இவ்விதமாய் அவர்கள் எகிப்தியரைக் கொள்ளையிட்டார் கள்" (யாத்.12:35,36) என்று வாசிக்கிறோம். இஸ்ரவேல் மக்களை இம்சை செய்து, வஞ்சித்து எடுத்துக்கொண்ட கூலியை அவர்களால் அனுபவிக்க முடியாத நிர்ப்பந்தத்தில் இஸ்ரவேல் மக்களுக்குத் திருப்பிக் கொடுத்தார்கள். இந்த கொள்ளைப் பொருட்களைக் கொண்டு வனாந்திரப் பயணத்தின்போது ஆசரிப்புக் கூடாரத்திற்கு வேண்டிய பொருட்களை செய்தார்கள் என்று காண்கிறோம். இஸ்ரவேல் மக்களை ஆதி நாட்களிலும் 20ம் நூற்றாண்டிலும் நடத்திய வழிகளை சிந்தித்துப் பாருங்கள். அவர்களைப் போல சொந்த நாடின்றி உலகம் முழுவதும் சிதறடிக்கப்பட்ட மக்களும் இல்லை. அவர்களைப் போல பாடுகளை அனுபவித்த மக்களும், இலட்சக் கணக்கான மக்கள் கூட்டம் கூட்டமாக கொல்லப்பட்டு, ஒரே கல்லறையில் (MASS GRAVE) குவிக்கப் பட்ட வர்களும் இல்லை. ஆனாலும் ஆண்டுகள் நூற்றாண்டுகள் கடந்து சென்றாலும் **வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ள தேவன்** அவர்களுக்கு இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் அவர்களுக்கு சொந்த நாட்டையும் திரும்பக் கொடுத்து அங்கு குடியேற்றவும் செய்தார். வறண்ட பூமியை

செழிப்பாக்கினார். எண்ணை வளமுள்ள நாடாக்கினார். சுதந்திரநாடாகி 65 ஆண்டுகளுக்குள் ஒரு வல்லரசு நாடுபோல (SUPER POWER) உருவாகி வருவதை நாம் காண்கிறோம். "இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்" (எண்.24:1).

"அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கும் என்பதை அறிந்திருக்கிறோம்" (ரோம.8:28) என்ற வசனம் இஸ்ரவேல் மக்களின் வாழ்வில் ஜீவனுள்ள நிருபணமாக நிற்கிறது.

**நன்றி தகவல்:- "Stories of faith and Courage from world war II - Battle fields and Blessings"**

# 4 உலகிலேயே அதிக நோபல் பரிசுகளைப் பெற்றுக்கொண்ட யூதர்கள்

நோபல் பரிசு (NOBEL PRIZE) என்பது உலக அளவில் 1901ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இயல்பியல் (PHYSICS) வேதியியல் (CHEMISTRY), மனிதன் உட்பட சகல ஜீவனுள்ள பிராணிகளின் உடற்கூறு குறித்த ஆய்வு (PHYSIOL-OGY), மருத்துவம் (MEDICINE), இலக்கியம் (LITERATURE), சமாதானம் (PEACE) மற்றும் 1969ம் ஆண்டு முதல் பொருளாதாரம் (ECONOMICS) ஆகிய பகுதிகளில் ஆய்வு செய்து சாதனை புரிந்தோருக்குத் தரப்படும் பரிசாகும். இதற்கான பரிசுத்தொகை சுமார் ஒரு மில்லியன் அமெரிக்கன் டாலராகும்.

இஸ்ரவேல் ஒரு சிறிய நாடு. அதன் பரப்பளவே 8522.04 சதுர மைல்கள் தான். உலக மக்கட் தொகையில் 0.2 விழுக்காடு மக்களே யூதர்கள். 2010ம் ஆண்டு இஸ்ரவேல் அரசு தகவல்துறை வெளியீட்டின்படி (FACTS ABOUT IS-RAEL) அந்நாட்டின் மக்கட் தொகை 7.6 மில்லியன். இதில் 75.5 விழுக்காடு யூதர்கள், 20.2 விழுக்காடு அரேபியர்கள், 4.3 விழுக்காடு சிறுபான்மை யினர். உலக மக்கட்தொகையில் இஸ்ரவேல் நாட்டின் மக்கட் தொகை 0.2 விழுக்காடுதான்.

யூதமக்கள் கி.பி.70ம் ஆண்டு ரோம சாம்ராஜ்யத்தின் படையெடுப்பால் நாட்டை இழந்து உலக முழுவதும் சிதறடிக்கப்பட்டார்கள். இந்த யூத மக்கள் மிகச்சிறந்த அறிவாளிகள் (INTELLECTUALS) பாடுபடுகிற சிந்தையுள்ளவர் கள் (INDUSTRIOUS) நெருக்கப்பட்டாலும் மனமுறிவடையாதவர்கள் (NOT DE-SPAIR).

**2013 ஆண்டு முடிய 850 பேருக்கு நோபல் பரிசுகள் கொடுக்கப்பட் டுள்ளன. இவற்றுள் 188 நோபல் பரிசுகளை** இஸ்ரவேல் நாட்டில் வாழுகிற யூதர்களோ அல்லது சிதறடிக்கப்பட்ட நாடுகளில் வாழுகிற யூதர்களோ பெற்றிருக்கின்றனர். அதாவது **உலக மக்கட் தொகையில் 0.2 விழுக்காடு மட்டுமே உள்ள யூதர்கள் 20 விழுக்காட்டிற்கும் சற்று மேற்பட்ட நோபல் பரிசுகளைப் பெற்றுள்ளனர்** என்றால் இது மிகுந்த ஆச்சரிய மாகவே உள்ளது. இதில் குறிப்பிடத்தக்க மற்றொரு ஆச்சரியமான காரியம் என்னவெனில் 2007ம் ஆண்டு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை

பெற்றுக்கொண்ட லியோனிட் ஹர்விக்ஸ் (LEONID HUR-WICZ) போலந்தில் வாழ்ந்து அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்து சென்ற யூதர். தன்னுடைய 90வது வயதில் நோபல் பரிசைப் பெற்றுக்கொண்டார்.



லியோனிட் ஹர்விக்ஸ்

இதில் 1986ல் நோபல் பரிசு பெற்ற ஏலி வீஸ்லாந்த் (ELIE WIESLAN) ஹிட்லரின் நாஜிப் படையினரின் கொலைவெறி முகாமிலிருந்து (EXTERMINATION CAMP) தப்பி அமெரிக்காவுக்குக் குடிபோனவர். ஹிட்லரின் ஆட்சியில் யூத இனத்தையே அழிக்கும் கொலைத்திட்டத்தின் பேரழிவைக் குறித்த (HOLACAUST) அமைப்பில் பணியாற்றினார் (CHAIRMAN OF "THE PRESIDENT'S COMMISSION ON THE HOLACAUST).



ஏலி வீஸ்லாந்த்

மேலும் நோபல்பரிசு பெற்றவர்களுள் வால்ட்டர் கோன் (WALTER KOHN), ஒட்டோ ஸ்டேர்ன் (OTTO STERN) ஆல்பர்ட் ஐன்ஸ்டின் (ALBERT EINSTEIN) ஆகியோர் ஹிட்லரின் நாஜிப்படையினரின் கொடுமை தாங்க முடியாமல் ஜெர்மனியிலிருந்து வெவ்வேறு நாடுகளுக்குத் தப்பியோடியவர்கள்.

**தகவல் : WIKIPEDIA, THE FREE ENCYCLOPEDIA**



வால்ட்டர் கோன்



ஒட்டோ ஸ்டேர்ன்



ஆல்பர்ட் ஐன்ஸ்டின்

***"இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்"* (எண்.24:1).**

# 5

# இவள் என்னுடைய மகள்

பெனிலோப் டக்வொர்த் (**Penelope Duckworth**) ஸ்டேன்போர்டு பல்கலைக்கழகத்தின் சிற்றாலயப் போதகர் (**Chaplain**) ஒரு நாள் அவர் விமானத்தில் பயணம் செய்து கொண்டிருக்கும்போது தன் அருகில் அமர்ந்திருந்த கிறிஸ்தவப் பெண்மணி யூதச் சிறுமிக்கு வளர்ப்புத் தாயாக இருப்பதை விளங்கிக்கொண்டார். எந்த சூழ்நிலையில் யூதச் சிறுமியை சுவிகாரம் எடுத்துக்கொண்டார்கள் என்பதை அறிய விரும்பினார். அந்த கிறிஸ்தவ பெண்மணியைக் கேட்டார்.

“நான் போலந்து நாட்டில் குடியிருந்தேன். ஹிட்லரின் நாஜிப்படை போலந்து நாட்டின்மீது போர் தொடுத்து போலந்தைக் கைப்பற்றிக் கொண்டது. அந்த நாட்களில் யூதர்களை நாஜிப்படையினர் மிருகங்களை வேட்டையாடுவது போல வேட்டையாடிப் பிடித்து வன்கொடுமை முகாம்களுக்கு (**Concentration camp**) லாரிகளில் ஏற்றிச் சென்று கொண்டிருந்தனர். ஒருநாள் இரயில்வே ஸ்டேஷன் அருகிலுள்ள மார்க்கெட்டில் ஜாமான்கள் வாங்கச் சென்றிருந்தேன். அப்பொழுது நாஜிப்படையினர் திடீரென அங்குவந்து யூதர்களைப் பிடித்தனர். அப்பொழுது நடுத்தர வயதுள்ள ஒரு பெண் நடைபழகும் நிலையிலுள்ள சிறிய பெண்பிள்ளையோடு (**Toddling little girl**) மார்க்கெட்டிற்கு வந்திருந்தாள். நாஜிப்படையினரில் ஒருவன் அவளை லாரியில் ஏற்ற கையைப் பிடித்து இழுத்த நேரத்தில் பின்தொடர்ந்து சென்ற சின்னக் குழந்தையைக் கண்டு “இது உன் மகளா?” என்று கேட்டாள். இந்த பிள்ளைக்கு என்ன நடக்கப் போகிறதோ என்ற பீதியில் திகைத்து நின்றாள். அருகில் நின்ற என்னை மிகுந்த பரிதாபத்தோடு என் கண்களையே உற்று நோக்கினாள். எனக்கு உதவி செய்வாயா என்று கெஞ்சுவது போலிருந்தது. அடுத்த நொடியில் “இல்லை, இது என் மகள் அல்ல. அவர்களுடைய மகள்” என்று என்னைச் சுட்டிக்காட்டினாள். நான் விளங்கிக்கொண்டேன். “ஆம் இது என்னுடைய மகள்” என்று நான் எடுத்துக்கொண்டேன். அந்தப் சிறு பெண்ணை நாஜிப் படையினர் விட்டுச் சென்றுவிட்டனர். அப்போதிருந்து இவள் என்னுடைய சொந்த மகளாக ஏற்றுக்கொண்டேன்” என்று சொன்னாள்.

சிற்றாலயப் போதகர் சிந்தித்தார். இதைப் போலத்தான், நாம் ஒரு பாவமும் அறியாதவர்கள் என்பதால் அல்ல. பாவிகளாக இருந்த நம்மை மரணத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த நம்மை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய அளவற்ற கிருபையால் தம்முடைய சொந்த பிள்ளையாக ஏற்றுக்கொண்டு நம்மை இரண்டாம் மரணமாகிய நித்திய நரகத்திற்கு விலக்கி பாதுகாத்திருக்கிறார். யூதக் குழந்தையை உற்று நோக்கினார். யூதக் குலத்தில் பிறந்த இயேசு உலகத்தின் இரட்சகரானதினால் யூதரல்லாத நாமெல்லாரும் நரகத்திற்குத் தப்பியிருக்கிறோம் என்று நன்றியின் நிறைவோடு இருதயத்தின் ஆழத்திலிருந்து துதிக்க ஆரம்பித்தார்.

# 6 இயேசுவே மேசியா!

## மூத்த யூத ரபி, இச்காக் கதூரி பிரகடனம்



இச்காக் கதூரி

இச்காக் கதூரி (YITZHAK KADURI) ஒரு வயது முதிர்ந்த யூத ரபி. யூத மக்கள் மத்தியிலும் ரபிமார் மத்தியிலும் மிகவும் பிரபல்யமானவர். மிகவும் மதிக்கப்பட்டவர். யூதர்கள் வேதமாகக் கருதும் தோராவில் (TORAH) (மோசேயின் ஐந்து ஆகமங்கள்) இவர் ஒரு வல்லுநர். சந்தேகங்கள் எழும்புமானால் இவர் அவற்றை சந்தேகமற தெளிவுப்படுத்தும் திறன் மிக்கவர். அதுவே இறுதி கருத்தாக இருக்கும் அப்படிப்பட்ட சிறப்பு பெற்றவர். மேலும் அவர் புனிதமானவர் என்றும் அநேக பேராபத்துகளை அவர் முன்பாகவே உரைத்தது அப்படியே நடந்துள்ளன என்றும் அவரைக்குறித்து சொல்லப் படுகிறது. 2007ம் ஆண்டு 108வது வயதில் அவர் மரணமடைந்தார். அவர் மரிப்பதற்கு முன்பு ஒரு முக்கியமான காரியத்தை எழுதி கவரில் அடைத்துத் தன் குடும்பத்தாரிடம் கொடுத்து அதை தன் மரணத்திற்கு பின் ஒரு ஆண்டு கழித்தபின்தான் அதை திறக்கவேண்டுமென அறிவுரை கொடுத்திருந்தார். அவர் சொன்னபடியே ஒரு ஆண்டு கழித்து திறந்து பார்த்தபோது அதில் **இயேசுதான் மேசியா (Yeshua is Messiah)** என்று அவர் கைப்பட எபிரெய மொழியில் எழுதப்பட்டிருந்தது. அது யாவருக்கும் மிகுந்த அதிர்ச்சியை அளித்தது. ஏனெனில் யூதமக்கள் இயேசுவை மேசியா என்பதை ஏற்றுக் கொள்வதில்லை. இதை ஏன் ஓராண்டு கழித்த பின் பார்க்கச் சொன்னார் என்பதும் நமக்குப் புரியவில்லை.



ஏரியல் ஷேரன்

இச்செய்தி எங்கும் பரவலாயிற்று. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட யூதர்கள் (மேசியானிய கிறிஸ்தவர்கள்) மூத்த ரபி இச்காக் கதூரியும் ஒரு

மேசியானிய கிறிஸ்தவர் என்று தெருக்களில் நடனமாடிக் கொண்டாட ஆரம்பித்தார்கள். யூதமக்களுக்கு இது ஒரு தலைகுனிவான செய்தியாக இருந்தது. எனினும் ஒரு சாரார் யூதமக்களுக்கு இச்காக் கதூரி சொன்னது சரியாக இருக்குமோ என்ற அசைவை உண்டாக்கியிருக்கிறது.

இந்த பரபரப்பான செய்தியை அறிந்த "இஸ்ரேல் டுடே" (ISRAEL TODAY) என்ற மாத இதழ் பத்திரிக்கை இச்காக் கதூரி எழுதியதாகச் சொல்லப் படுகிற குறிப்பு நம்பகமானதுதானா என ஆய்வு நடத்த ஆரம்பித்தது. கதூரி இறப்பதற்கு சிலமாதங்களுக்கு முன்பு யூத தேவாலயத்தில் யோப் கிப்பூர் (DAY OF ATONEMENT) செய்தியளிக்கும்போது இதே கருத்தை அவர் பேசியது ஆச்சரியமாயிருந்தது என அவரைப் பின்பற்றுவோர் கூறியுள்ளனர். **மேலும் மரணப்படுக்கையிலிருக்கும் ஏரியல் ஷேரன் (முன்னாள் இஸ்ரவேல் பிரதமர்) மரணத்திற்குப்பின் மேசியா மீண்டும் வருவார்** என்றும் பேசினார் என்றும் கூறியுள்ளனர். கதூரியின் பேரன் ரபி யூசெஃப் கதூரி தன்னுடைய தாத்தா அவருடைய கடைசி நாட்களில் பல முறை தங்களோடு பகிர்ந்துகொள்ளும்போது மேசியாவாகிய இயேசு வரயிருக்கிறார் என்றும் அந்த மேசியா மூலம்தான் நமக்கு மீட்பு உண்டு என்றும் பேசியதாகக் கூறியுள்ளார். அதோடு மட்டுமின்றி கதூரியின் இணையதளத்திலும் (www.kaduri. net) இதைப் பற்றியதான செய்திகளை வைத்திருக்கிறார். அதோடு எழுதி வைத்திருக்கும் குறிப்பு அவருடைய கையெழுத்துதான் என்பதும் குடும்பத்தினரால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவருடைய இறுதிப்பயண ஊர்வலம் எருசலேம் வீதிகளில் நடந்தது. 2,00,000க்கும் அதிகமான யூத மக்கள் கலந்துகொண்டனர்.

முன்னாள் இஸ்ரவேலின் பிரதம அமைச்சரான ஏரியல் ஷேரனின் மரணத் திற்குப்பின் மேசியா வருவார் என்று அவர் குறிப்பிட்டிருந்தபடியால் அச்செய்தி இப்பொழுது முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஏனெனில் ஏரியல் ஷேரன் சுமார் 8 ஆண்டுகளாக சுயநினைவற்ற நிலையிலேயிருந்து ஜன.11ம் நாள் 2014ல் மரணமடைந்தார். அவருடைய மரணத்திற்குப்பின் மேசியா வருவார் என்று இச்காக் கதூரி சொல்லியிருந்தபடியால் மேசியா வரும் நாட்களுக்குள் நெருங்கி வந்து விட்டோம் என்று ஒரு கூட்டம் யூத மக்களுக்கு உணர்வு ஏற்பட்டுள்ளது என்று தெரிகிறது.

1989ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மத்தியில் கிபுட்ஸ் தேவாலயத்தில் நடந்த ஒரு அற்புத சம்பவத்தை S.D.அம்புரோஸ் எழுதிய இஸ்ரவேல் (பாகம் 2)என்ற புத்தகத்தில் அவர் குறிப்பிடுகிறார்.

இஸ்ரேல் நாட்டிலுள்ள ஒரு கிபுட்ஸின் தலைவர் அமெரிக்காவிலுள்ள தங்கள் சகோதர மேசியானிய யூதர் ஒருவருக்குக் கீழ்க்கண்டவாறு ஒரு நிகழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார். கிபுட்ஸ் முழுவதும் யூத (மேசியானிய) கிறிஸ்தவர்களைக் கொண்டது; கிபுட்ஸின் தலைவரும் யூத கிறிஸ்தவர்.

1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத மத்தியில் ஒரு நாள் கிபுட்சுக்கு ஒரு மோட்டார் வாகனம் வந்தது. அதில் ஆறு மிக வைதீகமான மூத்த ரபிமார் வந்து கிபுட்சின் தலைவரை அங்குள்ள ஜெப ஆலயத்தில் சந்தித்துப் பேச விரும்புவதாகத் தெரிவித்தனர். அப்படியே அத்தலைவரும் இன்னும் சில மூத்த மேசியானிய யூதரும் அந்த ரபிமாரை ஜெப ஆலயத்தில் சந்தித்தனர். அப்பொழுது அந்த ரபிமார் "இயேசு கிறிஸ்துதான் மீண்டும் வர போகிற மேசியா" என்பதற்கு ஆதாரங்களுடன் தங்களிடம் பேசும்படி கேட்டதாகவும் அதன்படியே அத் தலைவன் யூதருடைய புத்தகங்களிலிருந்தே, அதாவது, தோரா **(Torah)** (மோசேயினால் எழுதப்பட்ட ஐந்து ஆகமங்கள்)விலிருந்தும், தால்முட் **(Talmud)** (யூத வேதாகம வியாக்கி யானம்)டிலிருந்தும், மித்ராஷிம் **(Mid rashim)** (ரபிமாரின் பிரசங்கக் குறிப்புகள்) இலிருந்தும், பழங்கால யூத ஜெப புத்தகங்களிலிருந்தும் இயேசு கிறிஸ்துவே மீண்டும் வரபோகிற மேசியா என்று இரண்டு மணி நேரம் எடுத்துக்கூறியதாகவும், அந்த ரபிமார் அதிக பொறுமையுடன் தங்கள் சந்தேகங்களை நிவிர்த்தி செய்து கொண்ட தாகவும், அந்த ரபிமார் அங்கு நடந்த நடவடிக்கைகளை ஒலி ஒளி காட்சி யாகப் பதிவு செய்து, பின்னர் இஸ்ரேல் நாடு முழுவதுமுள்ள எல்லா ரபிமாருக்கும் இதை விளம்பரப்படுத்தியதாகவும் எழுதியிருக்கிறார்.

அந்த ஆறு மூத்த ரபிமாரும் அத்தலைவர் பேசியபொழுது அச்ஜெப ஆலயத்திலிருக்கும் உடன்படிக்கைப் பெட்டியை மறைத்துப் போடப்பட்டிருந்த திரைச்சீலையையே கவனித்துக் கொண்டிருந்தனரென்றும், ஏனென்றால் அத்திரைச் சீலையில் "இயேசு கிறிஸ்து தோராவின் கிரீடம்" **(JESUS CHRIST, THE CROWN OF THE TORAH)** என்ற எழுத்துக்கள் எபிரெய மொழியில் தோன்றினவென்றும், அந்த ரபிமார் பேச்சுக்களை நிறுத்தி விட்டு அதைக் கூர்ந்து கவனித்தார்கள். சிறிது நேரத்தில் அது மறைந்துவிட்டது. இந்த அற்புதக் காட்சியை கண்ட ரபிமார்கள் அதிர்ச்சியடைந்தார்களே தவிர அதைக் குறித்து அவர்கள் ஒன்றுமே பேசவில்லை. இதைக்குறித்தும் அவர் எழுதியிருக்கிறார்.

முன்னே ஏசாயா 53ஆம் அதிகாரத்தையே வாசிக்க மறுக்கும் ரபிமார், "ஏசாயா 53ஆம் அதிகாரம் வேதாகமத்தில் இல்லாதிருந்தால் நலமா

யிருக்கும்'' என்று கூறும் ரபிமார், இப்பொழுது ஒரு யூத கிறிஸ்தவரையே அழைத்துத் தங்களுக்கு இக்காரியத்தை விளக்கிக் கூறும்படி கேட்பதும், இந்நடவடிக்கைகளை பிற ரபிமார்களிடையே விளம்பரப்படுத்துவதும், இயேசு கிறிஸ்துவின் வாக்கின் நிறைவேறுதலே.

**முன்னுரைப்பு: லூக்கா 13:35 (கிபி.33).**

***"இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்; கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுங்காலம் வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."***

**நிறைவேறுதல்:**

இயேசு கிறிஸ்து வேதபாரகருக்கும் பரிசேயருக்கும் கூறிய அவருடைய இரண்டாம் வருகையைக் குறித்த முன்னறிவிப்பு ஒரு நிபந்தனையோடு கூடியதாயிருந்தது; அதாவது அவர்கள் "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்று சொல்லும் காலம் வரவேண்டும் என்பதே. இப்பொழுது வேதபாரகரும் பரிசேயருமான யூத ரபிமார் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரை வரவேற்க ஆயத்தமாகிக் கொண் டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

இவ்விதமாக யூதர் சிறுகச் சிறுக இயேசு கிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக்கொண்டு வருகிறார்கள்.

# ஆதாரப் புத்தகங்கள்

1. The Holocaust - Martin Gilbert
2. Battlefields and Blessings - Larkin spivey
3. Jerusalem count down - Hagee
4. Blood in the sand - Benny Hinn
4. In defese of Israel - John Hugee
6. Facts about Israel - State of Israel Publication
7. Ten Amazing Jews - Sid Roth
8. Dake's Annotated Reference Bible
9. Unger's Bible Dictionary
10. Israel Today Magazine
10. மூன்றாவது உலகமகா யுத்தம் – திருமறைப் பெரியார் யோபு ஞானப் பிரகாசம்
11. இஸ்ரவேல் பாகம் 1 முதல் 4 – S.D.அம்புரோஸ்
12. இஸ்ரவேல் – Rev. Dr. A. சாமுவேல்ராஜ்
13. எருசலேம் – Rev. Dr. A. சாமுவேல்ராஜ்

# யூதர்களின் சோகவரலாறு

இஸ்ரவேல் அல்லது யூத இனம் உலகிலேயே மிகப் பழம்பெரும் இனம். "இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்ட புத்திரன்" என்று தேவன் அழைக்கும் பெரும் சிலாக்கியத்தைப் பெற்ற இனம். தேவன் தெரிந்துகொண்ட ஆபிரகாமின் சந்ததி. இஸ்ரவேல் நாடு ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்களிக்கப்பட்ட தேசம். "அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம். கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும்" என்ற ஆசீர்வாதத்தை பெற்ற தேசம். ஆனாலும், அவர்களுக்கு ஒரு எச்சரிக்கையையும் கொடுத்திருந்தார். "நீங்கள் வழிவிலகி அந்நிய தேவர்களை சேவித்து அவர்களை நமஸ்கரிக்காமலும் இருக்கும்படி எச்சரிக்கையாயிருங்கள் இல்லாவிடில் கர்த்தர் உங்களுக்கு கொடுத்த தேசத்திலிருந்து அழிந்து போவீர்கள்." ஆனால் இஸ்ரவேல் மக்கள் மீறினார்கள். தேசத்தை இழந்தார்கள். சிதறடிக்கப் பட்டார்கள். சிதறடிக்கப்பட்ட நாடுகளில் சிறுமைகளையும் கொடுமைகளையும் அனுபவித்தார்கள். பெரும் கூட்டம் யூதமக்கள் அழிக்கப்பட்டார்கள்.

19ம் நூற்றாட்டின் முதற்பாதியில் ஜெர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லரின் ஆட்சியில் யூத இனமே அழிக்கப்படவேண்டும் என்று திட்டமிட்டு ஜெர்மனியிலும் அண்டைய நாடுகளிலும் வாழ்ந்த யூதர்கள் 6 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்களும் குழந்தைகளும் உட்பட யூத இனத்தவர்கள் ஈவு இரக்கமின்றி வன்கொடுமை முகாம்களிலும், விஷவாயு அறைகளில் கொல்லப்பட்டார்கள். ஒட்டு மொத்தமாக கல்லறைகளில் அடக்கம் செய்யப்பட்டார்கள். இதுவே யூத மக்களின் சோக வரலாற்றின் உச்சகட்டம்.

ஆனாலும் யூதமக்களைப் பொருத்தமட்டில் தேவனுடைய வாக்குத்தத்தங்களும் தீர்க்கதரிசிகள் மூலம் உரைத்த தீர்க்கதரிசனங்களும் மாறாதவைகள் என்பதையும் வாக்குமாறாத உண்மையுள்ள தேவன் என்பதையும் பல நூற்றாண்டுகள் கடந்தாலும் நிரூபித்துக் காட்டியிருப்பது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. யூதமக்களை சிதறடிப்பேன் என்று உரைத்தவர் சிதறடித்தார். கூட்டிச் சேர்த்து சுயதேசத்தில் கொண்டுவந்து சேர்ப்பேன் என்றுரைத்தவர் கூட்டிச் சேர்த்தார்.

யூதமக்கள் அனுபவித்த உபத்திரவங்களை, கொடுமைகளையும், உயிர் இழப்பு களையும் கண்டு நாம் ஸ்தம்பித்துப் போகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து "உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும் இனிமேலும் சம்பவியாதது மான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்" என்று சொல்லியிருக்கிறார். எப்பொழுது? இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகைக்குப் பின்னான அந்திக் கிறிஸ்துவின் ஏழுவருட உபத்திரவ காலத்தில். அவருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ள ஆயத்தப்படுவோம். உபத்திரவ காலத்திற்கும் நித்திய நரகத்திற்கும் தப்பித்துக்கொள்ளும் வழியைப் பற்றிக்கொள்வோம். இந்த சிந்தனையோடு இப்புத்தகத்தை இப்பொழுது படிக்க ஆரம்பியுங்கள்.

தொகுப்பாசிரியர்

WORD OF CHRIST
WOC
Chennai, India

5368
Diocesan Book Depot
Nagercoil
60

Price: ₹ 60/-